1042/86

4923

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 24, 1986-தொகுதி 224 எண் 2
Thursday, 24th April 1986-Volume 224 No. 2

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

## பொருளடக்கம்

24-4-1986


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் 197—211

2. தகவல் கோரல்—

(1) இரண்டு அவைகளில் ஒரே உறுப்பினர், உறுப்பினராக இருக்கலாமா என்பது பற்றி விளக்கம் 211—213

(2) சந்திர கிரஹணம் குறித்து 327—328

3. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் 213—377

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் 377—378

143553

D

V211,32'N86

N86.224.2

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை

**வியாழக்கிழமை, 1986 ஏப்ரல் 24.**

**சித்திரை 11, அட்சய—திருவள்ளுவராண்டு 2017.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினா எண்கள் 181 மற்றும் 182 ஆகியவை பின்னால் எடுத்துக்கொள்ளப்படும்.

### வரி சீராய்வு

* **183 வினா—திரு. அ. ப. சிவராமன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சிகளுக்கு உட்பட்ட வீடுகளுக்கு, ஐந்தாண்டுகளுக்கொரு முறை ஆய்வு செய்யப்படும் (Quinquennial Revision) வரி சீராய்வு, 1971-க்குப் பின் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(ஆ) விரைவில் வரிச் சீராய்வு மேற்கொள்ளப்படும்.

**திரு அ. ப. சிவராமன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகளுக்கு ஐந்தாண்டுக்கு ஒருமுறை இவ்வாறு வரிச்சீராய்வு நடப்பது வழக்கம். ஆனால் அத்தகைய வரிச் சீராய்வு கடந்த 15 ஆண்டுகளாகச் செய்யப்படாததால், தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு எவ்வளவு?

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கடந்த 1971-ஆம் ஆண்டிலிருந்துதான் வரிச் சீராய்வுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எனவே 1971-72 முதல் 1975-76 வரை ரூ. 6 கோடியும், 1976-77 முதல் 1980-81 வரை ரூ. 7.61 கோடியும் 1981-82 முதல் 1985-86 வரை ரூ. 7.70 கோடியும் ஆக மொத்தம் ஒட்டுமொத்தமாக தமிழ் நாட்டிலுள்ள நகராட்சிகளுக்கு ரூ. 21.31 கோடி நட்டம் ஏற்பட்டிருக்கிறது.

திரு அ. ப. சிவராமன்: தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளுக்கும் இதன் காரணமாக ரூ. 21.51 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளிலிருந்தும் மீண்டும் இந்த வரிச் சீராய்வு இப்போது நடத்தக் கூடாது என்றும், இதை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும் என்றும் கோரப்பட்டது உண்மையா? அப்படிப்பட்ட நடவடிக்கைக்கு ஒப்புதல் தராமல் அரசு பார்த்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது போன்ற எந்தத் தகவலும் அரசுக்கு இல்லை. ஏற்கனவே விதித்திருந்த தடையை அரசு நீக்கியிருக்கிறது. வரி ஆய்வு செய்வதற்காக விரைவில் அதிகாரிகள் நியமிக்கப்பட இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாதத்தின் முதல் நாளில் சம்பளம் வழங்குதல்

* 184 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. மு. செ. சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சி ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு, மாதத்தின் முதல் நாளில் சம்பளம் கொடுக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (இ) நகராட்சிகளின் ஆசிரியர்களுக்கு நகராட்சிகள் மாதச் சம்பளம் பட்டுவாடா செய்து வருகின்றன. சம்பளம் பட்டுவாடா செய்வதில் சிரமங்கள் நேர்வது அரசு கவனத்திற்கு வரும்போது, அரசு தலையிட்டு, வழிவகை முன்பணம் தந்து உதவி செய்கிறது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, மாதத்தின் இறுதி நாளில் சம்பளம் தர இயலாத நிலையில் எத்தனை நகராட்சிகள் இருக்கின்றன? இவ்வாறு தர இயலாத அளவுக்கு வருவாய் குறைந்துள்ள நகராட்சிகளுக்கு அரசு தனிக் கவனம் செலுத்தி நிதி உதவி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அப்படிப்பட்ட நகராட்சிகளின் எண்ணிக்கை எத்தனை என்ற புள்ளிவிவரம் என்னிடம் இல்லை. பெரும்பாலான நகராட்சிகள் நிதிப்பற்றா தொல்லைக்கு ஆளாகியிருக்கின்றன. இதற்குக் காரணமே நான் ஏற்கனவே சொன்ன பதில்தான். அதாவது இந்தக் கேள்விக்கு முன் கேள்விக்குச் சொன்ன பதில்தான். வரிச் சீராய்வு செய்யாத காரணத்தால், இந்தச் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. இப்போது வரிச் சீராய்வுக்கு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதால், விரைவில் இந்த நிலைமை மாறிவிடும் என்று நம்புகிறேன்.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: சில நகராட்சிகளின் நிதிப் பற்றாக்குறை காரணமாக ஆசிரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் மாத இறுதியில் ஊதியம் கொடுக்க முடியாத நிலை தோன்றியிருப்பதால், அவற்றையெல்லாம் 'சிக்' நகராட்சிகளாக அரசு ஏற்று அவற்றின் பள்ளிகளையும் அரசே ஏற்றுக் கொள்ள முன்வருமா? ஏற்கெனவே இத்தகைய நகராட்சிகள் தங்களின் பள்ளிகளையெல்லாம் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று கோரி, அத்தகைய கருத்துரு அரசுக்கு வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அப்படியானால், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதுவுமில்லாமல் அண்மையில் அரசு ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறது. அதன் மூலமாக 1-6-1986 முதல் நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களெல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கப் படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அப்படியானால் அவர்கள் பள்ளித் துறையின் கீழ் இருப்பார்களா அல்லது அவர்கள் எல்லாம் உள்ளாட்சித் துறையின் கீழேயே அரசு ஊழியர்களாக இருப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசு ஊழியாக ஆக்கப்பட்ட பிறகு உள்ளாட்சித் துறையின் கீழ் வரமாட்டார்கள். அரசுத் துறையின் கீழ்தான் பணியாற்றுவார்கள். எங்கெங்கேயிருந்து நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் பட்டுவாடா செய்ய பணம் இல்லை என்ற கோரிக்கை வந்திருக்கிறதோ, அங்கெல்லாம் முன்பணம் கொடுத்து அரசு உதவியிருக்கிறது. 1—6—1986-க்குப் பிறகு இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று உறுதியாக நம்புகிறேன். ஆசிரியர்களுக்கு இனி அந்தச் சிரமம் இருக்காது.

(முற்பகல் 10-05)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: நகராட்சிகளில் பணிபுரிகிற ஆசிரியர்களுக்கெல்லாம் உரிய ஊதியத்தின் அளவைக் கணக்கிட்டு, அவற்றை வங்கிகளில் டெபாசிட் செய்து, அதற்குப் பிறகு அவர்கள் எடுத்துக் கொள்ளும் வழக்கம் கொண்டு வரப்படும் என்று இதற்கு முன்பிருந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு அவர்கள் உறுதி தந்து சொல்லியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதுபற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது. எப்படியிருந்தாலும் 1-6-1986இல் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற காரணத்தால், உள்ளாட்சித் துறையில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு நிச்சயமாக பிரச்சினைகள் இருக்காது. அரசே அவர்களுக்குச் சம்பளத்தை வழங்கும். அப்போது ஆசிரியர்களுக்கு தேதிவாரியாகக் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 185, 186 பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

### குடும்பத்தில் ஒருவருக்கு வேலை

* 187. வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மறுவாழ்வு-வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடும்பத்தில் ஒருவருக்கு வேலை அளிப்பதற்காக, 1—4—1986 நாளன்றுள்ளபடி எத்தனை திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன?

(இ) இத்திட்டங்களினால் 1-4-1985 நாளன்றுள்ளபடி, பயனடைந்துள்ளவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** (அ) மற்றும் (இ)

| திட்டம். | பயனடைந்தவர்கள் எண்ணிக்கை. |
|---|---|
| 1. குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் | |
| 2. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் | |
| 3. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம். | 14,05,000 பேர் |

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தமிழ் நாட்டில் எத்தனை குடும்பங்கள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது? அரசு ஏற்கனவே எடுத்துள்ள புள்ளி விவரத்தின்படி, 14 இலட்சத்து ஐந்தாயிரம் என்று சொல்லப்பட்டிருப்பது குடும்பங்களா அல்லது தனி நபர்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?



**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** இந்தக் கணக்கின்படி, தமிழக கிராமப் புறங்களில் 73 இலட்சத்து 47 ஆயிரம் குடும்பங்கள் உள்ளன. இவைகளில் 23.22 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள். இந்த 23.22 இலட்சம் குடும்பங்களில் 6.83 இலட்சம் குடும்பங்கள் நிரந்தர வருவாய் இல்லாதவர்கள். நான் ஏற்கனவே சொன்னபடி, 14 இலட்சத்து ஐந்தாயிரம் பேர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

**திரு சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கிராமப் புறங்களில் உள்ள குடும்பங்களைப்பற்றிச் சொன்னார்கள். நகர்ப்புறங்களில் உள்ள குடும்பங்களைப்பற்றிச் சொல்லவில்லை. நகர்ப்புறங்களில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கிராமப் புறங்களில் உள்ள 73 இலட்சத்து 47 ஆயிரம் குடும்பங்களில் 23 இலட்சம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் என்று சொன்னார்கள். அரசு கொடுத்துள்ள புள்ளிவிவரத்தின்படி, கிட்டத்தட்ட 65 சதவீதம் குடும்பங்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் கொடுத்த புள்ளிவிவரத்திற்கும், ஏற்கனவே அரசு கொடுத்துள்ள புள்ளிவிவரத்திற்கும் வேறுபாடு இருக்கிறது. இருந்தாலும் நகர்ப்புறங்களில் எத்தனை குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது? நகர்ப்புறங்களில் எத்தனை குடும்பங்கள் இருக்கின்றன என்பதை நான் அறியலாமா?

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** நகர்ப்புறங்களைப் பற்றிய குறிப்பு தற்போது இல்லை. அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால், பதில் தரப் படும்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** கிராமப்புறங்களில் உள்ள 73 இலட்சத்து 47 ஆயிரம் குடும்பங்களில் 14 இலட்சத்து ஐந்தாயிரம் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீதியிருக்கின்ற குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அதற்குரிய திட்டம் என்ன? அந்தத் திட்டத்திற்கு ஏதேனும் காலவரையறை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் திட்டம் அரசின் தீவிர நடவடிக்கையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை ஒதுக்கப்படுகிற நிதியிலிருந்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டு காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 10-10)

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 14 லட்சத்து 5 ஆயிரம் பேர்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தினால் பயன் பெற்றிருப்பதாகச் சொல்கின்றார்கள். அப்படி வேலை வாய்ப்பு பெற்றிருக்கின்ற ஒவ்வொரு நபரும் பெறுகின்ற குறைந்தபட்ச சம்பளம் என்ன? மொத்தம் எவ்வளவு தொகை அவர்களுக்குச் சம்பளமாகத் தரப்படுகிறது?

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை பெற்றவர்கள் 617 பேர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 10,300 பேர்களும், ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டத்தின் கீழும் கிராமப்புற இளைஞர்களின் சுய வேலை வாய்ப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் 13 இலட்சத்து 94 ஆயிரத்து 14 பேர்களும் வேலை வாய்ப்பு பெற்றிருக்கின்றார்கள், மொத்தம் 14 இலட்சத்து 5 ஆயிரம் பேர்கள் பெற்றிருக்கின்றார்கள்.

**டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்புப் பெற்றிருக்கின்ற 14 லட்சத்து 5 ஆயிரம் பேர்களில் தலா ஒவ்வொருவரும் பெறுகின்ற ஊதியம் எவ்வளவு என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் பல்வேறு திட்டங்களில் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் எண்ணிக்கையைக் கொடுத்திருக்கின்றார்கள். குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்படி வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எத்தனை பேர் என்பதுதான் அதில் முக்கியமான விஷயமாகும். அதற்கு விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** தலைவர் அவர்களே, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் வந்த கணக்குதான் இப்போது தரப்பட்டது. பொதுவாக நபருக்குச் சராசரியாக எவ்வளவு சம்பளம் என்ற விவரம் கணக்கிலே தற்போது இல்லை. சத்துணவுத் திட்டத்தின் கீழ் என்று சொல்லும்போது, அரசு ஊழியர்களுக்கு எவ்வளவு தருகிறோம் என்பது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியாததல்ல. அந்தக் கணக்கை அவர்கள் போட்டுப் பார்த்துக்கொள்ளலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவர் அவர்களே, நான் கேட்டதுணைக் கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது நகர்ப்புற வேலைவாய்ப்புப் பற்றி தனிக் கேள்வி போட வேண்டும் என்று சொன்னார்கள். எத்தனை நபர்கள் என்று பொதுவாகத்தான் கேட்டேன், பிரித்துக் கேட்கவில்லை. அதற்கு சரியான விவரங்களை அமைச்சர் அவர்கள்



கொடுக்கவில்லை என்று கருதுகிறேன். முழுமையான விவரங்களை துறையினர் அமைச்சர் அவர்களுக்கு, அவர் இந்தத் துறை பொறுப்பேற்றிருக்கின்ற காரணத்தினால், கொடுத்திருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் துறையினருக்கு இதை அறிவுறுத்தி விவரங்களைப் பெற்றுத் தரவேண்டும். குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்புத் திட்டம் என்பது ஒரு நல்ல திட்டம். அமைச்சர் அவர்கள் பதிலின்படி பார்க்கும் போது, அந்தத் திட்டத்தில் நடைமுறை விதிமுறைகள் சீராக வகுக்கப்பட வில்லை என்று தெரிகிறது. இந்தத் திட்டத்தில், அது கிராமப்புறத் திட்டமாக இருந்தாலும் சரி, அது நகர்ப்புறத் திட்டமாக இருந்தாலும், சரி, அதற்கு சரியான திட்டத்தை உருவாக்கி குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டும். அதற்கான செயல் திட்டத்தை உருவாக்குவதற்கு தமிழக அரசு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** அந்த அடிப்படையில்தான் அரசு இது வரையில் செயல்பட்டு வந்திருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு எல். ஜெயச்சந்திரன்:** இந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிறைய பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது சொன்னார்கள். ஏற்கனவே ஒவ்வொரு குடும்பத்திலும் எவ்வளவு பேர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கின்றார்கள்? அப்படி பதிவு செய்திருப்பவர் களுக்கு முன் உரிமை வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** ஒரு குடும்பத்தில் யார் வேலை இல்லாமல் இருக்கிறார் என்பதை அறிகின்ற வகையில் அந்தச் சான்றிதழ்களைப் பதிய வேண்டும். 'இன்டர்வியூ' வந்தாலும் வீட்டிலே வேலையில்லாத நபருக்குத்தான் அந்த வேலை வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

**திரு க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரைக்கும்போது, சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றுபவர் களுக்கு எல்லாம் எவ்வளவு ஊதியம் அளிக்கப்படுகிறது என்பதைக் கணக் கிட்டுக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அங்கே அமைப்பாளர்களுக்கு மாதம் ரூபாய் 150-ம், சமையல்காரர்களுக்கு ரூபாய் 60-ம், அவர்களுக்கு உதவி செய்பவர்களுக்கு ரூபாய் 30 என்றும் இருக்கின்றது. அங்கே கொடுப்பது குறைந்தபட்சம் ரூபாய் 30 ஆக இருக்கின்றது. அது வாழ்க்கையில் இல்லாத

வர்களுக்கு, ஏழைகளுக்குக் கொடுத்தது என்று சொல்லலாமே தவிர, அது எந்த அளவுக்குப் பொருத்தமானது என்பது தெரியவில்லை. குறைந்தபட்ச சம்பளம் என்பதை வரையறுத்து, ரூபாய் 30 என்று தருவதை உயர்த்தித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** தலைவர் அவர்களே, அங்கே ஆயாக்களாக இருப்பவர்களுக்கு ரூ 30 தரப்படுகிறது. அவர்கள் பார்ட் டைம் ஊழியர்கள் என்ற அடிப்படையிலேதான் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் அந்த ஊதிய நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-15)

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, கேள்வி, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை, குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை பற்றியதாகும். கேட்ட கேள்வி வேறு, இங்கே தரப்படும் விளக்கங்களும், பதில்களும் வேறாக இருக்கின்றன. குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்பது திட்டம். அதிலே 30 ரூபாய் சம்பளம் வாங்கும் ஊழியர்களையும் சேர்த்து, அதாவது பகுதி நேரத்தில் வேலை செய்பவர்களும் அடங்குவார்கள் என்று கூறுவது பொருத்தமாக இல்லை.

**மாண்புமிகு திரு தா. இராமசாமி:** தலைவர்வர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, பொதுவாக ஒரு குடும்பத்தில் வேலை இல்லை என்ற நிலைமை இருக்கும்போது, நேர்முகப் பேட்டிக்கு அழைக்கும்போது, அந்தக் குடும்பத்தில் வேலை பார்ப்பவர் இல்லை, அவர் வேலை பார்த்துத்தான் அந்தக் குடும்பம் வாழ வேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டுதான் வேலை கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வீட்டு சேவை மையத்திட்டம்

* 188. **வினா திரு எல். ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு மறுவாழ்வு வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

அண்மையில் சென்னை மாநகரில், துவக்கப்பட்டுள்ள வீட்டு சேவை மையத் திட்டத்தை, மற்ற மாவட்டங்களிலும் துவக்கும் கருத்தரு ஆய்வில் உள்ளதா?





**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** அண்மையில் சென்னை மாநகரில் துவக்கப்பட்டுள்ள வீட்டு சேவை மையத் திட்டம், கீழ்கண்ட இடங்களில் துவக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. கோயம்புத்தூர் | 3 மையங்கள் |
| 2. மதுரை | 3 மையங்கள் |
| 3. திருச்சிராப்பள்ளி | 3 மையங்கள் |
| 4. சேலம் | 2 மையங்கள் |
| 5. வேலூர் | 1 மையம் |

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்பது பற்றி கேள்வி. எனவே ஓர் உறுப்பினருக்கு ஒரு துணைக் கேள்வி என்று வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.

**திரு எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, இது வேறு கேள்வியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை நகரில் துவக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்தெந்த இடங்களில் துவக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், நன்றாக இருக்கும். மேலும் எந்தெந்த மாவட்டங்களில் வீட்டு சேவை மையம் ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தா. இராமசாமி:** மேலவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே சென்னை நகரிலே 7 இடங்களிலே மையங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களாவன: 1. பெசன்ட் நகர், 2. டி. நகர், 3. டவ்டன், 4. அண்ணா நகர் கிழக்கு, 5. அண்ணா நகர் மேற்கு, 6. கதீட்ரல் ரோடு, 7. நுங்கம்பாக்கம். மாவட்டங்களைப் பொறுத்தவரையில், கோவை மாவட்டத்தில் கோவையில் 3 மையங்கள். மதுரை மாவட்டத்தில் மதுரையில் 3 மையங்கள், திருச்சி மாவட்டத்தில் திருச்சியில் 3 மையங்கள், சேலம் மாவட்டத்தில் சேலத்தில் 2 மையங்கள், வேலூரில் 1 மையம்.

**திரு. எல். ஜெயச்சந்திரன்:** தலைவரவர்களே, மாவட்டங்களைப் பற்றிக் கூறும்போது, சில மாவட்டங்கள் பற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். தென் ஆற்காடு, செங்கை மாவட்டம் பற்றி ஒன்றுமில்லை. அந்த மாவட்டங்களிலும் விரைவில் இந்த மையங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வீட்டு சேவை மையத்தில் வேலை செய்வதற்காக நியமிக்கப்படும் அமைப்பாளர்களாக யாரை நியமிக்க இருக்கிறார்கள்? அரசே அவர்களுக்கு வேலை கொடுக்க இருக்கிறதா அல்லது பொது சேவை நிறுவனங்களிடம் அந்தப் பணியைக் கொடுக்க இருக்கிறார்களா?

மாண்புமிகு திரு தா. இராமசாமி: தலைவரவர்களே, அரசு தொழிற் பயிற்சி நிலையங்களிலே பயிற்சி பெற்றவர்கள்; 'எக்ஸ்பீரியன்ஸ்டு' என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஒரு சிலர் இவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடு இந்தத் துறை வேலை வாய்ப்பு கொடுக்கின்ற மையங்களைப் பல்வேறு மாவட்டங்களில் உருவாக்க வேண்டுமென்று திட்டம் வகுக்கப்பட்டு, முதல் கட்டமாக சென்னை நகரில் 7 இடங்களிலே துவக்கப்பட்டிருக்கிறது. ஒரு மையம் அதாவது 10 அடி நீளம், 7 அடி அகலம் என்ற அளவில் 20,000 ரூபாய் செலவில் ஸ்டால் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. கருவிகள் வாங்குவதற்கு மின் பணியாளருக்கு 4,500 ரூபாய் வங்கி மூலம் தரப்படுகிறது. தச்சருக்கு 3,500 ரூபாய் கருவிகள் வாங்க வங்கி மூலம் தரப்படுகிறது. பிளம்பருக்கு 3,500 ரூபாய் கருவிகள் வாங்க வங்கிகள் மூலம் வழங்கப்படுகிறது. அவர்கள் 3 பேர்களும் அங்கே இருப்பார்கள். அந்தப் பணியாளர்கள் தங்களுடைய மாத வருமானத்திலே 60 ரூபாயை ஸ்டால் வாடகையாக அளிக்க வேண்டும். பொது மக்களிடம், செய்யும் வேலையின் தன்மைகளை ஒட்டி கூலியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை கிடைக்கும் சூழ்நிலை இருக்கிறது. மற்ற மாவட்டங்களில் இந்த மையங்களைத் துவக்கும் ஆலோசனை அரசின் கவனத்தில் இருக்கிறது.

### உடையாளூருக்கு நகரப் பேருந்து.

* 185 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்திலிருந்து உடையாளூருக்கு, மேலும் ஒரு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மேலும் ஒரு நகரப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10-20)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்திலிருந்து உடையாளூருக்கு மேலும் ஒரு நகரப் பேருந்து விட வேண்டுமென்று கேட்டு, அங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கே இப்போது





ஓடுகின்ற பேருந்து போதாத காரணத்தால், மிகவும் நெருக்கடியாக இருப்பதால், அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மேலும் போக்குவரத்துக் கழகத்துக்கும் லாபகரமானதாக இருக்கும் என்ற அடிப்படையிலும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். இப்போது அதுபற்றி அரசிடம் செயற்குறிப்பு இல்லையென்றாலும் கூட, பொதுமக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் வருங்காலத்திலாவது இதுகுறித்து ஆலோசனை செய்ய இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இப்போது ஏறக்குறைய 10 முறை பேருந்து சென்று வருகிறது. அதிலே அங்குள்ள மக்களில் 28 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதத்தினர் மட்டும்தான் பயணம் செய்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால், கூடுதல் பேருந்துக்கு அவசியம் இருக்காது. இருப்பினும் நிலைமைக்கு ஏற்ப எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

### எருக்கஞ்சேரி நெடுஞ்சாலை

* 186 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை—கல்கத்தா தேசிய நெடுஞ்சாலையின் ஒரு துணைச் சாலையான எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில், போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதின் காரணமாக, விபத்துக்கள் அதிகரித்து வருவதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(இ) இந்நெடுஞ்சாலையில் நிகழும் விபத்துக்களை குறைக்க கீழ் வரும் மூன்று முறைகளில் காவல் துறையினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

1. போக்குவரத்து விதிகளை கடுமையாக அனுசரிக்க வைத்தல்.

2. சாலை சந்திப்புக்கள் மற்றும் சாலை வடிவகம் ஆகியவற்றைப் பற்றி நல்லமுறையில் திட்டமிடுதல்.

3. சாலையைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக தொடர்ந்து பொது மக்களுக்கு அறிவுறுத்தல்.

[1986 ஏப்ரல் 24

தொலைதூர நேர்வழி வாகனப் போக்குவரத்துக்கு வசதி செய்யும் பொருட்டு சென்னை புறவழிச்சாலை அமைக்கும் பணிக்கான திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு நில ஆர்ஜிதப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு சி. ரா. லெட்சுமிகாந்தன்: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சில கருத்துக்களுக்கு மேலாக இப்பொழுது புற வழிப்பாதை அமைக்கும் கருத்துரு இருந்தாலும் கூட, அங்கே இருக்கும் சாலையும் அகலப்படுத்தப் படுமா? அப்படிச் செய்தால் அதன்மூலம் மேலும் விபத்துக்களைக் குறைக் கலாம் அல்லவா? அதுபற்றியும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அநேகமாக தேசிய நெடுஞ்சாலை என்று பார்க்கும்போது, அவற்றை சிறந்த முறையில் பராமரிக்கிறோம். அதோடு ரோடுகளை அகலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் அங்கே ஆக்கிரமிப்பாளர்கள் இருப்பதால், பிரச்சினை வருகிறது. இருப்பினும் அது பற்றி தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப் படும்.

## கால்வாய்களை நவீனப்படுத்துதல்

* 189. வினா திரு க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 199 கால்வாய்களையும், நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்ட விபரம் யாது?

(உ) அதனால் எவ்வளவு ஏக்கர் நிலம் பயனடையும்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ), (இ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காவிரியிலிருந்து 17 கால்வாய்கள் பிரிகின்றன. அவற்றிலிருந்து பிரியும் கிளை வாய்க்கால்கள் 189. உய்யக்கொண்டான் மற்றும் கட்டுப் புத்தூர் வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. ஏனைய கால்வாய்களின் சீரமைப்புக்கான விரிவான அறிக்கைகள் தல அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(உ) 1,41,401 ஏக்கர்கள்.



1986 ஏப்ரல் 24]

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அமைச்சர் அவர்கள் தந்த புள்ளி விவரத்தின்படி பார்த்தால், இரண்டு கால்வாய்கள்தான் செப்பனிடப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஏனைய கால்வாய்களைப் பொறுத்தவரையில், திட்டம் மட்டும் தயாரிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கால்வாய்கள் எல்லாம் தூர்ந்து போய் பாசன வசதி, வடிகால் வசதி எல்லாம் சரியாக இல்லை. இதனால் அங்கே விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தயாரிக்கப்படும் திட்டத்தை எப்போது தொடங்கி எப்போது முடிக்க இருக்கிறார்கள்? திட்டம் விரைவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: உறுப்பினர் சுட்டிக்காட்டியபடி இருக்கக்கூடிய 17 கால்வாய்களில் 2 கால்வாய்கள் மட்டுமே சீரமைக்கப் பட்டிருக்கின்றன. இந்த இரண்டையும் சீரமைக்க இந்த அரசு 39 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்திருக்கிறது. இதன்மூலமாக 37,373 ஏக்கர் பாசன வசதி பெற்றிருக்கிறது. ஏனைய கால்வாய்களையும் சீரமைக்க நாம் ஆய்வு மேற்கொண்டோம். அந்த ஆய்வின் அடிப்படையில், அரசுக்குக் கிடைத்த தகவலின்படி, அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றால், அதாவது 15 கால்வாய்கள் மற்றும் அதனையொட்டிய கிளை வாய்க்கால்களை நாம் எடுக்க வேண்டுமென்றால், அரசுக்கு 133 கோடி ரூபாய் செலவாகும்

(முற்பகல் 10.25)

என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இதை ஒரேயடியாகச் செய்துவிட முடியாது. படிப்படியாகத்தான் செய்ய முடியும் என்பதை இருக்கக்கூடிய நிலைமைகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம். ஆகவே 130 கோடி செலவு செய்தாக வேண்டிய திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, 17 கால்வாய்களில் இரண்டு கால்வாய் போக மீதியிருக்கிற 15 கால்வாய்களுக்கு 130 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லி, அதற்கு ஒரு காலவரை சொல்லாமல் நீண்டகாலம் பிடிக்குமென்று அமைச்சர் சொல்கிறார். இது விவசாயப் பிரச்சினை, உணவு உற்பத்திப் பிரச்சினை. ஆகவே மற்ற பிரச்சினைகளைக் கூட தள்ளிவைக்கலாம். இப்பிரச்சினை விவசாயத்தைப் பாதிக்கிற வகையில் இருப்பதால், நீண்ட காலம் பிடிக்கும் என்று சொல்லாமல், இதற்கு தனித்து ஏற்பாடு செய்து ஒரு காலவரையறை செய்து நிர்ணயித்து தீர்க்க முன்வந்தால்,

விவசாயத்தில் நல்ல விளைச்சல் ஏற்படுமே, அதனால் நாட்டுக்கு நன்மை ஏற்படுமே, ஆகவே அதைப் புனர் பரிசீலனை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, இந்த 15 கால்வாய்களையும் அதையொட்டிய துணை வாய்க்கால்களையும் ஒட்டியிருக்கிற கரைகளை வலுப்படுத்தவும் தேவையான இடங்களில் மாற்றுக் கட்டமைப்பு ஏற்படுத்தவும் வடிகால் வசதிகளை ஏற்படுத்தவும் எவ்வளவு செலவாகும் என்று கணக்கு போடப்பட்டிருக்கிறது. இத்தனை பணிகளையும் மேற்கொண்டால், அதற்கான மதிப்பீடு 130 கோடி ரூபாய் ஆகும். மிக அவசியமான தேவையான பணிகளை மட்டும் மேற்கொண்டு இருக்கக்கூடிய கால்வாய்களை ஆழப்படுத்தும் பணிகளை மேற்கொண்டால், எவ்வளவு செலவாகும் என்று மதிப்பீடு கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கேற்றவாறு விவரங்கள் அனுப்பவும் அறிவுறுத்தப்படுவார்கள். அதற்குப் பிறகு உரிய முறைகளில் அரசு நடவடிக்கை எடுக்கும்.

## *Forming of Channel to Thangal Eri.*

* 190 Q.—Thiru C. R. LAKSHMIKANDHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state, with reference to the answer given to Legislative Council Question No. 10, on the Floor of the Council on 17th February 1984, the stage at which the forming of a supply channel to Thangal Eri of Kannamongalam Firka, Arni Taluk, North Arcot District now stands".

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: இப்பணிக்கான மதிப்பீடு ரூ. 1.80 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு பொதுப்பணித்துறையின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: அமைச்சர் அவர்கள் அறிவிப்புக்கு மகிழ்ச்சி. இந்தப் பரிசீலனையில் இருக்கிற கருத்துரு மீது விரைவாக முடிவெடுத்து செயல்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: அந்தத் திட்டத்தின் முக்கியத்துவம் இந்த அரசால் நன்கு உணரப்பட்டிருக்கிறது. காரணம் இரண்டு ஏரிகள் உள்ளன. ஒரு ஏரியிலிருந்து உபரி நீர் இன்னொரு ஏரிக்குச் செல்ல வேண்டும். உபரி நீர் செல்கிற கால்வாய் ஓரளவுக்குத்தான் கால்வாயாக இருக்கிறது



மற்ற பகுதிகள் கால்வாயாக இல்லாததால், பட்டா நிலம் மூலமாக நீர் போகிறது. அதனால் பட்டா நிலம் பாதிக்கிறது. இந்த நிலைமையை அரசு தெளிவாக உணர்ந்ததன் காரணமாக உடனடியாக பணியை மேற்கொள்ள வேண்டுமென்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதிலும் அங்கே இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், (1) பட்டா நிலங்களில் இரண்டு ஏக்கர் ஒரு சென்ட் நஞ்சை நிலம் கையகப்படுத்தவேண்டியிருக்கிறது. இரண்டு, கண்ணமங்கலம்—ரெட்டியார் பாளையம் சாலையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இந்தக் கால்வாயை கடக்க தற்போது இருக்கக்கூடிய பாலத்தைப் பயன்படுத்தலாம் என்று பார்த்தோம். ஆனால் அதனுடைய கொள்ளளவு மிகவும் சிறியதாக இருக்கிறது. அதற்காக புதிய பாலம் அமைக்கவேண்டியிருக்கிறது. இதற்காக இரண்டு ஏக்கர் ஒரு சென்ட் நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்த உரிய நடவடிக்கையை வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்துழைப்புடன் எடுத்துவருகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள் 181 மற்றும் 182 ஒத்தி வைக்கப்படுகின்றன. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (1) இரண்டு அவைகளில் ஒரே உறுப்பினர் உறுப்பினராக இருக்கலாமா என்பதுபற்றி விளக்கம்.

திரு. அ. ப. சிவராமன்: தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையின் உறுப்பினராக திரு. எல். கணேசன் அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதற்குப் பின்பு, இரண்டு அவைகளில் ஒரே உறுப்பினர் உறுப்பினராக இருக்கலாமா என்ற சட்டப்பிரச்சினை உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களால் எழுப்பப்பட்டது. அந்தப் பிரச்சினைக்கு இன்று தாங்கள் முடிவு சொல்வதாக அறிவித்தீர்கள். அந்த முடிவை அறிய நாங்கள் ஆவலுடன் இருக்கிறோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வயது 80 ஆனாலும், ஞாபக சக்தி நன்றாகவே இருக்கிறது. அதைத்தான் படிக்கலாம் என்று இருந்தேன். அதற்குள் உறுப்பினர் அவர்களே கேட்டுவிட்டார்கள்.

[மாண்புமிகு மேலவைத் தலைவர்]

(முற்பகல் 10-30)

திரு. எல். கணேசன், எம்.எல்.சி. அவர்கள் மேலவையில் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டது குறித்து நேற்று திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களால் எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினைக்குப் பின்னர் தீர்ப்பு வழங்குவதாகக் கூறியிருந்தேன்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 101 (2)-வது பிரிவின்படி, எந்தவொரு நபரும் நாடாளுமன்றத்திலும் மாநிலத்தின் எந்தவொரு சட்டமன்றத்திலும் ஒரேசமயத்தில் உறுப்பினராக இருக்கக்கூடாது என்றும், அப்படி ஒருவர் பாராளுமன்றத்திற்கும் எந்த ஒரு மாநில சட்டமன்றத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், குடியரசுத் தலைவர் அவர்களால் இயற்றப்பட்ட விதிகளில் குறிப்பிட்டுள்ள காலக் கெடு முடிவடைந்தவுடன், சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து முன்னமேயே விலகவில்லையென்றால், பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமாகும் என வழிவகை செய்யப் பட்டுள்ளது.

1950 ஆம் ஆண்டு, "ஒரே காலத்தில் இரு உறுப்பினர் பதவி வகித்தல் தடுப்பு விதிகளின்" 2-வது பிரிவின்படி, எந்தவொரு நபராவது நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தால், அவர் தம்முடைய சட்டமன்றப் பதவியிலிருந்து விலகாவிடில், அவருடைய நாடாளுமன்ற உறுப்பினர் பதவி, அவருடைய தேர்தல் வெற்றி குறித்து அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்கள் கழித்து வெற்றிடமாகும்.

திரு. எல். கணேசன் அவர்களுடைய மாநிலங்களவை உறுப்பினர் பதவி 29—6—1986 அன்றுடன் முடிவடைய உள்ளது. அவர் தமிழ் நாடு சட்டமன்ற மேலவைக்கு தமிழ்நாடு மத்திய கிழக்கு பட்டதாரிகள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்தொகுதி தேர்தல் அதிகாரியின் 24—3—1986 தேதியிட்ட அறிவிப்பு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 67 (அ) பிரிவின்படி 27—3—1986 நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.

எனவே, மாநிலங்கள் அவைத் தலைவருக்கு அவர் பதவி விலகல் கடிதம் கொடுக்காவிடில், 27—3—1986-லிருந்து 14 நாட்கள் கழித்து அவருடைய மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவி தானாகவே வெற்றிடமாகும்.



1967-இல் அறிஞர் அண்ணா அவர்கள் மக்களவை உறுப்பினராகப் பதவி வகித்து வந்தார். அப்போது அவர் தமிழ்நாடு சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தேர்தல் முடிவு அரசிதழில் 28—4—1967 அன்று வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பு வெளியிட்ட தேதியிலிருந்து 14 நாட்கள் கழித்து அதாவது 13—5—1967 அன்று அவருடைய மக்களவை உறுப்பினர் பதவி வெற்றிடமாகியது. இந்நிகழ்வில் அண்ணா அவர்கள் மக்களவை உறுப்பினர் பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக கடிதம் எதுவும் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற பல நிகழ்வுகள் நாடாளுமன்றத்தில் நடைபெற்றுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் மாநிலங்களவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து, ராஜினாமா கடிதத்தை அனுப்பிவிட்டதாகச் சொல்கிறார்.

திரு. எல். கணேசன் அவர்களின் மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவி விலகல் செய்யாவிடினும், குறிப்பிட்ட நாளில் மாநிலங்கள் அவை உறுப்பினர் பதவி வெற்றிடமாகிவிடும். மேலவை சம்பந்தப்பட்டவரை அவரது உறுப்பினர் பதவி அவராக பதவி விலகல் செய்யாதவரை, அது வெற்றிடமாகக் கருதப்பட மாட்டாது. எனவே, அவர் மேலவையில் 23—4—1986 அன்று மேலவை உறுப்பினராகப் பதவி ஏற்றது அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 3. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன். இன்று மாலையும் நாம் கூடினாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு அதிக நேரம் தர வேண்டும்; மேலும் நிறைய பேர் பேச இருக்கின்றார்கள். ஆகையினால் ஒவ்வொரு உறுப்பினரும் மற்றவர்கள் நேரத்தைத் தாம் எடுத்துக்கொள்ளலாம் என்று எண்ணாமல், ஒவ்வொரு உறுப்பினரும் தங்கள் உரிமையைக் காத்துக்கொள்வதோடு மற்றவர்கள் உரிமையையும் அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. மயில்சாமி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது கருத்துக்களைச் சொல்வதற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு கல்விக்காக ரூ. 851 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இது அதிகமாக இருந்தாலும், இன்றைக்கு தமிழகத்திலே தொடக்கநிலைப் பள்ளிகள் 29,000 ஆக இருந்தாலும், நடுநிலைப் பள்ளிகள் 5,000 ஆக இருந்தாலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் 4,000 ஆக இருந்தாலும்,

இவ்வாறிருக்கின்ற காரணத்தினால் இந்தப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர் அலுவலர்கள் ஊதியம் தருவது போன்ற காரியங்களுக்காக இந்தத் தொகை ஒதுக்கியிருந்தாலும், இந்தத் தொகை நிச்சயமாகப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டிடங்கள் மற்ற பராமரிப்புகளுக்குப் போதுமானதாக இருக்காது. ஆகையினால் அடுத்த ஆண்டிலிருந்தாவது கல்வித் துறைக்கு இன்னும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், கல்விக்கு ஆகின்ற செலவு ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்தின் மூலதனம் என்று நினைத்துச் செய்ய வேண்டும். உற்பத்தி நோக்கு இல்லாத செலவு என்று கருதினால், நிச்சயமாக எதிர்காலத்திலே நாட்டிலே எந்தத் திட்டம் போட்டாலும், அந்தத் திட்டம் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமென்று நினைக்கிறோமோ அவர்களுக்குப் போய்ச் சேராத நிலைமை ஏற்பட்டுவிடும். எனவே இது நாட்டினுடைய மூலதனம் என்று கருதி, அதன் அடிப்படையில்தான் செலவு செய்ய வேண்டும்.

(முற்பகல் 10-35)

இந்த ஆண்டு தொடக்கப் பள்ளிகளுக்காக தனி இயக்குநர் போடுவதாக நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அதற்குத் தனி இயக்குநரோடு நின்றுவிடாமல், அந்த இயக்குநருக்கு உறுதுணையாக கல்வித் துறையிலே அலுவலர்களையும் அதிகப்படுத்தினால்தான், அது சீராக இருக்கும். இப்போது மாநகராட்சி, நகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களை யெல்லாம் அரசு ஊழியர்களாக அரசு ஆக்கியிருக்கிறது. அதற்காகவும் நான் எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகப் பெரிய எண்ணிக்கையில் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அரசு ஆக்கி யிருக்கிறது. அவர்களையெல்லாம் நிர்வாகம் செய்வதற்கு இன்னும் பல பணி இடங்களில் அதிகமாக நியமிக்கின்ற வகையிலே பிரிவுகளை ஏற்படுத்தியாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் துறையிலே பல ஆணைகள் போடப்பட்டிருக்கின்றன. இருப்பினும் பல ஆணைகள் அமல்படுத்தாத நிலை இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1981ல் ஆசிரியர்களுக்கான ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. மாவட்ட அளவிலே, வருவாய் மாவட்ட அளவிலே, மாநில அளவிலே அந்தக் குழு அமைக்கப்பட்டது. பல மாவட்டங்களில் இரண்டு மாதங்களுக்கு



ஒருமுறை அந்தக் குழுக் கூட்டம் நடத்தப்பட வேண்டுமென்று விதி

(மாற்றுத் தலைவர் திரு. பீசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் தலைமை)

இருக்கிறது. அது முறையாக நடக்கிறதா என்றால், இல்லை. பிரச்சினைகளைச் சொல்லி அது தீராமல் இருந்தால், அது கல்வி இயக்குநருடைய அலுவலகத்திற்கு வர வேண்டும். அது இதுவரை வந்திருக்கிறதா என்றால், இல்லை. அதேநேரத்தில் மாநில அளவில் கூட்டப்படுகின்ற கூட்டம் ஒருமுறை கூட கூட்டப்படவில்லை. அருள்கூர்ந்து அதைக் கூட்டினால், பல பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். 1981-ல் போடப்பட்ட மாநில அளவிலான ஆலோசனைக் குழுக் கூட்டம் ஒன்றுகூட நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள். அவைகளை நீக்குவதற்காக 'எக்ஸ்பர்ட் கமிட்டி' போடப்பட்டது. அதற்கு பள்ளிக் கல்வி இயக்குநர் தலைவராக இருந்தார். சட்டத் துறையிலே இருந்தும் அதற்கு அதிகாரிகள் வந்தார்கள். சங்கங்களின் பொறுப்பாளர்களும் அதில் கலந்துகொண்டார்கள். அங்கு பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு வரைக்கும் அதனுடைய பரிந்துரைகள் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அது கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. அது சரியல்ல. இப்படிப்பட்ட குறைகளை யெல்லாம் சீர்செய்து அரசு உதவி செய்தால், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் பணிப் பாதுகாப்பு நிச்சயமாகக் கிடைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்வேறு பிரச்சினைகள் ஆசிரியர்கள் மத்தியில் இருந்தாலும், அவைகளைத் தீர்ப்பதற்கு ஆசிரியர் சங்கங்களை அழைத்துப் பேசினால், அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். ஆசிரியர் சங்கங்களை அழைத்துப் பேசுவது என்பதே வழக்கமாக இல்லாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. கல்விச் செயலாளராகட்டும், கல்வி இயக்குநராகட்டும், அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க ஆசிரியர் சங்கங்களை அழைத்துப் பேசினால், பல்வேறு பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும்.

மாநகராட்சி, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை அரசுப் பள்ளி ஆசிரியர்களாக அறிவித்திருக்கிறார்கள். அவர்களை அரசு எந்தப் பிரிவில் வைக்கிறது என்பது தெரியவில்லை. 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகள் இணைக்கப் பட்டதில் இன்னும் கூட பல சிக்கல்கள் இருக்கின்றன. அப்படி இருக்கும்

போது, இப்போது வந்துள்ள ஆசிரியர்களை எந்தப் பிரிவில் அரசு வைக்கு மென்று தெரியவில்லை. மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது ஆசிரிய சங்கங்களை அழைத்துப் பேசி பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பிளஸ் 2-ல் தொழிற் பாடங்களை மாணவர்கள் எடுத்துப் படிக்கிறார்கள்; அக்கவுண்டன்ஸியையும் எடுத்துப் படிக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பி.காம். பட்டப் படிப்புக்குச் செல்லும்போது அவர்களுக்கு எந்த விதமான இடமும் கிடைப்பதில்லை. தொழிற் பாடங்கள் எடுத்துப் படிக்கும் மாணவர்களுக்காக ஒரு குறிப்பிட்ட சதவீத அடிப்படையில் கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அப்படி ஒரு குறிப்பிட்ட சதவீத அடிப்படையில் ஒதுக்கினால், நிச்சயமாக மாணவர்கள் பட்டப் படிப்பு 'பி.காம்.' படிப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்லூரிகளில் பி.காம். பட்டப் படிப்பு படிப்பதற்கு மாணவர்கள் விண்ணப்பங்களைப் போட்டால், கணிதப் பாடம் எடுத்திருக்கிறாரா என்று சொல்லி நிராகரித்திருக்கிறார்கள். அப்படி ஒரு விதி அங்கு இல்லாவிட்டாலும்கூட, அப்படி வலியுறுத்துகிறார்கள். கணிதம் எடுக்காவிட்டாலும்கூட, பி.காம் பட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்வதற்கு விதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி இன்றைக்கு தனியார் பள்ளி ஆசிரியர்கள் பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றைக்கு 1,200 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. தனியார் பள்ளிகள் போதுமான அளவில் இருக்கின்றன. அங்கு பணியாற்று கின்ற ஆசிரியர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால், அவர்களுக்கு மேல் முறையீட்டு அதிகாரி யார் என்று தெரியவில்லை. தனியார் பள்ளிகள் ஒழுங்கு படுத்தும் சட்டம் உயர்நிலைப் பள்ளிகளுக்கு மட்டும்தான் பொருந்தும் என்று நீதிபதிகள் சொல்கிறார்கள். அந்தச் சட்டம் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பொருந்துமென்ற நிலையை உருவாக்க வேண்டும். 1981-ல் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறது இந்த அரசு. அவர்களை எடுத்தபோது, ஏ.ஈ.ஓ. அலுவலகத்திலே கல்வித் துறையைச் சார்ந்த அலுவலர்களே கிடையாது. ஆனால் அங்கு கல்வித் துறையைச் சின்னரணிக்கின்ற நிலை இல்லாத ஒரு நிலை இருக்கிறது.



(முற்பகல் 10-40)

அதைப்போலவே ஏ.ஈ.ஓ.-க்களைப் பொறுத்தவரை, அவர்கள் நியமிக்கப் பட்டு ஐந்து ஆண்டுகளாகியும்கூட, அவர்களைக் குறித்த பணி விதிமுறைகள் இதுவரை தயாரிக்கப்படவில்லை. எனவே அவைகளும் உடனடியாக வகுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் கல்வித் துறையைச் சார்ந்தவர்கள்தான் ஏ.ஈ.ஓ. அலுவலர்களாக இருக்கும் நிலையை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையில் நீண்ட காலமாக இருந்து வரும் 10 (ஏ) (1) ஆசிரியர்கள் பிரச்சினை. தமிழாசிரியர்களானாலும் சரி, • பி.டி. ஆசிரியர் களானாலும் சரி, அவர்களெல்லாம் இன்னும் 10 (ஏ) (1) ஆசிரியர்களாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். இதைக் குறித்து அரசே ஏற்கெனவே ஒப்புக் கொண்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவே அவர்கள் அனைவரும் 10 (ஏ) (1) ஆசிரியர்களாகவே பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் எல்லோருடைய கோரிக்கையும் அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்த வேண்டும் என்பதாகும். அவர்களையெல்லாம் தேர்வாணைக் குழுவின் பார்வையிலிருந்து எடுத்து, கல்வித் துறை அதிகாரிகளே அவர்களை நியமனம் செய்யவும் அவர்களை நிரந்தரப்படுத்தவும் விதிமுறைகளைச் செய்ய வேண்டும் என்பதாகும். இத்தகைய நடவடிக்கையை விரைவில் மேற்கொண்டு —அதாவது இந்த ஆண்டே மேற்கொண்டு, அவர்களையெல்லாம் நிரந்தரப் படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏற்கெனவே தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் தெலுங்கு மீடியம் மற்றும் கன்னடம் மீடியம் "டீச்" செய்யக் கூடியவர்கள் எல்லாம் செகண்டு கிளாஸ் லேங்குவேஜ் டெஸ்ட் பாஸ் செய்தால் போதும் என்று இருக்கிறது. ஆனால் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டவர் களுக்கு என்ன போட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் பி.ஏ. ஸ்டேண்டர்டு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதாகும். நிச்சயமாக அவர்கள் அந்த அளவுக்குத் தேர்ச்சி பெற முடியாது. ஏற்கெனவே அவர்களுக்கு 'செகண்டு கிளாஸ் லேங்குவேஜ் டெஸ்ட்' பாஸ் செய்திருந்தால் போதும் என்றிருந்ததை மாற்றி இப்படிப்பட்ட புதிய நிபந்தனையைப் போட்டதன் காரணமாக பல மாவட்டங்களில் மாவட்டக் கல்வி அதிகாரிகள் அத்தகைய ஆசிரியர்களை யெல்லாம் பணி வரன்முறை செய்யாமல் வைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அவர்கள் ஏற்கெனவே 10 (ஏ) (1) அடிப்படையில் பெற்றிருந்த ஊதிய உயர்வைத் திருப்பிக் கட்டவேண்டுமென்று சொல்லி, தர்மபுரி போன்ற

மாவட்டங்களில் அத்தகைய ஆசிரியர்களிடமிருந்து ரூ. 10,000 வரை திரும்பப் பெறுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையையும் அரசு கவனித்து ஏற்கெனவே இருந்த முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இடைநிலை ஆசிரியர்கள் தங்களின் பணிக் காலத்திலேயே தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். பி.ஏ., எம்.ஏ., என்று பட்டங்களைப் பெற்று தங்கள் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பதவி உயர்வுக்கு வழியே இல்லை. அந்த காரணத்தால்தான், இடைநிலை ஆசிரியர்களுக்கெல்லாம் சிறப்பு நிலையும் தேர்வு நிலையும் அளிக்கப்பட்டது. ஒரு இடை நிலை ஆசிரியர் எப்போது பதவி உயர்வு பெறுகிறார் என்றால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 1961 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இடை நிலை ஆசிரியர் ஒருவருக்கு 25 ஆண்டுகள் கழித்துத்தான் பதவி உயர்வு கிடைக்கிறது. இது எல்லோருக்கும் தெரியும். எனவேதான் இத்தகைய இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் என்றைக்குக் கல்வித் தகுதியை உயர்த்திக் கொண்டார்களோ அந்த நாளிலிருந்தே அவர்களின் கல்வித் தகுதிக்கு ஏற்ப அவர்களின் பதவியை 'அப் கிரேடு' செய்தால்தான், அவர்களின் பிரச்சினை தீரும். இப்படிச் செய்வதன் காரணமாக அவர்களுக்கு உடனடியாகப் பணப் பலன் ஏதுமில்லை. ஏற்கெனவே ஊதியம் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களின் பதவியை மேம்பாடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சில மாவட்டங்களில் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றி வந்த இடைநிலை ஆசிரியர்களை, இடையில் தமிழாசிரியர்களாக நியமித்தார்கள். அவர்களுக்கெல்லாம் அத்தகைய தகுதி இல்லை என்றாலும் கூட, ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக அவர்களை நியமித்தார்கள். அவர்களெல்லாம் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, மீண்டும் மீண்டும் இடை நிலை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். ஆனால் அந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளைப் பொறுத்தவரையில், அவற்றை எதற்கும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் பலமுறை அதிகாரிகளிடத்தில் சொல்லியிருக்கிறேன். அந்தப் பணிக் காலத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும் என்றும், அந்தக் காலத்தைச் சேர்த்தே சிறப்பு நிலை அல்லது தேர்வு நிலை வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை அல்லது சிறப்பு நிலை ஏன் தருகிறார்கள் என்றால், அவர்களுக்கு அதிகமான பதவி உயர்வுக்கான வாய்ப்பு இல்லை. அரசு அதைக் கொடுத்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நான்காவது ஊதியக் குழு என்ன பரிந்துரை செய்திருக்கிறது என்றால், ஆண்டுக்கொரு முறை அவர்களுக்கு பேனல் தயாரிக்கப்பட வேண்டும். அதாவது அரசுப் பள்ளிகளில் 30,000 பட்டதாரி ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கெல்லாம் சேர்த்து 'பேனல்' தயாரிப்பதென்றால், எவ்வளவு காலமாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. அவர்களுக்குப் பதவி உயர்வுக்கு என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் இதற்கும் அப்ளை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அப்படியென்றால், இனி எதிர்காலத்தில் தேர்வு நிலைக்கும் சிறப்பு நிலைக்கும் யாரும் போகவே முடியாது என்கிற வகையில் நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரை இருக்கிறது. ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுக்கு வழியில்லை என்ற காரணத்தால், 20 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சிறப்பு நிலை அளிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்றால், கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து இனி ஆசிரியர்கள் எல்லோருக்கும் பேனல் தயாரிக்க வேண்டுமென்றும், அவர்கள் பதவி உயர்வுக்கு என்னென்ன விதிமுறைகள் உண்டோ அவையனைத்தும் அவர்களுக்குப் பொருந்தும்படி இருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அருள்கூர்ந்து ஏற்கெனவே சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலைக்கு இருக்கிற விதிகளை ஏற்று தற்போது சொல்லப்பட்டதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-45)

இன்றைக்குப் பல மொழியாசிரியர்கள், தெலுங்கு, கன்னடம் போன்ற மொழியாசிரியர்கள் அந்தப் பகுதிகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக பெரியார் மாவட்டத்தில் உள்ள பகுதி தாளவாடி. கர்நாடகா மாநிலத்தினை ஒட்டிய பகுதி. அங்கே பணியாற்றும் ஆசிரியர்கள் கன்னட மொழியில் பயிற்சி பெற்று கன்னட மாணவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சிக் கென்று, கன்னட மொழியில் ஆசிரியர்கள் பயிற்சிக்கென்று தமிழ் நாட்டில் பள்ளிகள் எதுவும் கிடையாது. ஆகவே அவர்கள் கர்நாடகா மாநிலத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்று வந்து இங்கே வேலை பார்க்கிறார்கள். அவர்கள்

50 சதவீதம் மதிப்பெண் பெற்றிருந்தால்தான், பணியில் இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுக் காலமாக பணியாற்றிய அவர்கள், 50 சதவீதம் மதிப்பெண் இல்லாததால், வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த இடத்தில் வேறு யாரையும் நியமிக்க முடியாத நிலை இருக்கிறது. ஏனென்றால் கன்னட மொழியில் பயிற்சி பெற கர்நாடகா மாநிலத்திலேதான் பள்ளிகள் இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியில் பல ஆசிரியர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள், வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஏதாவது தனிச் சலுகை கொடுத்து, அந்த மதிப்பெண்ணைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி அந்தப் பகுதியில் பணியாற்றுகிற கன்னட ஆசிரியர்கள் பத்தாண்டுக் காலம், 12 ஆண்டுக் காலம் பணியாற்றியிருக்கிறார்கள். இது வரை தேர்வாணைக் குழு நேர்முகத் தேர்விற்கு அவர்களை அழைக்கவில்லை. கன்னட மொழி ஆசிரியர்கள் தேவை என்று தேர்வாணைக் குழு விளம்பரப் படுத்தவில்லை. ஆகவே அவர்கள் 12 ஆண்டுக் காலமாக நிரந்தரம் செய்யப் படாமல் இருந்து வருகிறார்கள். ஆகவே அவர்களுடைய பணியை நிரந்தரப் படுத்த வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற் கல்வி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட தமிழ் நாட்டில்தான் அதிகமான மாணவர்கள் இருக்கிறார்கள். அங்கே பணியாற்றுகிற பகுதி நேர ஆசிரியர்கள் கிட்டத்தட்ட ஐந்தாயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் முழுக் கல்வித் தகுதியை உடையவர்கள். எம். காம்., எம். எஸ்.ஸி., படித்து முழுக் கல்வித் தகுதியை உடையவர்கள். அவர்களையும் நிரந்தரப் படுத்தவில்லை. அவர்கள் முழு நேர ஆசிரியர்கள் பணியில் இருக்கிறார்கள். அனைத்துத் துறை ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் ஒட்டுமொத்தத் தொகை பொங்கல் பரிசாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அதையும் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உடனடியாக நிரந்தர வேலை வாய்ப்பில் முன்னுரிமையாவது தந்தால், நிச்சயமாக அவர்களுடைய எதிர் காலம் சிறப்பாக இருக்கும் என்ற அந்த அடிப்படையிலே அதையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 'அப்சார்ப்ஷன்'. பல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றினோம். அந்தப் பள்ளிகளில் பணியாற்றும் யாரையும் முறைமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே 20 ஆண்டுக் காலம் பணி





யாற்றினாலும், அப்படியே இருக்கிறார்கள். ஆனால் சில பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ரெட்ராஸ்பெக்டிவ் ரெகுலரைசேஷன் செய்திருக்கிறோம். சில பள்ளிகளுக்கு 'ரெட்ராஸ்பெக்டிவ்' ரெகுலரை சேஷன் செய்யவில்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியாகச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழகத்திலே உள்ள கிராமப்புறங்களில் பணியாற்றினால், கிராம ஊக்கப் படி 20 ரூபாய் கொடுக்கப்படுகிறது. நகர்ப்புறங்களில் பணியாற்றினால், நகர ஈட்டுப் படியும், வீட்டு வாடகைப் படியும் கொடுக்கப்படுகிறது. கிராம ஊக்கப் படியும், நகர வீட்டு வாடகைப் படியும் பெறாமல் சில ஆசிரியர்கள் இருக்கி றார்கள். நீலகிரி மாவட்டத்தில் குன்னூரில் 9 பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இந்த இரண்டு படிகளையும் வாங்காமல் இருக்கிறார்கள். இதைப் பற்றி பல முறை முறையிட்டிருக்கிறோம். செயின்ட் ஜான் ஹையர் செகண்டரி பள்ளி, செயின்ட் ஜோசப் பாய்ஸ் ஸ்கூல், செயின்ட் ஜோசப் மிடில் ஸ்கூல் போன்ற பல பள்ளிகளில் பணியாற்றும் இருநூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு கிராம ஊக்கப் படியும் இல்லை. நகர வீட்டு வாடகைப் படியும் இல்லை. ஆகவே அவர்களுக்கு நிச்சயமாகத் தர அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழகத்திலே விளையாட்டு வளர்ச்சிக் குழு இருக்கிறது. அதற்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அண்மையில் பத்தாவது தேசிய விளையாட்டுப் போட்டி கோவையிலே சிறப்பாக நடை பெற்றது. அந்த விளையாட்டுக் கழகமும் மேல்நிலைப் பள்ளியில் இருக்கக் கூடிய உடற்பயிற்சி ஆசிரியர்களும் இணைந்து ஆண்டுக்கு ஒரு முறை பயிற்சி தந்தால், இந்த மாநிலம் விளையாட்டுத் துறையில் சிறப்பாக வளர வாய்ப்பாக இருக்கும். அவர்களையும் இந்தத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

உடற் பயிற்சி ஆசிரியர்களின் நியமனம் செய்யும்போது, கல்வித் தகுதி அதிகமாக உள்ளவர்களை நியமிக்கக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. உடற் பயிற்சி ஆசிரியர்கள் நியமனம் என்றால், பி.ஏ., பி.டி., படித்தவர்களை நியமிக்கக்கூடாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக் கிறது. மற்ற துறைகளில் ஒரு பதவிக்கு கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. என்றிருந்தாலும், பி.ஏ., எம். ஏ. படித்தவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் உடற் பயிற்சித் துறையிலே மட்டும் இப்படிப் பட்ட நிலை. ஆகவே கல்வித் தகுதி அதிகமாக இருந்தாலும் அவர்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. மயில்சாமி] [1986 ஏப்ரல் 24

மாவட்டங்களில் சி. ஈ.ஓ. க்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பல அதிகாரங்கள் இருக்கின்றன. ஆசிரியர்கள் மாறுதல்கள், நியமனம் போன்ற அதிகாரங்கள் இருக்கின்றன. இப்போது அவர்களுடைய அந்த அதிகாரம் சென்னையில் உள்ள கல்வி இயக்குநருக்கு வந்துவிட்டது. அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்று சொல்லி மாவட்டங்களைப் பிரிக்கிறோம். ஆனால் கல்வித் துறையிலே மாவட்டங்களில் உள்ள அதிகாரங்கள் சென்னையிலே உள்ள கல்வித் துறை இயக்குநரிடம் குவிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பல காரியங்களில் காலதாமதம் ஆகிறது. ஆகவே அவர்களுக்கு அந்த அதிகாரத்தை மீண்டும் தர வேண்டும். அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களில் ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன.

(முற்பகல் 10-50)

ஆண்டுக்கணக்காக அங்கே இடங்கள் காலியாக இருக்கின்றன. கோவை மாவட்டத்திலே சோழவந்தான் என்ற இடத்தில் ஒரு அரசு உயர்நிலைப் பள்ளியில் இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்தப் பகுதி பிற்படுத்தப்பட்டவர்கள் பகுதியாக இருக்கிறது. மலைப் பகுதி, பிற்படுத்தப்பட்டவர்கள் பகுதியில் ஓராண்டுக் காலமாக இடங்கள் காலியாக இருக்கின்றன. அது மாத்திரம் அல்ல. இப்போது 10-வது வகுப்புத் தேர்வும்கூட முடிந்துவிட்டது. அங்கு அறிவியல் ஆசிரியர்கள் பதவியிடங்கள் 3 இடங்கள் காலியாகவே இருக்கின்றன. இப்படிப் பல பணியிடங்கள் காலியாகவே இருந்துகொண்டிருக்கின்றன. அங்கே அவர்களுக்கு நியமனங்களைக் கொடுக்க வேண்டும். உடனுக்குடன் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஜனவரி மாதத்திலே எத்தனையோ பணியிடங்கள் அங்கே வந்திருக்கின்றன. விபரம் எங்களுக்குத் தெரியாது. நியமனம் செய்யும் அதிகாரம் இங்கே வந்துவிட்டது. இந்த மாதிரியான நிலைமைகளை எல்லாம் மாற்ற வேண்டும். சி. ஈ. ஓ. களுக்கு இன்னும் கூடுதலான அதிகாரத்தைக் கொடுத்து, பணியிடங்களைப் பூர்த்தி செய்வது மாத்திரமல்ல, அங்கெல்லாம் நல்ல கல்வியை, தரமான கல்வியைத் தர வேண்டும். அதற்குப் போதிய அதிகாரங்களை அதிகாரிகளுக்குத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இன்றைக்கு தமிழகத்திலே அரசுத் தேர்வுகளை நடத்துகிறோம். மற்ற மாநிலங்களிலே எப்படியோ, அதைப்பற்றி எனக்குத் தெரியாது. இன்றைக்கு பத்தாம் வகுப்புத் தேர்வை கிட்டத்தட்ட 3 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் எழுதியிருக்கின்றார்கள். அதுபோல மேல்நிலைப் பள்ளித் தேர்வை



1986 ஏப்ரல் 24] [திரு. அ. மயில்சாமி]

கிட்டத்தட்ட 2 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் எழுதியிருக்கின்றார்கள். அத்தனை பேர்களுக்கும் ஒரே மாதிரியான வினாத்தாள்களை தமிழகம் முழுவதும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே நான் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். இந்த முறையை மாற்றி பல ரீஜன்களாகப் பிரித்து மாற்றி, வினாத் தாள்களைக் கொடுக்க வேண்டும். ஒரு மூன்று அல்லது நான்கு மாவட்டங்களுக்கு என்று பிரித்து வினாத்தாள்களைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதால் அந்தந்த மாவட்டத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப வினாத் தாள்கள் சிறப்பாக அமையும். அது சரியாக இருக்கும். அதிலே வினாத் தாள்களை எடுத்துச் செல்வதில், ஒட்டுமொத்தமாக எடுத்துச் செல்வதில் ஆபத்தும் இருக்கின்றது. இன்றைக்கு வினாத் தாள்களைக்கூட பத்திரமாக எடுத்துச் செல்லவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. இந்த மாதிரி நிலைமைகளை மாற்றி அமைத்துக்கொண்டால், இது போன்ற பிரச்சினைகளை எல்லாம் தவிர்க்கலாம். இப்படிச் செய்தால் சரியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தேர்வு மேற்பார்வையாளர்களுக்கு, அந்தப் பணி செய்கின்ற நேரத்திலே, அந்த இடத்திலேயே பணம் தருவதில்லை. ஓராண்டு கழித்துத் தான் அவர்களுக்குப் பணம் தருகிறார்கள். விடைத்தாள்கள் திருத்துபவர்களுக்கு அந்த இடத்திலேயே உடனடியாகத் தருகிறார்கள். ஆனால் மேற்பார்வையாளர்களுக்கு அப்படித் தருவதில்லை. விடைத்தாள்கள் திருத்தும் பணியில் இருப்பவர்களுக்கு, 1968-69-ல் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 1 ஆக இருந்தது.

**மாற்றுத் தலைவர் (திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 நிமிடங்களாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு 10 உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் ஒவ்வொருவருக்கும் 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. அ. மயில்சாமி :** நம் கல்வித் துறையில், தொடக்கக் கல்வி, மேல்நிலைக் கல்வி, கல்லூரி கல்வி எல்லாம் பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. இன்னும் கொஞ்சம் அதிக நேரம் ஒதுக்கலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் நேற்று சொல்லியிருக்கின்றார்கள். குறைந்தது அரை மணி நேரமாவது கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அவைக்குறிப்பிலேகூட பார்க்கலாம். இப்போது மாற்றுத் தலைவர் அவர்கள் 20 நிமிடங்கள் என்று சொல்கிறார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. மிசா கணேசன் என்கின்ற திரு. ஆர். கணேசன்):** இன்றைக்கு 10 பேர்கள் பேசவேண்டியிருப்பதால், 20 நிமிடங்கள் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. அ. மயில்சாமி:** ஆக அந்த மேற்பார்வையாளர்களுக்கும் விடைத் தாள்கள் திருத்துகின்றவர்களுக்கும் கொடுக்கின்ற ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல இடங்களிலே தேர்வு மேற்பார்வை யாளர்களுக்கு ஆபத்தான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. எனக்குத் தந்தி கூட வந்திருக்கின்றது. பள்ளிகளிலே தாக்கியிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப் போனால் சேலத்திலே முதன்மைக் கல்வி அதிகாரி அவர்கள் ஒரு பள்ளிக்குச் சென்று திரும்பி வருகின்றபோது, அவர்களுடைய வாகனம் உடைக்கப்பட்டிருக்கிறது. அப்படியெல்லாம் தேர்வு மேற்பார்வையாளர் களுக்கு ஆபத்து உருவாகியிருக்கிறது. அதையெல்லாம் எப்படித் தடுப்பது என்று தெரியவில்லை. முடிந்த அளவுக்கு ஒரே மாதிரி வினாத் தாள்கள் இல்லாமல் இருந்து, அதைக் கொஞ்சம் மாற்றினால், அது பாதுகாப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போது நடந்து முடிந்த தேர்விலே 10 ஆம் வகுப்பு ஆங்கிலம் இரண்டாவது தாள் சற்று கடினமாக இருக்கின்றது. பிளஸ் 2 ஆங்கிலம் தாள் சற்று கடினமாக இருக்கிறது என்று சொல்கின்றார் கள். விடைத் தாள்கள் திருத்துகின்ற நேரத்திலே என்ன செய்ய வேண்டுமோ அந்த முறைப்படி திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொழில் பள்ளிகள் அரசு மான்யத்தில் நடைபெறுகின்றன. அந்தத் தொழில் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 200 பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி ஊதியம் இன்னும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் அதைப் பெற முடியாத நிலையில் இருக்கின்றார்கள். மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படியான ஊதியத்தைக்கூட 28 மாதங்கள் கழித்துத்தான் அவர்கள் பெற்றார்கள். ஆகவே நான்காவது ஊதியக் குழுவினுடைய பரிந்துரைப்படியான ஊதியத்தை அவர்கள் உடனடியாகப் பெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாதிரிப் பள்ளிகளைப் பொறுத்து, கருத்து தெரிவித்தார்கள். நம்முடைய மாநில அரசுகூட கருத்தைத் தெரிவித்திருக்கின்றது. அதிலே மாநிலத்திற்கு 2 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. நேற்றைக்கு செய்தித்தாள்களிலே கூட வந்திருக்கின்றது. மாணவர்களுக்கு எல்லாமே இலவசம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். மாணவர்கள் விடு முறை நாட்களில் செல்வதற்கு போக்குவரத்திற்குக்கூட பணம் தருவதாகச்



சொல்லியிருக்கின்றார்கள். அதிலே ஒரு கவர்ச்சி இருக்க வேண்டும் என்பதற் காகச் சொல்லியிருக்கின்றார்களோ என்னவோ தெரியவில்லை. அதிலே இருக் கின்ற திட்டத்தை நான் கடுமையாக எதிர்க்கவேண்டிய நிலைமையில் இருக்

(முற்பகல் 10-55)

கிறேன். மொழிக் கொள்கைபற்றி நேற்று கருத்துப் பரிமாற்றம் செய்யப் பட்டது. நம்முடைய கருத்துக்களை வலியுறுத்தி, ஒவ்வொரு மாவட்டத் திற்கும் 2 கோடி ரூபாயை நாம் பெற வேண்டும். இப்படிப்பட்ட மாதிரிப் பள்ளிகளால் யாருக்கு நன்மை என்று பார்க்க வேண்டும். அனைவருக்கும் இடம் கிடைக்குமா என்று பார்க்க வேண்டும். அந்த நிலைமையிலே நம் முடைய கருத்துக்களைத் தெளிவாக மாதிரிப் பள்ளிகள் பற்றிச் சொல்ல வேண்டும். மாநில அரசு அதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அந்த முயற்சி யிலே உடனடியாகத் தலையிட்டு, அடுத்த ஆண்டு ஜூன் திங்களில் அந்தப் பள்ளிகளை ஆரம்பிக்கும் நிலைமை இருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. அவற்றுக்கு நவோதயா வித்யால்யா என்று பெயர் வைத்து, மாடல் பள்ளி என்ற நிலைமையில் அது இருக்கிறது. எனவே மொழிக் கொள்கையிலும், மற்ற நிலைகளிலும் எதிர்த்து, சராசரி மாணவர்களும் அந்தப் பள்ளிகளில் சேரும் அளவுக்கு முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாடெங்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இருக்கின்றன. நகரங் களிலிருந்து அந்தப் பள்ளிகள் கிராமங்களுக்கும் வந்துவிட்டன. அங்கே ஆசிரியர்களுக்குச் சரியான ஊதியம் தருகிறார்களா என்றால், இல்லை; ஆக, அதையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நிர்வகிக்க இன்ஸ்பெக்டர் ஆஃப் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ஸ் என்று ஒருவர் இருக்கிறார். மாநிலம் முழுவதற்கும் ஒருவர்தான் இருக்கிறார். அவரால் எல்லாப் பள்ளிகளையும் நிர்வகிக்க முடியாது. எனவே அந்தப் பணியிடங் களை அதிகமாக்க வேண்டும். இன்னும் அதிகமான அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நகரங்களில் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் விரும்பிச் சேரு கிறார்கள். ஆங்கில மீடியம் உள்ள பள்ளிகளில் இடம் கிடைப்பதில் கஷ்டம் அதிகமாக இருக்கிறது. ஆனால் கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு அந்த வாய்ப்பே இல்லை. கிராமங்களில் அரசுப் பள்ளிகள்தான் இருக்கின்றன. அங்கே ஆங்கில மீடியம் வகுப்புகளுக்கு அனுமதி கிடையாது. நகரங்களில் அந்த வாய்ப்பு இருக்கிறது. நாம் இரு மொழிக் கொள்கையை ஒத்துக்கொள் கிறோம். கிராமங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மீடியம் வகுப்புகளை ஏற்படுத்த ஏன் தடை விதிக்க வேண்டும்?

அப்படிப்பட்ட வகுப்புகளை ஏற்படுத்தினால், நகர்ப்புறங்களில் இட நெருக்கடி ஏற்படாது. இத்தனை பள்ளிகளை நாம் ஏற்படுத்தியும்கூட, மாணவர்கள் விரும்புகிற கல்வியைத் தர முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே கிராமங்களில் உள்ள மாணவர்களுக்கும் அந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பள்ளிகளில் கட்டிட வசதி இல்லை. பல பள்ளிகள் திறந்த வெளிப் பள்ளிகளாக இருக்கின்றன. கழிப்பிட வசதி, குடிநீர் வசதி இவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும். கோவையில் முடீஸ் உயர்நிலைப் பள்ளியில் 1,200 மாணவர்கள் படிக்கிறார்கள். அங்கே குடிநீர் வசதியில்லை. அந்தப் பள்ளிக்கு அருகிலே ஒரு கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்று நீரைப் பயன்படுத்தக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். சொல்லி 10 ஆண்டுகள் ஆகின்றன. கிண்டி இன்ஸ்டிடியூட் அந்தக் குடிநீரைப் பரிசோதித்து, அது குடிக்க லாயக்கற்றது என்று சொல்லிவிட்டது. இருந்தாலும், இன்னும் அந்தக் குடிநீரைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. அங்கே 1,200 பேர்கள் படிக்கிறார்கள். உடனடியாக அந்தப் பள்ளிக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். இப்படி எத்தனையோ பள்ளிகள் இருக்கின்றன.

அடுத்து, அரசுப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்ட ஒதுக்கியுள்ள தொகை 1 கோடி ரூபாய். இது மிகக் குறைவு. இதை அதிகப்படுத்த வேண்டும். இடைநிலை ஆசிரியர் பயிற்சி தொழிற் பயிற்சிப் பிரிவாக மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதிலே 25 மாணவர்களைச் சேர்க்கலாமென்று இருக்கிறது. குறிப்பாக இந்தப் பயிற்சியில் மகளிரைத்தான் சேர்க்கிறார்கள். ஆண்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு அந்த வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தனியார் பள்ளிகளில் 2 மாதம், 3 மாதம் ஆசிரியர்கள் விடுப்பு போட்டால், அந்தப் பணியிடங்களை நிரப்ப முடியாத நிலைமை இருக்கிறது. வேலை வாய்ப்பு நிலையத்தில் கேட்டால், உடனடியாக அவர்கள் பட்டியல் தருவதில்லை. 2, 3 மாதங்கள் ஆகின்றன. சில பள்ளிகளில் ஓராண்டானாலும், அந்தப் பணியிடங்களை நிரப்ப முடியாத நிலைமை இருக்கிறது. இந்த நிலையில், ஆண்டு முதலிலேயே வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஒரு லிஸ்டை அனுப்பிவிட்டால், தேவையானபோது நியமித்துக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். மேலும் இதற்கு வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களைக்கூட பயன்படுத்தலாம். ஆரோக்கியமானவர்களை, திறமையானவர்களைப் பயன்படுத்தலாம். பல தனியார் பள்ளிகளில் இத்தகைய குறைபாடுகள் இருக்



கின்றன: 3, 4, 6 மாதங்கள் பணி இடங்கள் நிரப்ப முடியாத நிலைமை இருக்கிறது. காரணம், வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஆசிரியர்கள் பட்டியல் சரியான நேரத்தில் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். அடுத்து, 2 ஆண்டுகளுக்கு முன்பு உதவித் தலைமை ஆசிரியர்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு நியமிக்கப்படுவார்கள் என்று ஆணை பிறப்பித்தார்கள். அதை இன்னும் அமுல்படுத்தவில்லை. இதையெல்லாம் விரைவாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

நம்முடைய பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு என்று தனியாக ஒரு வழக்கறிஞர் தேவை. தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தில் ஏற்படுகின்ற பல்வேறு குறைபாடுகளை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றால், அவசியம் ஒரு வழக்கறிஞர் நமக்குத் தேவை. இதுபற்றி எக்ஸ்பர்ட் கமிட்டியிலும் கூட வலியுறுத்தியிருக்கிறோம். இன்றைக்கு நாம் பார்க்கிறோம், பல்வேறு பள்ளிகள் மற்றும் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட பல வழக்குகள் இருக்கின்றன. இப்போது நமக்கென்று வழக்கறிஞர்கள் இல்லாத காரணத்தால், வழக்குகளின் முடிவு தெரிவதில் காலதாமதம் ஏற்படுகிறது. நம்முடைய துறைக்கென்று தனியாக வழக்கறிஞர் இருந்தால், நிச்சயமாகத் தாமதமில்லாமல் அவர்கள் தீர்த்து வைப்பார்கள். இன்றைய நிலையில் கல்வித் துறையிலேயே பல அதிகாரிகள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். பதவி உயர்வு சம்பந்தமாக அல்லது நியமனம் சம்பந்தமாகப் போகிறார்கள். இதனால் எல்லாம் மேலும் மேலும் காலதாமதம் தான் ஏற்படுகிறது. நீதிமன்றத்திற்குப் போனாலும் உடனடியாகக் காரியங்கள் முடிவதில்லை.

அடுத்து, பல பணியிடங்கள் கல்வித் துறையில் நிரப்பப்படவில்லை. பல மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அதிகாரி பணியிடங்களே கூட நிரப்பப்படவில்லை. தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். அங்கே ஒரு பெண்கள் கல்லூரி கூட இல்லை. ஆகவே அங்கே ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல ஆசிரியர்களுக்கு 'அப்கிரேடேஷன்' தருவதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அதற்கான அதிகாரம் கொடுத்தால், இதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைத் தவிர்க்கலாம்.

அடுத்து. இங்கே பிரகாரபா கல்லூரியைப்பற்றிப் பலரும் பேசினார்கள். சென்னை பிரகாரபா கல்லூரியை அரசு ஏற்று நடத்துவதில் தடையேதும் இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. அங்கே பல முறைகேடுகள்

[திரு. அ. மயில்சாமி] [1986 ஏப்ரல் 24

நடைபெற்றிருக்கின்றன. பிளஸ் 2-ல் பெயில் ஆனவர்களைக் கூட பட்டப் படிப்பில் சேர்த்திருக்கிறார்கள். கல்லூரிக்கான சொத்துக்களை விற்கவும் முயற்சி செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு பல முறைகேடுகளைச் செய்கின்ற அந்தக் கல்லூரியை அரசாங்கம் எப்போதும் சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாது. அப்படி விட்டுவிட்டால், பலரும் அதுபோல் செய்யும் நிலைமை ஏற்பட்டுவிடும். மற்றவர்களுக்கு இக்கல்லூரி பாடமாக அமையும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்று மாதங்களுக்குள் ஏழு கல்லூரி முதல்வர்களை அங்கே மாற்றியிருக்கிறார்கள் அல்லது நியமித்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு முறைகேடுகள் அங்கே நடைபெற்றிருக்கின்றன. இப்படி நடந்திருக்கின்ற முறைகேடுகளுக்கு எல்லாப் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அரசு தேவையான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல பல்கலைக் கழகங்கள் இன்றைக்கு தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்கலைக் கழகங்களைத் தோற்றுவிப்பது பட்டங்களைக் கொடுப்பதற்கு மட்டுமல்ல, அங்கே எல்லாம் ஆராய்ச்சிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும் இன்றைக்கு சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ப ஏதாவது புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறார்களா என்று கேட்டால், இல்லை. அந்த வகையில் நான் சொன்ன திசையில் பல்கலைக் கழகங்கள் புதிய புதிய ஆராய்ச்சிகளை எல்லாப் மேற்கொள்ள வேண்டும்.

கோவை பாரதியார் பல்கலைக் கழகம்பற்றி இங்கே பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே பல பணியிடங்கள் நிரப்பப் படவில்லை. இன்றைக்கு எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்கிறேன், அந்தப் பல்கலைக் கழகத்திற்கு முன்பு அதுசம்பந்தமாக மறியல் செய்வதாகத் தகவல் வந்திருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகம் அமைக்க நிலம் கொடுத்தவர்களுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது அதன்படி செய்யவில்லை. ஆகவே நிலம் தந்தவர்களுடைய குடும்பத்திலுள்ளவர்களுக்கு உடனடியாக வேலை தர வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாடத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், நாம் அதுபற்றி அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டும். இருக்கின்ற பாடத் திட்டங்கள் சரியா இல்லை தவறா என்பதுபற்றி 'ரெவியூ' செய்ய வேண்டும். தவறு என்று தெரிந்தால்



1986 ஏப்ரல் 24] [திரு. அ. மயில்சாமி]

அதை மாற்றினால்தான் இன்றைய கால நிலைமைக்கு ஏற்புடையதாக இருக்கும். ரெவியூ கமிட்டி என்பது தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரிக் கல்வி வரை இருக்க வேண்டும். இல்லையென்றால் 10, 15 ஆண்டுகளாக இருக்கும் பாடத் திட்டங்களே தொடர்ந்து இருக்கின்ற நிலைமை வந்துவிடும்.

சென்னை மாநகரில் பணியாற்றிவிட்டு ஓய்வு பெறுகிற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கெல்லாம் ஓய்வு பெற்றவுடனேயே கிராஜுவிட்டி மற்றும் பி.எப். எல்லாம் தருவதற்காக என்னுடைய பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மற்ற இடங்களில் அப்படி இல்லை. அரசு கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மூன்று ஆண்டுகள் ஐந்து ஆண்டுகள் ஆனால் கூட கிராஜுவிட்டி, பி.எப். போன்றவை கிடைப்பதில்லை. சென்னை மாநகரில் மாநகராட்சியால் ஆசிரியர்களுக்குக் கடைப்பிடிக்கப்படும் முன் உதாரணத்தை மற்ற இடங்களுக்கும் உடனடியாகச் செயல்படுத்த வேண்டும். பி.எப்., கிராஜுவிட்டி போன்றவைகளை அரசு ஆசிரியர்களுக்கு அளிப்பதைப் போல தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டும்.

அடுத்து, ஏ.டி.இ.ஒ.-க்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்களை மாற்றி மீண்டும் அதே பணியில் அமர்த்த வேண்டும். வயது வந்தோர்க்கான கல்வித் திட்டம் பாராட்டும் வகையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு அங்கே பணியாற்றுகின்ற எழுத்தர்களுக்கும் மற்றவர்களுக்கும் குறைந்த ஊதியம் தந்துகொண்டிருக்கிறோம். அவர்களுடைய ஊதியத்தையும் நிச்சயமாக உயர்த்தியாக வேண்டும்.

(முற்பகல் 11-05)

அடுத்ததாக இன்றைக்குப் பதவி உயர்வு அளிக்கும் விஷயத்தில், இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும், சிறப்பு ஆசிரியர்களாக இருந்தாலும், ஜனவரித் திங்களில்தான் தருகிறோம். அதன் காரணமாக அவர்கள் அடிக்கடி மாறுதலுக்குட்படுகிறார்கள். இப்போது இருக்கும் முறையில் ஆண்டு முழுவதும் பதவி உயர்வு தருவதால், ஆண்டு முழுவதும் இடமாற்றம் ஏற்படுகிறது. ஆகவே அதை மாற்றி, ஜூன், ஜூலையில் தர வேண்டும்.

சென்ற ஆண்டு கல்வி மானியத்தில் நான் என்னென்ன பிரச்சினைகள் பற்றிப் பேசினேனோ அதையேதான் இந்த வருடக் கல்வி மானியத்திலும் பேசவேண்டியிருக்கிறது. அப்போது எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சினைகள்

...அரசால் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதுதான் அதற்குக் ...லாம். மனசார யாரயம் நடத்தும் பள்ளிகளை அவர்களே முன்வந்து ...அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியும்கூட, அதை அரசாங்கம் ...டுக்கவில்லை. ஆகவே அவற்றை விரைவாக எடுத்துக்கொள்ள வேண்டும். ...அதைப்போலவே அங்காளக்குறிச்சி பள்ளியில் ஏழு மாதங்களாகப் பணியாற்றியவர்களுக்கு ஊதியம் தரப்படவில்லை என்று சொல்லியிருந்தேன். திருமதி கண்ணம்மா என்கிற பணியாளர் தமிழில் தட்டெழுத்துப் பயிற்சி பெற்றவர். பத்து ஆண்டுகளுக்கு முன்பே அதில் தேர்ச்சி பெற்றவர். ஆங்கிலம் தமிழ் இரண்டும் கற்றிருந்தும் அவர் அப்போது வேலை நீக்கம் செய்யப்பட்டு, மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஆனால் பத்தாண்டு காலமாக அவருக்கு ஊதிய உயர்வு இல்லாமல் இருக்கிறார். இந்தப் பிரச்சினை பற்றி சென்ற ஆண்டு கல்வி மானியத்தில் பேசும்போது குறிப்பிட்டேன். இதுவரையில் ஊதிய உயர்வு கிடைத்ததாகத் தெரியவில்லை. இந்த ஆண்டாவது முயற்சி எடுத்து அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளி வகுப்புகளில் மாணவர்களுக்கு நான்கு பாடங்கள் இருந்ததை இப்போது மூன்றாகக் குறைத்து விட்டதை மாற்றி, மீண்டும் நான்கு பாடங்களாகவே இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது பொறியியல், அல்லது மருத்துவக் கல்லூரிக்கு அவர்கள் செல்லுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கூறி, நீலகிரி மாவட்டத்தில் ஒரே ஒரு கல்வி மாவட்டம்தான் இருக்கிறது; அங்கே இன்னொரு கல்வி மாவட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கும் கொள்கைக் குறிப்பு மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்வதற்கு முற்படுகிறேன். அவையில் வைத்திருப்பது கொள்கைக் குறிப்பு என்று அட்டையில் குறிப்பிடப் பட்டிருந்தாலும், அதன் உள்ளே பிரித்துப் பார்த்தால், இந்த ஆண்டு அரசு இந்தத் துறைக்கு ஒதுக்கிய பணத்திற்கான வரவு செலவுக் கணக்குதான் இருக்கிறது. கொள்கையைப் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. ஆனால் இந்த ஆட்சியில் மட்டும் இது ஏற்படவில்லை. பல ஆண்டுகளாகவே இப்படி வைப்பதுதான் மரபு என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே





மேலவையிலாவது இந்த முறையை மாற்றியமைத்து கொள்கைக் குறிப்பு வைத்து, கொள்கையைப் பற்றிய குறிப்பு இருக்க வேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சருடைய கவனத்திற்கு இந்தக் கருத்தை வைக்கிறேன்.

இந்த அரசால் பல கொள்கை முடிவுகள் பல ஆண்டுக் காலமாக எடுத்து வைத்திருப்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆண்டு கூட ஒரு முக்கியமான கொள்கை முடிவு எடுத்திருக்கிறார்கள். பிளஸ் 2 மாணவர்கள் பொறியியல் கல்லூரிக்குப் போகலாம், அல்லது மெடிக்கல் காலேஜில் சேரலாம். இரண்டிலேயும் சேருவதற்கான பாடத் திட்டத்தை இந்த ஆண்டு முதல் எடுத்துவிடுவதாக அரசாங்கம் அறிவித்திருக் கிறார்கள். அதிலே கூட, வாதப் பிரதி வாதங்கள் இருந்தாலும், மத்தியப் பள்ளிகளில் இந்தச் சலுகைகள் இன்னும் தொடர்ந்திருக்கின்றன என்பதை கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன்.

அதைப்போலவே, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி எல்லாவற்றையும் தனியார் துறைக்குக் கொடுக்கலாம் என்ற கொள்கை முடிவெடுத்து, இன்று ஏராளமான நிறுவனங்கள் தனியார் துறையில் தமிழகத்தில் இருப்பதையும், நாம் மறந்து விட முடியாது. அதற்குப் பின்னால் ஐந்தாண்டுகளுக்குப் பின்னால் பல்கலைக் கழகங்களில் ஜனநாயகம் சரியாக இல்லையென்று சொல்லி, பல்கலைக் கழகத்தின் அமைப்புகளையே மாற்றியமைக்க வேண்டுமென்று அவசரச் சட்டமாகக் கொண்டுவரப்பட்டு, அதற்குப் பிறகு அது சட்டமாக மாற்றப்பட்டது. ஐந்தாண்டுகளுக்கு முன்னால் கொண்டுவரப்பட்ட அந்தச்

(முற்பகல் 11-10)

சட்டம்—அந்த அவசரச் சட்டம்—எந்தச் சூழ்நிலையில் கொண்டு வரப் பட்டதென்பதை இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு மேலாக இருந்த ஒரு நல்ல சட்டம். அந்தச் சட்டத்தை இப்போதிருக்கின்ற ஆட்சியாளர்கள் மாற்றுவதற்கு முன்னால், 150 ஆண்டுக் கால வரலாற்றில் அச்சட்டம் ஒரேயொரு முறைதான் மாற்றம் செய்யப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே துணை வேந்தர் தேர்தல் முறையில் ஏற்கெனவே இருந்த சட்டத்தை மாற்றி ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார்கள். ஆகவே மதுரைப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட நேரத்தில், சென்னைப் பல்கலைக் கழகச் சட்டத்தையே அதற்கும் வைத்துக்கொண்டார்கள்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்] [1986 ஏப்ரல் 24

சென்னை என்று இருந்த இடத்திலே மதுரை என்று மாற்றி, அதே சட்டத்தையே ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் ஐந்தாண்டுகளுக்கு முன்னால் மதுரைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் அடிப்படையில் இந்த மாநிலத்தின் ஆளுநர், பல்கலைக் கழக வேந்தர் என்கிற முறையில், தேர்தல் நடத்துவதற்கு மூன்று மாத காலத்திற்கு முன்னால் ஆட்சிப் பேரவைக்குத் தேர்தல் நடத்த வேண்டுமென்று அறிவிப்பு கொடுத்து, மூன்று மாதங்கள் கழித்து ஆட்சிப் பேரவைத் தேர்தல் மறுநாள் மாலை நடக்க விருக்கும் சூழ்நிலையில், அதே ஆளுநரைக் கொண்டு இரவோடிரவாக ஓர் அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஒருவேளை இந்த அவசரச் சட்டம் வெளியிடுவதற்கு முன்னாலேயே தேர்தல் நடந்தாலும் நடக்கலாம்; அவ்வாறு தேர்தல் நடந்துவிட்டால் அப்படித் தேர்தல் நடந்தாலும் செல்லாது என்று குறிப்பிட்டு அச்சட்டத்தில் போட்டார்கள்.

அந்தச் சட்டத்தைப்பற்றிய சிக்கல் குறித்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு, இன்னும் தீர்வு காணப்படாமல் இருப்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த காலத்திலே, அது அரசியல் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் என்றும், குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நான் அந்தப் பல்கலைக் கழகத்திலே பணியாற்றுவதைத் தடுப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமென்றும், இந்த மன்றத்திலே மட்டுமல்ல, சட்டமன்றப் பேரவையிலும், பல்வேறு பொதுவிடங்களிலும் பேசப்பட்டது. அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மறுத்தார்கள். அதுமட்டுமல்லாமல், என் பெயரைக் குறிப்பிட்டு, "அவர் ஒன்றும் எங்களுக்கு வேண்டாதவர் அல்ல, நண்பர்," என்றுகூட சொன்னார்கள். பெரிய இடத்திலே இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் என்னைப் பார்த்து 'நண்பர்' என்று சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஆட்சிப் பேரவை (செனட்)யில் ஒருவர் இரண்டு முறைக்கு மேல் இருக்கக் கூடாதென்று அந்தச் சட்டத்திலே ஒரு திருத்தத்தை கொண்டு வந்தார்கள். அவ்வாறு கொண்டுவந்துவிட்டு, இது அரசியல் நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது அல்ல என்று சொன்னார்கள். ஆனால், அப்படி இருந்தபோதிலும்கூட இரண்டு முறைக்கு மேல் இருக்கக்கூடாதென்று சொல்லிவிட்டு, இரண்டு முறைக்கு மேல் இருந்தவர்கள் பட்டியலைக் கூட தயாரிக்காமல், சட்டம் கொண்டுவந்துவிட்டு அதன்பின் ஒரு மாத காலத்திற்குள்ளேயே மதுரைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவைக்



[1986 ஏப்ரல் 24 [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

குழுவின் உறுப்பினராக திரு. அருணாசலம் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப் பட்டார். அவசரச்சட்டம் போட்ட அதே ஆளுநர், வேந்தர் என்கிற முறையில் இந்த உத்தரவையும் போட்டார்.

இந்த உத்தரவு பல்கலைக் கழகத்திற்கு வந்த பிறகு, பல்கலைக்கழகத்தினர், "திரு. அருணாசலம் அவர்கள் மூன்றாவது முறையாக இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவும், திருத்தப்பட்ட சட்டத்தின்படி அவருக்குத் தகுதி இல்லை என்றும்" கூறியதும், அதற்குப் பிறகு அந்த நியமனம் ரத்து செய்யப்பட்டது. இதை நான் சொல்வதற்குக் காரணம், இப்படி 'நல்ல நோக்கத்தோடு' செய்யப்படுகிற சட்டத்திற்கான அடிப்படை வேலைகளைக் கூட செய்வதில்லை. அச்சட்டம் இன்னும் நீதிமன்றத்தில் இருப்பதனால், சட்டத்தின் தன்மைபற்றி நான் இப்போது பேசாவிட்டாலும், எந்தப் பதவிக்காக அச்சட்டம் கொண்டுவரப்பட்டதோ அந்தப் பதவி மிகவும் சாதாரண பதவியாகும். ஆட்சிப் பேரவைக் குழு உறுப்பினர் என்பது செனட் உறுப்பினர். இந்த செனட் உறுப்பினருக்கு என்ன உரிமைகள் என்று கேட்டால், அதைப் பல்கலைக் கழகச் சட்டத்திலேயே போட்டிருக்கிறார்கள். செனட் என்கிற ஆட்சிப் பேரவை ஆண்டுக்கு இருமுறை கூடலாம். மார்ச் மாதம் இறுதிச் சனிக் கிழமையிலும், செப்டம்பர் மாதம் இறுதிச் சனிக் கிழமையிலும் ஆட்சிப் பேரவை கூடலாம். ஆட்சிப் பேரவை எந்த நேரத்திலே கூடவேண்டுமென்றுகூட போட்டிருக்கிறார்கள். காலை 10 மணிக்குத்தான் ஆரம்பிக்க வேண்டும்.

(குறிப்புகள் 11-15)

எந்த நேரத்தில் முடிக்க வேண்டுமென்றால், மாலை 4 மணிக்கு முடிக்க வேண்டும். அந்த சனிக்கிழமையில் 6 மணி நேரத்தில் இடைவேளை உணவுக்காக ஒரு மணி நேரம் போய்விடுகிறது. ஆகவே இந்த செனட் உறுப்பினர்கள் ஆண்டுக்கு இரண்டு முறை 5 மணி நேரம் அந்தப் பல்கலைக் கழக வளாகத்திலே நுழையலாம். அதுமட்டுமல்ல, இந்த ஆட்சிப் பேரவைக்கு, செனட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை என்னவென்றால் 15. உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு உண்டா என்றால் இல்லை. இந்தச் சட்டம் கொண்டுவந்த நேரத்தில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிப் பேரவையில் இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 180. சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருந்த ஆட்சிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 250. அந்த 180 பேர்களும், 250 பேர்களும் பட்டதாரித் தொகுதி மூலமாக 15 பேர்கள்

ஆட்சிப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் ஆண்டுக்கு இரண்டு முறை 5 மணி நேரம் பணியாற்ற வேண்டும். அவர்கள் எல்லாம் அங்கே பேரவையிலே கலந்துகொள்ளலாம். அந்தப் பல்கலைக் கழகத்திலே ஆதிக்க உணர்வுகள், 'வெஸ்டேடு இன்டரஸ்ட்' வளருவதாக அரசு கூறுகிறது. அப்படிச் சொல்வதைக்கூட வாதத்திற்காக நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அந்தத் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலே சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்த நேரத்தில் இது அரசியல் நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதல்ல என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அரசு கூட ஒரு வாக்குறுதியை நீதிமன்றத்தில் எழுத்து மூலமாக அரசு வழக்கறிஞர் மூலமாக அளித்திருக்கிறது. அது என்ன வாக்குறுதி என்றால், இது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் கொண்டுவரப்படக்கூடிய சட்டமல்ல; இது தமிழ் நாட்டில் இருக்கின்ற எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும் விரைவில் கொண்டுவரப்படும் என்று ஒரு வாக்குறுதியை அரசு அளித்திருக்கிறது. அந்த வாக்குறுதி அளித்து 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. வாக்குறுதியை அரசு நிறைவேற்றியிருக்கிறதா என்றால், இல்லை. அதுவும் குறிப்பாக எந்தப் பல்கலைக் கழகத்திற்கு இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது என்றால், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குக் கிடையாது. இப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நிலை என்ன? அங்கு ஆட்சிப் பேரவை உறுப்பினர் எத்தனை முறை வேண்டுமானாலும் இருக்கலாம்; எத்தனை காலம் வேண்டுமானாலும் இருக்கலாம்; ஆயுள் காலம் கூட இருக்கலாம். அப்படி யாராவது இருக்கிறார்களா என்றால், நம்முடைய தமிழக முதல்வர் அவர்களே அந்த ஆட்சிப் பேரவையிலே ஆயுள் கால உறுப்பினராக இருக்கிறார்கள். இந்த ஆயுள் கால உரிமையோடு அந்தச் சட்டத்தை நிறுத்தி விட்டார்களா என்றால் இல்லை. அதற்கு வாரிசு உரிமையையும் வழங்கியிருக்கிறார்கள். இந்த ஆயுள் கால உரிமையோடு, வாரிசு உரிமையை எல்லாம் இந்த ஆட்சியில் கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. ஏனென்றால் இந்தக் கருத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் மறந்திருக்கலாம். எங்கே சொன்னேன் என்று கேட்கலாம். காரைக்குடியில் ஏற்படுத்தப்பட்ட அழகப்பா கல்லூரியில் ஆரம்பக் குழுவிலே நான் உறுப்பினராக இருந்தேன். அந்தப் பல்கலைக் கழகத்திற்கு என்ன பெயர் வைக்க வேண்டும், எப்படிப்பட்ட சட்டங்கள் இருக்க வேண்டும் என்று அங்கிருந்த பெரியவர்கள், கல்வியாளர்கள், வழக்கறிஞர்கள், அரசியல் வாதிகள் எல்லாம் சாட்சி கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் சொன்ன





கருத்துக்களை எல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கலந்து ஆலோசித்த காலத்தில், அந்தக் காரைக்குடி மக்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். கொடை வள்ளல் அழகப்பர் பெயரில் தான் அந்தக் கல்லூரி இருக்க வேண்டுமென்று எல்லோரும் சொன்னார்கள். அதை அரசும் ஏற்றுக்கொண்டது; கல்வி அமைச்சர் அவர்களும் உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் அழகப்பா குடும்பத்திற்கு மரியாதை செலுத்தும் வகையில் அழகப்ப செட்டியார் மனைவி திருமதி உமையாள் இராமநாதன் அவர்களுக்கு அந்த ஆட்சிக் குழுவிலே ஆயுள் கால உறுப்பினர் பதவி கொடுக்க வேண்டுமென்று ஒரு சாரார் சொன்னார்கள். இன்னொரு சாரார், ஆயுள் கால உறுப்பினர் பதவி கொடுத்தால் மட்டும் போதாது, அந்தக் குடும்பத்திற்கு வாரிசு உரிமையும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தக் கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முன்னால் வைத்த நேரத்தில், அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அழகப்பா குடும்பத்திற்கு மரியாதை செலுத்த வேண்டுமென்பதிலே அரசுக்கு எந்தவிதக் கருத்துவேறுபாடும் கிடையாது. ஆனால் ஆயுள் கால உரிமை, வாரிசு உரிமை, இவைகள் எல்லாம் இந்த ஆட்சியின் கொள்கைக்கு விரோதமானது என்றும், எனவே, அதை எடுத்துக் கொள்ளமாட்டேன் என்றும் தெளிவாகச் சொன்னார்கள். அப்படி இருக்கின்ற சூழ்நிலையில் 5 ஆண்டுகளுக்கு முன்னால் எழுத்து மூலமாக, அரசாங்க வழக்கறிஞர் சார்பிலே உத்திரவாதம் அளித்தும் அதை நிறைவேற்றாமல், இன்னும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருப்பது என்ன காரணம் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலுரையிலே சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதுமட்டுமல்ல, அன்றாட நடைமுறையிலே கூட மற்றப் பல்கலைக் கழகங்களுக்கு அரசாங்கம் போடுகின்ற உத்தரவு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரை, செல்லுபடியாவதில்லை. இன்னும் சொல்லப் போனால், தமிழ் நாட்டில் கல்வித் துறையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு தீவைப் போலக் காட்சியளிக்கிறது. அது கல்வி அமைச்சரின் கட்டுப்பாட்டிலே இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

(முற்பகல் 11.30)

அந்தப் பல்கலைக் கழகத்திற்குத் தனிச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இன்னொரு உதாரணத்தையும் சொல்ல விரும்புகிறேன். மதுரை காமராஜர் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறை அகில இந்தியாவிலேயே புகழ் பெற்ற அஞ்சல் வழிக் கல்வித் துறை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஏற்றுக்கொள்வார்கள். இப்போது அந்தப் பெருமை

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1986 ஏப்ரல் 24

அதற்கு இருக்கிறதா என்றால் இல்லை. ஒரு காலத்தில் இருந்தது. அப்படிச் சொல்வதற்குக் காரணம் நாங்கள் எல்லாம் உறுப்பினர்களாக அங்கே இருந்த காலத்தில் அந்த அஞ்சல் வழிக் கல்வித் துறையில் ஆயிரக்கணக்கான மாண வர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோர் எல்லாம் மாணவர் களாகச் சேர்ந்திருந்தார்கள். அதன் காரணமாக அதன் மூலம் ஏராளமான வருமானம் வந்தது. அந்தக் கல்வித் துறையின் வைப்பு நிதி மட்டும் ரூ. 1½ கோடி இருந்தது. ஆனால் இன்றையதினம் பல்கலைக் கழகத்தின் அன்றாட செலவுகளுக்கே அஞ்சல் வழிக் கல்வித் துறையிலிருந்து கடன் பெறுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காரணம் 2, 3 ஆண்டுகளாக ஜனநாயக அமைப்புகள் அங்கே இல்லாத காரணத்தால், அந்த அஞ்சல் வழிக் கல்வித் துறையின் இன்றைய நிலைமை என்னவென்றால், வைப்பு நிதியையும் காணோம், வேறு எந்த நிதியையும் காணோம். அங்கே இருக்கிற ஆசிரியர் களுக்குச் சம்பளம் கொடுக்க பல்கலைக் கழகம் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்து, ஆளுநர் அவர்களுக்கு ஒரு புகார் கொடுக்கப்பட்டது. அஞ்சல் வழிக் கல்வித் துறையில் ரூ. 70 லட்சம் முதல் ரூ. 1 கோடி வரை நிதிக் கையாடல் செய்யப் பட்டதாகப் புகார் வந்து, ஆளுநர் அவர்களின் உத்தரவின் பேரில் பல்கலைக் குழுவின் தீர்மானத்தின் பேரில், ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் இப்போது குற்றவாளிகள் யார் என்று கண்டு பிடிப்பதற்காக விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார். அப்படி நல்ல முறையில் ஒரு காலத்தில் இயங்கிக்கொண் டிருந்த அஞ்சல் வழிக் கல்வித் துறை இன்றைக்கு இந்த நிலைமையில் இருக் கிறது.

அடுத்து, ஆசிரியர் பயிற்சிப் பட்டப் படிப்பை நடத்துவதற்கு நாங்கள் பொறுப்பில் இருந்தபோது, அரசின் அனுமதியைக் கேட்டிருந்தோம். அதாவது பி.எட். பட்டப் படிப்பு நடத்துவதற்கான அனுமதி நான் பதவியில் இருந்தபோது கேட்கப்பட்டது. தமிழ்நாடு அரசு அந்தப் பட்டப் பாடத் திட்டத்தினைத் துவங்குவதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தது. அப்போது நியாயமான ஒரு காரணத்தைக்கூடச் சொன்னார்கள். அதாவது ஏற்கெனவே பி.எட். படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஆயிரக்கணக்கில் வேலை யில்லாமல் வீதிகளில் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களின் எண்ணிக்கையை அதிகரிக்க இப்படி ஒரு திட்டம் வேண்டுமா என்று கூட கேட்டார்கள். இறுதியாக அதற்கு ஒப்புதல் தரும்போது, ஒன்றைச் சொன்னார்கள். அந்தப் பட்டப் பாட வகுப்பைத் தொடங்கினால், ஏற்கெனவே ஆசிரியர்களாக இருந்து இந்தப் பட்டத்தைப் பெறாதவர்களைத் தான் இதில் சேர்க்க வேண்டும் என்று நிபந்தனை போடப்பட்டது. புதிதாக



1986 ஏப்ரல் 24] [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக, அதில் முதுகலைப் பட்டதாரி களுக்கு வேலை அளிக்கப்பட்டது. அவர்களில் பெரும்பாலோர் பி.எட். பட்டம் பெறாதவர்கள். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் 1 அல்லது 2 ஆண்டு களில் பி.எட். பட்டம் பெற வேண்டும் என்று அவர்களின் நியமனத்தின் போதே கண்டிஷன் போடப்பட்டது. அப்படிப்பட்டவர்களைத்தான் பி.எட். பட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசு அப்போது பல்வேறு நிபந்தனைகளைப் போட்டு, அதற்குப் பிறகுதான் அனுமதி கொடுத்தது. ஆனால் அடுத்த ஆண்டே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கூட, இதே பி.எட். பட்ட வகுப்பு தொடங்குவதற்கு அனுமதி கேட்டபோது, அதற்கு ஏதாவது நிபந்தனை போடப்பட்டதா என்றால், ஒன்றுமே இல்லை. அதன் காரணமாக புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகள் மற்றும் முதுகலைப் பட்டதாரிகள் அனைவருக்கும் இடம் கொடுக்கப்பட்டது. அவர்களெல்லாம் அண்ணாமலைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வித் துறை நடத்தும் பி.எட். பட்ட வகுப்பில் உடனடியாகச் சேர்ந்து படிக்க அனுமதி அளிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல. அந்தப் பல்கலைக் கழகத்திற்கு தனியானதொரு சலுகையும் அளிக்கப்பட்டது. அதாவது பி.எட். பட்டப் படிப்பில் சேருவதற்கு விரும்புகிறவர்கள் அந்தப் பல்கலைக் கழக விதிப்படி, ரூ. 400 நன்கொடை கொடுக்க வேண்டும். அந்தப் பாடத் திட்டத்திற்கான பிராஸ்பெக்டஸிலேயே இதை அவர்கள் போட்டிருக்கி றார்கள். பி.எட். வகுப்பில் சேர விரும்புகிறவர்கள் அந்தப் பல்கலைக் கழ கத்திற்கு ரூ. 400 நன்கொடை கொடுக்க வேண்டும். எங்களுடைய பல்கலைக் கழகத்தில் இந்த பி.எட். பாடத் திட்டம் எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்த்து வருவதற்காக ஒரு அதிகாரி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தி லிருந்து அனுப்பப்பட்டவர் வந்தபோது நானே கூட அவரைப் பார்த்துக் கேட்டேன். "எங்களுக்கு ஏராளமான நிபந்தனைகளைப் போட்டிருக்கி றார்கள். ஆனால் நீங்கள் மட்டும் யாரை வேண்டுமானாலும் சேர்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டார்களே, அதுமட்டுமல்ல நன்கொடையும் வசூலிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்களே அது எப்படி?" என்றபோது, அதற்குக் காரணம் "எங்கள் பல்கலைக் கழகத்தை நடத்துகிறவர்களுடைய செல்வாக்கு" என்று சொன்னார்கள். எனவேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்க விரும்புவது இதுதான் சரியான நடைமுறையா? "பல்கலைக் கழகங்கள் ஒரே சீராக நடக்க வேண்டும். ஜனநாயக அமைப்புகள் அங்கெல்லாம் செயல்பட வேண்டும். ஏற்கெனவே இருக்கிற சட்டங்கள் போதாது. ஆகவே சட்டத் தைத் திருத்த வேண்டும். அரசியல் நோக்கத்தோடு சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை, தனிப்பட்ட நபர்களுக்காகச் சட்டத் திருத்தம்

கொண்டு வரப்படவில்லை என்றெல்லாம் உத்தரவாதம் அளித்தீர்களே, அது உண்மை என்றால், தமிழ் நாட்டில் இருக்கிற அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் இவைகள் பொருந்த வேண்டுமா வேண்டாமா? இதைப் பொறுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்முடைய பதிலுரையில் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-25)

அது மட்டுமல்ல. அந்தப் பல்கலைக் கழக திருத்தச் சட்டத்தில் முக்கியமான திருத்தத்தை தம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். "என்னைப் பொறுத்த வரையில், மிக வரவேற்கத்தக்க திருத்தம் அது. ஆளுநர் என்ற வேந்தருக்கு உள்ள அதிகாரத்தை பல்கலைக் கழக இணை வேந்தருக்குக் கொடுக்க வேண்டும் என்ற சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். அதிலே எனக்குப் பெருத்த மகிழ்ச்சி. நேற்றைய தினம் கூட கல்வியமைச்சர் அவர்கள், தி.மு.க., அ.தி.மு.க. என்று நினைக்காமல் திராவிடர் உணர்வு என்ற அடிப்படையிலே பேச வேண்டும் என்று சொன்னார்கள். கல்வியமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்ற அடிப்படையிலே ஆளுநர்-வேந்தருக்கு உள்ள அதிகாரங்களை இணை-வேந்தருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்களே, அதைப் பாராட்ட வேண்டுமென்று நான் நினைத்துக்கொண்டேன், மத்தியிலே உள்ளவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், தங்களுடைய அதிகாரம் பறிபோகும் என்று கருதி, இதை ஏற்க மறுத்தார்கள். அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்க மறுத்ததற்கு இந்த ஆட்சியில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லாமல் ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே கல்வியமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சி தமிழ் நாட்டு மக்களுக்கு பிரதிநிதித்துவ அடிப்படையில் காப்பாற்றப்பட வேண்டும் என்று கருதினால், பல்கலைக் கழகத்திற்குப் போடுகிற துணை வேந்தர்களை மாநில அரசுதான் போட வேண்டும் என்று வலியுறுத்தினால், அது வரவேற்கத் தக்க ஒன்று.

நடைமுறையிலே பார்த்தால், இப்போது என்ன ஆயிற்று என்பது நாட்டு மக்களுக்கே தெரியும். ஆறேழு மாதங்களுக்கு முன்பு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தரை நியமிக்க வேண்டும் என்று முறையாகக் குழு ஏற்படுத்தப்பட்டு, 3 நபர்கள் அந்தக் குழுவிலே இடம் பெற்று, அக்குழுவின் பரிந்துரை ஆளுநராகிய வேந்தரின் பார்வைக்குச் சென்று டாக்டர் எஸ். கிருஷ்ணசாமி அவர்களை துணை வேந்தராக நியமித்தார்கள். அதற்கடுத்த நாள் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி கொடுத்தார்கள். சட்டப்படி துணை





வேந்தரை நியமிப்பதில் முதலமைச்சரை ஆளுநர் கலந்திருக்க வேண்டும்; இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் கலக்கவில்லை; ஆகவே இப்போது நியமனம் செய்துள்ள டாக்டர் எஸ். கிருஷ்ணசாமியின் பெயரை எடுத்துவிட்டு எங்கள் பரிந்துரையான சென்னை பல்கலைக் கழக அரசியல் துறை பேராசிரியர் டாக்டர் சி. ஏ. பெருமாள் அவர்களை மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அவசரமாகக் கடிதத்தை ஆளுநர்-வேந்தர் அவர்களுக்கு எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆளுநர் அவர்கள் வேந்தர் என்ற முறையில் கல்வியமைச்சருக்குப் பதில் சொன்னார்கள். "கல்வியமைச்சர் இந்த நியமனத்தை எதிர்த்து அறிக்கை கொடுத்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன்; இதற்கு முன்பு மூன்றாண்டுக் காலத்திலே பல முறை நான் இப்படி நியமனம் செய்திருக்கிறேன். குறிப்பாக சென்னைப் பல்கலைக் கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு அரசாங்கத்தின் பரிந்துரையை ஏற்காமல் என்னுடைய விருப்பப்படி சில துணை வேந்தர்களை நியமித்தேன்; நிலைமைகள் அப்படி இருக்க கல்வியமைச்சர் இதிலே ஏன் ஆட்சேபணை தெரிவிக்க வேண்டும்?" என்று மறுப்பு அறிக்கையைக் கொடுத்தார்கள். இதை வாங்கிக் கொண்டு மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் மீண்டும் ஓர் அறிக்கையைக் கொடுத்தார்கள். "சட்டப்படி ஆளுநர் அவர்கள் மாநில அரசை கட்டாயமாகக் கலக்க வேண்டும். அரசியல் சட்டத்தின்படி மாநில அரசின் ஆலோசனையின்படிதான் ஆளுநர் நடந்துகொள்ளக் கடமைப் பட்டவர்; ஆனால் மதுரை-காமராஜர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் நியமனத்திலே கொஞ்சம்கூட அரசைக் கேட்கவில்லை; பல்கலைக் கழகத் துணை வேந்தரை நியமிப்பது மாநில அரசே ஆகும்; யாரையும் மாநில அரசு நியமிக்க முடியும். நடைமுறைக்காக ஆளுநருக்கு அந்தப் பொறுப்பு தரப்படுகிறது; பல்கலைக் கழகம் முழுவதும் மாநில அரசின் நிர்வாகத்திற்குட்பட்டது. சுப்ரீம் கோர்ட், மாநில அரசின் ஆலோசனைப்படி கவர்னர் நடக்க வேண்டும் என்று தீர்ப்பு கூறியிருக்கிறது; அந்த விவாதத்தை அட்வகேட் ஜெனரல் கவனத்திற்கு அனுப்பியிருக்கிறோம். முதலமைச்சரை, அமைச்சரவையை அல்லது ஆட்சியைக் கலைக்கச் சொல்லி சிபாரிசு செய்வது மட்டுமே கவர்னர் சுயமாகச் செய்யக்கூடியதாகும். அரசு அமைக்கப்பட்ட பின் அரசோடு ஆலோசனை கலக்க வேண்டும்; எனவே இதற்குப் பிறகாவது தமிழக அரசு சொல்வதை ஏற்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், மத்திய அரசு தலையிட்டு சமூகமான தீர்வை ஏற்படுத்த வேண்டும். இதற்கு முன்பு தன் இஷ்டப்படி நடந்ததாகக் கூறுவது தவறு; ஒவ்வொரு தடவையும் மாநில அரசின் ஒப்புதல் பெற்றுதான் செய்யப்பட்டிருக்கிறது" என்று தன்னுடைய அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1986 ஏப்ரல் 24

அது மட்டுமல்ல, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு உண்மையைச் சொன்னார்கள். "இதற்கு முன்பு இருந்த கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரி அவர்களுக்கு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு துணை வேந்தராக காலஞ் சென்ற திரு. ஜி. ஆர். தாமோதரன் அவர்களை நியமிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தோம்; அந்தப் பரிந்துரையை ஆளுநர் ஏற்க மறுத்துவிட்டார். அந்த நேரத்திலே சென்னைக்கு வந்த குடியரசுத் தலைவரிடம் இந்த விவரத்தைச் சொல்லி குடியரசுத் தலைவர் ஆளுநரை அழைத்து, மாநில அரசு சொல்லும்படிதான் நீங்கள் செய்ய வேண்டும்" என்று அறிவுரை வழங்கினார்.

(முற்பகல் 11.30)

அப்போது பிரதமராக இருந்த திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் சென்னைக்கு வந்த நேரத்திலே அதைப்பற்றி எடுத்துச்சொன்னதற்கு, ஆளுநர் மாநில அரசின் கருத்தைக் கேட்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள்" என்று சொன்னார்கள். இவ்வளவு சிக்கல்கள் நடந்த பிறகு, யாருமே எதிர்பாராத வகையில் திடீரென்று அரசாங்கத்தின் சார்பிலே ஒரு அறிக்கை வந்தது. இதெல்லாம் இந்த இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே நடந்தது. மதுரை பல்கலைக்கழகத் துணை வேந்தர் நியமனத்தில் தேவையில்லாமல் தகராறு எழுந்துள்ளது. சட்டத்தின் அடிப்படையிலே, நிலைமையின் அடிப்படையிலே திரு. கிருஷ்ணசாமி அவர்களை கவர்னர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள் என்பதை அரசு ஏற்றுக்கொள்கிறது. கவர்னர் முடிவை அரசு அமல் நடத்தும் என்று. மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே தன்னுடைய கருத்தைச் சொல்லாமல், 'முதலமைச்சர் கருத்து' என்று சொன்னார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை, கல்வி அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை மறுத்து அரசாங்க அறிக்கை வருகிறது. முதலமைச்சருக்கு மேல், கல்வி அமைச்சருக்கு மேல் அரசாங்கம் என்று ஒரு இனம்புரியாத சக்தி இந்த ஆட்சியிலே இருக்கிறதா? அப்படி என்றால், யார் அந்த சக்தி? தலைமைச் செயலாளரா? யாருக்கு முதலமைச்சரின் கருத்துக்கும் மாறுபட்ட கருத்தைச் சொல்வதற்கு இந்த அரசாங்கத்திலே அதிகாரம் கொடுக்கப்பட்டது? எப்படி இந்தச் சூழ்நிலை ஏற்பட்டது? அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தை அரசாங்கமே ஏற்கவில்லை என்றவுடன், ஆளுநர் அவர்கள் அடுத்தபடியாக சொன்னார்கள். அதற்கு இரண்டு நாட்கள் கழித்து சென்னை கிருத்துவக் கல்லூரியின் ஆண்டு விழாவிலே பேசுகின்ற நேரத்தில் பொது வாழ்விலே இருப்பவர்கள் கல்வித்



1986 ஏப்ரல் 24] [திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்]

துறையிலே இருப்பவர்கள் பொதுமக்களைத் திசை திருப்பும் வகையிலே தவறான செய்தியைக் கொடுக்கக்கூடாது என்று அவர் யாரை மனதில் வைத்துக்கொண்டு சொன்னார்கள்? நாட்டிற்குத் தெரிகின்ற வகையிலே அரசாங்கத்தைக் கண்டித்தார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அத்தோடு நின்று விடுவதற்கில்லை. இதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

நான்கு மாதங்களுக்கு முன்னாலே, கடந்த டிசம்பர் மாதம் என்று நான் கருதுகிறேன். சென்னையிலே ஒரு மகாநாடு. அந்த மகாநாட்டை நடத்தியவர்கள் யார் என்று கேட்டால், தமிழ்நாடு அரசாங்கம் மதுரை பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராக பரிந்துரை செய்து உள்ள சென்னை பல்கலைக்கழக பேராசிரியராக இருக்கும் டாக்டர் சி. ஏ. பெருமாள் அவர்கள். அவர்கள் அந்த மாநாட்டிற்கு எப்படி தலைவர் என்றால், இந்த மகாநாடு இந்தியப் பல்கலைக் கழகத்தின் அரசியல் துறை மகாநாடு. அந்தச் சங்கத்திற்கு அகில இந்திய தலைவர். அவர் ஆளுநர் அவர்களை இந்த மகாநாட்டைத் தொடங்கி வைக்க அழைக்கிறார்கள். பேராசிரியர் பெருமாள் அவர்களைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு, ஆளுநர் அவர்கள் மீண்டும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "நான் ஆளுநர் என்ற முறையிலே அமைச்சரவைக்கு, இந்த அரசின் பரிந்துரைக்குக் கட்டுப்பட்டவன். ஆனால் வேந்தர் என்ற முறையிலே அமைச்சரவையின் இந்த அரசின் பரிந்துரைக்கு ஏற்பளிக்கத் தேவையில்லை" என்றார்கள். நான் சொல்கின்ற கருத்து அல்ல இது. இந்தியாவிலே இருக்கின்ற பிரபல வக்கீல்கள், வழக்கறிஞர்கள் எல்லாம் "லீகல் ஒப்பீனியன்" வழங்கியிருக்கின்றார்கள். இதை நான் வலியுறுத்திச் சொல்கிறேன்" என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது தெளிவாகத் தெரிகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை நியமிக்கின்ற அதிகாரத்தைப் பறி கொடுத்து விட்டீர்கள் என்று சொல்கிறேன். இதுதான் மாநில சுயாட்சிக்கு அடையாளமா? மாநில சுயாட்சி என்பது நமக்கெல்லாம் தாரக மந்திரம் அல்லவா? உயிர்நாடி அல்லவா? அந்தக் கருத்தை, தத்துவத்தை இந்த அரசு காப்பாற்ற கடமைப்பட்டதல்லவா? ஆகவே இதை உணர்ந்து கல்வி அமைச்சர் அவர்கள் பல நடவடிக்கைகள் எடுத்தும் இந்த அரசாங்கம் அவரை காட்டிக்கொடுக்கின்ற வகையிலே அறிக்கை விட்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்கள் நேரத்தைப் பார்க்கிறார்கள். நான் எதிர்க் கட்சி சார்பிலே கடைசியாகப் பேசுகிறேன். இன்னும் பேச வேண்டும்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1986 ஏப்ரல் 24

(மாற்றுத் தலைவர் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் தலைமை:)

(முற்பகல் 11-35)

அடுத்தபடியாக, சில மாதங்களுக்கு முன்னால் நடந்த ஆசிரியர்கள் போராட்டம். அது நாடறிந்த ஒன்று. அந்த ஆசிரியர்கள் போராட்டத்திலே 60 ஆயிரம் ஆசிரியர்கள் சிறையிலே இருந்தார்கள். 15 ஆயிரம் தாய்மார்கள் உட்பட்டு இருந்தார்கள். அவர்கள் கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளுக்கு நீதி கிடைக்கவில்லை என்று போராட்டம் தொடங்குவதாகச் சொன்னார்கள். அந்தப் போராட்டக் காலத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல அறிக்கைகளைக் கொடுத்தார்கள். போராட்டத்திலே நியாயமில்லை என்று சொன்னார்கள். அடுத்தபடியாக, கோரிக்கைகளிலே நியாயம் இருக்கலாம், ஆனால் அவை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்று சொன்னார்கள். போராட்டம் உச்ச கட்டம் அடைந்தபோது, கோவையிலே முகாமிட்டு, கல்வி அமைச்சரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். உடனடியாக ஆசிரியர்கள் வேலைக்குத் திரும்பாவிட்டால், மாற்று ஆசிரியர்கள் போடப்படுவார்கள் என்று கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது அவர் உரிமை, கடமை. அதிலே கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் இவ்வளவு பெரிய போராட்டம் நடந்த பிறகு, ஆசிரியர்கள் பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்படவில்லை என்ற நிலையில், என்னுடைய கட்சித் தலைவர், முன்னாள் முதல் அமைச்சர், கலைஞர் அவர்கள் அரசாங்கம் ஆசிரியர் பிரதிநிதிகளை அழைக்காவிட்டால், நாங்களும் போராட்டத்தில் குதிப்போமென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு 3 கட்டங்களாகப் பேச்சு வார்த்தைகள் நடந்ததாக நான் அறிகிறேன். முதற் கட்டமாக அதிகாரிகள் பேசினார்கள். அடுத்த கட்டமாக, நிதி அமைச்சரவர்கள் பேசினார்கள். நிதி அமைச்சரவர்கள் பேசியதுகூட ஒரு வேடிக்கை. நிதி அமைச்சரவர்கள் மதுரையிலே இருந்தார்கள். பத்திரிகை நிருபர் அவரிடம் "நீண்டநாள் கல்வி அமைச்சராக இருந்தவர் என்ற முறையில் நீங்கள் ஆசிரியர்களோடு பேச்சு வார்த்தை நடத்தக்கூடாதா" என்று கேட்டபோது, "அதற்கும் எனக்குப் சம்பந்தமில்லை, முதலமைச்சரவர்கள் நேரடிப் பார்வையில் அது இருக்கிறது" என்று சொன்னார்கள். ஆனால் சென்னையிலிருந்து ஓர் அறிக்கை, நிதி அமைச்சரவர்கள் பேசுவார்கள் என்று. அவர்கள் பேசியும் வெற்றி கிடைக்கவில்லை. கடைசியில் முதலமைச்சரவர்கள் பேசினார்கள். அரசாங்கத்தின் சார்பாக அதிலே கலந்து கொண்டவர்கள் மாண்புமிகு முதலமைச்சரவர்கள்; மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள்; மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள்; மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரவர்கள், மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சரவர்கள். ஆனால் கலந்துகொள்ளாதவர் யார் என்றால் மாண்புமிகு



1986 ஏப்ரல் 24] [திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்]

கல்வி அமைச்சரவர்கள். இது என்ன நிர்வாகம்? இது ஒரு பெரிய முறை கேடு அல்லவா? கல்வித் துறைக்காக ஓர் அமைச்சரைப் போட்டுவிட்டு, இவ்வளவு பெரிய போராட்டத்திற்குப் பிறகு, அந்த ஆசிரியர்களின் பிரச்சினைகளை நன்றாகத் தெரிந்தவர், அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலைச் சொல்லக்கூடிய தகுதி பெற்ற அமைச்சர் அதிலே கலந்துகொள்ளவில்லை என்றால், இந்த அரசாங்கத்திலே இதைவிட ஒரு முறைகேடு இருக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள், கட்சிக் கட்டுப்பாடு கருதி 'கூட்டுப் பொறுப்பு' என்று சொல்லி, அவர்கள் தப்பிக்கப் பார்க்கலாம். கல்வி அமைச்சரவர்கள் கலந்து கொண்டிருந்தால், கூட்டுப் பொறுப்பாகும். கல்வி அமைச்சரவர்கள் தவிர மற்ற அமைச்சர்கள் அதிலே கலந்து கொண்டு பேசினார்கள். கல்வி அமைச்சரவர்கள் அங்கே இல்லை என்றால், இதைவிட மோசமான ஆட்சி நிலைமை இந்த நாட்டிலே இருக்க முடியாது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அந்தப் பேச்சு வார்த்தையிலே எழுத்து மூலமாக ஏதாவது ஒப்பந்தம் உண்டா என்றால் இல்லை. ஏதாவது குறிப்பு உண்டா என்றால் இல்லை.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

பேச்சு வார்த்தையிலே என்ன நடந்தது என்பதிலே பல சந்தேகங்கள் ஏற்படுகின்றன. எங்கள் கட்சிக் கொறடா அவர்கள் சில மாதங்களுக்கு முன்னாலே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்களைப் பார்த்து, ஒன்றைக் கேட்டார். பேச்சு வார்த்தை நேரத்தில், ஆசிரியர்கள்மீது போட்ட வழக்குகள் திரும்பப் பெறப்படுமென்று சொன்னார்கள், ஏன் அதைச் செய்யவில்லை என்று கேட்டார்கள். நிதி அமைச்சரவர்கள், "நானா சொன்னேன்?" என்று கேட்டார்கள். திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள் என்று சொன்னார்கள். நிதி அமைச்சர் அவர்கள், முதலமைச்சரே சொன்னாரா என்று கேட்டார்கள். முதலமைச்சர் சார்பில் சட்ட அமைச்சர் அவர்கள் அதைச் சொன்னார்கள் என்று திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அப்போது மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள், "அங்கே நான் இருந்தேன், சட்ட அமைச்சர் சொன்னது எனக்குத் தெரியாது", என்று சொன்னார்கள். உணவுத் துறை அமைச்சரவர்களும், "நானும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன், சட்ட அமைச்சர் சொன்னது எனக்கும் தெரியாது" என்று சொன்னார்கள். பேச்சு வார்த்தையிலே கலந்து கொண்ட அமைச்சர்களுக்கே தெரியாது என்னும்போது, ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகள் எல்லாம், கல்வி அமைச்சரவர்களிடம் பேச்சு வார்த்தையின்போது கொடுத்த உத்திரவாதங்கள் என்னவாயிற்று என்று கேட்பதில் என்ன நியாயம் இருக்க முடியும்? கல்வி அமைச்சரவர்கள் இல்லாமல் பேச்சு வார்த்தை அங்கே. அங்கே

ஏற்பட்ட முடிவுகளுக்கு அவர் பொறுப்பு என்றால், அது நியாயமற்ற நிலை என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் இருப்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில நாட்களுக்கு முன்பு புதிய கல்வித் திட்டத்தை, கொள்கையை நம்முடைய அரசினர் ஏற்படுத்தியுள்ளார்கள். தனியார் துறைக்கு பொறியியல் கல்வி, மருத்துவக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி நிலையங்களைத் துவங்க அனுமதி கொடுக்கலாமென்று திட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அது கொள்கை அளவிலே நியாயமென்று கூடச் சொன்னார்கள். அதைக்கூட நான் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கல்வி அமைச்சரவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். தமிழ் நாட்டிலே உள்ள மாணவர்களுக்கு இப்படிப் பட்ட மருத்துவக் கல்வி, பொறியியல் கல்விக்குப் போதுமான இடங்கள் இல்லை; அவர்கள் அடுத்த மாநிலத்திற்குச் சென்று பணம் கொடுத்துச் சேர்வதைக் காட்டிலும், நம்முடைய மாநிலத்திலேயே சேரலாம் என்றும், கருப்புப் பணம் வைத்திருப்பவர்கள் கல்விக்காக அதைச் செலவிடலாம் என்றும் சொன்னார்கள். ஆனால் என்ன நடைபெற்றது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு தனியார் துறையை ஆரம்பித்தவர்கள் செய்யவில்லை. ஒரு சலுகையை மட்டும் பெற்றுக் கொண்டார்களேயொழிய நடைமுறையில் அவர்கள் சரியாகச் செய்யவில்லை.

(முற்பகல் 11-40)

முதன்முதலாக இங்கே சேர்கின்ற மாணவர்கள் நன்கொடை கொடுக்கலாம் என்கிற ஒரு பழக்கத்தை இந்தக் கொள்கை மூலம் புகுத்திவிட்டார்கள், மடையைத் திறந்து விட்டார்கள், அந்த அடிப்படையில் லஞ்ச ஊழலைத் தவிர இந்தப் புதிய கொள்கையில் வேறு ஒன்றுமில்லை என்பதை அமைச்சர் அவர்களேகூட மறுக்க முடியாது. மருத்துவக் கல்வியை எடுத்துக்கொண்டால், எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயித்து விட்டார்கள். அதுவும் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி இருக்கிறதே, அது இந்த நாட்டிலேயுள்ள பெரிய செல்வந்தரால் நடத்தப்படுவது, அங்கே சேர முன்வருகின்ற மாணவர்கள் 2½ லட்சம் ரூபாய் கொடுத்தால் இடம் கொடுக்கப் படும் என்று அறிவித்தார்கள். அதுவும் இந்த நாட்டிலுள்ள ரூபாய் மூலம் அல்ல, அந்நியச் செலாவணி பணம் மூலமாக என்று அறிவித்தார்கள். பொறியியல் கல்வியைப் பொறுத்தவரையில், 40 ஆயிரம், 50 ஆயிரம் என்று அறிவித்தார்கள். தொழில் நுட்பக் கல்வியை எடுத்துக் கொண்டால், அதாவது பாலி





டெக்னிக்கைப் பொறுத்தவரையில், 10 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்தார்கள். ஆகவே அரசு நல்ல நோக்கத்தோடு அதற்கான உத்தரவைப் போட்டிருந்தாலும் கூட நடைமுறையில் இந்தக் கொள்கை மூலமாக வணிகப் பொருளாக கல்வி மாறிவிட்டது.

மதுரைக்குப் பக்கத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரைப் பல்கலைக் கழகத்தில் 13 ஆண்டு காலமாக முதுகலை பட்டப்படிப்புக்கு வசதி இருந்தது. அது சென்ட்ரல் அட்மினிஸ்ட்ரேஷன் சிஸ்டமாகும். 13 ஆண்டுகளாக சிறப்பாக நடைபெற்று வந்த முறையை எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். இன்றைக்கு தாங்களும் அந்தப் படிப்பை நடத்த வேண்டுமென்று சொல்லி பல்கலைக் கழகம் மீதும், அரசு மீதும் வழக்கு போட்டார்கள். அதற்கான அனுமதியை அளிப்பது தங்களுக்குள்ள உரிமை என்று சொல்லி, நீதிமன்றத்திற்குப் போய் அதற்கான உத்தரவையும் பெற்றுக்கொண்டு, அவர்களே முதுகலை பட்டப் படிப்பையும் நடத்துகிறார்கள். இப்படிப்பட்ட நிலையிலே மாணவர்கள் எந்தக் கல்வியில் சேர்ந்தாலும், பணம் கொடுத்தால்தான் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள் என்கிற நிலை சரிதானா?

அடுத்து, சட்டக் கல்வியைப் பொறுத்தவரையில், ஒட்டுமொத்தமான ஊழலின் இருப்பிடமே அங்கே தான் ஆரம்பிக்கப்படுகிறது. சட்டத் துறையைப் பொறுத்தவரையில், மதுரை சட்டக் கல்லூரி முதல்வர் பணத்தைக் கையாடல் செய்ததாகச் சொல்லி வேலை நீக்கம் செய்யப்பட்டார், அவர்மீது வழக்கும் தொடரப்பட்டது. இப்போது அங்கே என்ன நிலைமை என்பதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுக்கே நன்றாக தெரியும். சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கூட பதவி கொடுக்க மறுக்கிறார்கள். அவர்கள் உடனே நீதிமன்றத்திற்குப் போய் இதற்கான உத்தரவைப் பெறுகிறார்கள். அதற்குப் பிறகும் அவர்களை எடுக்காததால், திரும்பவும் அவர்கள் கோர்ட்டுக்குப் போக, கோர்ட்டில் 'கன்டெம்ப்ட் ஆப் கோர்ட்' என்கிற வகையில் உத்தரவு பெற்று, அதன் அடிப்படையில் வேலையில் சேர்கிற நிலைமை இருக்கிறது. மேலும் அங்கே சட்ட ஒழுங்கு சரியில்லை. கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்வின்போது வெற்றி பெற்றவர்கள் 10 சதவிகிதத்தினர். அதன் முடிவு தெரிந்த சில நாட்களில் கல்லூரி முதல்வர் தலைமறைவாகிவிட்டார் என்று பத்திரிகையில் செய்தி வந்தது.

சட்டக் கல்வியைப் பொறுத்தவரையிலும், தேர்வு முறையை மாற்றியமைக்க வேண்டும். எப்படி பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்றவைகளில் எல்லாம் நடைபெறுகிறதோ அதுபோல் சட்டக் கல்வியைப்

பொறுத்தவரையிலும் கூட, மாற்றியமைக்க வேண்டும். இன்றைக்கு அரசியல் வாதிகளின் பெயரைச் சொல்லிக்கொண்டு சட்டத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். மதுரை சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில். . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல என்ஜினியரிங் மற்றும் மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கும் நேரத்தில் நாம் கடைப்பிடிக்கிற முறையை, சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையிலும் கூட, கொண்டுவர வேண்டுமென்ற அடிப்படையில் தான் நாம் அந்த முறையைக் கொண்டு வந்தாகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் :** இந்த ஆண்டா, சென்ற ஆண்டா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சென்ற ஆண்டே கொண்டு வந்து விட்டோம்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** மதுரை சட்டக் கல்லூரியில் சேர 7 ஆயிரம் ரூபாய், சென்னை சட்டக் கல்லூரியில் சேர 12 ஆயிரம் ரூபாய் என்று சட்டத் துறையிலே இருக்கிற அதிகாரிகளே சொல்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக விசாரணைக்கு ஏற்பாடு செய்தால், கொடுத்தவர்கள் யார் யார் என்கிற விவரங்களை நான் எடுத்துச் சொல்வேன் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் பதவிகளைப் பொறுத்தவரையில், மதுரை மாநகராட்சிப் பள்ளிக்கூட ஆசிரியர்களுடைய நிலைமை என்னவென்றால், அங்கே பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. நான் ஒரு கிருத்துவப் பள்ளிக்குப் பரிந்துரை செய்ய கல்வி அதிகாரியை 15 முறை தொடர்பு கொண்டும், அவர் கிடைக்கவில்லை. தொலைபேசியில் அருகில் இருந்துகொண்டே இல்லை யென்று சொல்லும் நிலை இருக்கிறது. 400 மாணவர்கள் அந்தப் பள்ளியில் படிக்கிறார்கள். அனுமதி பெற்ற 3 ஆசிரியர் பதவிகள்தான் உள்ளன.

(மணி 11-45)

அந்தப் பள்ளிக்குத் தனிச் சலுகை கொடுக்கவேண்டிய காரணம், அங்கே ஸ்ரீலங்கா அகதிகளின் பிள்ளைகளும், பர்மா அகதிகளின் பிள்ளைகளும் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலும் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கும் மற்றொரு தனியார் பள்ளிக்கு ஆண்டு ஒன்றுக்கு பத்து ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று 10 ஆண்டுக்கு ஒட்டு





மொத்தமாக ஆணை வாங்கி வைத்திருக்கிறார்கள். அந்தப் பள்ளியின் பெயரை வேண்டுமானால், அமைச்சரிடத்தில் தனியாகத் தருகிறேன். அந்தப் பள்ளியில் 5,000 மாணவிகள் படிக்கிறார்கள். பல இடங்களில் அந்தப் பள்ளியின் கிளைகள் இருக்கின்றன. அடுத்த முறை அமைச்சர் அவர்களோ, பள்ளிக் கல்வி இயக்குநரோ மதுரைக்கு வந்தால், அதைப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே இந்தப் பள்ளி ஒரு பாழடைந்த மண்டபத்தில் நடந்துகொண்டிருந்தபோது, அருகிலிருந்த புகைவண்டிப் பாதையில் இன்ஜின் ஒன்று சென்ற சமயத்தில் அந்த அதிர்ச்சியில் அந்தக் கட்டிடம் இடிந்து 37 மாணவிகள் இறந்துவிட்டார்கள். இது உனக்கு எப்படித் தெரியும் என்று நீங்கள் கேட்கலாம், அந்த வழக்கை நடத்தியவனே நான்தான். அப்படிப் பட்ட நிர்வாகம் ஆண்டுக்கு பத்து ஆசிரியர்களைப் போடலாம் என்று ஒட்டு மொத்தமாக உத்தரவை வாங்கி வைத்திருக்கிறது. உங்களுக்கு எப்படி அந்த உத்தரவு கிடைத்தது என்று கேட்டால், இதற்கு முன்னால் இருந்த கல்வித் துறைச் செயலாளர் வாங்கிக் கொடுத்தார் என்று சொல்கிறார்கள். இதையெல்லாம் விசாரிக்க வேண்டும்.

கடைசியாக, ஒரு முக்கியமான கருத்து. பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் என்ற பதவி, கல்வி உலகத்தில் மிக உயர்ந்த பதவி. அதிலே கருத்து வேறுபாடு யாருக்கும் கிடையாது. இந்த மன்றத்திலே நீண்ட காலமாக உறுப்பினராக இருந்த, ஹைதராபாத் நிஜாம் எல்லையிலிருந்து திருநெல்வேலி வரை ஒரே பல்கலைக் கழகமாக இருந்தபோது துணைவேந்தராக இருந்த டாக்டர் ஏ. எல். முதலியார் போன்றவர்கள் எல்லாம் வகித்த பதவி அது. ஜனநாயகம் இங்கே வந்த பிறகு பல துணை வேந்தர்கள் வந்தார்கள். ஆனால் துணை வேந்தர்கள் நியமனங்களில் இந்த அரசுக்கு என்ன மரியாதை என்பதை கல்வியமைச்சர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று. நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மதுரையில் ஒரு ஆசிரியர் சங்கம் இருக்கிறது. அந்த ஆசிரியர் சங்கத்தின் பெயர் 'தமிழ் நாடு டீச்சர்ஸ் பெடரேஷன்'. அவர்கள் ஒரு முகவரியைக் கூட கொடுத்திருக்கிறார்கள். அழகர்கோயில் சாலை, மதுரை என்று முகவரி கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவி நியமனம் குறித்து நடைமுறையில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றி புத்தகமே வெளியிட்டு இரண்டரை ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். எனக்கும் தபாலில் அந்தப் புத்தகம் வந்தது. இருந்தாலும் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமே என்பதற்காக இரண்டரை ரூபாய் கொடுத்து வாங்கி வந்திருக்கிறேன். அதை, தலைவர் அவர்களின் அனுமதியோடு கல்வியமைச்சர் அவர்களுக்கு அளிக்கிறேன்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்] [1986 ஏப்ரல் 24

(மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு கல்வியமைச்சருக்கு ஒரு புத்தகத்தை அளித்தார்.)

அதிலே பல ஆபாசமான, தவறான கருத்துக்கள் எல்லாம் அச்சடிக்கப்பட்டு வெளியிட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** புத்தகமே பத்து பக்கம்தான் இருக்கும்போல இருக்கிறது. இதன் விலை இரண்டரை ரூபாயா?

**திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்:** அந்தச் சங்கத்தின் கோபத்திற்கு ஆளாக்கப்பட்டவர் இதற்கு முன்பு அந்தப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் ராமச்சந்திரன் அவர்கள். அவர்கள் இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட துணைவேந்தர் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால் அந்தத் தேர்வுக் குழுவில் உறுப்பினராக நானே இருந்தேன். பேராசிரியர் ராமச்சந்திரன் ஏதோ தவறு செய்துவிட்டார் என்றோ, அல்லது அவர்கள் கேட்டதை இவர் செய்யவில்லையென்றோ, ஆபாசமான, அவதூறான குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. இப்போது அவர் அந்தப் பதவியிலும் இல்லை. ஆகவே அவரைப்பற்றிப் பேசுவது முறையாகாது. குற்றச்சாட்டை ஆதரிக்கிறேனா என்றால் அதுவும் இல்லை. ஆனால் அவரைப் பற்றிக் குற்றம் சொல்லிவிட்டு, அரசாங்கத்தின் மீது மிக அவதூறான குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு அந்த அட்டையில் இருப்பதைப் படிக்கிறேன்.

"In Universities of Tamil Nadu, Vice-Chancellorships are sold to the highest bidders."

தமிழ் நாட்டில் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர்கள் பதவிகள் ஏலம் வைத்து ஏலத்தில் அதிகத் தொகை யார் கேட்கிறார்களோ . . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** உறுப்பினர் அதைப் படிப்பதற்கு முன்பே என்னிடத்தில் தனியாக அறையில் காட்டியிருக்க வேண்டும். அனுமதியோடு என்று சொல்லி விடுவதால் மட்டும் போதாது. நான் பார்த்துத்தானே அனுமதிக்க வேண்டும்.

(முற்பகல் 11-50)

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** இது கடையிலே இரண்டரை ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதைக் கட்சிக் கொறடாவிடம் கூட சொன்னேன் * என்று கேட்டுவிடக் கூடாது என்று கூட சொன்னேன். (சிரிப்பு) நான் இதிலுள்ள கருத்துக்கள் உண்மை என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட அவதூறுகள் இந்த ஆட்சியைப்பற்றி . . .

---

* தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.



1986 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று அவையிலே ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறீர்கள். அந்தத் தீர்ப்பில் * ஆகிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றீர்கள். மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்ற நேரத்திலே அந்த வார்த்தையைச் சொல்லியிருக்கிறார்கள். அது அவைக் குறிப்பில் இருக்கலாமா?

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். அந்த வார்த்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

ஆகவே, அடுத்தபடியாக, . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினரின் அனுமதியோடு அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் இன்னும் எவ்வளவு நேரம் பேச இருக்கிறார்?

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** பத்து நிமிடங்கள். அந்தப் புத்தகத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

Qualifications and character are not necessary துணைவேந்தர் பதவிக்கு எந்தத் தகுதியும் தேவையில்லை; ஒழுக்கமும் தேவை இல்லை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"Successful bidders could exploit people, enjoy life."

"இப்படி அதிகத் தொகை கொடுத்து துணைவேந்தர் பதவியை வாங்கி, மிகச் சுகமாக வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்; பணத்தை சுட்டுகிறார்கள்; சொத்துக்களை வாங்குகிறார்கள். இதுவெல்லாம் முறையா?" என்று தலைப்பிலேயே போட்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு இவற்றைக் கொண்டுவருகிறேன். அது மட்டுமல்ல, அப்புத்தகத்தின் உள்ளே படித்துப் பார்த்தால், இன்னும் அவதூறாகவெல்லாம் குற்றச்சாட்டுக்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். துணைவேந்தர் ஐந்து இலட்சம் ரூபாய் கொடுத்து பதவி வாங்கினார் என்றும், ஆனால் அந்த ஐந்து இலட்சம் ரூபாய் பெரிது இல்லை என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்?

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** நான் உண்மையிலேயே அதைப் பார்க்கவில்லை. எனவே அளவுக்குமீறி அப்புத்தகத்தின் வரிகளை உபயோகிக்க வேண்டாம். குற்றம் இருக்கிறது என்று சொன்னாலே போதும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ஒரு புத்தகத்தை மாண்புமிகு கல்வி அமைச்சரிடத்திலே தந்திருக்கிறார்கள். அது, அவர்கள் சொன்னதுபோல, தனிப்பட்டவர் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டிருக்கலாம். அல்லது வேறேதேனும் காரணம் இருக்கலாம். அதன் காரணமாக அரசு மீதோ, அமைச்சர் மீதோ, வேண்டுமென்றே இவ்வாறு அச்சடித்து புத்தகம் வெளியிட்டிருக்கலாம். அந்த வாசகத்தையெல்லாம் அவைக் குறிப்பிலே கொண்டுவந்து அந்தச் செய்திகள் எல்லாம் பத்திரிகையிலே வருகிறபோது, அரசாங்கத்தின் 'இமேஜ்'-ஐ அது பாதிக்கக்கூடியதாக இருக்கும். எனவே அவையெல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கலாமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் கட்டுப்பாட்டோடு, கண்ணியத்தோடு பேசக்கூடியவர். அவரே இவற்றைப் படிப்பது நல்லதல்ல. எனவே அவரே, இப்புத்தகம் சம்பந்தப்பட்ட குறிப்புகளை நீக்குவதற்கு ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** புத்தகத்திலே இருக்கிற குறிப்புகளை எதைவேண்டுமானாலும் நீக்குங்கள். கட்டுப்பாடுள்ள உறுப்பினர் என்கிற முறையில் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் எடுத்துச்சொல்ல விரும்புவது, ஒரு ஆசிரியர் அமைப்பு, தமிழ்நாடு டீச்சர்ஸ் பெடரேஷன் என்று முகவரியைக் கொடுத்திருக்கிறார்கள். துணிச்சலாக இப்படிப் பல குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பொதுமக்கள் மத்தியிலே அச்சடித்து விற்கிறார்களே, இது இதுவரையில் அரசின் கவனத்திற்கு வராவிட்டாலும், இப்போது கொண்டுவந்து, அதன்மீது அரசு என்ன செய்யப் போகிறது என்று கேட்டுக்கொண்டு இந்த அளவோடு அந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக நான் சொல்ல விரும்புவது, இரண்டாண்டுகளுக்கு முன்னாலே தனியார் நிறுவனங்களுக்குக் கல்வித் துறையை ஒப்படைத்து விட்டீர்கள். இதை நல்ல நோக்கத்தோடு செய்திருந்தாலும், நடைமுறையில் கல்வி விலைபொருளாக ஆகியிருப்பதாக பொதுமக்களும், படித்தவர்களும் நினைக்கிறார்கள். அதுகுறித்து ஒருசிலவற்றைக் கூறக் கடமைப் பட்டிருக்கின்றேன்.





மேலவைத் தேர்தல் சமயத்தில் நடைபெற்றது. தேர்தலிலே ஏற்பட்ட தோல்வி பற்றிப் பேசமாட்டேன். காரணம் வெற்றி தோல்வி என்பது பல காரணங்களினால் ஏற்படும். பேரறிஞர் அண்ணா அவர்கள், பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் எல்லாம் தோல்வி அடைந்திருக்கிறார்கள். எனவே அதை ஒரு அளவுகோலாக வைத்துப் பேசமாட்டேன். மதுரை, ஆசிரியர் தொகுதித் தேர்தலுக்கு ஆளும் கட்சியின் சார்பில் தேர்தல் பொறுப்பாளராக மாண்புமிகு விவசாய அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்கள் நியமனம் செய்யப்

(முற்பகல் 11-55)

பட்டார்கள். ஆனால் பொறுப்பாளரை அறிவித்தார்களேயொழிய, வேட்பாளர் யார் என்று அறிவிக்கவில்லை. இந்த நிலையை இந்த மன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பொறுப்பாளரை அறிவித்துவிட்டு, வேட்பாளரை அறிவிக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். அதை இந்த மன்றத்தின் குறிப்பிலேயிருந்து படித்தேன். அப்போது ஆளும் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் எழுந்து "உங்கள் கட்சியிலே வேட்பாளர் யார் என்று அறிவித்து விட்டீர்களா?" என்று கேட்டபோது, அந்த நேரத்தில் எங்கள் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்த அவையில் நுழைந்தார்கள். அவர்கள் பதில் சொல்லும்போது, "எங்கள் கட்சி, பேராசிரியர் வேம்பு அவர்களை ஆதரிக்கிறது" என்று சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள், அப்படி என்றால் தங்களது கட்சி திரு. பி. ஆர். தாமல் அவர்களை ஆதரிக்கும் என்று சொன்னார்கள்.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவரவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. பத்திரிகையில் அப்படி ஒரு செய்தி வந்து, நான்கு பேர் ஆதரிப்பதாக, பேசுவதாக மாண்புமிகு டாக்டர் காளிமுத்து அவர்கள் தெரிவித்தார்கள் என்ற செய்தியைத்தான் நான் தெரிவித்தேனே தவிர, நாங்கள் ஆதரிக்கிறோம் என்ற வார்த்தையைச் சொல்லவில்லை.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** இந்த அவைக் குறிப்பைப் படித்து விட்டுத்தான் நான் சொல்கிறேன். ஒருவேளை தவறாக இருக்கலாம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சீத்தாபதி அவர்கள் சொன்னதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் அந்தக் கருத்தை மறுத்து, "திரு. பி. ஆர். தாமல் அவர்கள் ஆளும் கட்சி ஆதரவைக் கேட்கவும் இல்லை, நாடவும் இல்லை" என்று சொல்லிவிட்டார்கள். அது இந்த அவைக் குறிப்பில்

இருக்கிறது. இதை நான் அவைக் குறிப்பில் படித்துப் பார்த்தேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்ட பிறகும்கூட, அந்தத் தொகுதியிலே நடந்த தேர்தலிலே மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் காமராசர் மாவட்டத்தில் மாண்புமிகு முன்னாள் உறுப்பினர் திரு. பி. ஆர். தாமஸ் அவர்களுக்காக ஒரு பெரிய தேர்தல் பிரச்சாரத்தையே நடத்தி, அங்கே இருக்கின்ற வாக்காளர்களைச் சந்தித்து அவர்களுடைய ஆதரவைத் தரும்படி கேட்டார்கள். நான் இதை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், இன்று படித்தவர்கள் மத்தியில், பட்டதாரிகள் மத்தியில் ஆளும் கட்சியின் ஆதரவு தேடக் கூடிய சூழ்நிலை கூட இல்லை என்பதை ஆளும் கட்சியிலுள்ளவர்கள் மறந்து விடக்கூடாது. இதற்குக் காரணமே என்னவென்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எட்டு ஆண்டுக் காலம் தமிழ் நாட்டில் மூன்று முறை பொதுத் தேர்தல்களில் பெரிய கட்சியாக இருந்துவருகிறீர்கள். நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற தனிப்பட்ட செல்வாக்கு இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த அரசியல் தலைவருக்கும் கிடையாது, அந்த அளவுக்கு அவர்கள் செல்வாக்குப் பெற்றவர்கள். அப்படிச் செல்வாக்குப் பெற்றவர்களுக்கு படித்தவர்கள் மத்தியில் இப்படி ஒரு அவமரியாதை நிலை ஏன் ஏற்பட்டது என்பதை கல்வித் துறைக்குப் பொறுப்பாக இருக்கின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் "அவமரியாதை" என்று சொல்கிறார்கள். ஆசிரியர் தொகுதியைப் பொறுத்த வரையில், ஆசிரியர்கள் பதிவு செய்ய வேண்டும். அவர்கள் போய் வேட்பாளர்களைக் கேட்க வேண்டும். இப்படி அதிலே பல காரணங்கள இருக்கின்றன. ஒரு ஆசிரியர் தொகுதியில், ஒரு பட்டதாரி தொகுதியில் வெற்றி அடைவதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஆகவே ஆசிரியர் தொகுதியில் வெற்றி அடையவில்லை என்று சொன்னதாலேயே முதலமைச்சர் அவர்களுக்கு மரியாதை இல்லை என்று பேசுவதற்கும், இதற்கும் சம்பந்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** தலைவரவர்களே, உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குப் புரியவில்லை. நான் இந்தப் பேச்சைத் துவங்குவதற்கு முன்னாலேயே சொன்னேன். தேர்தல் முடிவை நான்





விமர்சனம் செய்யமாட்டேன். உங்களுக்குத் தோல்வி ஏற்பட்டதை ஒரு அளவுகோலாக நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். தேர்தலிலே வெற்றி தோல்வி ஏற்படுவது பல்வேறு காரணங்களுக்காக ஏற்படுவதுண்டு. அண்ணா அவர்களே ஒருமுறை தோல்வி அடைந்திருக்கிறார்கள். இப்படி படித்தவர்கள் மத்தியில் ...ங்கள் ஆதரவைப் பெறுவதற்கே ஒரு வேட்பாளர் அச்சப்படுகிறார் என்றால், இதற்கு என்ன காரணம் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அந்த வகையிலே இப்போது தமிழ் நாடு கல்வித் துறை . . . . . .

**திரு. ஜேப்பியார்:** தலைவரவர்களே, ஒரு சின்ன விளக்கம். இப்போது படித்தவர்கள் தனியாக சங்கங்கள் வைக்க ஆரம்பித்து விட்டார்கள். அந்த சங்கத்தைத் தேர்ந்தெடுக்கிறார்களேயொழிய, அரசியல் கட்சியைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதை கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்:** தலைவரவர்களே, இப்போது ...லகத்திலே மாணவர்கள் பெரிய ஏமாற்றத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம் இந்தத் தனியார் துறையிலே துவங்கப்பட்ட கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் எல்லாம் பாழடைந்து, மண்டபங்கள் அல்லது சாதாரண பந்தலிலே கல்லூரிகளை நடத்துகிறார்கள். அங்கு கல்விக்கான சாதனங்கள், உபகரணங்கள் இருக்கின்றனவா என்றால் இல்லை. ஒரு பாலிடெக்னிக், இண்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்டில் இருக்கக் கூடிய சாதனங்கள் கூட அந்தத் தனியார் துறை பொறியியல் கல்லூரியில் கிடையாது. அந்தக் கல்லூரிகளை நம்பிச் சேர்ந்த மாணவர்கள் வாழ்க்கை பாழாகிவிடும். ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கட்டாயமாக இந்தக் கல்வி ஆண்டு துவங்குவதற்கு முன்னால், இப்படி முறையில்லாமல் நடக்கின்ற கல்லூரிகளை—கட்டாயமாக இடக் குறைப்பு ஏற்பட்டாலும் பரவாயில்லை—உடனடியாக மூட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, பல கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஒரே ஒரு தனிப்பட்ட விளக்கத்தை மட்டும் கல்வி அமைச்சர் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று மாலை அவர்கள் பதில் சொல்லும்போது, நான் இருந்து அதைக் கேட்கக் கடமைப்பட்டவனாக நான் இருந்தாலும், நான் ஊருக்குச் செல்வதால், அவர்களை அவமரியாதை செய்வதாக அவர்கள் கருத வேண்டாம்; நான் மாலையில் இருக்கமாட்டேன் என்று சொல்லி, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பேசுவதைப் பார்த்தால், அவசரம் இருப்பதாகத் தெரியவில்லை; ரொம்ப அவகாசமாகப் பேசியிருப்பதாகத் தெரிகிறது.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவரவர்களே, 1986-87 கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு விவாதத்தில் பங்கேற்று ஒருசில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்னும் ரொம்ப பேர் பேச இருக்கிறார்கள். இன்று மாலைக்குள் முடிப்பதுபோல் தெரியவில்லை.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் மிகுந்த கட்டுப்பாடு உடையவர்கள். அதிகமாக அவர் பேசுவதில்லை. அதோடு கல்வித் துறையில் நிறைந்த அனுபவம் உள்ளவர் என்ற காரணத்தால், அவருக்குச் சிறிது நேரம் அதிகமாகக் கொடுத்தேன். எனவே மற்ற உறுப்பினர்கள் நிலைமையை உணர்ந்து, கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுத்து, 20 நிமிடங் களுக்கு மேற்படாமல் பேசி, முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் கட்சியின் சார்பில் இன்று வேறு யாரும் பேசவில்லை. அவர் மட்டும்தான் பேசுகிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சார்ந்துள்ள கட்சியில் எல்லோரும் பேச வேண்டும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக மட்டும் ரூ 551 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** "தாங்களே கட்சி என்று ஒப்புக் கொண்டிருக்கிறீர்களே" என்று திரு. லெட்சுமிகாந்தன் அவர்கள் சொல்லக் கூடாது . . . . .



**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவர் அவர்களே, தாங்கள் கட்சி என்று சொன்னதால், தங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். நேற்றையதினம் அவர்கள் கட்சியில் நான்கு பேர் என்று சொன்னார்கள். என்றாலும் தொலைக் காட்சியில் சொல்லும்போது, மூன்று பேர் என்றுதான் அறிவித்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** பத்திரிகைகளிலும் அப்படித்தான் போட்டிருக்கிறார்கள். பத்திரிகைக்காரர்களுக்கும் தொலைக்காட்சி நிலையத் தாருக்கும் 'ஆண்டி-டிபக்ஷன் ஆக்ட்' இருப்பது தெரியுமா ? இன்றையதினம் காலையில்கூட மூன்று பேர் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மேலவைச் செயலகத்தில் இருப்பவர்கள் தருகிற விவரத்தின் அடிப்படையில் அவர்கள் செய்திகளை வெளியிடு கிறார்கள். செயலகத்தின் விவரப்படி மூன்று தான் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். மாண்புமிகு தலைவர் அவர்களுடைய அறையில் உள்ள போர்டில் கூட நான்காக ஆக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** செயலகத்தினருக்கும் கூட 'ஆண்டி டிபெக்ஷன் ஆக்ட்'-ஐப் பின்பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். தலைவர் தீர்ப்பு அளிக்கையில் அதுதான் சரியாக இருக்கும்.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** ஆக, தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டபடி, அதனுடைய ரூ. 2,000 கோடிக்கும் மேற்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கல்விக்காக மட்டும் ரூ. 551 கோடியை ஒதுக்கியிருக் கிறார்கள். அதாவது மொத்த வருவாயில் 22 சதவீதத் தொகையை கல்விக்காக தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதற்காக பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், கல்விக்காக ஆகும் செலவை ஒரு செலவினமாகக் கருதக் கூடாது. அதை ஒரு மூலதனச் செலவாகவே கருத வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களும் கூறிய கருத்தை நானும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக் கிறேன். கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு முன்னால் கல்வித் துறையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் எடுத்துக்கொண்டுள்ள பல்வேறு முயற்சிகளுக்கும் நான் முதலில் பாராட்டு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் தொடக்கக் கல்விக்காக என்றே தனியான இயக்குநரகத்தையும் மேல்நிலைப் பள்ளிகளில் மூன்று பி.யு.சி.யில்

இருந்ததைப் போன்று பாடத் திட்டத்தையும், அடுத்து பட்டதாரி ஆசிரியர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் இளநிலை ஆசிரியர்கள் பதவியிலிருந்து 2 : 1 என்ற விகிதத்தில் நியமிப்பதாகவும் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். இந்த நல்ல முடிவுகளையெல்லாம் பேரவையில் அறிவித்திருக்கிறார்கள். அதற்காகவும் நான் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தொடக்கக் கல்வி இயக்குநரகத்தைப் பொறுத்தவரையில், இயக்குநருக்கு அடுத்தபடியாக ஒரு இணை இயக்குநரை மட்டும் நியமித்து விட்டால், போதாது. மாறாக மாவட்ட அளவிலும் தனியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் . தொடக்கப் பள்ளிகளுக்கு என்றே தனியாக ஒரு டி.ஈ.ஓ.-வை நியமிக்க வேண்டும். அப்போதுதான் எந்த நோக்கத்திற்காகத் தற்போது தொடக்கப் பள்ளிக்கு என்று தனி இயக்குநரகம் அமைக்கப் படுகிறதோ அந்த நோக்கம் நிறைவேறும். ஏ.ஈ.ஓ.-க்கள் தொடக்கப் பள்ளிகளைப் பார்த்துக் கொண்டாலும், தனியான முறையில் ஒரு டி.ஈ.ஓ. இருந்தால்தான், அவைகள் நல்லமுறையில் செயல்பட ஏதுவாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்

உயர்நிலைப் பள்ளியானாலும் சரி, மேல்நிலைப் பள்ளியானாலும் சரி அல்லது கல்லூரியானாலும் சரி. அதற்கெல்லாம் மிக முக்கியமான அடிப்படை தொடக்கக் கல்விதான். எனவேதான் அரசு தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளையும் நல்ல முறையில் கவனிக்க வேண்டும். தனியார் பள்ளிகளானாலும் சரி, மற்றும் சிறுபான்மையோர் பள்ளிகளானாலும் சரி, அவைகளையெல்லாம் நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. அதைப் போலவே அரசுப் பள்ளிகளும் நல்ல முறையில் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இயக்குநர் மட்டத்திலேயே சொல்லி, வரும் ஆண்டுகளில் சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டால், அவைகளும் சிறப்பாகச் செயல்பட வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-05)

(மாற்றுத் தலைவர் திரு. பிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் தலைமை.)

1—6—1986 அன்று அனைத்து பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த ஆசிரியர்களும் அரசு ஊழியர்களாக ஆகிறார்கள் என்று அறிவித்திருக் கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் இருந்த பள்ளிக் கட்டிடங்களுக்கான பராமரிப்புச் செலவை பஞ்சாயத்திலிருந்துதான் செய்து கொண்டு



வந்தார்கள். நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு, பள்ளிக் கட்டிடங்களுக்குச் செய்ய வேண்டிய செலவுகளுக்கான தொகையை ரோடு போடுவதற்கும் மற்ற வசதிகள் செய்து தருவதற்கும் பயன்படுத்துகிறார்கள் என்று கூறுகிறார்கள். நான் எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களைப் பற்றியும் குறிப்பிடவில்லை. ஒரு சில யூனியன்களில் அப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள். அங்கே பணியாற்றும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கும்போது, முன்பு அவர்களுக்கு என்ன ஊதியம் கொடுத்தார்களோ அதே ஊதியத்தையே மீண்டும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, புதிய கல்விக் கொள்கையைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். மத்திய அரசு புதிய கல்விக் கொள்கையை அறிவித்த பிறகு, நம்முடைய மாநில அரசு மேலவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் ஆகியவர்களுடைய கருத்துக்களையெல்லாம் கேட்டு, ஒரு புத்தக வடிவமாக அனுப்பியது. தென்னாற்காடு மாவட்டத்திலே கூட இதற்காக ஒரு கருத்தரங்கு நடந்தது. அதிலே நானும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் அவர்களும் கலந்துகொண்டோம். எங்களுடைய கருத்துக்களையெல்லாம் பரிந்துரை செய்தோம். மத்திய அரசு அறிவித்துள்ள புதிய கல்விக் கொள்கையில் நல்ல பல திட்டங்கள் இருந்தாலும், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். காலம் தவறியிருந்தாலும், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் எல்லாம் பள்ளிக் கல்வி முடிந்த பிறகு, இரண்டாண்டுகளுக்கு 'மிலிட்டரி ட்ரெய்னிங்' கொடுக்கிறார்கள். அதைப்போல இரண்டாண்டுகளுக்கு என்று இல்லாவிட்டாலும், குறைந்தது ஓராண்டாவது பள்ளி மாணவர்களுக்குக் கட்டாய 'மிலிட்டரி டிரெயினிங்' என்ற திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு பல்வேறு திட்டங்களை இளைஞர்களுக்காக செயல்படுத்தி வருகிறது. அதற்காக இளைஞர் நல வாரியத்தை ஆரம்பிக்க இருக்கிறார்கள். இளைஞர் நல வாரியத்தை ஆரம்பித்தாலும், இளைஞர்களுடைய ஒழுக்கப் பயிற்சிக்காக மிலிட்டரி டிரெய்னிங் கொடுத்தால், நன்றாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1986-87 ஆம் ஆண்டில் அரசு அனுமதித்துள்ள ஆசிரியர்களின் பணியிடங்கள் மொத்தம் 775. இது சொற்ப எண்ணிக்கையாக இருக்கிறது என்று கருதினாலும், நம்முடைய நிதிநிலை போதவில்லை என்பதால், இப்படிக் குறைந்த எண்ணிக்கையில் கொடுத்திருக்கிறார்கள் என்று

கருதுகிறேன். இப்போது ஓர் ஆசிரியருக்கு 30 மாணவர்கள் என்ற விகிதம் போய் ஓர் ஆசிரியருக்கு 120 மாணவர்கள் என்ற விகிதம்தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே மேலும் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பல பணியிடங்களைத் தோற்றுவித்தால், வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கும் படித்த இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து, இடைநிலை ஆசிரியர்களுக்குப் பயிற்சி தரும் பயிற்சி நிலையங்களை வியாபார நோக்கோடு ஆரம்பிக்கிறார்கள் என்றும், அப்படிப்பட்ட நிலையங்களில் படித்து வந்தால் கல்வியின் தரம் சரியாக இருக்காது என்றும் குறிப்பிட்டிருந்தேன். அப்போது "பட்டதாரிகள் படித்துவிட்டு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு நிறைய பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும்" என்று நான் சொன்ன நேரத்தில், இந்த அரசு அதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது, நிச்சயமாக இதுகுறித்து அரசு செயல்படும் என்று கூறினார்கள். இதையே பேரவையிலேயும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஒரு கோடி ரூபாய் 20, 25 பள்ளிகளுக்குக் கூட போதாது. பல கோடி ரூபாய் இதற்காக வேண்டிய நிலையில் ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்

(பிற்பகல் 12-10)

களுக்கும் மற்ற கல்வி அதிகாரிகளுக்கும் கூறும் ஆலோசனையாவது ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் என்.ஆர்.ஈ.பி. போன்ற ஸ்கீம்கள் இருக்கின்றன. வட ஆற்காடு மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் நடந்து முடிந்துவிட்டது. அந்தக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டபோது, அவர்கள் ரூ. 15 லட்சம் அளவுக்கு பள்ளிக் கட்டிடங்களுக்காகக் கொடுப்பது என்பதை ஒத்துக்கொண்டார்கள். அதுபோன்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்





அவர்களுக்கும் ஒரு ஆணையாகவே போட்டு, ஒவ்வொரு வருடமும் செய்ய வேண்டும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் என்.ஆர்.ஈ.பி. போன்ற இரண்டு, மூன்று ஸ்கீம்கள் இருக்கின்றன. அந்த ஸ்கீம்கள் மூலமாக குறைந்தது 10 அல்லது 15 பள்ளிக் கூடங்களுக்காவது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிதி கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் நலம் பற்றிச் சொல்கிறேன். ஆசிரியர்கள் நலம் குறித்து அரசு நல்ல பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. நல்ல பல திட்டங்களை மேற்கொண்டிருந்தாலும், மேலும் அவர்கள் நலனுக்காக செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் நடந்துமுடிந்த ஆசிரியர்கள் போராட்டம் பெரிய அளவில் நடந்திருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனி நபர் குழு அமைத்திருக்கின்றார்கள். அவர்கள் அறிக்கை மே மாதத்தில் வர இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். திரு. கார்த்திகேயன் அவர்கள் முடிவாகக் கொடுத்தாலும், அந்த அறிக்கையை அரசு முழுமையாக ஆராய்ந்து கடைசியாகத்தான் கொடுக்க வேண்டும். கடைசி முடிவு அரசினுடையதுதான். இந்த நேரத்தில் நான் நிதி அமைச்சர் அவர்களையும், கல்வி அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்வது அந்தப் பரிந்துரைகளை நல்ல முடிவாக ஏற்று அனைத்து ஆசிரியர்களும் பல்வேறு பிரச்சினைகளில் தீர்வு பெற்று நல்ல பலனைப் பெறச்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கொடுத்திருக்கின்ற நியாயமான கோரிக்கைகளை ஆராய்ந்து ஏற்று அவர்களுக்கு நல்லமுறையில் பலன்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு 5—9—1985 அன்று ஆசிரியர்கள் தின விழாவில் சென்னையிலே பல்வேறு நல்ல அறிவிப்புகளை எல்லாம் கொடுத்தார்கள். உறுதிமொழிகளைக்கூட கொடுத்தார்கள். அந்த உறுதிமொழிகளும்கூட தனி நபர் குழுவிற்கு அனுப்பப் பட்டுவிட்டிருக்கின்றன. அந்த உறுதிமொழிகளையும் அந்தத் தனி நபர் குழுவின் மூலமாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் பணியில் சேர்ந்த பிறகும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கின்றார்கள். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கின்றார்கள், அந்த முதுகலைப் பட்டதாரி

ஆசிரியர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பட்டதாரி ஆசிரியர்கள், ஈர்க்கப்பட்ட ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு 'அப்கிரேடேஷன்' வராமல் இருக்கின்றது. அதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் ஆசிரியர்கள் பற்றிக் கூறும்போது, அந்தத் தமிழாசிரியர்கள் கழகத்தின் அங்கீகாரம் குறித்து நல்ல முடிவெடுக்க வேண்டும். அவர்களுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பி.லிட். படித்த ஆயிரக்கணக்கான தமிழாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளியிலே உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த அந்த ஆசிரியர்களை இப்போது தொடக்கப் பள்ளிகளில் எல்லாம் தலைமையாசிரியராகப் போட்டுக் கொடுக்க வேண்டும். தலைமையாசிரியர்களுக்குரிய படியை அவர்கள் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதையும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பி.டி. கல்வித் தகுதி பெற்ற செகண்டரி டீச்சர்ஸ், பதவி உயர்வு இல்லாமல் இருக்கின்றார்கள். மற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற அளவுக்கு இவர்களுக்கும் பிரோமோஷன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமாக 'பார்ட் டைம் டீச்சர்ஸ்', பகுதி நேர ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். நான் ஆளுநர் அவர்கள் உரையின்மீது பேசும்போதுகூட சொன்னேன். அவர்களுக்கும் அந்தப் பொங்கல் பரிசு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதி நேர ஆசிரியர்கள் முழு நேர ஆசிரியர்கள் போல வேலை செய்கின்றார்கள். அவர்கள் வாரத்திற்கு 20 பீரியட் பார்க்க வேண்டும் என்று இருந்தாலும், அவர்கள் அதற்கும் மேல் முழு நேர ஆசிரியர்கள் போல வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்று அங்கே பிசிகல் எஜுகேஷன் ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். உடற்கல்வி இயக்குநர் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு எஸ்.ஜி.ஆர்.டி. டிரெயினிங் கொடுப்பதில்லை. அதை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். மக்க ஊதியத்தை உடற்கல்வி இயக்குநர் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உடற்கல்வி இயக்குநருடைய பணியைப் பார்த்து, அவர்களுடைய கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அவர்களுக்கு உதவ வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். உடற்கல்வி ஆசிரியர்கள் பல பள்ளி





களில் பணி புரிந்திருக்கின்றார்கள். அவர்கள் தனியார் பள்ளியில் பணியாற்றி விட்டு அரசுப் பள்ளிகளுக்கு வந்தால், அவர்கள் பணியாற்றிய அந்தக் காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. ஆனால் அரசுப் பள்ளியில் இருந்து தனியார் பள்ளிக்கு வந்தால், அதை கணக்கில் எடுத்துக்கொள்கின்றார்கள். அந்த நிலைமை மாறவேண்டும். அது எந்தக் கல்லூரிப் பணியாக இருந்தாலும், அது தனியார் பள்ளிப் பணியாக, எக்ஸ்பிரியன்சாக இருந்தாலும் சரி, அது அரசு பள்ளிப் பணியாக இருந்தாலும் சரி, அவர்கள் முழு சர்வீசையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-15)

அடுத்து, முக்கியமாக அனைத்து உறுப்பினர்களும் கடந்த சில நாட்களாகப் பேசி வருவது, அரசு ஆசிரியர்களுக்கு எந்தச் சலுகைகள் கொடுக்கிறார்களோ தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தச் சலுகைகள் அனைத்தையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக எல்.டி.சி. அளிக்க வேண்டும். அது அவர்களுக்குப் பெரிய குறையாக, கவலையாக இருக்கிறது. அந்தக் குறையையும், கவலையையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு நபர் குழுவிற்கு அந்தப் பிரச்சினை சென்றிருந்தாலும், அவர்களிடம் அதைக் கூறி, அவர்களுக்கு அதைப் பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு என்று ஆசிரியர்கள் நல வீட்டு வசதி வாரியம் என்று மாண்புமிகு முதல்வரவர்கள் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கான நிதி ஒதுக்கீட்டைப் பார்க்கும்போது, அது நிதியே இல்லை. அதன் தலைவர், ஒவ்வொரு இடத்திற்கும் சென்று, எப்படிச் செய்யலாம் என்று ஆலோசனைக் கூட்டங்கள்தான் நடத்துகிறார்கள். எந்த அளவுக்கு வீடுகள் கட்டலாம் என்ற திட்டவட்டமான நிலை இல்லை. ஒருசில இடங்களில் இடம் வாங்கியிருப்பதாக அறிகிறேன். இங்கே வீட்டு வசதி குறித்த கொள்கைக் குறிப்பில் பேசும்போது, மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரவர்களிடம் ஒன்றைக் கேட்டுக் கொண்டேன். ஆசிரியர்கள் வீட்டு வசதி வாரியத்தை கல்வித் துறையிலிருந்து எடுத்து, வீட்டு வசதித் துறையில் சேர்த்துக் கொண்டால் நல்லது, நன்றாக இருக்கும் என்று கூறினேன். அதனால் முழுப் பயன் பெற வாய்ப்பாக இருக்கும். கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் கல்வி முன்னேற்றம் குறித்து பணி செய்ய வாய்ப்பாக இருக்குமென்று கூறினேன். அதையே, மாண்புமிகு கல்வி

அமைச்சரவர்களிடமும் சொல்ல விரும்புகிறேன். பல்வேறு ஆசிரியர்களிடம் மனைகள் இருந்தாலும், வீடு கட்டப் பணம் கிடைப்பதில் தாமதமாகிறது. விரைவிலே அந்தப் பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. அந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு ஒரே ஒரு இன்ஸ்பெக்டர் ஆஃப் மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ஸ் இருந்தார். சில ஆண்டுகளுக்கு முன்னால் மிக மிகச் சுலபமான பணியாக இருந்தது. ஆனால் இப்போது மெட்ரிகுலேஷன் பள்ளிகள் நிறைய இருக்கின்றன. குறைந்தது மூன்று மாவட்டங்களுக்கு ஒரு இன்ஸ்பெக்டரைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களைப் பற்றிக் கூறும்போது, அவர்களை எந்த நேரத்திலும் வீட்டுக்கு அனுப்பும் நிலை இருக்கிறது. அவர்களுக்குத் தகுந்த ஊதியம் தரப்படவில்லை. மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வது, மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்களுக்கும் பணி நிரந்தரம் செய்வதற்கான விதிகள், ஊதிய விகிதத்தை நிர்ணயித்தல் ஆகியவற்றைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் முன்பே கூறியதைப்போல, ஒவ்வொரு பள்ளியிலும், அது அரசுப் பள்ளியாக இருந்தாலும், தனியார் பள்ளியாக இருந்தாலும் போலல் இங்லிஷ் மீடியம் செக்ஷன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது பள்ளி திறக்கும் நேரமாகிவிட்டது. எங்களைப் போன்றவர்களுக்கும், மற்றவர்களுக்கும், இந்தப் பள்ளியில் இடம் வேண்டும், அந்தப் பள்ளியில் இடம் வேண்டும் என்று கேட்டு தொந்தரவு வரும். ஆங்கில மீடியம் உள்ள பள்ளிகளில் இடம் வேண்டுமென்று கேட்டு தொந்தரவு செய்யும் நிலைமை இருக்கிறது. எனவே கிராமங்களில் உள்ள அரசுப் பள்ளிகளிலும் ஆங்கில மீடியம் வகுப்புகள் கொடுத்தால், எங்களுக்குக் கொடுக்கப்படும் தொந்தரவு நிச்சயமாகக் குறையும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆங்கில மீடியம் பள்ளிகளை அரசுப் பள்ளிகளுக்கும் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு பதிலளிக்கும்போது, மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒன்றை அறிவித்தார்கள். இடைநிலை ஆசிரியர் பயிற்சி பற்றி அரசு பரிசீலிக்கும் என்று கூறி, 1985-86 ஆம் ஆண்டு 281 பள்ளிகளில் தொழிற் கல்வி என்ற அடிப்படையில், இடைநிலை ஆசிரியர்





பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்குப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பயிற்சியை பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் மட்டும் கொடுத்திருக்கிறார்கள். வரும் ஆண்டில் ஆண்கள் பள்ளிகளிலும் அதை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பிளஸ் 2 மாணவர்களுக்கு அதில் இடமில்லை என்று கூறுகிறார்கள். நான் முன்பே கூறியதுபோல், பிளஸ் 2 படித்தவர்களுக்குக் கல்வித் தகுதி அதிகமாக இருப்பதால், அவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, செல்ப்-பைனான்சிங் இன்ஸ்டிடியூஷன் என்ற அடிப்படையில் பொறியியல் கல்லூரிகளையும், மருத்துவக் கல்லூரிகளையும், ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமம் வழங்கும்போது, வெகு விரைவில் கட்டிடங்கள், தளவாடச் சாமான்கள் ஆகியவற்றை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு குறிப்பிட்டிருந்தது. ஆனால் பல கல்லூரிகளில், பாலிடெக்னிக்குகளில் தளவாடச் சாமான்கள் இல்லை, கட்டிடங்கள் கட்டவில்லை, அதைப்

(பிற்பகல் 12-20)

போன்று தமிழக அரசினுடைய தேர்வின் அடிப்படையில் மதிப்பெண்களைப் பெற்ற பிறகு, மெரிட் லிஸ்டில் உள்ள மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தனியார் பாலிடெக்னிக்குகளில் சேரச் செல்கின்றபோது, "5 ஆயிரம் கொடுங்கள், 10 ஆயிரம் கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு மெரிட் லிஸ்டில் இடம் பெற்ற மாணவர்களிடமிருந்து பணம் வாங்கக் கூடாது என்று நான் அவர்களிடம் முறையிட்டிருக்கிறேன். அவர்களிடமிருந்து கல்லூரியில் சேர்வதற்கான கட்டணம் தவிர, வேறு எதுவும் கேட்டுப் பெறக் கூடாது என்று அரசு உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறப்பு போதனைபற்றி அறிவிப்பு தந்திருப்பது மிகவும் நல்ல அறிவிப்பு என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக படிக்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், ஒரு வகுப்பில் உள்ள மாணவர்கள், உதாரணத்திற்கு ஆங்கிலம் படிக்கின்ற ஒரு மாணவன் பாஸ் செய்யவில்லையென்றால், அவனின் ஒரு வருடப் படிப்பு வீணாகிறது. நான் ஒன்றை இந்த நேரத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது அமெரிக்கா போன்ற நாடுகளைப் பார்க்கும்போது, ஒரு மாணவன் ஒரு சப்ஜெக்டில் பெயில் ஆகிவிட்டால், 8

மாதம் அவனுக்கு நல்ல பயிற்சி கொடுத்து மேல் வகுப்புக்கு அவனை அனுப்புகிறார்கள். அதைப்போல இங்கேயும் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டுமென்கிற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரிபற்றிச் சொல்லும்போது ஒன்றைச் சொல்வேன். நம்முடைய கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், தனியார் கல்லூரிகளுக்கு எல்லாம் ஒரு இயந்திரை, வரம்பை வைக்க வேண்டும். ஏற்கெனவே சென்ற முறை நான் பேசும்போது கூட, இதுபற்றி வலியுறுத்தியிருக்கிறேன். பொதுவாக கல்லூரிகள் எல்லாம் நம்முடைய கல்லூரிக் கல்வி இயக்குநரின் மேற்பார்வையில் இருந்தாலும் கூட, தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு மற்ற ஊதிய விகிதம் போன்ற விஷயங்களை எல்லாம் பார்க்கும்போது, நம்முடைய இயக்குநரிடம் அதற்குரிய மேற்பார்வையிடுகின்ற அதிகாரம் வரவில்லை. கடந்த முறை ஒரு கல்லூரி சரியாகச் செயல்படாத நிலையில், நான் அதுபற்றி இயக்குநர் அவர்களிடம் முறையிட்டபோது, "அவர்கள் நான் ஒன்றுமே செய்ய முடியாது, வேண்டுமென்றால் ஆசிரியருக்கு அனுப்புகின்ற ஊதியத்தைப் பிடித்து வைக்கலாம்" என்று சொன்னார். அந்த வகையில் தனியார் கல்லூரிகளையும் மேற்பார்வை செய்வதற்கான அதிகாரம் நம்முடைய இயக்குநருக்கு வர வேண்டும். அவர்களுடைய அன்றாடச் செயல்கள், ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு போன்றவற்றை எல்லாம் இயக்குநர் மேற்பார்வையிட வேண்டும். அதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

இங்கே பல உறுப்பினர்களும் சென்னை தியாகராய கல்லூரி பற்றிச் சொன்னார்கள். ஹைக்கோர்ட்டில் அக்கல்லூரிபற்றி ஒரு முடிவை அறிவித்திருக்கிறார்கள். அதற்கேற்ப அரசு அக்கல்லூரியை விரைவில் எடுக்க வேண்டும். அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு விரைவில் பதவி உயர்வு அளிக்க வேண்டும்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அங்கு 8 கல்லூரிகள் இருக்கின்றன. கடலூரிலும் ஒரு அரசுக் கல்லூரி இருக்கிறது. அந்த பெரியார் கலைக் கல்லூரி 20 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டது. இன்னும் அக்கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் கோர்ஸ் இல்லை. அதுபற்றி கடந்த முறை பேசும்போதும் நான் கேட்டேன். அமைச்சர் அவர்கள் கடலூருக்கு வந்தபோதும் கேட்டேன். கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களிடம் கேட்டபோது, சென்ற முறை வேறு இரண்டு இடங்களுக்கு அதற்கான அனுமதியைக் கொடுத்துவிட்டதாகச் சொன்னதால், இந்த முறை





கேட்டேன். இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள் என்றால் அதற்குத் தேவையான நிதி வசதியில்லையாதலால் இந்த வருடமும் அதற்கான வாய்ப்பு இல்லை என்று சொல்கிறார்கள். 5 அரசுக் கல்லூரிகள் இருக்கின்ற தென்னாற்காடு மாவட்டத்தில் மையமாக இருக்கின்ற கடலூர் பெரியார் கலைக் கல்லூரியில் போஸ்ட் கிராஜுவேட் கோர்சுக்கு அவசியம் வழிவகை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

5 ஏக்கர் நிலம் அந்தக் கல்லூரிக்குச் சொந்தமாக இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்துகொண்டு வருகிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் அந்த நிலத்தில் குடிசைகள் வந்து விடும். இப்போதே நெல் பயிரிடுவதாகக் கூடச் சொல்கிறார்கள், கல்லூரிக்குச் சொந்தமான நிலத்தில் ஆக்கிரமிப்பதை உடனடியாகத் தடை செய்ய வேண்டும். மேலும் அங்கே ஒரு விடுதியையும் கட்ட வேண்டும்.

அதுபோல் தென்னாற்காடு மாவட்டத்தில் விக்கிரவாண்டியில் சத்துணவுத் திட்டத்திற்கு முன்பே சென்ட்ரல் கிச்சன் இருந்து வந்தது. அங்கே தொலைவிலிருந்து மாணவர்கள் வந்து உணவு சாப்பிட்டு படித்து வந்தார்கள். இப்பொழுது அந்த சென்ட்ரல் கிச்சன் பாழடைந்து கிடக்கிறது. 70 ஊழியர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் கொடுக்கிறார்களே தவிர, வேறு வேலை ஒன்றும் நடைபெறவில்லை. 200 மேட்டடார் வேன்கள் பழுதடைந்து கிடக்கின்றன. அது இன்றைக்கு கல்வித் துறைக்கு ஒரு பெரிய நஷ்டமாக இருக்கிறது. அவற்றை சீர் செய்து மற்ற துறைகளுக்குப் பயன்படுத்துவதற்குக் கொடுத்தால், மிகவும் பலனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற ஊழியர்களை

(பிற்பகல் 12-25)

66 பேர்களையாவது அரசு தானியங்கி பணிமனையிலோ மற்ற கார்ப்பரேஷன்களிலோ சேர்த்தால், அவர்கள் வேலைவாய்ப்புக்கு ஆளாவார்கள். ஆகவே அதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்திற்கு 60 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த 60 லட்சம் ரூபாயைப் பார்க்கும்போது, அது அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு ஊதியத்திற்கும், மற்ற செலவுகளுக்கும் தான் சரியாக இருக்குமே தவிர, விளையாட்டு மேம்பாட்டுக்குச் செலவு

செய்ய முடியாது. தனியாக விளையாட்டுக்குக் கார்ப்பரேஷன் ஆரம்பித்தாலும், எந்தவொரு நோக்கத்திற்காக விளையாட்டுக் கழகம் ஆரம்பித்தார்களோ அதற்கேற்றபடி அதை உண்மையில் வெற்றிகரமாக நடத்த இதன் மூலம் வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அதற்கு திரு. சிவந்தி ஆதித்தன் அவர்களைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். இது பாராட்டுக்குரிய செயல்தான். இருந்தாலும் நிதிப் பற்றாக்குறையால் இதன் வளர்ச்சி குறையும் வாய்ப்பு இருக்கிறது என்பதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இப்போது நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு ஐந்தாயிரம் பத்தாயிரம் என்று பரிசு கொடுக்கிறார்கள். இதற்கு ஏறத்தாழ 2.3 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கும். ஆகவே இதற்காக நிதி வாய்ப்புக்களைப் பெருக்க வியாபார நிறுவனங்களிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் நிதி பெறவேண்டியிருக்கிறது. ஆகவே விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்திற்கு அதிக நிதி ஒதுக்கினால், அதை மேம்படுத்த முடியும், அது நல்ல முறையில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் நீச்சல் குளங்கள் கட்டவும், உள் அரங்கம் கட்டுவதற்கும் இதிலே நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருக்கிறது. நிச்சயமாக இந்தத் தொகையில் நீச்சல் குளங்கள் மற்றும் உள் அரங்குகள் அமைக்க முடியாது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் கவனத்தைச் செலுத்தி, நிதி அதிகமாக ஒதுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிச் சிறுவர்கள், சிறுமிகளின் விளையாட்டுப் பழக்கத்தை ஊக்குவிக்கப் பயன்படும் உடற் கல்வி ஆசிரியர்களுக்கும், உடற் கல்வி இயக்குநர்களுக்கும் வருடத்திற்கு ஒருமுறை 'ரிஃப்ரஷர் கோர்ஸ்' கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல், நமது விளையாட்டுத் துறை மூலமாக தமிழகத்தில் ஊரக விளையாட்டு மையம் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் இப்போது ஊரக மையங்கள் செயலற்று இருக்கின்றன. அவைகள் நல்லமுறையில் செயல்பட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக சாரண சாரணியருக்காக தமிழகத்தில் நல்ல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. அந்த நிதிக்காக, அரசுப் பள்ளிகளில் விளையாட்டுக்கு வசூலிக்கும் பணம் சென்றுவிடுகிறது. அதன் காரணமாக விளையாட்டு மேம்பாட்டுத் திட்டங்கள் சரியாகச் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்



கொள்கிறேன். விளையாட்டுக்காக மாணவர்களிடம் ஒரு ரூபாய் வாங்குவதைப் போல, சாரணியர்களுக்காக தனியாக ஒரு ரூபாய் பெற்றுக்கொள்ளலாம் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். விளையாட்டுக்கு தனியாக "கேம்ஸ் பண்ட் பீஸ்" என்று வாங்குவதை அதற்காகவே செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இப்போது என்.சி.சி. ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் ஊதியம் உயர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதன்படி கர்நாடகாவும், ஆந்திராவும் அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்திவிட்டது. தமிழகத்தில் அந்த ஊதியம் உயர்த்தப்படவில்லை. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே என்.எஸ்.எஸ். ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் ஊதியத் தொகையை அதிகப்படுத்தினால், அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும். தமிழகத்தில் இப்போது ரீஜினல் இன்ஸ்பெக்டர் ஆப் ஃபிசிகல் எஜுகேஷன்' என்று இருக்கிறார்கள். ஒவ்வொரு ரெவின்யூ மாவட்டத்திற்கும் ஒருவர் என்று இருக்கிறார்கள். இப்போது அப்படி 300 பள்ளிகள் இருக்கின்றன. 300 பள்ளிகளுக்கும் ஒருவரே சென்று பார்வையிட முடியாது என்பதால், அந்தப் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு 'ஆர்.ஐ.பி.ஈ.' போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று 'விமன் ஆர்.ஐ.பி.ஈ' தற்சமயம் மூன்று மாவட்டங்களுக்கு ஒருவர் என்கிற முறையில்தான் இருக்கிறார்கள். அவர்களையும் மாவட்டத்திற்கு ஒருவர் என்கிற முறையில் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் பயன் கிடைக்கும். இப்போது ஒரு ஆர்.ஐ.பி.ஈ. ஒரு பள்ளியைக்கூட ஒழுங்காக, சரியாக இன்ஸ்பெக்ஷன் செய்ய வழி இல்லை. அவசரம் அவசரமாகக் குறிப்பேடுகளிலே கையெழுத்திட்டுவிட்டு, இன்ஸ்பெக்ஷன் முடித்து விட்டதாகச் சொல்லிவிட்டு, சென்றுவிடுகிறார்கள். எனவே ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒருவர் போட்டால்தான், பயன் கிட்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நமது மாநிலத்தில் இளைஞர் வாரியம் ஆரம்பிக்க இருக்கிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்காக மத்திய அரசிடம்கூட உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது நல்லதொரு நோக்கத்திற்காக அமைக்கப்படக்கூடிய வாரியமாக இருக்கிறது. இளைஞர்களிடம் ஒழுக்கத்தையும், நல்ல

நடத்தையையும் சமுதாய உணர்வுகளையும் ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்க விருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஓரளவுக்கு வயது வந்தவர்களுக்கு ஆரம்பிப்பதைவிட, சிறு வயதினருக்கும் இவ்வாறு வாரியம் ஆரம்பித்தால், நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். முன்பெல்லாம் நம் பள்ளிகளிலே மாணவ மாணவியருக்கு சாலை விதிகளைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பத்து, பதினைந்து ஆண்டுகளாக அவ்வாறெல்லாம் சொல்லிக் கொடுப்பதில்லை. காலையில் பள்ளிகளில் 'அசெம்பிளி' இருக்கும். அந்தச் சமயங்களில் ஒரு நிமிடம் அல்லது இரு நிமிடம் சாலை விதிகளைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இப்படித் தான் போக வேண்டும், இப்படித்தான் வர வேண்டும், இப்படியெல்லாம் ரோட்டைக் கடக்கக்கூடாது என்றெல்லாம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று 'மாரல் சயின்ஸ்' வகுப்புகளிலும் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைக்குத் தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் சினிமாக் காட்சிகள் — காலைக்காட்சி, பகல் காட்சி — என்று நடைபெறு கின்றன. முன்பெல்லாம் பகல் காட்சி மட்டுமிருந்தது. இப்போது காலை யிலும் காட்சிகள் இருக்கின்றன. இதனால் கல்லூரி, பள்ளி மாணவர்கள் கல்லூரிகள், பள்ளிகளுக்குச் செல்லாமல் காலை, பிற்பகல் காட்சிக்கெல்லாம் செல்ல ஆரம்பித்துவிட்டார்கள். பகல் காட்சியையும், காலைக் காட்சியையும் ரத்து செய்யுங்கள் என்று நான் கூற விரும்பவில்லை. அவ்வாறு ரத்து செய்தால் கூட, நன்றாக இருக்கும். . .

திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ஜெயச்சந்திரன் அவர்களுடைய கவனத் திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சினிமா என்று அல்ல, வீடியோவை வீட்டிலே வைத்துக்கொண்டு மாணவர்கள் பார்க்கக்கூடிய நிலைமை இப்போது வந்துவிட்டது. எனவே அதற்குப் போவதற்குப் பதிலாக இதற்குப் போகலாம்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் நான் என்ன கூற விரும்புகிறேன் என்பதைத் தெரிந்துகொள்ளாமலே பேசுகிறார்கள். ரத்து செய்ய வேண்டாமென்று முன்பே கூறிவிட்டேன். அதற்குள்ளாகக் குறுக்கிட்டு விட்டார்கள். வீடியோ பார்த்தால் வீட்டில்தான் பார்க்க வேண்டும். பெரியவர் கள் இருப்பார்கள்.





திரு. ஆர். டி. சீத்தாபதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் தெரிந்துகொள்ளாமலே பேசுகிறேன் என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தெரிந்துதான் பேசினேன். தேவைப்பட்டால் எடுக்க வேண்டும் என்ற கருத்தை அவர் வலியுறுத்திய காரணத்தினால்தான், இந்தக் கருத்தைச் சொன்னேன்.

திரு. எல். ஜெயச்சந்திரன் : இவ்வாறு காலைக் காட்சிகளும், பகல் காட்சி களும் நடைபெறுவதால், அவற்றிற்கு கல்லூரி, பள்ளி மாணவர்கள் செல்லுகிற நிலைமைகள் இருக்கின்றன. இச்சமயத்தில் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு முறை இருபதாண்டுகளுக்கு முன் டில்லி சென்றிருந்தபோது, டில்லியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒரு சினிமாவுக்கு, காலைக் காட்சிக்குச் சென்றேன். அங்கே மாணவர்களை பகல் காட்சிக்கு அனுப்ப மறுத்துவிட்டார்கள். பள்ளி, கல்லூரி நடக்கும் காலங் களில் மாணவர்களை அனுமதிக்க இயலாதென்று கூறிவிட்டார்கள். அதைப் போல நாமும் இங்கே ஒரு சட்டம் கொண்டு வந்தால்கூட, நல்லதாக இருக்கு மென்று தெரிவித்துக்கொண்டு, இந்த அவைக்கு பல கருத்துக்களைக் கூறு வதற்கு வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் கல்விக் கொள்கைக் குறிப்பின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லவிருக்கிறேன்.

(பிற்பகல் 12-35)

புதிய கல்விக் கொள்கையில் ஆரம்பித்து, பழைய கல்விக் கொள்கையையும் சேர்த்து எவ்வாறு தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறதென்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் புதிய கல்விக் கொள்கைபற்றி, "கல்விக்கு ஒரு சவால்" என்ற புத்தகத்தில் பல்வேறு குறைகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு மாற்றாக வீடியோ, ரேடியோ மூலமாகவும், கம்ப்யூட்டர் மூலமாகவும் கல்வியைக் கொண்டு வரலாம் என்பதை தமிழக அரசு முழுமையாக ஏற்றுக் கொண்டிருப் பதாக கல்வி அமைச்சர் அவர்கள் கூட பல்வேறு கருத்தரங்குகளில் கூறியிருக் கிறார்கள். 53 சதவீதப் பள்ளிக்கூடங்களுக்கு சரியான கட்டிட வசதி இல்லை. 71 சதவீதம் பள்ளிகளில் நல்ல நீர் வசதி இல்லை. 35 சதவீதப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இருக்கின்றன. ஆனால் மத்திய அரசால் கொடுக்கப் பட்ட நிதி ஒதுக்கீடு முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7 சதவீதம்; 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5 சதவீதம் நிதி ஒதுக்கீடு; 5-வது ஐந்தாண்டுத்

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1986 ஏப்ரல் 24

திட்டத்தில் 2.8 சதவிகிதம்; 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2.2 சதவிகிதம்; புதிய கல்விக் கொள்கையைப் பரப்புவதற்காக இந்த 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் 1.5 சதவிகிதம். ஆனால் நமது கல்வி அமைச்சர் அவர்கள் இந்தக் கல்விக் கொள்கையைப் பரப்புவதற்கு அதிகமான பணம் செலவாகுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு அதற்கு 1.5 சதவிகிதம். இந்த நிலைமைகளைப்பற்றி பல்வேறு கல்வி அறிக்கைகள் சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. டாக்டர் இராதாகிருஷ்ணன் அறிக்கை, டாக்டர் எல். முதலியார் அறிக்கை ஆகியவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்வி அறிக்கையில், 1947-ல் 300 லட்சம் பேர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று கொடுக்கப்பட்டிருந்தது; 1961-ல் 330 லட்சம் பேர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்றும், 1972-ல் 370 லட்சம் பேர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்றும், 1981-ல் 437 லட்சம் பேர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்றும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1990 அல்லது 2000-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 50 கோடி கல்வியறிவு இல்லாதவர்கள்தான் இருப்பார்கள் என்று அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த நிலைமையில் இந்தியாவிலே 500 மாதிரிப் பள்ளிகளை மட்டும் கொண்டுவருவதாக "கல்வி ஒரு சவால்" என்ற அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பொருளாதாரத்திற்குத் தகுந்தாற்போல் கல்வி அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. கிராமப்புறங்களில் படிப்பவர்கள், அரசுப் பள்ளிகளில் படிப்பவர்கள், தனியார் பள்ளிகளில் படிப்பவர்கள், கான்வென்ட் போன்ற பள்ளிகளில் படிப்பவர்கள், காணாது என்பதற்காக மத்திய அரசால் 500 மாதிரிப் பள்ளிகள் அதிக பணச் செலவில் கொண்டு வரப்படும்போது, அதை தமிழக அரசு எப்படி ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை. மொழியைப் பொறுத்த மட்டில், வேறுபாடு இருப்பதாகக் கூறினாலும், பல்வேறுவிதமான கல்விக் கொள்கையைக் கொண்டுவர இந்த அரசு எப்படி ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓலைக் கூரை போடப்பட்ட பள்ளிகள், அங்கு இரும்பு ஓலைக் கூரை போடுவதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லாத காரணத்தால், அந்த ஓலைக் கூரை இல்லாமலே இருக்கிற பள்ளிக்கூடங்கள் சித்திரங்கோடு, பத்தம்பாடுக்கோலம், வட்காரி புதுக்கடை, தேவிகுளம், பளிக்கை—இது போன்று பல இடங்களில் ஓலைக் கூரை போட முடியாமல் இருக்கும்போது, எப்படி அரசு கம்ப்யூட்டரைக் கொண்டு வரப்போகிறது, அதற்கு எப்படி அரசு ஆதரவு தருகிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாத நிலை இருக்கிறது. ஒரு நாள் முழுவதுமாக புதிய கல்விக் கொள்கையைப்பற்றி விவாதிக்கப்பட்டு அந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமே ஒழிய, அதுபற்றிய விவாதம் செய்ய எனக்குக்கூட



1986 ஏப்ரல் 24] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை. சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தும், ஒரு பேராசிரியராக இருந்தும்கூட, "கல்வி ஒரு சவால்" என்பதில் ஒரு கருத்தரங்கில் கூட நான் பேசுவதற்கு அழைக்கப்படவில்லை; ஓரே ஒரு கருத்தரங்கிற்கு வாழ்த்துரை கூறுவதற்காகக் கூப்பிட்டார்கள். அடுத்த தடவை அழைக்கவில்லை. இதைப்பற்றி யார் முடிவு செய்கிறார்கள், என்ன முடிவு சொல்லப்படுகிறது என்பதிலே ஜனநாயகப்படுத்தப்படாமல் ஏதோ ஓரிடத்திலே அதிகாரிகள் எல்லாம் கூடி எப்படி கல்வி இருக்க வேண்டுமென்று முடிவு செய்தால், இப்படித்தான் இருக்கும் கல்வி. இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் 1 கோடி ரூபாயில் பள்ளிக் கட்டிடம் கட்ட முடியாது. இப்போது 3,400 பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் எனக்குத் தெரிந்த வரையில் இருக்கின்றன. தண்டராம்பட்டு என்ற ஊரில் இப்போது சத்துணவுக் கூடம் இடிந்து விழுந்து விட்டது. அங்கு பணியாற்றிய திரு. மணிவண்ணன் என்ற தலைமை ஆசிரியர் அடிபட்டிருக்கிறார். ஜெயந்தி, ஸ்மிதா என்ற ஒன்றாவது, இரண்டாவது வகுப்பு படிக்கும் மாணவிகளின் — அவர்களுக்கு 5 அல்லது 6 வயதிருக்கும் — விரல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியை இப்போது நகராட்சி சீரமைக்கிறதா அல்லது கல்வித் துறை சீரமைக்கிறதா என்ற தகராறு இருக்கிறது. அந்த இரண்டு பேரும் அதைப் பராமரிக்காமல் இருக்கிறார்கள். அப்படி இரண்டு பேரும் பராமரிக்காமல் இருக்கும் போது, ஆசிரியர் தரத்தைப்பற்றிப் பேசப்படுகிறது. ஆசிரியர்கள் தரமாகச் சொல்லிக் கொடுக்கிறார்களா என்று பேசப்படுகிறது. அவர்களை மாற்றம் செய்தால் தரம் இருக்குமா என்றுகூட பேசப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே இருக்கிற நிலைமை ஒரு எழுத்தர் கூட மேல்நிலைப் பள்ளியில் இல்லை. அந்த ஆசிரியர் எழுத்தர் வேலை செய்வாரா அல்லது ஆசிரியர் வேலை செய்வாரா? கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசான் மெமோரியல் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. இதுபோல் மூன்று பள்ளிகள் இருக்கின்றன. அங்கே கிளார்க்கு இல்லை. கிளார்க்கு வேலையை ஆசிரியர் தான் பார்க்கிறார். அந்த காலையிலிருந்து கிளார்க்கு வேலைதான் பார்க்க முடியும் அல்லது பாடம் சொல்லிக் கொடுக்கத் தான் முடியும். ஏதாவது ஒன்றைத்தான் செய்ய முடியும். நம்முடைய நிலைமை இவ்வளவு மோசமாக இருக்கும்போது, புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வருவதற்கு முன்னாலே அது இன்னும் கல்வித் துறையைப் பாதிக்குமா என்று சிந்தித்து, அதைப்பற்றி வாதித்து, அதை நாம் ஏற்றுக்கொள்கிறோமா, இல்லையா என்று முடிவு எடுப்பதுதான் நியாயமாக இருக்க முடியும். அந்தக் கொள்கையை ஏற்பது சரியானதாக இல்லை என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற் கல்வியைப் பற்றி கொள்கைக் குறிப்பில் சாதாரணமாக விமர்சிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சங்ககிரி இன்ஸ்டிடியூட் ஆப் பாலிடெக்னிக் என்ற ஒன்று திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கிறது. அதோடு சேர்ந்த ஒரு

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1986 ஏப்ரல் 24

பிளஸ் 2, ஹையர் செகண்டரி டெக்னிகல் ஸ்கூல் இருக்கிறது. அதுபோல 13 ஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளை மூட வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. 1984-85 மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளில் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை. அங்கு பில்டிங் இருக்கிறது; மெஷினரி இருக்கிறது. பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ளவை. ஆனால் அதை மூடப் போகிறார்கள். ஒரு பக்கம் தொழிற் கல்வியை வளர்க்க வேண்டுமென்றும் மற்றொரு பக்கம் மூடுவதற்குள்ள ஏற்பாடு இருப்பது என்பதும்

(பிற்பகல் 12-40)

எப்படி நியாயமாக இருக்கும்? இதன் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கே உள்ள மெஷின்கள் எல்லாம் யாருக்கும் பயன்படாமல் போகின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே அந்த பாலிடெக்னிக்கை மூடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு, அவ்வாறு மூடுவதை நிறுத்தும் வகையில் அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் கல்விக்குச் சேருகிற மாணவர்களின் எண்ணிக்கை தற்போது மிகவும் குறைவாக இருக்கிறது. காரணம் மாணவர்கள் சேருவதற்குத் தயங்குகிறார்கள். தமிழ் நாட்டில் எத்தனையோ ஹையர் செகண்டரி பள்ளிகள் இருந்தாலும், அங்கெல்லாம் தொழிற் கல்வியில் சேருவதற்கு மாணவர்கள் தயாராக இல்லை. வேறு எந்தப் பாடமும் எடுத்துக் கொள்ள முடியாதவர்கள், குறைந்த மார்க் வாங்கிய மாணவர்கள் போன்றவர்கள்தான் இப்போது தொழிற் கல்வியில் சேருகிறார்கள். இதற்கு முக்கியமான காரணம், இன்றையதினம் தொழில் கல்வியில் பயின்று வருகிற மாணவர்களை அரசாங்கம் அங்கீகரிப்பதில்லை. உதாரணத்திற்கு டெய்லரிங் கோர்ஸ் படிக்கிற மாணவர்களைப் பொறுத்தவரையில், அரசாங்கம் அந்தக் கோர்ஸை அங்கீகரிப்பதில்லை. அந்தக் கோர்ஸின் அடிப்படையில் அவர்களுக்கு வேலை அளிப்பதில்லை. அதைப் போலவே டைப்ரைட்டிங் படிக்கிற மாணவர்களுக்கு இன்ஸ்டிடியூட்டில் படித்த அளவுக்கு அரசே 'ரெகக்னிஷன்' கொடுப்பதில்லை. அதாவது இப்படிப்பட்ட தொழிற் கல்வியைக் கற்ற மாணவர்களை அரசாங்கமே அங்கீகரிக்காத நிலை இருப்பதால்தான், மாணவர்கள் தொழிற் கல்வியைக் கற்க முன்வர மறுக்கிறார்கள். அதைப் போலவே பிளஸ் 2 வகுப்பில் செகரடேரியல் போன்ற தொழிற் கல்வியைப் பயின்ற மாணவர்களுக்கு எஞ்சினியரிங் காலேஜுக்கான தேர்வு எழுதும்போது, அந்த சப்ஜெக்ட் குறித்த பரீட்சை பேப்பர் என்று எதுவும் கிடையாது. பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, கணிதம்,



1986 ஏப்ரல் 24] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

ஆகிய மூன்றுதான் இருக்கும். அந்த நிலையில் இந்த மாணவர்கள் அவர்களோடு எப்படி 'கம்பீட்' செய்ய முடியும்? அது மட்டுமல்ல, இப்படி தொழிற் கல்வி பயின்ற மாணவர்கள் பி.காம். போன்ற வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. தமிழ் பி.ஏ. போன்று எந்த மாணவரும் சேராத பாட வகுப்பில்தான் இத்தகைய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

அடுத்து, தொழிற் கல்வியைப் பொறுத்தவரையில், அதனைப் போதிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் 'பார்ட் டைம்' ஆசிரியர்களாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் முழு நேரம் வேலை செய்தாலும்கூட, பகுதிநேர ஆசிரியர்களாகத்தான் அரசாங்கம் வைத்திருக்கிறது. முழு நேர ஆசிரியர்களுக்கான ஊதியம் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. பகுதி நேர ஆசிரியர்களுக்கு ரூ. 600 தான் ஊதியமாகக் கொடுக்கப்படுகிறது. கடந்த 4 ஆண்டுகளாகவே இந்த நிலையில்தான் இருக்கிறார்கள். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி ஆசிரியர் தினத்தன்று ஒரு உறுதிமொழி அளித்தார்கள். அதாவது சிறப்பு ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் உண்டு என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த அறிவிப்பு செய்யப்பட்டு ஓராண்டு ஆகப்போகிறது. அதாவது அடுத்த செப்டம்பர் மாதமும் வரப்போகிறது. ஆனால் இதுவரை அதற்குரிய ஆணை அரசாங்கத்தில் பிறப்பிக்கப்படவில்லை. ஆசிரியர்கள் தினந்தோறும் இதைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகள் கால தாமதமில்லாமல் உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களும் நன்றியுடையவர்களாக இருந்து கல்வியில் சரிவர கவனம் செலுத்த முடியும். எனவே அந்த வாக்குறுதியின் அடிப்படையில் விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-45)

குமரி மாவட்டத்தில் பல்வேறு குழப்பங்கள் இருக்கின்றன. ஆசிரியர்களுக்கு 'சீனியாரிட்டி லிஸ்ட்' கிடையாது. யார் சீனியர் என்பது யாருக்கும் தெரியாது. 1981 ஆம் ஆண்டிலிருந்து இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதைப் பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காததால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்தது, எவால்யுவேஷன். ஏற்கெனவே ரெகக்னைஸ்ட் யூனிவர்சிட்டியில் எம்.ஏ. படித்திருந்தாலும், அதையும் எவால்யுவேஷன் செய்கிறார்கள். இதிலே காலதாமதம் ஆகிறது. ஒருவர் எம்.ஏ. (ஹிஸ்டரி) படித்திருக்கிறார் என்றால், அவருடைய சான்றிதழை 'எவால்யுவேஷன்' செய்த பிறகு, அதே யூனிவர்சிட்டியில் இன்னொருவர் வேறு ஒரு படிப்பு படித்திருந்தால், அதையும்

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1986 ஏப்ரல் 24

எவால்யுவேஷனுக்கு அனுப்புகிறார்கள். ரெகக்னைஸ்ட் யூனிவர்சிட்டி என்று ஒத்துக்கொள்ளும்போது, எதற்காக அவர்கள் வழங்கும் சான்றிதழை எவால்யுவேஷனுக்கு அனுப்ப வேண்டும்? எவால்யுவேஷனுக்கு அனுப்புவது, அது வராமல் இருப்பது, பிறகு பணம் கொடுத்து சான்றிதழை வாங்குவது— ஏனென்றால் நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் எவால்யுவேஷன் ரிப்போர்ட் வருவதில்லை — போன்ற நிலைமைகளை மாற்ற வேண்டும். நம்முடைய யூனிவர்சிட்டியை நாமே மதிக்காமல் இருப்பது சரியல்ல. ஆல் இந்தியா யூனிவர்சிட்டியை தமிழ் நாடு மதிக்கவில்லையா? இந்த 'எவால்யுவேஷன்' கல்லூரி ஆசிரியர்களுக்குக் கிடையாது. அவர்களுக்கு 'எவால்யுவேஷன்' தேவையில்லை. அவர்களுடைய சான்றிதழ் அப்படியே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் ஹைஸ்கூல் ஆசிரியர்களுக்கு மாத்திரம் ஒத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே எவால்யுவேஷனை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய வீட்டு வசதிக்கென்று ஒரு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. எங்கேயோ இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். வீட்டு வசதி வாரியம் யாருக்கு? அதற்குத் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு காரும் இருக்கிறது, வீட்டு வசதி இருக்கிறது. ஆசிரியர்களுக்கு இல்லை, இருக்காது. காரணம் அதற்கு நிதி ஒதுக்கவில்லை. நிதி ஒதுக்காமல் இரண்டாண்டுக் காலம் அந்த வாரியத் தலைவர், 'பாத்ரூம்' ப்ளஷ் அவுட் வைத்து வீடு அமைத்துக் கொண்டிருக்கிறோம் என்று பேசிக் கொண்டிருக்கிறார். அட்டைப் பெட்டியில் செய்யப் போகிறாரோ, என்னவோ தெரியவில்லை. ஆகவே அதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் எல்லாக் கல்வித் தகுதியுள்ளவர்களும் தலைமையாசிரியர்களாக ஆகலாம். ஆனால் எம்.பி.எட். படித்தால், தலைமையாசிரியராக ஆக முடியாது. ஆகவே மேல்நிலைப் பள்ளிகளில் பிளஸ்-டு ஆசிரியர்களும் தலைமையாசிரியர்களாக ஆகலாம் என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வெகு நாட்களாக நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தனி நபர் குழுவின் அறிக்கை. இந்த அறிக்கை வருமா, வராதா என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இந்த அறிக்கை வருமா வராதா, வரும் என்றால் எப்போது வரும் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 ஏப்ரல் 24] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

ஆராய்ச்சிக்காக அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும். ஆராய்ச்சி வேண்டும் என்பது அமைச்சர் அவர்களாலே வலியுறுத்தப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட பல்கலைக் கழகங்களிலே ஆராய்ச்சிக் கூடம் அமைக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆராய்ச்சி செய்பவர்களுக்கு தமிழ் நாட்டிலே மட்டும் தான் நஷ்டம் ஏற்படுகிறது. ஆராய்ச்சியை மூன்று வருடத்திற்குள் முடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். இந்தியாவில் வேறு எங்கும் இப்படி கிடையாது. அவர்கள் சொந்தச் செலவில் படிக்க வேண்டும். இதனால் 25 ஆயிரம் ரூபாய் நஷ்டமாகிறது. அவர்கள் ஆராய்ச்சிப் படிப்பை முடித்த பிறகு, மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்தான் கொடுக்கப் போகிறார்கள். இதிலே வேடிக்கையாக ஒரு அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. 6 மாதங்களுக்கு ஒரு முறை, ஆக மொத்தம் ஆண்டுக்கு இரண்டு பேப்பர்களை 'பப்ளிஷ் செய்ய' வேண்டும். இது கண்டிப்பாக முடியாது. தினசரி பத்திரிக்கை மாதிரி அல்ல இந்த பேப்பர். ஆராய்ச்சி செய்து பேப்பர் 'பப்ளிஷ்' செய்யலாம் என்றால், ஆசிரியர் வேலையைப் பார்க்க முடியாது. ஆசிரியர் வேலையைப் பார்த்தால், பேப்பரைக் கொடுக்க முடியாது. ஆகவே இந்த கண்டிஷனைத் தளர்த்த வேண்டும்.

விளையாட்டுத் துறைக்கு அதிகமாகப் பணம் செலவழித்தாலும், இதற்கு அடிப்படையாக உள்ள மார்க்கர்கள் நிரந்தரமாக்கப்படாமல் டெம்பரரியாகவே இருக்கிறார்கள். அவர்கள் ஆயுள் முழுவதும் பணி செய்தாலும், 150 ரூபாய் கூட சம்பளம் வரவில்லை என்று சொல்கிறார்கள். இதை 250 ரூபாயாக உயர்த்த கோப்பு முதலமைச்சருடைய கையெழுத்துக்காகப் போயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்னும் கோப்பு திரும்ப வராமல் இருக்கிறது, இதையும் விரைவாக அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர், அரசு கொறடா அவர்கள், எங்கெங்கே நிர்வாகத்தில் சிக்கல்கள் இருக்கின்றனவோ அந்தக் கல்லூரிகளையெல்லாம் அரசே எடுக்க வேண்டும் என்று தெளிவாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். தியாகராயா கல்லூரியை எடுப்பதுபற்றி கூட அமைச்சர் அறிவிப்பார் என்று எதிர்பார்க்கிறோம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டுதான் பேசுகிறார் என்று நினைக்கிறேன். தியாகராயா கல்லூரியை எடுக்க முயற்சி எடுத்த போது இடையிலே தடை வாங்கப்பட்டது. இப்போது அந்தத் தடை நீங்கியிருக்கிறது. நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை தொடரும். புதிதாக இதிலே அறிவிக்க ஒன்றுமில்லை.

(பிற்பகல் 12-50)

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிவிட்ட காரணத்தினாலேயே, சுருக்கமாகவே பேசினேன். நீதிமன்றத் தீர்ப்பை அரசு சொல்கிறது. அரசு சார்பாக, அங்கே பல்வேறு ஊழல்கள் இருந்த காரணத்தினால், அரசு நடவடிக்கை எடுத்து அரசே அறிவிக்கலாம். அவர்கள் சென்று தடை வாங்குவதற்கு முன்னால் சீக்கிரமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளத்தூரில் உள்ள ஒரு கல்லூரியில் ஒரு காரஸ்பாண்டெண்ட் இருக்கின்றார். அவர் அங்கேயுள்ள அந்தப் பெண்கள் கல்லூரிக்குள்ளேயே ஒரு ஏ.சி. ரூம்-ல் வசிக்கின்றார். அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்தக் கல்லூரி பெண்கள் கல்லூரி. அந்த கரெஸ்பான்டென்ட் ஒரு ஆண். இதிலே பல்வேறு ஊழல்கள் நடந்திருப்பதாகத் தெரிந்திருக்கின்றது. அரசுக்கும் தெரிவித்தார்கள். அங்கே ஒரு கல்லூரி முதல்வரை தற்காலிகமாக திடீரென்று நீக்கிவிட்டார்கள். ஆனால் அந்த இயக்குநர் அவர்கள் அப்படி நீக்கியது தவறு, குற்றம் செய்யவில்லை என்பது போல அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் பிறகு என்ன நடந்தது என்பது தெரியவில்லை. பிறகு அவர்கள் நீக்கப்பட்டிருக்கின்றார்கள். குற்றம் செய்திருக்கின்றார்கள். அவரை நீக்குவது சரி என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எங்கோ சிக்கல் ஏற்பட்டிருக்கின்றது. அந்தச் சிக்கலை ஆராய்ந்து பார்த்து அவரை நீக்கியது சரியா என்று பார்க்க வேண்டும். இந்த மாதிரி கல்லூரிகளும் இருக்கின்றன. இந்த மாதிரி முதல்வர்களும் இருக்கின்றார்கள்.

**மாற்றுத் தலைவர் (திரு. சிசா கணேசன் என்கின்ற திரு. ஆர். கணேசன்):** மேலவை இன்று 1 மணியளவில் முடிந்து மீண்டும் 4½ மணிக்குக் கூட வேண்டும். அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** இன்னும் கூடுதலாக 5 அல்லது 10 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படி என்று தெரிந்திருந்தால், நான் மாலையிலே பேச சம்மதித்திருப்பேன்.

பாரதியார் பல்கலைக் கழகத்தில் 22 மாத காலமாக 'கன்ட்ரோலர் ஆப் எக்சாமினேஷன்ஸ்' பதவி காலியாகவே உள்ளது. இதற்கு ஆகஸ்ட் 20 ஆம் தேதி, 1985 ஆம் ஆண்டு இன்டர்வியூ வைக்கப்பட்டது. 14 செப்டம்பர் 1985-ல் [illegible] போர்டு, தீர்மானம் வடிவில் புரொபசர் சீனிவாசனை கன்ட்ரோலராகப் போடலாம் என்று வந்திருக்கின்றது. ஆனால் 8 மாத கால



மாக இன்னும் அந்தப் பதவி நிரப்பப்படாமலேயே இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. 22 மாத காலமாகக் காலியாக பதவி இருந்தாலும், எக்சாமினேஷன்ஸ் நடக்கின்றன. பதவி காலியாக 22 மாத காலம் இருக்கின்றபோது, ஒரு நபரைப் போடவேண்டும் என்று முடிவெடுத்த பிறகும், இன்னும் ஏன் அந்த இடம் நிரப்பப்படவில்லை என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அந்த இடம் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அவையிலே ஆளுங்கட்சிக் கொறடாவாலும் எதிர்க்கட்சி தலைவராலும் பேசப்பட்ட ஒரு செய்தி. 1979 ஆம் ஆண்டு மெட்ராஸ் பல்கலைக் கழகத்தில் நடந்த எம்.பி.ஏ. தேர்வில் அட்மிஷனுக்கு வைக்கப்பட்ட செய்தி. இது நீதி மன்றத்திற்குச் சென்று, பல்வேறு ஊழல்கள் நடந்திருப்பதாக அந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது. ஆனால் அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. அந்தப் பேராசிரியர் இருந்துகொண்டிருப்பதோடு, மெட்ராஸ் யூனிவர்சிட்டியிலே கொடுத்த அந்த விளம்பரத்திலே கொடுக்கப்பட்ட ஒரு செய்தியை நான் ஏற்கெனவே தலைவரிடம் காட்டியிருக்கிறேன்.

"Entrance Test will be held. Based on the performance in the Entrance Test, the results will be computerised on merit."

என்று அதில் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கொடுக்கப்பட்ட அந்த ஊழல் நடந்ததாகச் சொல்லப்படும் தேர்வுக்காக நியமிக்கப்பட்ட கமிட்டியில் புரொபசர் ஆர். வி. ஆர். சிவஞானம், ராஜாத்தி அம்மாள் மற்றும் டாக்டர் வி. நாகராஜன் இருந்தார்கள். அந்தக் கமிட்டியின் அறிக்கை வந்திருக்கிறது. அந்த ஆவணங்களைப் பார்வையிட்ட பிறகு, அந்த கமிட்டியின் அறிக்கையில் மாணவர்கள் எடுத்த மார்க்குகளையும், திருத்திய மார்க்குகளையும் கொடுத்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு இரண்டொன்றை வாசிக்கிறேன்.

(பிற்பகல் 12-55)

ஹால் டிக்கெட் நெம்பர் 2319. Marks allotted by four Professors 9, 8, 5, 4. அது திருத்தப்பட்டது, 9, 8, 5, 8 என்று அதாவது இதில் 4 என்பது 8 ஆக மாறியிருக்கிறது. நந்தகுமார் என்பவர் எடுத்த மார்க் — ஹால் டிக்கட் 1178. மார்க் 8, 7, 7, 4. அவருக்குத் திருத்தப்பட்ட மார்க் 8,7,9,5. வி. உமா ஹால் டிக்கட் 1260. எடுத்த மார்க் 6,6,8,6. திருத்தப்பட்ட மார்க் 6,7,8,6. இது போன்று 11 மாணவர்கள் எடுத்த மார்க்குக்கு திருத்தப்பட்ட மார்க் கொடுக்கப்பட்டு, அவர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடாது என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் 11 பேர்

களில் 4 பேர்களைச் சேர்த்திருக்கிறார்கள். அந்தப் பெயர்களை வாசிக்கிறேன். அந்தக் கமிட்டி 'அப்சர்வ்' பண்ணி, கவனித்து, மார்க் அடிப்படையில், "அவர்களுடைய மார்க் திருத்தப்பட்டிருக்கிறது, ஆகவே அவர்களை மீண்டும் சேர்க்கக் கூடாது" என்று அறிக்கை கொடுத்த பிறகும், பி. இராமகிருஷ்ணன், எஸ். ராதிகா, கே. ஞானசம்பந்தம், ஆர். நந்தகுமார் ஆகியோர் திருத்தப்பட்ட மார்க்கோடு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். டாக்டர் சுரேஷ்குமார் அவர்கள் திருத்தியிருக்கிறார். ஜட்ஜுமென்டில் இருக்கிறது. டாக்டர் சுரேஷ்குமாருக்கு என்ன தண்டனை என்றால், அவருக்கு பதவி நிரந்தரப்பட்டிருக்கிறது. இந்த அவையில் இந்த விஷயம் பேசப்பட்ட பிறகு, அந்தப் பேராசிரியர் ராஜினாமா செய்திருக்கிறார். சிண்டிகேட் உறுப்பினர்கள், மெட்ராஸ் பல்கலைக் கழக சிண்டிகேட் உறுப்பினர்கள் கூடி, இதுபோன்ற பேராசிரியர்கள் இருக்க வேண்டும், போகக்கூடாது என்று தெளிவாகச் சொல்லி, அவரை இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். செல்லுவதும் அப்படி இருக்கிறது. எந்த அடிப்படையில் மெட்ராஸ் யூனிவர்சிட்டி நடந்து கொண்டிருக்கிறது என்று புரியவில்லை. இதிலே இன்னும் பிரச்சினை இருக்கிறது. டம்மி நம்பர் 1689, ஹால் டிக்கட் 2025. எடுத்த மார்க் 30. டம்மி நம்பர் 1608. ஹால் டிக்கட் 2030. மார்க் 71. இதை மாற்றியிருக்கிறார்கள். 71-க்கு 30-ம் 30-க்கு 71-ம் என்று மாற்றியிருக்கிறார்கள்.

**திரு. ஜேப்பியார் :** டம்மி நம்பர் கொடுப்பது என்பது கான்பிடென்ஷியல் ஆனது. டம்மி நம்பரை உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். ஒரிஜினல் நம்பரையும் சொல்லுகிறார்கள். அது எப்படி என்று விளக்கினால் நன்றாக இருக்கும்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவரவர்களே, இது நான் சொல்கிற விளக்கமல்ல, 'கமிட்டி அப்சர்வ்ட்' என்று சொல்லியிருக்கிறது. ஒழுங்கீனம் நடந்திருக்கிறது என்று கையெழுத்துப் போட்டு வைஸ் சான்ஸலரிடம் கொடுத்திருக்கிறார்கள். இதை அரசுக் கொறடா அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். கையெழுத்துப் போட்டவர்கள் ஆர். வி. சிவஞானம், எஸ். ராஜாத்தி அம்மாள், பி. நாகராஜன் . . . . பெயர் எழுதி, கையெழுத்திட்டிருக்கிறார்கள். அந்த நகலைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** வாத்தியார்கள் இப்படி தவறு செய்து கொண்டிருக்கிறார்கள். அதை வாத்தியார்கள் படித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வாத்தியார் செய்த தவறை, வாத்தியார் திருத்த யோசனை





சொன்னால், எங்களுக்கு உதவிகரமாக இருக்கும் அல்லது இப்படித் தவறுகளைச் செய்ய சொல்லிக் கொடுத்தால், எங்களுடைய பையன்களுக்கு அது உதவிகரமாக இருக்கும்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் திசை திருப்ப முயல்கிறார்கள். ஆசிரியர், ஆசிரியருக்கு எதிராக என்று சொல்லுகிறார்கள். அப்படியல்ல. அங்கே நடந்த நிகழ்ச்சியில் யார் ஈடுபட்டிருந்தாலும், அமைச்சராக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினராக இருந்தாலும், நானாக இருந்தாலும், தவறு தவறுதான்.

**திரு. எஸ். ஆர். இராதா :** நான் திசை திருப்ப விரும்பவில்லை. தவறு நடைபெறுகிற இடம் ஆசிரியர்கள் இடம். தவறு எங்கே நடக்கக்கூடாதோ, அங்கே தவறு செய்து கொண்டிருக்கிறார்கள். அதை ஆசிரியர்களே கண்டித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்படுபவர்கள் நாங்கள்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** இந்த அவையிலே சொல்லப் பட்டும், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அரசைக் கேட்க விரும்புகிறேன். ஆளுங் கட்சிக் கொறடாவும், எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்களும் சொன்ன பிறகு, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சிண்டிகேட் உறுப்பினர்களாக அரசு அதிகாரிகள் இருக்கிறார்கள். அது என் தவறா, அரசு தவறா?

(பிற்பகல் 1-00)

**மாற்றுத் தலைவர் (திரு. மிசா கணேசன் என்கிற ஆர். கணேசன்) :** அவையின் அனுமதியுடன் அவையின் நேரம் 1-30 மணி வரை நீட்டிக்கப்படுகிறது. மற்றொரு உறுப்பினர் பேச இருப்பதால், உறுப்பினர் 2 நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அந்தப் பேராசிரியருடைய பெயர் என்ன என்று தெரிந்துகொள்ளலாமா?

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** பேராசிரியர் ஆர். சிவஞானம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்த அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்ற பேராசிரியர் சிவஞானமும் நீங்கள் சொல்கின்ற சிவஞானமும் ஒருவரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** இரண்டு சிவஞானமும் ஒரே சிவஞானம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஒரு சிவஞானம் தவறு செய்கிறார். அந்த சிவஞானம் அறிக்கையையும் சமர்ப்பிக்கிறார். அந்த சிவஞானம் ராஜினாமா செய்கிறார். பிறகு சிண்டிகேட் தீர்மானத்திற்கு ஏற்ப திரும்பவும் வந்ததாகவும் சொல்கிறார். உறுப்பினர் சொல்வது ஒன்றுக்கொன்று குழப்பமாக இருக்கிறது. குழப்பத்தைத் தெளிவாக்குகின்ற வகையிலே உறுப்பினர் பேசினால் நன்றாக இருக்கும். சுரேஷ் குமார்தான் தவறு செய்தார் என்று சொல்கிற சிவஞானம், அவர் அந்தப் பதவியிலிருந்து போக வேண்டாமென்று சிண்டிகேட் சொல்லியதில் என்ன தவறு? கமிட்டியில் போடப்பட்ட சுரேஷ் குமார் தான் தவறு செய்ததாகவும் சொல்கிறார்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** நேரமில்லாததால், முழுமையாக வாசிக்க முடியாமல் போய்விட்டது. இப்போது வாசிக்கிறேன். பேராசிரியரும் என்னோடு ஒத்துக்கொண்டு அதைச் செய்தார் என்று சுரேஷ் குமார் ஒத்துக் கொண்டார். ஆனால் பேராசிரியர் அதை ஒத்துக்கொள்ளவில்லை. பிரச்சினை இங்கே தான் வருகிறது. இந்த இந்தப் பெயர்களைச் சேர்க்கக்கூடாது என்று சொன்ன பிறகு எப்படிச் சேர்த்தார்கள்? அப்படிச் சேர்த்ததற்கு ஆதாரம் இருக்கிறதா என்றால், இருக்கிறது. ரெஜிஸ்டர் நம்பர் 57ல் நன்றாகச் செய்திருப்பதாக சர்ட்டிபிகேட் கூட கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு மற்றவர்கள் எப்படி வந்தார்கள்? வைஸ் சான்சலருக்குத் தெரியும். கோர்ட்டில் எடுத்துக்காட்டியதை எல்லாம் அப்படியே அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** உறுப்பினர் சொல்கிற கருத்துக்கள் மீது, குற்றச்சாட்டுக்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு சிவஞானம் தவறு செய்ததாகவும், பிறகு அதே சிவஞானம் விசாரித்து ஒரு அறிக்கை தர, பிறகு அதைப்பற்றி ஏன் அவர் எதிர்க்கிறார் என்று சொல்கிறபோது, அதற்கான அதிகாரத்தை அவர் எப்படிப் பெற்றுக்கொண்டார்? அவரே விசாரித்து அவரே அறிக்கை தந்து, பிறகு அவரே அறிக்கையில் எப்படி குற்றச்சாட்டாகத் தந்தார் என்பதை அறிவதற்காகத்தான் கேட்டேனே தவிர, இதிலே மேற்கொண்டு விளக்கம் தேவையில்லை.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** அடுத்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் எந்த ஒரு முறையும் இல்லாமல் ஆசிரியர் நியமனத்தில் நடந்துகொண்டிருக்கிறார்கள். 1982-ல் ஆசிரியர் பதவிக்காக தேர்வு நடத்தப்பட்டது. விவேகராஜ் என்பவர் எம்.எஸ்ஸி., பி.எச்.டி. பட்டம் பெற்றிருக்கிறார். டாக்டர் பட்டம்



பெற்றிருக்கும் அவர் 8 வருடம் சர்வீஸ் உடையவர். 10 'இன்டர்நேஷனல் பேப்பர்ஸ்' எல்லாம் 'சப்மிட்' பண்ணியிருக்கிறார். அவருக்கு வேலை கொடுக்கவில்லை. ஆனால் மிஸ். ரமணிபாய், எம். எஸ்ஸி., எம்.பில்., பட்டம் பெற்றவருக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். அவருக்கு டாக்டர் பட்டம் இல்லை, பணியாற்றிய அனுபவமும் இல்லை. இந்நிலையில் அவர் எப்படி தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அது போல் யாருக்கு வேண்டியவர்களோ அவர்களை மட்டும் புரபசர்களாக நியமிக்கின்ற நிலைமை சென்னையில் இருக்கிறது. இம்மாதிரி பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை அறிய வேண்டுமென்றால் 'ஜுடிசியல் என்கொயரி' மூலம் அறியலாம்.

(பிற்பகல் 1-05)

1976 முதல் 1985 ஆம் ஆண்டு வரை இப்படி நடந்திருக்கிறது. என்னுடைய கருத்து என்னவென்றால், இந்தத் தவறுகளுக்காக ஒரு பாரபட்சமற்ற நீதி விசாரணை வைக்க வேண்டும். அப்படி நீதி விசாரணை வைத்தால், பல்வேறு பிரச்சினைகள் வெளியே வரும். அங்கே மார்க் திருத்தப்பட்டது உண்மை, எடுக்கப்பட்டது உண்மை, பட்டம் பெற்றது உண்மை. அதன் பிறகு மார்க் ஸ்காண்டலில் எம்.பி., பி.எஸ்., பட்டத்தை வாபஸ் பெற்றதும் உண்மை. ஆகவே இதை முழுமையாக விசாரிக்க, நீதி விசாரணை வைத்தால் யார் யார் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரியும்போது, பெரிய பெரிய அதிகாரிகளும், அரசியல் பிரமுகர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தெரியும். ஆகவே இந்த விஷயத்தில் நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

***திரு. பி. பார்த்தசாரதி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்கு பிற்பகல் 1 மணிக்கு மேல் நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. காலையிலேயே பேச வேண்டுமென்று கேட்டிருந்தேன். இருப்பினும், புதிய உறுப்பினர்களைப் பாராட்டிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக என்னுடைய முதல் பேச்சு கல்வி மானியக் கோரிக்கையில் அமையும் வாய்ப்பு பெற்றிருக்கிறது. அதற்காக மீண்டும் நன்றி தெரிவித்து, இதிலே என்னுடைய சில கருத்துக்களை வைக்கலாம் என்று கருதுகிறேன்.

முதலில் இதிலே சொல்லப்பட்டிருக்கிற புதிய கல்விக் கொள்கை பற்றி பல உறுப்பினர்கள் சொல்லியிருந்தாலும்கூட, நான் இதில் சில கருத்துக்களை ஆழமாகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இருந்தாலும், சுருக்கமாகச் சொல்லி

விடுகிறேன். காரணம், ஒன்றரை மணிக்குள் பேச வேண்டுமென்று தாங்கள் உத்தரவிட்டிருப்பதால். இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டதை யொட்டி, தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளைப்பற்றிச் சொல்லும் போது, இந்தக் கொள்கை பெரும்பாலும் ஏற்கத்தக்கவை என்ற நிலையைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஏற்றுக்கொள்ளத் தகாதது என்பது பற்றிச் சொல்லும்போது, வெறும் மொழிக் கொள்கையோடு நின்றுவிடுவது ஒன்று மட்டும்தானா அல்லது இதைத் தாண்டியும் சில எதிர்க் கருத்துக்கள் இருக்கின்றனவா என்று சொல்லவேண்டியிருக்கிறது.

காரணம், பல்கலைக்கழக ஜனநாயகம்பற்றி, மிகத் தெளிவாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே ஜனநாயகமே இருக்கக்கூடாது என்ற அடிப் படையில் சொல்லப்பட்டிருக்கிறது, இந்த அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பலமுறை இதை எதிர்த்து வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தக் கொள்கைக் குறிப்பில் சொல்கிறபோது, அதைப் பார்க்கிறபோது, சில யோசனைகள் வருகின்றன. அதை தெளிவாக அமைச்சர் அவர்களுடைய உரையில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்ப்யூட்டர் கல்வி போதிக்கிற திகழ்ச்சிபற்றிச் சொல்ல விரும்புகிறேன். இதன் காரணமாக நாட்டில் எதிர்காலக் கல்வியின் விளைவுகள் பற்றிக் குறிப்பிடவில்லை. ஒருபுறம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக் கிறது. குடும்பத்திற்கு ஒரு நபருக்கு வேலை கொடுத்திருக்கிறோமா என்று நீண்ட நேரம், இன்று காலையில் கேள்வி நேரத்தின்போது விவாதம் நடந்தது. ஆனால் இங்கே கம்ப்யூட்டர் கல்வி என்று புகுத்தப்பட்டு, காலங்காலத்திற்கு பாதிக்கப்படுகிற சூழ்நிலை ஏற்படும் என்பதுபற்றி கொள்கைக் குறிப்பில் இருந்திருந்தால், நன்றாக இருக்கும். ஆகவே அது குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னால், நன்றாக இருக்கும். ஏனென்றால், நாங்கள் பார்க்கிறவரை இந்தக் கம்ப்யூட்டர் முறை மதுரைப் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்.சி. (கணக்கு) வகுப்பிற்குக் கட்டாயமாக வந்துவிட்டது. பல கல்லூரிகள் பல்கலைக் கழகங் களைக் கேட்க ஆரம்பித்துவிட்டன. தங்களுக்கு கம்ப்யூட்டர் கல்வி தந்த வசதி வேண்டுமென்றும் அனுமதி வேண்டுமென்றும் கேட்கின்றன. ஆனால் எவ்வளவு பேரிடம் அதற்கான வசதி வாய்ப்புக்கள் இருக்கின்றன, கம்ப்யூட்டர் வைக்க அறை வசதி இருக்கிறதா, ஆசிரியர் வசதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இவைகளால் ஏற்படும் விளைவுகளை ஆழமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்றாவதாக 14 வயதுவரை இலவசக் கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்பது இந்திய அரசியல் சட்டத்தில்





டைரக்டிவ் பிரின்சிபிளில் இருக்கிறது. மாறாக அனைவருக்கும் தொடக்கக் கல்வி, அதிலும் டிஸ்டண்ட் எஜுகேஷன் என்று சொல்கிற கல்விக்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கட்டாயக் கல்வி 14 வயதுவரை கொடுக்கப்போகிறோமா, இந்த முறையில் வாய்ப்புக்களை விரிவுபடுத்தப் போகிறோமா என்பதுபற்றி தமிழக அரசின் நிலைமையைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

இப்போது நடைமுறையில் உள்ள தேர்வு முறை எப்படி இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் பேசும்போதுகூடக் குறிப்பிட்டார்கள். இன்றைக்குத் தேர்வுகள் நடக்கின்றபோது, ஆசிரியர் களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமையையெல்லாம் சொன்னார்கள். காரணம் தேர்வுகள், மாணவர்களை படிப்பதற்கு ஊக்குவிக்கின்ற வகையில் அமைவதற்குப் பதிலாக, படிப்பைவிட்டுத் தள்ளி ஓடுகின்ற நிலையை ஏற்படுத்துகின்றன, இவற்றையெல்லாம் மாற்றியமைக்கக்கூடிய நிலைமையில் நாம் இருக்கிறோம். Evaluation system ஐயே Criticize செய்ய வேண்டும். அதுபற்றியெல்லாம் புதிய கல்விக் கொள்கையில் இல்லை. அதை யெல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்கிறோமா, இவை குறித்து அரசு என்ன செய்யவிருக்கிறது என்பவைகளை அறிய விரும்புகிறேன்.

புதிய கல்விக் கொள்கைபற்றி அரசின் சார்பில் பல கருத்தரங்குகள் நடைபெற்றன. புதிய கல்விக் கொள்கைபற்றி மேலும் கொஞ்சம் தெளிவாகக் கொள்கைக் குறிப்பில் கொடுத்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, மாதிரிப் பள்ளிகளைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இது இன்றைக்குப் பேசப்படுகின்ற பொருள் அல்ல; 1779-ஆம் ஆண்டிலேயே அமெரிக்காவில் தாமஸ் ஜெஃபர்சன் என்பவர் கூறிய விஷயம் தான். அதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு நல்ல கல்வித் திட்டத்தைக் கொடுப்பது— மற்ற பகுதியினருக்கு கொடுக்காமலிருப்பது. மக்களை Learned Worker என்ற ஒரு பகுதியினராகப் பிரிக்கக்கூடிய அபாயகரமான நிலைமைக்கு அன்றே அவர் விளக்கினார். அதைத்தான் இன்றைக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். ஒரு பகுதியினருக்குக் கல்வியை மறுத்து ஒதுக்கிவிட்டு, இன்னொரு பகுதியினருக்கு நல்ல வசதி, வாய்ப்புக் கல்வியும் அளிப்பது தேர்வுக்குக் கொண்டுபோய்விடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நேற்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மிகச் சரியாகச் சொன்னார்கள். இந்தக் கல்வியே ஏற்றத் தாழ்வுக்குக் காரணமாக இருந்து விடக்கூடாது என்று அழுத்தமாக, அழகாகச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஏற்றத்தாழ்வைக் கொண்டுவரக்கூடிய புதிய கல்விக் கொள்கையை அவர்கள் எப்படி ஏற்றார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி. இது நிச்சயமாக இரண்டுபட்ட தன்மையை ஏற்படுத்தும் என்பதைத் தெளிவாகச் சொல்கிறேன்.

இவற்றையெல்லாம் மனதில் கொண்டுதான் அகில இந்திய அளவில் அனைத்து ஆசிரியர் சங்கங்களும் கடந்த ஏப்ரல் 16 அன்று டில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தி, மத்திய அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றன. இப்படி அனைத்து ஆசிரியர் சங்கங்களும் எதிர்க்கின்ற ஒரு கொள்கைதான் புதிய கல்விக் கொள்கையாகும்.

தமிழக அரசும் இதை அமல்படுத்துவதற்கு முன்னால், அனைத்து ஆசிரியர் மாணவர் சங்கங்களையும் கலந்துகொண்டு, இதை இன்னும் எப்படிச் சரியாகச் செய்யலாம், சிறப்பாகச் செய்யலாம், என்று பார்க்க வேண்டும். சில விஷயங்களில் மத்திய அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதிலே முன்னோடியாக இருப்பதைப்போல இதிலும் முன்னோடியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதற்கு மாற்றுத் திட்டம் என்ன என்பதையும் நாம் கூற வேண்டும். வெறும் Criticism ஆக இருக்கக்கூடாது; அது Constructive ஆகவும் இருக்க வேண்டும். அதையொட்டி பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்கள் மாற்றுத் திட்டம் எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்று ஆராய்ந்து, ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். அதுபோன்ற நடவடிக்கைகளில் ஆசிரியர் சங்கங்கள் ஈடுபடும்போது, அதற்கு அரசு உதவி செய்தால், சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாற்றுக் கல்விக் கொள்கை எப்படி இருந்தால் சரியாக இருக்கும் என்பதில் எங்களுக்கும் ஆழ்ந்த கவலை இருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் கவனம் செலுத்தி ஒரு மாற்றுத் திட்டத்தை முன்வைக்கும்போது, அதற்கு அரசு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு 775 பேர் புதிதாக நியமனம் செய்யப்படுவார்கள் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அதே பக்கத்திலேயே 2.97 இலட்சம் மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.





இந்த proportion-ஐ யோசித்துப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏறக்குறைய 500 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்கிற முறையில் வருகிறது. கல்வித் தரத்தைப்பற்றி எல்லோரும் பேசுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள்கூட சொன்னார்கள், "ஆசிரியர்கள் சரியில்லாததால், பொது மக்களாகிய நாங்கள் கஷ்டப் படுகிறோம்" என்றார்கள். உண்மை. ஆனால் இந்த விகிதாசாரத்தையும் பார்க்க வேண்டும். 500 பேருக்கு ஒரு ஆசிரியர் என்றால், எப்படிச் சரியாக இருக்க முடியும்?

திண்டுக்கல்லில் செயின்ட் ஜோசப் பள்ளியில் 120 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்கிற விகிதாசாரத்தில் இருக்கின்றார்கள். "கம்பத்திலே வள்ளுவர் பள்ளியில் 11 ஆசிரியர் மேலும் கூடுதலாகத் தேவை. கொடுக்க மாட்டோமென்று சொல்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். பல இடங்களில் இவ்வாறிருக்கிறது. இதுகுறித்து முதன்மைக் கல்வி அலுவலரைக் கேட்டால், "வருஷத்திற்கு ஐந்து 'போஸ்ட்ஸ்' தான் தருகிறார்கள். இதைப் பிரித்துக் கொடுப்பதிலேயே மேனேஜ்மென்ட்டுக்கும் எங்களுக்கும் அடிதடி நடக்கிறது" என்று சொல்கிறார்கள். எனவே கல்விக்காக குறைந்த நிதியை ஒதுக்கீடு செய்வது கல்வியின் தரத்தைக் குறைக்கும். கல்வியின் தரத்தில் கவனமுள்ள இந்த அரசு கண்டிப்பாக அதற்கான நிதியை ஒதுக்க வேண்டுமென்றும், ஆசிரியர்களை நிறைய போட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-15)

ஆசிரியர்கள் இல்லை என்ற நிலையே இல்லை. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ஆசிரியர்கள் நிறையப் பேர் பதிவு செய்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் நிறைய பேர்கள் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஹையர் கிரேடிலிருந்து செகண்டரி கிரேடாக ஆக்குகின்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனத்தின் பணிகள் இன்றைக்கு மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன. அரசு அப்படி நடவடிக்கை எடுத்ததற்கு பாராட்டுக்கள். அதேசமயத்தில் அதனுடைய வேலைகள் தேக்கம் ஆகி, உதாரணமாக சான்றிதழ்கள் அனுப்பப்பட வேண்டியவைகள் விரைவில் அனுப்பப்படாமல் இருப்பதால், ஆசிரியர்களுக்கு அதற்கான ஊதிய

உயர்வு கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அந்த நிறுவனம், நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட அந்த நிறுவனம், சரியாகச் செயல்படுவதற்கு அரசு ஏற்று கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்கள் பிரச்சினை வருகிறது. தனியார் பள்ளி ஆசிரியர்கள் என்று சொல்லும்போது, நாங்கள் ஏறக்குறைய இந்த நாட்டிலே இரண்டாம் தரக் குடிமக்களாகத்தான் இருக்கிறோம். குறிப்பாக வேலைப் பாதுகாப்பு என்பது மிகவும் இல்லாத நிலை இருக்கிறது. ஆகவே தான் நாங்கள் கடந்த போராட்டத்தில்கூட கோரிக்கை வைக்கும்போது, "ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கிவிடுங்கள்" என்று மிக அழுத்தமாகக் கேட்டோம். அரசு ஊழியர்களுக்கு இருக்கிற உரிமைகள் எங்களுக்குத் தேவை. வேலைப் பாதுகாப்பு மிக மிகத் தேவை என்று கேட்டோம். சிறுபான்மை என்று சொல்லி வேறுசில கொடுமைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நாட்டிலே மிக வேடிக்கையான சில நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தேவகோட்டையில் செட்டியார் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நடத்தும் பள்ளியை அது மைனாரிட்டி நிறுவனம் என்று கோர்ட்டிலே வாதாடிப் பெற்றிருக்கிறார். ஸ்ரீவைகுண்டத்திலே குமாரகுருபர சுவாமிகள் சன்னிதானத்திலிருந்து நடத்தப்படுகிற கல்லூரி மைனாரிட்டி நிறுவனம் என்று கோர்ட்டிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி எல்லா கம்யூனிட்டிகளும், சைவைட்களும் வந்து, 'ரிலிஜன் பெய்ஸ்டு மைனாரிட்டி.' என்று வந்தால் அது எங்கே போய் நிற்கும் என்பதை தமிழக அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே கல்வி அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். இருந்தாலும்கூட மொத்தமாக அவைகளின் மீது அரசு கவனம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மைனாரிட்டிப் பள்ளிகள் ஆசிரியர், அலுவலர்களை எப்போது வேண்டுமானாலும் போடலாம்; எப்போது வேண்டுமானாலும் அவர்களை வெளியே அனுப்பலாம். அதுபோல் மாணவர்களை விருப்பம்போல் சேர்த்துக் கொள்ளலாம். இவைகளுக்காக மைனாரிட்டி நிறுவனங்கள் தனிப் பாதுகாப்பைப் பெறுவதற்கு பல தனியார் நிறுவனங்கள் முயற்சி செய்கிறார்கள். இன்னும்கூட சொல்லப்போனால், கம்பத்தில் ஒரு புனித அல்போன்ஸ் பள்ளி இருக்கிறது. அது மைனாரிட்டி நிறுவனம். அதற்கும், அந்தக் கட்டிடத்தை வைத்திருந்த ஒருவருக்கும் கேஸ் நடந்ததில், அந்தக் கட்டிடம் வைத்திருந்தவருக்கு வெற்றி கிடைத்து, அந்தக் கட்டிடத்தை விட்டு அவர்கள் வெளியேற வேண்டுமென்று கூறிவிட்டார். நிர்வாகம்



பள்ளியை மூடிவிடுகிறேன் என்று சொல்லிவிட்டது. அந்தப் பள்ளிக் கூடத்திலே வேலை பார்த்த ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு பற்றி 'சி.ஈ.ஓ.' அவர்களிடம் கேட்டபோது, அந்த ஆசிரியர்கள் மைனாரிட்டி நிறுவனத்தில் பணிபுரிவதால், அவர்களுக்குப் பாதுகாப்பில்லை என்று எழுத்து மூலமாக அறிவித்து விட்டார்கள். இது ஒரு நிலை. அந்தப் பள்ளியினால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் என்று மற்றொரு பிரச்சினை இருக்கிறது. அந்த ஆசிரியர்களை கம்பத்தில் இருக்கும் முனிசிபாலிட்டி பள்ளிக் கூடத்திலே சேர்க்க வேண்டும்; அந்த மாணவர்களையும் அங்கு சேர்ப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று கல்வி அமைச்சர் அவர்களைக்

(பிற்பகல் 1-20)

கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே தென்னம்பட்டி பள்ளியை அரசு ஏற்றுக்கொண்டுவிட்டது. ஆனால் அதைக் குறித்த 'அப்சார்ப்ஷன்' உத்தரவு வராத காரணத்தால், அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கடந்த ஏழு ஆண்டுகளாகவே எந்தவிதமான ஊதிய உயர்வும் இல்லை, அவர்களுக்கு உரிய விடுமுறையும் இல்லை. ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் இந்தக் குறை இருந்து வருகிறது. இப்படி அரசு அந்தப் பள்ளியை ஏற்றுக் கொண்டு, ஏழு ஆண்டுகளாகியும்கூட, அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் விடுமுறை வசதியும், ஊதிய உயர்வும் இல்லை என்றால், மனம் நொந்து காலம் கழிக்க வேண்டிய அவசியம்தான் ஏற்படுகிறது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இந்த நிலைமைகளையெல்லாம் அரசு கல்வித் தரத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டுமே தவிர, தனி நபர் இஷ்யூவாகப் பார்க்கக் கூடாது. இவைகள்தான் இந்த நாட்டு கல்வித் தரத்தைப் பாதித்திருக்கின்றன, அங்கே பணியாற்றும் ஆசிரியர்கள் மனம் நொந்திருக்கிற காரணத்தால், அந்தப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்குச் சரியான கல்வி கிடைக்காமல் போகிற நிலைமை இருக்கிறது. ஏழு ஆண்டுகளாகத் தங்களுக்கு ஊதிய உயர்வுமில்லை, விடுமுறை வசதியுமில்லை என்கிற நிலை இருக்கும்போது, அந்த ஆசிரியர்கள் எப்படி கல்வியில் கவனம் செலுத்த முடியும் என்பதை அரசு உணர்ந்து இதுகுறித்து விரைவில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மயில்சாமி அவர்கள் ஆலோசனைக் குழு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அத்தகைய குழு திறம்பட நடத்தப்பட்டால் —அவர் சொன்னதையே நான் வலியுறுத்த விரும்புகிறேன்—பல பிரச்சினைகளுக்குச் சுலபத்தில் தீர்வு காண முடியும். என்னுடைய ஆலோசனை என்ன

யென்றால், மூன்று மாத காலத்திற்குள் போட்ட கடிதத்திற்கு பதில் இல்லை என்றால், எப்படி இப்போது கலெக்டா 'மக்கள் குறை தீர்க்கும் நாள்' என்று வைத்து மக்களைச் சந்தித்து குறைகளைத் தீர்க்கிறாரோ அப்படி இயக்குநர்களும் மற்ற அதிகாரிகளும் நேரடியாக ஆசிரியர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்கிற ஒரு ஏற்பாடு வேண்டும். இவ்வாறு தீர்க்கப்படாத ஆசிரியர்களின் குறைகள்தான் ஆசிரியர்களைப் போராடுவதற்குத் தூண்டுகிறது. ஆசிரியர்களுக்கு இன்றையதினம் பல பணிக் குறைகள் இருக்கின்றன. எனவே அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு சரியான வழிமுறையை நாம் கண்டாக வேண்டும். அந்த வகையில்தான் இத்தகைய குழுக்களை அமைக்க வேண்டும். அதில் டைரெக்டர்களையும், சி.ஈ.ஓ.-க்களையும் ஆசிரியர் பிரதிநிதிகளையும் சேர்த்து செயல்பட வைக்க வேண்டும். அத்துடன், ஆசிரியப் பிரதிநிதிகளான எம்.எல்.சி.க்களையும் எந்த அளவுக்கு 'இன்வால்வ்' பண்ணி, எந்த அளவுக்குச் சிறப்பாக ஒரு நடைமுறையை உருவாக்க முடியுமோ அப்படிச் செய்தால், விரைவில் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அப்படிப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொடுத்தால், ஆசிரியர்கள் தங்கள் கவலைகளில் கவனம் செலுத்தாமல் கல்வித் தரத்தில் கவனம் செலுத்துவார்கள். அப்போதுதான் நாட்டுக்கு நல்ல கல்வி, தரமான கல்வி கிடைப்பதற்கு வழி ஏற்படும். அந்த வகையில் அரசு விரைவில் செயல்பட வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராமநாதபுரத்தில் இருக்கிற அரசு கலைக் கல்லூரி குறித்தும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் கல்லூரியில் கடந்த ஆண்டு அட்மிஷன் முழுமையாக நிறுத்தப்பட்டது. கேட்டால் அதை முழுமையான ஒரு பெண்கள் கல்லூரியாக மாற்றப் போகிறோம் என்று சொன்னார்கள். இராமநாதபுரம் என்பது ஒரு மாவட்டத் தலைநகராகும். எனவே அந்தக் கல்லூரியை முழுமையாகவே பெண்கள் கல்லூரியாக மாற்றாமல், இப்போது இருப்பதைப் போல், ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்து படிக்கிற வசதியுள்ள கல்லூரியாக இருந்தால்தான், எல்லோருக்கும் நன்மையாக இருக்கும். எனவே தொடர்ந்து இருபாலாரும் படிக்கிற வகையில் அந்தக் கல்லூரியை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது தியாகராயா கல்லூரியை அரசு ஏற்றுக்கொள்ள இருக்கிறது. அது குறித்த தடை நீக்கப்பட்டுவிட்டது. எனவே விரைவில் அரசு எடுத்துக் கொள்ளும் என்று சொல்லப்பட்டது. அரசுத் துறையிலிருந்து தரப்பட்ட இந்தச் செய்திக்காக நான் என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களைத்





தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் சிவகங்கையில் செயல்பட்டு வந்த கல்லூரியை அரசு மேற்கொண்டது. ஆனால் இன்றுவரை அதுபற்றிய 'அப்சார்ப்ஷன்' ஆணை வெளியிடப்படவில்லை. இவ்வாறு அரசு நல்ல உணர்வோடு செயல்பட வேண்டும் என்று நினைத்து, சில முடிவுகளை மேற்கொண்டாலும்கூட, நடைமுறையில் ஏற்படுகிற இதுபோன்ற இடையூறுகள் அல்லது சிக்கல்கள் காரணமாக ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. அந்தக் கல்லூரியைப் பொறுத்த வரையில், அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் 'இன்கிரிமெண்ட்' ஏதுமில்லை. இவ்வாறு ஸ்டேக்னேஷன் ஏற்படும்போது, எதற்காக நாம் அரசிடம் போனோம் என்ற எண்ணம்தான் அவர்கள் மத்தியில் ஏற்படுகிறது. அரசாங்கம் தங்கள் கல்லூரியை எடுத்துக்கொண்டால், தங்களுக்கு இருக்கும் குறைகள் தீரும் என்றுதான் முதலில் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் அரசு ஏற்றுக்கொண்ட பிறகு, உருவாகிற நிலைமைகளைப் பார்க்கும்போது, எதற்காக அரசிடம் போனோம் என்று கவலைப்படுகிற நிலைமை உருவாகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே இத்தகைய குறைகளைத் தீர்ப்பதற்கு துறையின் சார்பில் மிகவும் விரைவான நடவடிக்கைகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் லெட்சுமிபுரம் என்கிற இடத்தில் நெய்யூர் கல்லூரியின் நிர்வாகத்தை அரசே ஏற்றுக் கொண்டது. நேரடியாக கல்லூரியை அரசு எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும்கூட, அந்தக் கல்லூரியின் நிர்வாகத்தை அரசே எடுத்துக் கொண்டது. ஆனால் அவ்வாறு எடுத்துக்கொண்ட பிறகு, கல்லூரி மேனேஜ்மென்ட் கொடுத்த என்டோமென்ட் பண்டை முழுமையாகப் பயன்படுத்தி, அந்தக் கல்லூரிக் கட்டிடங்களைக் கட்டாத காரணத்தால், அந்தக் கட்டிடங்கள் எல்லாம் எப்போது விழலாம் என்ற நிலையில் இருக்கின்றன. இதைப்பற்றிப் பல முறை சொல்லியிருக்கிறேன். கல்வி டைரெக்டரின் கன்ட்ரோலில்தான் அது இருக்கிறது. எனவே விரைவில் என்டோமென்ட் பண்டைப் பயன்படுத்தி, அந்தக் கல்லூரிக் கட்டிடத்தைக் கட்டி, மாணவர்கள் படிப்பதற்கு உரிய வசதியைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உட்படுத்தப்பட்ட ஆசிரியர்களுக்குக் கிடைத்திருக்கிற சிறப்பு ஊதியம் வொகேஷனல் டிரெயினிங் இன்ஸ்ட்ரக்டர்களுக்கும் கொடுக்கப்படும் என்று அரசாணை வெளியிடப்பட்டது. ஆனால் அந்த ஆணை இதுவரை

அமுல்படுத்தப்படவில்லை. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இதன் காரணமாகப் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அரசாணையை விரைவில் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்தில் நான் பல பள்ளிகளுக்குச் சென்று வருகிற வாய்ப்பு ஏற்பட்டதால், பல பிரச்சினைகளைத் தெரிந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. பல வேடிக்கையான அனுபவங்களும் ஏற்பட்டன. இடையகோட்டை என்ற இடத்தில் பள்ளியைப் பார்த்தபோது, அது ஒரு சின்ன கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தலைமை ஆசிரியர் அவர்களைப் பார்த்துக் கேட்டபோது, அவர் அடுத்த கட்டிடத்திற்குக் கூப்பிட்டுச் செல்வதாகச் சொல்லி, அங்கே உள்ள பாலம் ஒன்றின்கீழ் எங்களை அழைத்துச் சென்று, அங்கே வகுப்பு நடப்பதைச் சுட்டிக் காட்டினார். அங்கேதான் மாணவர்கள் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தார்கள். உடனே தலைமை ஆசிரியரைப் பார்த்து, "ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டேன். "கடவுள் புண்ணியத்தில் ஆற்றில் தண்ணீரே வருவதில்லை" என்று அவர் சொன்னார். இப்படி பாலத்திற்கு அடியில் பள்ளிகள் நடக்கும் இந்த நேரத்தில்தான் மாவட்டந்தோறும் ரூ. 25 கோடி செலவில் மாடல் பள்ளிகளைத் தொடங்க இருக்கிறோம். அதைப் போலவே பள்ளிக் கட்டிடங்களுக்கான நிதி ஒதுக்கீட்டைப் பார்க்கும்போது, இந்த ஆண்டு 100 லட்சம் மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை வைத்துக் கொண்டு எப்படி நாம் கட்டிடங்களைக் கட்டப் போகிறோம்? அதிக நிதி ஒதுக்கீடு தேவை என்பதை எல்லோரும் கேட்கிறார்கள். இருந்தாலும் இது போன்ற பணிகளுக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் மாணவர்களும் மாணவிகளும் ஒரு நல்ல முறையில் படிப்பதற்கான சூழ்நிலை உருவாகும். திருவாடானை என்ற இடத்திற்கு நான் போயிருந்தபோது 4 தூண்களைக் காட்டி "இதுதான் ஸ்டாப் ரூம்" என்றார்கள். மேலே கூரை

(பிற்பகல் 1-25)

இல்லை, பக்கத்திலே ஒன்றுமில்லை, இப்படிப்பட்ட நிலைமையில் இன்றைக்குப் பல பகுதிகளில் பள்ளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே பள்ளிக் கட்டிடங்களுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்திருந்தால், மிகச் சிறப்பாக இருந்திருக்கும். இதற்காக எதிலிருந்து பிடுங்குவது என்று





தெரியவில்லை என்று சொல்லலாம். ஆனால் கல்வித் துறைக்கு நிச்சயமாக 'பிரையாரிட்டி' கொடுத்து, முக்கியத்துவம் கொடுத்துச் செய்வார்கள் என்ற எதிர்பார்ப்போடு நான் இந்த வேண்டுகோளை வைக்கிறேன். கண்டிப்பாக நிறைய நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்): மாண்புமிகு உறுப்பினர் ஒன்றரை மணிக்கு முடிக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகிறேன்..

திரு. பி. பார்த்தசாரதி: சுயநிதிக் கல்லூரிகளைப்பற்றி தொடர்ந்து எதிர்ப்புகளை பல ஆசிரியர்கள் சங்கங்கள் தெரிவித்திருக்கின்றன. சுயநிதி தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு 120 ரூபாய் சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மானாமதுரையில் உள்ள தொழில் நுட்ப மாணவர்களுக்கு எங்கே 'டிரெய்னிங்' என்றால், தமிழ் நாடு பாலிடெக்னிக்குகளில்தான் கொடுக்கப்படுகின்றது என்று மானாமதுரையில் உள்ள பாலிடெக்னிக் ஆசிரியர்களே சொன்னார்கள். எந்தவிதமான 'இன்ப்ராஸ்டாக்சர்' உம் இல்லாமல் முழுமையாக போகசாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் சரி பார்க்க குழுக்கள் போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சம். இக் குழுக்கள் சரியாகச் செயல்பட வேண்டும். சிவில் என்ஜினியரிங் என்றால், அதற்கு வேண்டிய லெபாரட்டரி இருக்கிறதா என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு அனுமதி கொடுத்திருந்தால், இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். அப்படி இல்லாவிட்டாலும், இந்த விடுமுறை நாட்களிலாவது அந்தக் கல்லூரிகளைப் பார்வையிட்டு சரியாக இல்லாத கல்லூரிகளுக்கு அனுமதியைத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். சுயநிதி கல்லூரிகள் இல்லாமல் இருப்பது சிறப்பு. அரசுதான் இக்கல்லூரிகளை நடத்த வேண்டும் என்பது என்னுடைய நிலை. அரசு எடுக்காத பட்சத்தில் குறைந்தது இதையாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உடற் பயிற்சி ஆசிரியர்களைப்பற்றி நிறைய சொல்லியிருக்கிறார்கள். உடற் பயிற்சி இயக்குநர்களைப் போடுகிறார்கள் என்றாலும், மற்ற பேராசிரியர்களுக்கு வழங்கப்படுவதைப் போல இவர்களுக்கு, நூலகர்களுக்கு அப்கிரடேஷன் வழங்கப்படுவதில்லை. [illegible] சிரமப்படவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்த [illegible] பாதுகாப்பும் இல்லை. இதைத் திரும்பத் திரும்ப பல்லாண்டுகளாக மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். கடைசிபட்ச அடித்தள ஊழியர்களாகிய

தொகுப்பூதியம் பெறுபவர்கள், பத்தாண்டுகள் வேலை செய்தால், பென்ஷன் பெறுகிறார்கள். ஆனால் மற்றவர்களுக்கு பென்ஷன் இல்லாமல் இருப்பது மோசமான நிலை. நாங்கள் 1,500 ரூபாய் வாங்குகிறோம், எங்களுக்குப் பென்ஷன் உண்டு. ஆனால் 200 ரூபாய் வாங்கும் அவர்களுக்கு அத்தகைய பாதுகாப்பு இல்லை. இதனால் அவர்களோடு நாங்கள் வேலை பார்ப்பது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. அவர்கள் எங்களிடம் திரும்பத் திரும்ப கண்ணீர் வடிக்கிறார்கள். ஆகவே தமிழக அரசு கருணையோடு கூர்ந்து கவனித்து பத்தாண்டுகள் என்று நிர்ணயம் இல்லாமல், அனைவருக்கும் பென்ஷன் கொடுக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்களுக்கான லோன் ஸ்காலர்ஷிப்புக்காக 1983-84 ஆம் ஆண்டில் 112 இலட்சம் ரூபாய் கொடுத்திருந்தார்கள். இவ்வாண்டு 32 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருக்கும்போது, இதைக் குறைப்பது என்பது நலமாக இருக்க முடியாது. ஆகவே இத்தொகையை மேலும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அதிகப்படுத்தினால், ஏழை மாணவர்கள் திரும்பப் படிக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லி, இன்னும் பல பிரச்சினைகள் இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றைப் பற்றிப் பேசிவிட்டதாலும்—10(ஏ)(1) பிரச்சினைகள், பகுதிநேர ஆசிரியர்களை நிரந்தரப்படுத்தும் பிரச்சினைகள், நடத்தாக்கிகளை (கண்டக்டரல்) நிரந்தரப்படுத்தும் பிரச்சினைகள் போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டு, இந்த வாய்ப்புக் கொடுத்தமைக்கு, அவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும்.

மாற்றுத் தலைவர் (திரு. மிசா ஆர். கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன்) : மேலவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-29)

அவை மீண்டும் 4-30 மணியளவில் கூடியது.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

3. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. க. சுப்பு : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தக் கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பில், மத்திய அரசு





வகுத்துள்ள புதிய கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில், ஏறத்தாழ அனைத்தும் ஏற்புடையது என்ற அடிப்படையிலேதான் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய புதிய கல்விக் கொள்கை முழுவதையும் எல்லோருடைய விவாதத்திற்கும் விட்டு ஆய்ந்து, அதை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதிலே முடிவைப் பெற வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர்கள் மட்டத்தில் விட்டு, வேறு பல மட்டங்களில் ஆராயப்பட்டு, அது அமுலுக்கு வர இருக்கின்றது. இதை நாம் பத்திரிகைகளிலேயும் பார்த்தோம். அரசு அதை எடுத்துக்கொண்டிருக்கின்றது. இந்தப் புதிய கொள்கையை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்திலே இருப்பவர்களும் இருக்கின்றார்கள். ஆகவே அதை எதிர்க்க வேண்டும் என்று இருப்பவர்களும் இருக்கின்றார்கள். அதைப் புரிந்து கொண்டார்களோ, இல்லையோ, எப்படி இருந்தாலும் எதிர்ப்பது என்று இருப்பவர்களும் இருக்கின்றார்கள்.

இந்தப் புதிய கல்விக் கொள்கை திட்டமிட்ட கல்விக் கொள்கையாகும். திட்டமிட்ட முறையில் அதைச் செயல்படுத்த வேண்டும். சோஷலிஸ்ட் சோவியத் நாட்டிலே என்ன முறைகளைப் பின்பற்றுகின்றார்களோ அந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்ற அளவிலே இருக்கிறோம். சோவியத் நாட்டிலே கல்வித் திட்டம் உருவாக்கப்பட்டபோது, இப்படித்தான் நாடு முழுவதிலும் உள்ள பல பேர்களுடைய கருத்துக்களை அறிந்து, சமுதாயத்தினுடைய கருத்துக்களை கல்விக் கொள்கைகளின் மீது பெற்றுத்தான், அது அமுல்படுத்தப்பட்டிருக்கின்றது. அதைப் போன்றுதான் நம்முடைய திட்டமிட்ட பொருளாதாரம் என்ற முறையில் சோஷலிச முறைகளைப் பின்பற்றுகின்ற காரணத்தினால், அந்த அடிப்படையிலேயே நாமும் இந்த கல்விக் கொள்கையை உருவாக்கும் அளவிலே இருக்கின்றோம். அந்த அடிப்படையிலே தான் இந்தப் புதிய கல்விக் கொள்கைக்கு வரவேற்பளித்து முதலிடம் கொடுக்கிறோம். அதை நாம் ஏறத்தாழ வரவேற்கிறோம். அந்தக் கருத்துக்களை சில பேர்கள் எதிர்க்கின்றார்கள். சில பேர்கள் வரவேற்கின்றார்கள். சிலர் ஒரு கொள்கையை வரவேற்பது என்றாலே பாவம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கேயும் இந்த மாதிரி புதிய கொள்கையைக் கொண்டுவந்தபோது ஆபத்து வந்திருந்தது.

இந்தக் கல்விக் கொள்கையில், மாதிரிப் பள்ளிகள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிச் சொல்வதே அவர்களுக்கெல்லாம் ஒரு கசப்புணர்ச்சியைத் தருகிறது. இப்பள்ளிகள் அமைக்கப்படுவது அந்த மாதிரிப் பள்ளிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்பதற்காகத்தான். அவை செயல்படுவதை வைத்து அதைப் பின்பற்ற வேண்டும் என்பதுதான் நம் கருத்து. இந்தப் புதிய கல்வித் திட்டத்தைப்பற்றி நமது மாண்புமிகு கல்வி

அமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவையிலே விளக்கியிருக்கின்றார்கள். நாம் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்கவிருக்கிறோம். அதற்கேற்ற கல்வி முறையை இங்கே நாம் கொண்டுவர வேண்டும். எல்லோருக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் இருக்க வேண்டும் என்று கருதுகிறோம். அந்தக் கருத்தில்தான் ஒரே சீரான கல்வி முறை இருக்க வேண்டும் என்று கொண்டு வருகிறோம். இந்தியா முழுவதும் ஒரே சீரான கல்வி முறை இப்போதில்லை. ஏற்றத்தாழ்வுகளை அகற்றுகின்ற அளவுக்கு கல்வி முறை வேண்டும் என்ற அளவில்தான் 'யோஜனா' பத்திரிகையிலே வந்ததை எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள்.

இன்று பாரம்பரைக் கல்வி, பாரம்பரைக் கல்வி என்று சொல்லிக்கொண்டு, 3 விழுக்காட்டைச் சேர்ந்த குடும்பங்கள்தான் தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கின்றன. தொடர்ந்து பள்ளிக்குப் போவது, படிப்பது, பள்ளிக் கல்விக்குப் பிறகு உத்தியோகத்திற்குப் போவது என்று இப்படி 3 சதவிகிதம் பேர்கள் முன்னேறிக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களைப் போல, அவர்கள் நிலையை எட்டவே முடியாத அளவுக்கு 97 சதவிகிதத்தினர் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்துகொண்டிருக்கின்றன. சோஷலிச சமுதாயம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோமே தவிர, அந்த சமுதாயத்திற்கு இன்றைய நிலையில் அர்த்தமில்லாமல் இருந்து கொண்டிருக்கின்றது. நாம் சோஷலிச சமுதாயத்தை நோக்கிப் போகிறோமா என்றால்கூட, அப்படியும் இல்லை. இன்றிருக்கின்ற கல்வி முறையில் முதல் வகுப்பு படிக்கக்கூட ரூபாய் ஆயிரம் செலவு செய்யக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். ஊட்டியிலே போய் படிக்க வைக்கின்றார்கள். தமிழிலே ஆர்வம் உள்ளவர்கள் எல்லாம்கூட ஆங்கிலப் பள்ளியிலேதான் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கின்றார்கள். ஊட்டியிலே உள்ள பள்ளிகளிலே ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் என்று செலவு செய்து படிக்க வைக்கின்றார்கள். சென்ட்ரல் போர்ட் ஆஃப் எஜுகேஷனில் தாம் இருக்கின்றது என்று கருதுகின்றார்கள். ஏற்றத் தாழ்வுகள் அற்ற ஒரு கல்வி முறையை, தரமுள்ள ஒரு கல்வி முறையை உருவாக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் நம் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வற்ற நிலைமைகளை உருவாக்க வேண்டும். கிராமப்புறங்களிலே பள்ளிகளிலே கழிப்பிடங்கள் கூட இல்லை.

(பிற்பகல் 4-35)

கழிப்பறை இருந்தால், தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாமல் என்ன செய்ய முடியும்? ஓப்பன் யூனிவர்சிட்டி என்று பேசிக் கொண்டிருக்கிறோம். ஓப்பன் லெட்ரின்தான் இருக்கின்றது. ஹையர் செகண்டரி பள்ளிகளில்



ஆசிரியர் பயிற்சிக்கு 25 பேர்களைச் சேர்க்கலாம் என்று சொல்கிறோம். லெட்ரின் இல்லாமல் பெண்களை எப்படிச் சேர்ப்பது? இதெல்லாம் சங்கடமான விஷயங்கள். கிராமப்புறங்களிலே கல்வி கற்க 'இன்ஃப்ராஸ்டிரக்சர்' இல்லாமல் இருக்கிறது. அதே நேரத்தில் நகரங்களில், கோடை வாசஸ்தலங்களில், கொடைக்கானல், ஊட்டி போன்ற இடங்களில் பெரிய பள்ளிகள் இருக்கின்றன. டேராடூன், சிம்லா போன்ற இடங்களில் பெரிய வீட்டுப் பிள்ளைகள் படிக்கிறார்கள். நம்முடைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களேகூட அங்கே படித்தவர்கள்தான். அவரோடு படித்த மாணவர்கள் எல்லாம் அமைச்சரவையில் இருக்கிறார்கள். அதை உணர்ந்ததால்தான், புதிய கல்விக் கொள்கையில் அவர்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். டோராடூனில் படித்தால் பெரிய எக்சிகியூடிவ் ஆக, மந்திரிகளாக, ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக வந்துவிடலாம். கார்ப்பரேஷன் பள்ளியில் படித்து அப்படி யார் வர முடியும்? கிராமப்புறங்களில் படித்து ஐ.ஏ.எஸ். ஆக வர முடியுமா? முடியாது. அதனால்தான் இன்றைய தேர்வு முறையைகூட எதிர்க்கிறோம். என்ன காரணம் என்றால், இதனால் அறிவுத் தரத்தை சோதிக்க முடியவில்லை. வடிகட்டத்தான் இது உபயோகமாக இருக்கிறது. கிராமப்புறங்களில் படித்து ஒன்றிரண்டு பேர் வரலாம். அந்த ஒன்றிரண்டே விதியாக முடியாது. எக்சப்ஷனாகத்தான் இருக்கும். அவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கே வர அச்சமாக இருக்கிறது. அவர்களிடையே தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. கிராமப்புறங்கள் அதிகமாக உள்ள இந்த நாட்டில் ஏற்றத் தாழ்வான கல்வி முறையை வைத்துக்கொண்டிருப்பதால், மேல் தட்டில் உள்ளவர்களே எல்லாவற்றையும் ஆக்கிரமித்துக்கொள்ளும் நிலைமை இருக்கிறது. 'டோராடூன் கல்வி முறையில் நாம் படித்தோம், ஏன் இப்படி பல இடங்களில் இருக்கக்கூடாது? கிராமப்புறங்களில் ஏன் இருக்கக்கூடாது' என்ற அடிப்படையிலேதான் பிரதமர் அவர்களால் இது உருவாக்கப்பட்டிருக்கிறது. மாதிரிப் பள்ளி—இது ஒரு மாதிரியான பள்ளி அல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படி மாதிரிப் பள்ளிகளை உருவாக்கி, அதிலே மாணவர்களைச் சேர்த்து, கல்வி கொடுக்க இருக்கிறார்கள். 20 சதவிகிதம் நகரங்களிலே இருக்கிறவர்களுக்கு, மற்றவை அந்தப் பகுதி மாணவர்களுக்கு, அவர்கள் அங்கேயே தங்கிப் படிக்க வேண்டும். அவர்கள் ஊருக்குப் போக கட்டணம் கொடுக்கப்படும். அங்கே நியமிக்கப்படும் ஆசிரியர்களும் அதிகம் படித்தவர்கள். அதிகக் கல்வித் தகுதி உடையவர்கள். அவர்களும் மாணவர்களோடு கூடியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட முறையில் கல்விக் கொள்கை உருவாகியிருக்கிறது. சோவியத் நாட்டில் இந்த முறையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் அதை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கிறோம். குழந்தைகளைப் பொறுத்தவரையில், அவர்களைப் பள்ளியில் சேர்த்தால் 3 வேளை உணவு அவர்களுக்கு அளிக்க வேண்டும். இலவசச் சீருடை அளிக்க வேண்டும். இலவசப் பாடப் புத்தகம் அளிக்க வேண்டும். இது சோவியத்

நாட்டில் இருக்கிறது. அந்த திசையை நோக்கி நாம் சென்று கொண்டிருக்கிறோம். இங்கே இலவச சீருடை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இலவசப் பாடப் புத்தகம் வழங்குகிறோம். சத்துணவு வழங்குகிறோம். அதை 3 வேளை வழங்க முடியாமல் இருக்கிறது. 2, 3 வேளை வழங்க இது முதல் படி. குழந்தையை வளர்ப்பது, அவர்களுக்கு கல்வியைக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாக இருக்க வேண்டும். படிக்க வேண்டுமென்பது அவர்களுடைய பொறுப்பு. இப்போது பெற்றோர்களுடைய வருமானம், அந்தஸ்தைப் பொறுத்து கல்வி இருக்கிறது. பெரிய, வசதியான பள்ளியில் அவர்கள் சேர்ந்து, படித்து வருகிறார்கள். 2½ லட்சம் ரூபாய் கொடுத்து மெடிகல் கல்லூரியில் இடம் வாங்குகிறார்கள். அதுவும் இல்லாமல் மார்க் போட்டு வந்து விடுகிறார்கள். அவர்கள் எங்கே வேண்டுமானாலும் போகலாம். இதை மாற்ற வேண்டும். எந்த அளவுக்கு இடம் வேண்டுமோ அந்த அளவுக்கு இடமில்லை. மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இடம் கொடுக்க முடியவில்லை. அதனாலே 'காம்படிஷன்' வருகிறது. இன்ஜினியரிங், மெடிகல் கல்லூரி இடங்களுக்கு 'காம்படிஷன்' வருகிறது. லா காலேஜுக்கும் இப்போது அந்த நிலை வந்துவிட்டது. இடம் குறைவு; சேர விரும்புகிறவர்கள் அதிகம். அதைச் சமாளிப்பது எப்படி என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு தொழிற்சாலைகளில் இயந்திரங்களை 'ஐடில்' ஆக வைத்திருக்கக்கூடாது; வாரம் பூரா ஓட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதனால் ஷிப்ட் சிஸ்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மேக்சிமம் "ப்ரொடக்ஷன்" எடுக்க வேண்டும். அதனால் உற்பத்தித் திறன்—'ப்ரொடக்டிவிடி' கூடுகிறது. இயந்திரத்தைப் பொறுத்து இப்படி. ஏன் அதைக் கல்வித் துறைக்குக் கொண்டு வரக்கூடாது? மெடிகல் காலேஜ், இன்ஜினியரிங் காலேஜ், பாலிடெக்னிக்—இங்கேயெல்லாம் ஒரு ஷிப்ட் இருப்பதைவிட, அவையெல்லாம் தொடர்ந்து இயங்கும் வகையில் செயல்படுத்த வேண்டும். குறைவான ஆதாரங்களை வைத்துக் கொண்டு, அதிகமான மாணவர்களுக்கு உதவ வேண்டுமென்று சொன்னால், 24 மணி நேரமும் அவை இயங்க வேண்டும். அதிலே சோர்வு இருக்கக் கூடாது, காலதாமதம் இருக்கக்கூடாது, லீவ் விடக்கூடாது. மெடிகல் காலேஜ், இன்ஜினியரிங் காலேஜில் ஷிப்ட் சிஸ்டத்தை ஏற்படுத்தி, 3 மடங்கு மாணவர்களைச் சேர்த்து, அதிகமான மாணவர்களுக்கு அந்தக் கல்வியை அளிக்க வேண்டும்.

(பிற்பகல் 4-40)

அந்த அறிஞர் சொல்கிறார், நாமும் கேட்கிறோம். ஷிப்ட் சிஸ்டத்தில் ஏராளமான மாணவர்களை நாம் சேர்த்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. சுயதேவை நிறுவனங்களை நடத்துகிறவர்கள் அவைகளை நல்ல முறையில் நடத்தவில்லை. மலையடிவாரத்தில் கொண்டுபோய் சுயதேவை நிறுவனத்தை



அமைத்திருக்கிறார்கள். மேலும் அவர்களைப் போய் அங்கே யாரும் பார்க்கக்கூடாது என்பதற்காக இப்படி அமைத்திருக்கிறார்களோ என்னவோ, அரிசி 'சப்ளை' பண்ணி, அவசரத்துக்கு கைமாத்து கொடுத்து இப்படி எல்லாம் ஆரம்பிக்கிறார்கள். கடைசியில் பார்த்தால் கல்விக்கும் அதை நடத்துகிறவருக்கும் சம்பந்தமே இருக்காது. வீசைக் கணக்கில் தான் அவர்கள் அளந்து பார்த்து பணம் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் சுயதேவை கல்வி நிறுவனங்களை எப்படி அவர்கள் நல்லமுறையில் நடத்துவார்கள்? கைநாட்டுப் பேர்வழிகளை எல்லாம் பொறியியல் கல்லூரியில் நிர்வாகியாகப் போட்டிருக்கிறார்கள். தகுதியில்லாதவர்களாகையால், அவர்களை யாரும் மதிப்பதேயில்லை. என்னைப் பொறுத்தவரையில், ஒன்றைச் சொல்வேன். இப்படிப்பட்டவர்களுக்கு அனுமதி கொடுப்பதைவிட நம்முடைய அரசுக் கல்லூரிகளிலேயே, பொறியியல் கல்லூரியிலேயே 3 ஷிப்ட் நடத்துவதற்கு அனுமதியளிக்கலாம். முறையாக, ஒழுங்காக நடத்தினால் நல்ல மாதிரி சொல்லிக் கொடுத்தால் 5 மணி நேரமே போதும். இன்னும் சொல்லப்போனால், 2 அல்லது 3 மணி நேரத்திலேயே சொல்லிக் கொடுத்து விடலாம். ரிசோர்ஸ் கம்மியாக இருக்கிற நம்முடைய நாட்டிலே ஷிப்ட் சிஸ்டத்தில் பாடங்களைச் சொல்லிக் கொடுத்தால், பிரச்சினைகளுக்கே இடமில்லை. இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு இல்லாததால், முறைகேடாக சுயதேவைக் கல்வி நிறுவனங்களை நடத்துகின்ற தனிப்பட்டவர்களைப்பற்றி விமர்சனம் செய்கின்ற நிலை இருக்கிறது. அவர்கள் சிறப்பாக நடத்தவில்லையென்றால் கூட, அரசு தான் விமர்சனத்திற்கு ஆளாக வேண்டியிருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் இந்த அரசைப் பொறுத்தவரையில், நாம் பார்க்கிறோம். இலவசமாக உணவு அளிக்கிறோம். இலவசமாக உடை அளிக்கிறோம். கட்டணம் இல்லாமல் பாடம் சொல்லிக் கொடுக்கிறோம். இப்படி எல்லாம் அரசு நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் நிலையில் சுயதேவை மருத்துவக் கல்லூரியானாலும் சரி, சுயதேவை பொறியியல் கல்லூரியாக இருந்தாலும் சரி அல்லது பாலிடெக்னிக்காக இருந்தாலும் சரி, அவர்கள் நன்கொடையின் பெயரால் வன்கொடை பெற்றுக் கொண்டு, அரசுக்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கிறார்கள். கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களை எல்லாம் இப்படிப்பட்ட சுயதேவை நிறுவனங்களை ஆரம்பிக்கும்படி சொல்லி ஊக்குவிக்கலாம் என்று முன்பு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்படி கறுப்புப் பணம் வைத்திருப்பவர்களை நாம் அனுமதித்தால், இன்னும் கறுப்புப் பணத்தை அவர்கள் அதிகமாக ஆக்கத்தான் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவார்கள். மக்களுக்கு அரசு கல்லூரிகளின் வாயிலாகவே ஷிப்ட் சிஸ்டத்தில் கல்வி அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கும் நிலையில், அவர்களுடைய கல்விக் கண்களை திறக்கும் வசதி இருக்கும் நிலையில், இப்படிப்பட்டவர்களுக்கு நாம்

வாய்ப்பளித்தால், எப்படி மாணவர்களின் கல்விக் கண்களை நாம் திறக்க முடியும்? எனவே, அவர்கள் வைத்திருக்கும் கறுப்புப் பணம் அவர்களிடமே இருக்கட்டும். மத்திய அரசு அதைப் பற்றிப் பார்த்துக் கொள்ளும்.

அதுபோல் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அவர்களின் தலைமையில் அதிகாரிகள் அடங்கிய ஒரு கமிட்டியைப் போடலாம். ராமசொருப் போன்றவர்களையே விலைக்கு வாங்கியிருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கூட பேசினார்கள். பல்கலைக் கழகத்தில் நடைபெறக் கூடிய முறைகேடுகளைப்பற்றி இங்கே சொன்னார். அந்த முறைகேடுகள் மீது, அரசைப் பொறுத்தவரையில், நடவடிக்கை எடுப்பதில் கஷ்டம் இருக்கிறது. அதுபற்றிக் கேட்டால், தன்னாட்சி நிறுவனம் என்று சொல்கிறார்கள். அமைச்சர் சொல்லியே, ஒரு வைஸ் சான்சலர் கேட்கவில்லை. ஏன் என்று கேட்டால் 'என்னை கவர்னர் நியமித்தார்' என்று சொல்கிறார். இப்படிப்பட்ட நிலையில் எங்காவது தவறு நடைபெறுகிறது என்றால், உடனே இங்கே நான் குற்றம் சாட்டுகிறோம். பல்கலைக் கழகத்தில் ஏதாவது முறைகேடு நடந்தாலும் உடனே இங்கே அரசைப் பார்த்துத்தான் குற்றம் சாட்டுகிறோம். அப்படிப்பட்ட சிக்கல்களை இன்றைக்கு யூனிவர்சிட்டியிலேயே கூட உருவாக்குகிறார்கள். ஒரு பேராசிரியர் அவரைச் சார்ந்தவர்களுக்காக மதிப்பெண்களைத் திருத்துகிறார் என்றால், எப்படி அவர்கள் மீது மதிப்பு வரும்? "பள்ளித் தலம் அனைத்தும் கோயில் செய்குவோம்" என்று அன்றைக்குப் பாடியிருக்கிறார்கள். ஆனால் 'லர்னிங்' நடத்துகிற இடத்தில் கிரிமினல் செய்கைகள் நடந்தால், எப்படி ஆலயமாக அவை இருக்க முடியும்? பெயில் ஆகிறவனை பாஸ் பண்ணுகிறது, பாஸ் பண்ணியவனை பெயில் பண்ணுகிறது எல்லாம் நடக்கிறது என்றால், எவ்வளவு மோசமான காரியங்கள்? கடவுளின் பெயரை எல்லாம் இழுப்பது அனாவசியம். இப்படிப்பட்ட வேலைகள் நடைபெறலாமா? பேராசிரியர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அவர்கள் செய்வது பூரா 'பிசினஸ்'தான். அன்றைக்கு ஆளும் கட்சியைச் சார்ந்த நானும், இன்றைக்கு எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களும், பிறகு பொதுவாக இருக்கிற மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் போன்றவர்கள் எல்லாம் இதுகுறித்துப் பேசியிருக்கிறார்கள். சிண்டிகேட்டில் இருக்கிறவர்கள் எல்லாம் ஆசிரியர்களல்ல. கல்வித் துறைச் செயலாளர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், கல்லூரி பிரின்சிபால் போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு எல்லாம் அவர்கள் இடம் வாங்கியிருக்கிறார்கள். இதுபற்றி விசாரணை நடத்தினால் அவர்கள் எல்லாம் மாட்டுவார்கள். கல்வித் துறைச் செயலாளருடைய குழந்தைக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்தப் பிரச்சினைக்குப் பிறகு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் மீனாட்சி என்பவர் தீவிரமாக இடம் கொடுக்கக்கூடாது என்று வாதாடியிருக்



கிறார். பிறகு அவருடைய தங்கச்சிக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் டாக்டர் இராமமூர்த்தி என்பவர் கமிட்டியில் இருந்தார். அவரும் ஒரு புரபசரை எடுக்கக் கூடாது என்று தீவிரமாக வாதிட்டார். கடைசியில் பார்த்தால் கவர்னர் அவரை நாமினேட் பண்ணியிருக்கிறார். கவர்னர் தான் அவரை எடுக்க வேண்டும்.

(பிற்பகல் 4-45)

இதுமாதிரி எழுதியதற்கு கவர்னர் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அவர் நடவடிக்கை எடுக்காமல் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கிறார். என்ன காரணம்? இதையெல்லாம் எப்படி சுத்தம் செய்வது? ரொம்ப கஷ்டமான வேலை. என்ன காரணம் என்றால், எந்தவிதமான ஒழுங்குக் கட்டுப்பாடும் இல்லாத அளவுக்கு இது நடக்கிறது. அப்படியெல்லாம் நடக்கிறது. இந்த முறைகேடுகளையெல்லாம் நாம் தெரிந்துகொள்ள நீதி விசாரணை கூட வைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டார்கள். நீதி விசாரணை என்பதில் ரொம்பப் பெரிய கஷ்டம் இல்லை. எங்களுக்கு வேண்டிய ஜட்ஜைப் போட்டுவிடுவோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் ஒன்றும் கஷ்டமே கிடையாது. இருந்தாலும் நீதி விசாரணை என்று போட்டு அறிக்கை வரும்போது, சில விஷயங்கள் வெளியில் வரும். நாளைக்கு மறுபடியும் அது நடக்காமல் தடுப்பதற்கு ஒரு வாய்ப்பு வரும். இந்தப் பிரச்சினையை சுத்தம் செய்து கொள்ளலாம். இது நடந்து போய்விட்டது. இனிமேல் நடக்காமல் இருக்க முடியுமா என்று பார்க்கலாம். இதுமாதிரி தவறுகள் நடப்பதற்கு என்ன காரணம்? அதை யார் பிடிப்பது? இங்கே பல்கலைக் கழகத்திற்குள் நுழைய முடியவில்லை. யூனிவர்சிட்டி என்று சொன்னால், அது ஒரு தனி இடம் என்று சொல்கிறார்கள். பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் என்று சொன்னால், யூனிவர்சிட்டி சட்டப்படி அவர் ஒரு முழு நேர அலுவலர். அதற்காகத்தான் அவருக்கு வேலை கொடுத்திருக்கிறோம். சம்பளம் கொடுக்கிறோம். சலுகைகள் கொடுக்கிறோம். சீஃப் மினிஸ்டருக்குக் கூட இல்லாத சம்பளம் மற்ற சலுகைகளைக் கொடுக்கிறார்கள். எல்லாம் வாங்குகிற அவர் என்ன செய்கிறார்? துணைவேந்தராக வந்த பிறகு அந்தப் பதவியைப் பயன்படுத்தி 'பாரின் அசைன்மென்ட்' வாங்கிக் கொள்கிறார். வி.சி.யாக வந்த பிறகுதான், அவருக்கு அசைன்மென்ட் கிடைக்கிறது. இல்லையென்றால் கிடையாது. இங்கேயிருந்து யுனெஸ்கோவுக்குப் போக வேண்டியது. வி.சி.யாக வந்து ஒன்றரை வருஷம் ஆகிறது. இதற்குள் நான்கு தடவை வெளிநாட்டுக்குப் போய்விட்டார். வெளிநாட்டிலேயே அவர் தங்கிக் கொள்ளலாமே? யார் வேண்டாம் என்று சொன்னது? அவரெல்லாம் முக்கியமான ஆளா? அவரை

விட்டால் யாரும் இல்லையா? இங்கே வேலை என்று சொன்னால், ஒன்று முழுமையாகச் செய்ய வேண்டும். இல்லையென்றால் வெளிநாட்டில் உறுதியாக இருந்துவிட வேண்டும். யாரைப் பற்றியும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. பல்கலைக் கழகத்தின் முழு நேரத்தையும் பயன்படுத்தினால் கூட, இதைச் சீர் செய்ய முடியாது. அவ்வளவு மோசமான நிலைமை நிலவிக்கொண்டிருக்கும்போது, நாள்தோறும் அங்கே தகராறு. இதைத் தவிர ஒவ்வொரு ஆசிரியரும் ஒவ்வொரு பக்கம். காப்பியடித்தால் ஆசிரியருக்கு டாக்டரேட் கிடைக்கும். வாங்கிக்கொண்டு வந்துவிடுவார். ரொம்ப வெட்கக்கேடு. இதனால் எல்லாம் இந்த யூனிவர்சிட்டியினுடைய மரியாதை ரொம்ப கெட்டுவிட்டது. ஆனால் பதில் சொல்ல வேண்டியது யார் என்றால் அரசாங்கம்தான் உட்கார்ந்துகொண்டு பதில் சொல்ல வேண்டும். இந்தக் கட்டத்தில்தான்

(மணியடிக்கப்பட்டது)

இப்போதுதான் முன்னுரையில் இருக்கிறேன். என் உரைக்கு இன்னும் வரவே இல்லை. (சிரிப்பு).

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எல்லோரும் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. க. சுப்பு:** அந்த அடிப்படையில் இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் கல்விக்குச் செலவழிக்கக்கூடிய தொகையைப் பார்த்தால், கல்விக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கலாம். ரொம்ப பிரையாரிட்டி கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் நம்பிக்கை அளிக்கக்கூடிய குழந்தைகள் அங்கேதான் உருவாகிறார்கள். சமுதாய ஒழுக்கத்திற்கு ஊன்றுகோலாக இருக்கக்கூடிய நிலையில் அவர்கள்தான் வரவேண்டும். இதையெல்லாம் பார்த்தால், அதிகமான ஒதுக்கம் கல்விக்குக் கொடுத்தாக வேண்டும். ஆசிரியர்களுடைய வேலையை வேறு யாரும் பார்க்க முடியாது. கம்ப்யூட்டரும் பார்க்க முடியாது. வேறு யாரும் பார்க்க முடியாது. அந்த ஆசிரியர்களை நம்பித்தான் நம் குழந்தைகளை ஒப்படைக்கிறோம். அந்தக் குழந்தைகளை நம்பித்தான் எதிர்காலம் இருக்கிறது. 'நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி, நாடே இருக்குது தம்பி' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழந்தைகளை நல்லபடியாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் இருக்கிறது. ஆசிரியர்களுடைய மனப்பான்மையை, அவர்களுடைய கலாச்சார உணர்வைப் பொறுத்தது அது. இதனால் ஆசிரியர்களுடைய கலாச்சாரத்தை உயர்த்த வேண்டுமென்றால், அவர்கள் ரொம்ப படித்திருக்க வேண்டும்.



சோவியத் நாட்டில் ஆசிரியர்களுக்கு நிறைய மரியாதை அளித்திருக்கிறார்ர். இங்கே அவர்களுக்கு இல்லாத மரியாதை யாருக்கு இருக்கிறது ன்று கேட்க முடியாது. அங்கே ஆசிரியர்கள் அதிகமாகப் படித்துக் காண்டே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இந்த அவையில் அவர்கள்தான் அதிகமாகப் பேசுகிறார்கள். அவர்களுக்கு நாம்தான் அதிகமாக மதிப்பு கொடுக்கிறோம்.

**திரு. க. சுப்பு :** அங்கே ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், டாக்டருக்கு ன்ன சம்பளம் கொடுக்கிறார்களோ, என்ஜினியருக்கு என்ன சம்பளம் காடுக்கிறார்களோ அதைக் கொடுக்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்கள் யர்த்துவிட்டதால், மரியாதையைக் கொடுக்கிறார்கள். எந்த முடிவு அராங்கத்தில் எடுத்தாலும், ஆசிரியர்களுடைய கவுன்சிலைக் கலந்து தான் முடிவு செய்கிறார்கள். ஒரு ஆசிரியருடைய வேலை நிறுத்தம் என்று ந்தால் பொதுக்குழு ஒப்புக்கொண்டால்தான் செய்ய முடியும். அந்த அளவுக்கு அவர்களுக்கு உயர்ந்த அதிகாரம் இருக்கிறது. உயர்ந்த கமிஷன் அமைக்கிற வகையில் அவர்கள் ஆசிரியர்களைக் கலந்துகொண்டு பேசுகிறார்ள். அப்படிப்பட்ட முறைகள் இருப்பதால்தான், அங்கே திட்டமிடுவது, அமல் செய்வது என்று எல்லாவற்றிலும் பொறுப்பில் அவர்களையும் வைத்திருக்கிறார்கள். இங்கே என்னவென்றால், சிண்டிகேட் சொல்வதை துணைவேந்தர் கேட்கமாட்டார், செனட் தீர்மானம் போடுவதை வி. சி. ஒப்புக்கொள்ளமாட்டார். அப்படியானால் வி. சி. யார் பேச்சைத்தான் கேட்பார் என்று யாரும் சொல்ல முடியாது. நல்லவேளை, புதிய கல்விக் கொள்கையில் யூனிவர்சிட்டிக்கு 'அபிலியேஷன்' வேண்டாம் என்று சொல்கிறார்கள். அது ரொம்ப நல்லது. அபிலியேஷனே யூனிவர்சிட்டிக்கு வேண்டாம். ஆனால் அது அண்ணாமலை ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அங்கே என்ன நடக்கிறதென்றால், அட்மிஷனுக்கு ஃபாரின் எக்சேஞ்சில் ரூபாய் கொடுக்க வேண்டும். இதை யாரால் கொடுக்க முடியும்? ஒரு வேளை சோற்றுக்கே இங்கே கஷ்டப்படும்போது, பாவம் ஃபாரின் எக்சேஞ்சுக்கு எங்கே போவான்? பணக்காரர்கள் அப்படிக் கொடுத்துப் படிக்கிறார்கள். படித்துவிட்டுப் போகட்டும். இருந்தாலும் அதிலே ஏழை மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும் வகையில் ஷிப்ட் சிஸ்டத்தில் பாடம் நடத்த வேண்டும். இப்போது இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய மாதிரிக் கல்வியைப் பொறுத்தவரையில்,.. என்ன சொல்லலாம் என்றால், சரித்திரம் பூராவும் நாங்கள் சொன்னதைத்தான் நீங்கள் படிக்க வேண்டுமென்று சொல்வதுபோல் இருக்கக்

D
V2;1,32'N86 143553
N86.22442

கூடாது. சோவியத் நாட்டில் கூட 15 குடியரசு இருக்கிறது. அதற்குத் தனி அமைப்பு இருக்கிறது. தனிக் கல்வி அமைப்பு இருக்கிறது. சுப்ரிம் சோவியத் என்று தனியாக இருக்கிறது. பாடத் திட்டங்களை மாற்றும் அதிகாரம் யாருக்கு இருக்கிறதென்றால், அந்தக் குடியரசுக்குத்தான் இருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கும் வரலாறு எல்லாம் தெரிந்திருக்க வேண்டும். அப்படி முழுமையாக இருந்தால்தான் முறைமையாக அவர்கள் சொல்லிக் கொடுக்க முடியும். அப்படி இல்லாவிட்டால், மொழியை மறந்து, கலையை மறந்து, இலக்கியத்தை மறந்து, வரலாற்றை மறந்து, அப்படியே அதை ஒழித்துவிட்டு, பிறகு எப்படி ஒன்றாக இருக்க முடியும்? அதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். சமமான வாய்ப்பு இருக்க வேண்டும், சமமான மரியாதை இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 4-50)

அவர்கள் தனித்தனிக் குடியரசுக்கும் தனித்தனிக் கொடியே வைத்திருக்கிறார்கள். அங்கே அப்படி இருக்கிறது.

புதிய கல்விக் கொள்கைபற்றி ஒரு அச்சுத்தைத் தெரிவிக்கிறார்கள். பத்திரிகைகளில்கூட பார்த்தேன். பங்களூரிலே சிலர் பேசியிருக்கிறார்கள். என்ன பேசியிருக்கிறார்கள்? மேற்கு வங்கத்தில் காரல் மார்க்ஸ் பற்றிச் என்ன பேசியிருக்கிறார்கள்? மேற்கு வங்கத்தில் காரல் மார்க்ஸ் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் சொல்லிக் கொடுத்தால், என்னவென்று என்ன சொல்கிறார்கள். தமிழ் நாட்டில் அண்ணாவைப்பற்றிச் சொல்லிக் கொடுக்காமல், பின் யாரைக் காங்கிரசையைப்பற்றியா சொல்லிக் கொடுப்பார்கள்? (சிரிப்பு) தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட, மக்களை உயர்த்துவதற்காகப் பாடுபட்ட தலைவரைப்பற்றிச் சொல்லிக் கொடுக்காமல் வேறு யாரைப்பற்றிச் சொல்லிக் கொடுக்க முடியும்? அண்ணாவைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். காந்தியைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்திரா காந்தியைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். நேருவைப் பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள். எல்லோரைப் பற்றியும்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

மேற்கு வங்கத்தில் காரல் மார்க்ஸைப்பற்றி சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றால்; அதில் என்ன தவறு? அது ஒரு தத்துவம். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவம். அந்தத் தத்துவத்தினை ஏற்றுக்கொண்டு அந்தத் தத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் அரசாங்கம் அங்கே இருக்கிறபோது, அவர்கள் அதைச் சொல்லிக் கொடுக்காமல் வேறு எதைச் சொல்லிக் கொடுப்பார்கள்? அதில் தவறேதுமில்லை. ஆனால் அதற்காக காங்கிரஸ்காரர்கள் "சரித்திரம் என்றாலே நாங்கள்தான், நீங்கள் ஒன்றும் செய்யக்





கூடாது" என்று சொல்லக் கூடாது. இப்போதிருக்கிற காங்கிரஸ் கட்சியில் ஜெயிலுக்குப் போனவர்கள் யார் இருக்கிறார்கள்? ஜெயிலுக்குப் போனவர்கள் இல்லை. காரணம், பிறந்ததே சுதந்திரத்திற்குப் பிறகுதான். பின் நாம் எப்படி ஜெயிலுக்குப் போக முடியும்? போக முடியாது. இனிமேல் ஜெயிலுக்குப் போவதென்றால் வேறு மாதிரிதான் போக முடியும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்போதும் போய்க்கொண்டிருக்கிறார்கள். போராட்டம் செய்து போய்க்கொண்டிருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு: அப்போது ஜெயிலுக்குப் போவதென்பது வேறு; இப்போது போவதென்பது வேறு. அப்போது சிறை சென்றவர்கள், தியாகிகள். அவர்கள் வேறு எதுவும் எதிர்பார்க்காதவர்கள். பிரதமர் பதவியைக் கொடு என்று கேட்கிறவர்கள் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆசிரியர் திரு. லெட்சுமிகாந்தன் போகவில்லையா?

திரு. சி. சா. லெட்சுமிகாந்தன்: நாங்களும் போராட்டத்திலே கலந்து கொண்டு சிறைக்குப் போயிருக்கிறோம்.

திரு. க. சுப்பு: நேரு சென்றபோது என்ன மாதிரி இருந்தது? இப்போது என்ன மாதிரி இருக்கிறது? ஆசிரியர்கள் போயிருக்கிறார்கள். ஆனால் சிறைக்குச் சென்ற காலத்திற்கும் சம்பளம் உண்டு. இவ்வாறு வேறெங்காவது உண்டா? அவர்கள் சிறைக்குச் சென்றதை நான் வரவேற்கிறேன். அவர்கள் வெளியே இருந்து என்ன செய்தார்களோ அதைத்தான் உள்ளேயும் செய்தார்கள். (சிரிப்பு) நம்முடைய தியாகங்கள் வேறு. அந்தக் காலத்தில் அவர்கள் செய்த தியாகங்கள் வேறு. இரண்டையும் குழப்பக் கூடாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அந்தக் காலக் கஷ்டத்தை அனுபவித்த நானே இங்கே உட்கார்ந்திருக்கிறேன்.

திரு. க. சுப்பு: அவ்வாறு நீங்கள் கஷ்டப்பட்டதனால்தான், உங்களை ஓர் உன்னதமான இடத்தில் உட்கார வைத்திருக்கிறோம். எல்லோரும் அப்படி உட்கார முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மிசா கணேசன் கூட ஓர் ஐந்து நிமிடங்கள்தான் உட்காரமுடியும். பின் எழுந்து வந்து விடுவார். (சிரிப்பு) இவ்வாறு தியாகம் செய்ததால் தான், அதற்கு உரிய மரியாதை இருக்கிறது. ஆனால் அவ்வாறு தியாகம் செய்த நிறைய பேர் இன்றைக்கும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பென்ஷன் அவர்களுக்கு ஒழுங்காக வந்து சேர்வதில்லை; அதற்காக அவர்கள் சமீபத்தில் ஊர்வலமே சென்றார்

கள். அவர்களுக்குப் பென்ஷன்கூட கிடைப்பதற்கு 'லேட்' ஆகிறது. அவர்கள் பதவி கொடுங்கள் என்று கேட்கவில்லை. பென்ஷன் தொகையை யாவது காலத்தில் கொடுங்கள் என்றுதான் கேட்கிறார்கள்.

அதேமாதிரி சோவியத் நாட்டில் யுத்தத்தில் உயிர் கொடுத்தவர்களை யெல்லாம் மதிக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுக்கிறார்கள். அதைப்போல் நம் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் ஆற்றலை வளர்க்க வேண்டும். ஆற்றல் என்பது மாற்ற முடியாதது என்பதல்ல. பிறக்கும்போது எல்லோரும் ஒரே மாதிரிதான் பிறக்கிறார்கள். பிறந்ததற்குப் பிறகு அவர்களை உருவாக்குவதைப் பொறுத்தே இருக்கிறது. அப்படி உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை நாம் கொண்டுவர வேண்டும். சம வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

தற்போது இலவசக் கல்வியை உயர்நிலைப் பள்ளி வரை கொண்டு வந்திருக்கிறோம். பல்கலைக்கழகம் வரை கல்வியை இலவசமாக ஆக்க வேண்டும். இன்றைக்கு இந்த backward, forward பிரச்சினை ஒரே awkward ஆக இருக்கிறது. காரணம் இப்போது எல்லோருமே 'பேக்வார்ட்' ஆகிவிட்டார்கள் போலிருக்கிறது, 'பார்வேர்ட்'-ஏ இல்லை போலிருக்கிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், கொஞ்சம் சிரமப்பட்டாவது நிதியைக் கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கி, கூடுமானவரையில் எல்லோருக்கும் இடம் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இடம் கேட்டு வருகிற எல்லோருக்கும் வாய்ப்புகளை வழங்கினால், இப்பிரச்சினை எழாது. "படிக்கிறவர்கள் எல்லாம் படியுங்கள், எது வேண்டுமானாலும் படியுங்கள், விருப்பம் உள்ளதைப் படியுங்கள்," என்கிற நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அரை மணி நேரமாகிறது.

**திரு. க. சுப்பு :** ஒரேயொரு பிரச்சினையைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இப்போது தமிழகத்தைப் பொறுத்தவரையில், தனியாக மருத்துவப் பல்கலைக் கழகம் கொண்டு வரவிருக்கிறோம். தமிழ்ப் பல்கலைக் கழகத்தை ஏற்கெனவே உருவாக்கியிருக்கிறோம். இப்படி ஒவ்வொரு துறைக்கும் தனிப் பல்கலைக் கழகம் இருப்பது நல்லது. எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அதே மாதிரி இன்றைக்கு சட்டத் துறைக்கும் தனியாக ஒரு பல்கலைக் கழகம் உருவாக்க வேண்டும். ஆல் இந்தியா பார் கவுன்சிலிலிருந்து 'நேஷனல் லா ஸ்கூல்' ஒன்று பங்களூரில் வைக்கலாம் என்று முயற்சி செய்தார்கள். ஆனால் அது முடியவில்லை. நாம் பார் கவுன்சிலைக் கலந்து அவ்வாறு தமிழ் நாட்டில் வைக்க முடியும். அவ்வாறு வைத்து, அதை ஒரு





ரிசர்ச் சென்டராக மாற்றலாம். அதனால் நிறைய மாணவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். நம்மிடம் ரொம்பக் காலத்திற்கு முன்னாலே உருவாக்கப்பட்ட சட்டக் கல்லூரி இருக்கிறது. எல்லாவிதமான வாய்ப்புக்களையும் கொடுக்க வேண்டும். எம்.எல். வகுப்பு வைக்கலாம். எல்லோரும் சேர்ந்து படிக்கலாம். ஆனால் இப்போது சேர்ப்பது இல்லை. இருந்தாலுங்கூட இனிமேலாவது சேர்க்கலாம். பல்கலைக் கழக அந்தஸ்திற்கு அதை உயர்த்த வேண்டும். இப்போது தமிழ் நாட்டில் பல சட்டக் கல்லூரிகள் வந்திருக்கின்றன. எனவே தனியாக சட்டத் துறைக்கென்று ஒரு பல்கலைக் கழகம் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காலையில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். கல்வித் துறைக்கென்று ஒரு வழக்கறிஞர் குழு வைக்க வேண்டுமென்று சொன்னார்.

* * * *

(பிற்பகல் 4-55)

* * * *

அந்த மாதிரி நல்ல நோக்கத்தோடு வாதாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி கல்வித் துறையிலே நாம் வைத்தால். . . .

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவரவர்களே, ** என்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ** என்றால் வழக்கறிஞரைப் பொறுத்த வரையில், ** என்று பொருள்படும். எனவே அதை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. சுப்பு அவர்களே ஒரு **

**திரு. க. சுப்பு:** தலைவரவர்களே, * * * *

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இன்னொரு * * வேறு இங்கு வந்திருக்கிறார்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, * * * பேசுவது என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவரும் * * என்ற காரணத்தினாலே அவரும் அத்தகைய உடன்பாட்டிற்கு உடையவரா என்பதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** நாம் எல்லாம் * * * *

---

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நான் * இல்லாததால், 'அந்தப் பகுதியை' நீக்கிவிடுவதாக அறிவிக்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, இந்தச் சந்தர்ப்பத்திலே விட்டு வைத்த அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வது, பல இடங்களிலே 'எவிக்ஷனுக்காக' நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதில் ஒரு விடாவது 'எவிக்ஷன்' ஆகியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 'எவிக்ஷனுக்காக' வழக்கறிஞர்களை நாம் போடும்போது, அவர்களுடைய நடவடிக்கை என்ன என்பதை நாம் கண்காணிக்க வேண்டும். அவர் நமக்கு வேண்டிய ஆள் என்று போடுகிறோமே தவிர, விவரமான ஆளைப் போடுவதில்லை. அப்படி அவரை நாம் போட்டுக்கொள்வதால், அவர் நமக்கு வேண்டியவராக இருப்பாரே தவிர, ஹவுசிங் போர்டுக்கு வேண்டியவராக இருக்கமாட்டார். அதுமாதிரி இப்படி இருக்கிற குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. * * *

நாம் இங்கே கொண்டு வந்திருக்கிறோம்? இல்லை. அவர் சட்டத் துறையில் வல்லுனர் என்ற காரணத்தாலே நாம் இங்கே அவரைக் கொண்டு வந்திருக்கிறோம். இங்கே திரு. கணேசன் அவர்களும் இருக்கிறார்கள். அவரை * * * * என்று சொல்லக் கூடாது. * * * அந்த நிலைமைகளிலே அவர்களை நாம் பயன்படுத்திக் கொள்வது. . .

**திரு. எல். கணேசன் :** தலைவரவர்களே, அவரைப் போலவே நானும் *

It applies to me and it applies to him as well.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உறுப்பினரவர்கள் சீக்கிரம் முடிக்க வேண்டும்.

**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, மாண்புமிகு அண்ணன் எல். ஜி. அவர்களைச் சொல்லவில்லை. சட்டத் துறையைப் பொறுத்தவரை, மற்ற மாநிலங்களிலே இருப்பதைவிட இங்கு பல்கலைக் கழக அந்தஸ்துக்கு அதை உயர்த்துவதற்கு மிகுந்த வாய்ப்பு இருப்பதால், அதை ஒரு பல்கலைக் கழகமாக உயர்த்துவதற்கு வழி வகை செய்ய வேண்டும். அதிலே இருக்கக்கூடிய பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறோம். மறுபடியும் அதை சுட்டிச் சுட்டிக் காட்டினால், அமைச்சர் அவர்கள் பொறுமையை இழந்துவிடுவார்கள். எனவே அந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய குறைபாடுகளைக் களைந்து, அதைப் பல்கலைக் கழகமாக ஆக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்தக் கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில், தேசிய அளவிலே உருவாக்கப்பட்டிருக்கக்

** தலைவரின் ஆணைப்படி நீக்கப்பட்டது.





கூடிய புதிய கல்விக் கொள்கையை நாம் ஏற்கெனவே பல அம்சங்களில் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இனிமேல் ரெசிடென்ஷியல் ஸ்கூல் மாதிரி மாணவர்கள் அங்கே தங்கி, ஆசிரியர்களும் அங்கே தங்கி கல்வி கற்றுக் கொடுக்க வேண்டும். பல பள்ளிகளிலே திறமையான ஆசிரியர்களை ரொம்ப சம்பளம் கொடுத்து வைத்திருக்கிறார்கள். அதுமாதிரி நம்முடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கும், இருக்கக்கூடிய வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்தி அதிகமான மாணவர்களை உருவாக்குவதற்கும் நாம் திட்டமிட வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**திரு. அ. மாயவன் :** தலைவரவர்களே, இந்தக் கல்விபற்றிய கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு முன்னால், இந்த மேலவைக்கு என்னை அனுப்பி வைத்த சென்னை-செங்கை ஆசிரியப் பெருமக்களுக்கு இந்த அவையின் மூலமாக என்னுடைய நன்றியறிதலை, இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து, எனக்கு இந்தக் கல்விக் கொள்கைக் குறிப்பு மீது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்பபு அளித்த இந்த அவைக்கும், மாண்புமிகு தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேல்நிலைக் கல்வி என்பது 1978-79-ல் தமிழ் நாட்டில் தொடங்கப்பட்டது. ஆனால் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் மேல்நிலைக் கல்வி தோல்வியுற்ற நிலையில் தமிழகத்தில் மேல்நிலைக் கல்வி வெற்றி நடைபோடுகிறது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கூட பல இடங்களில் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் இந்த மேல்நிலைக் கல்வி தமிழகத்திலே வெற்றி அடையச் செய்த ஆசிரியப் பெருமக்களுடைய நிலையை இந்தத் தமிழக அரசு முழுமையாக எண்ணிப் பார்க்கவில்லை. அவர்களுடைய இன்னல்களைப் போக்குவதற்கு இந்த அரசு முன்வரவில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். அதற்குக் காரணம் 1978-79-ல் மேல்நிலைப் பள்ளிகளுக்காக நியமிக்கப்பட்ட முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள், பி. ஜி. ஆசிரியர்கள், அந்த மேல்நிலைக் கல்வி வெற்றி அடையத் துணைபுரிந்த ஆசிரியப் பெருமக்கள் இன்னும் அந்த அருமைச் சகோதரர்கள் தற்காலிக ஆசிரியர்களாக உலவி வருகிறார்கள் என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் 7, 8 ஆண்டுக் காலத்திற்கு மேலாக இன்னும் தற்காலிக ஆசிரியர்களாக இருக்க வேண்டுமா, அந்த 'எ.ஒன்' ஆசிரியர்களை 10 (எ) (1) ஆசிரியர்களாக இந்த அரசு இன்னும் வைத்திருப்பது எனக்கு வேதனையாகத்தான் இருக்கிறது.

[திரு. அ. மாயவன்] [1986 ஏப்ரல் 24

(பிற்பகல் 5-00)

அடுத்து, பட்டதாரி ஆசிரியர்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள் கிட்டத்தட்ட 16 ஆண்டுகளாகத் தமிழகத்தில்தான் தற்காலிக ஆசிரியர்களாகவே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அவல நிலையை எப்படி எடுத்துச் சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லை. அவர்கள் எல்லாம் பேரன் பேத்திகளை எடுத்திருக்கிறார்கள். அவர்களிடம் படித்த மாணவர்கள் டாக்டர்களாக, எஞ்சினியர்களாக, எம்.எல்.ஏ.க்களாக வந்திருக்கிறார்கள். அந்த எம்.எல்.ஏ. விடம் போய் அந்த ஆசிரியர் ஒரு மனு கொடுக்கிறார். அந்த எம்.எல்.ஏ. அதைப் பிரித்துப் பார்க்கிறார். அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "என்னை நிரந்தரம் செய்யும்படி சிபாரிசு செய்யுங்கள்" என்று பரிதாப நிலையில் மனு கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்தில் இருக்க வேண்டுமா என்றுதான் கேட்க விரும்புகிறேன். ஒரு கம்பெனியில் ஓராண்டுக் காலம் வேலை செய்தால்— தொடர்ந்து வேலை செய்தால் அத்தகைய தொழிலாளர்களை நிர்வாகம் நிரந்தரம் செய்கிறது. அப்படிச் செய்யவில்லையென்றால் அரசாங்கம் அந்த நிர்வாகத்தைத் தட்டிக் கேட்கிறது. அவர்களையெல்லாம் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறது. ஆனால் அரசாங்கம் என்பது ஒரு மாடல் எம்ப்ளாயராக இருக்க வேண்டிய ஒன்று. ஆனால் அந்த அரசு தன்னுடைய ஆசிரியர்களை இன்னும் 10 (ஏ) (1) ஆசிரியர்களாக வைத்திருக்கிறது என்றால், இந்த அவல நிலையைப் போக்க வேண்டாமா? எனவேதான் தமிழக அரசு உடனடியாக இத்தகைய தற்காலிகமாக வைக்கப்பட்டிருக்கிற ஆசிரியர்களை நிரந்தரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாம் தொழிற் கல்வியைப்பற்றி நிறையப் பேசுகிறோம். அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறோம். தொழிற் கல்வி மூலமாகத்தான் இந்த நாடு வளர முடியும் என்கிறோம். ஆனால் அந்தத் தொழிற் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் நிலை என்ன தெரியுமா? அவர்களெல்லாம் இன்னும் பார்ட்-டைம் டீச்சர்களாகத்தான் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 300 மட்டும்தான் சம்பளம். ஆனால் வேலை செய்கிற நிலையைப் பார்த்தால், 'புல் டைம்' டீச்சர்களைப்போல் முழு நேரமும் வேலை செய்கிறார்கள். 'புல் டைம்' டீச்சர்கள் எத்தனை பீரியட்கள் பாடம் நடத்துகிறார்களோ அதே அளவுக்குத்தான் நாள் முழுவதும் அத்தகைய பார்ட்-டைம் டீச்சர்களும் பாடம் நடத்துகிறார்கள். வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமோ



1986 ஏப்ரல் 24] [திரு. அ. மாயவன்]

ரூ. 300 மட்டுமே. அவர்களுக்கு டி.ஏ., எச்.ஆர்.ஏ., சி.சி.ஏ. எதுவும் கிடையாது. லீவு கிடையாது. அனாதைகளைப் போல் வைத்திருக்கிறது தமிழக அரசு. அவர்களையெல்லாம் 'புல் டைம்' டீச்சர்களாக ஆக்குவதில் அரசுக்கு என்ன தடை இருக்கிறது என்று தெரியவில்லை. முழு நேரமும் அவர்கள் வேலை செய்கிறார்கள். இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால், அவர்களுக்கு இரண்டு "பார்ட் டைம்' சம்பளம் கொடுக்கிறார்கள். ரூ. 600 சம்பளம் கொடுக்கிறார்கள். 'டபுள் பார்ட் டைம்' கொடுப்பதைவிட அவர்களை எல்லாம் முழு நேர ஆசிரியர்களாகவே நியமித்து விடுவது நல்லது. இவைகள் எல்லாம் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அதைப்பற்றியெல்லாம் ஒன்றுமில்லாமல் இருக்கிறது என்பதை வேதனையோடு நான் குறிப்பிட விரும்புகிறேன். கொள்கை சம்பந்தமாக இதிலே எதுவுமே இல்லை. இத்தனை பள்ளிகளைத் திறந்தோம். அதிலே இத்தனை மாணவர்கள் படித்தார்கள். இத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கு வழக்கு இருக்கிறதே தவிர, பாலிசி மேட்டர் எதுவும் இதில் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே 'பார்ட் டைம்' டீச்சர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இண்டக்டட் ஆசிரியர்களைப் பொறுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னால் பைபர்கேட்டட் கோர்ஸ் என்று இருந்தபோது, பி.காம் படித்த ஆசிரியர்களை அந்தப் பணிக்காக வைத்திருந்தார்கள். பழைய 11 ஆம் வகுப்பு எடுக்கப்பட்ட உடனே இத்தகைய பி.காம். படித்த ஆசிரியர்களை மேல்நிலைப் பள்ளியில் 'இன்டக்ட்' பண்ணினார்கள். மற்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு இன்டக்‌ஷன் கோர்ஸ்-ல் பயிற்சி அளிக்கப்பட்டது. ஆனால் பி.காம். ஆசிரியர்களுக்கு அத்தகைய பயிற்சி அளிக்கப்படவில்லை. அப்படி அவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவில்லை என்றால், அவர்களை 'ரிவர்ட்' செய்ய முடியாது. எனவே அவர்களுக்கும் இன்டக்‌ஷன் கோர்ஸ் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரை, அவர்கள் பிரச்சினை தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. நமது நாட்டில் கொத்தடிமை முறையை ஒழித்துவிட்டதாகச் சொல்கிறோம். ஆனால் நான் அதை நம்பவில்லை. 'பாண்டட் லேபர்' என்கிற கொத்தடிமை முறை இன்றைக்கும் தமிழகத்தில் தனியார் பள்ளிகளில் குடிகொண்டு இருக்கிறது. இதை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களேகூட மறுக்க முடியாது. அந்த ஆசிரிய

நண்பர்களுக்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்றுதான் கேட்க விரும்புகிறேன். அவர்களுக்குப் பயண காலச் சலுகை கிடையாது. அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படும் அனைத்து சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ஏன் கொடுக்கப்பட வில்லை? இந்த நாட்டில் பிறந்த அத்தனை குழந்தைகளுக்கும் கல்வி கற்பிக்க வேண்டியது கடமை. நாட்டில் இருக்கிற அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கொடுக்கும் வேலையைத்தான் அரசுப் பள்ளி ஆசிரியர்களும் சரி, தனியார் பள்ளி ஆசிரியர்களும் சரி, செய்து கொண்டிருக்கிறார்கள். தனியார் பள்ளி ஆசிரியர்கள் தங்கள் நிர்வாகிகளின் வீட்டுக் குழந்தைகளுக்கு மட்டுமோ அல்லது தங்களுடைய குழந்தைகளுக்கு மட்டுமோ கல்வி சொல்லித் தரவில்லை. சமுதாயத்தில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சொல்லித் தருகிறார்கள். எனவே இரண்டு பேருமே அந்த வேலையைத்தான் செய்கிறார்கள். இரண்டு பேரும் ஒரே வேலையைச் செய்யும்போது, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகைகள் இல்லை என்றால், எப்படி இது நியாயமாகும் என்று எனக்குப் புரியவில்லை.

(பிற்பகல் 5-05)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்கூடிய அத்தனை சலுகைகளையும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம். அப்படிக் கொடுத்தால்தான், தமிழகத்திலே கல்வி உருப்படியாக இருக்க முடியும். கல்வித் துறை தழைத்தோங்க முடியும். அரசாங்கமே தனியார் பள்ளி ஆசிரியர்களை இரண்டாந்தர குடிமக்களாக தயவு செய்து நடத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாந்தர குடிமக்களாக அவர்களை வேறு யாராவது நடத்தலாம். ஆனால் அரசாங்கமே அப்படி நடத்துவது என்பது மிகவும் வேதனையாக இருக்கிறது. தனியார் பள்ளி ஆசிரியர்களை இரண்டாந்தர, மூன்றாந்தர குடிமக்களாக நடத்த வேண்டாம் என்று அருள்கூர்ந்து தமிழக அரசை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் பள்ளிகள் இருக்கின்றன. அதைப் போலவே தனியார் கல்லூரிகளும் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளை நிர்வகிக்க ஒரு குழு இருக்கிறது. அதைப் போலவே தனியார் பள்ளிகளை நடத்த ஒரு குழு இருக்கிறது. தனியார் பள்ளிகளை ஒழுங்கு படுத்தும் சட்டம் இருக்கிறது. தனியார் கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் என்று இரண்டு சட்டமும் தனித்தனியாக இருக்கின்றன. கலைஞர் ஆட்சியிலேயே இந்தச் சட்டத்தைக் கொண்டு



வந்தார்கள். தனியார் பள்ளிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி விவாதிப்பது, அவர்களை சஸ்பெண்ட் செய்வது, அவர்களுக்கு இன்கிரிமெண்ட் கொடுப்பது, அவர்களுக்கு லீவ் சாங்ஷன் பண்ணுவதை எல்லாம் அந்தக் குழு கவனித்துக் கொண்டிருக்கிறது. அந்தக் குழுவிலே யார் இருக்கிறார்கள் என்றால், அதிகபட்சமாக ஆசிரியர்களின் பிரதிநிதிகள் மூன்று பேர்தான் இருப்பார்களாம். ஆனால் மானேஜ்மெண்ட் ரெப்ரசென்டேட்டிவ்ஸ் கணக்கு இல்லாமல் எத்தனை பேர் வேண்டுமானாலும் இருக்கலாமாம். இப்படி ஒரு குழுவை அமைத்தது. கலைஞர் செய்த தவறு. கலைஞர் அவர்கள் அவையில் இருப்பார்கள் என்று பார்த்தேன், இல்லை. அந்தக் குழுவிலே இருக்கக்கூடிய டீச்சர்ஸ் யார் என்றால், ஆசிரியர்கள் மத்தியிலே ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் அல்ல, பணி மூத்த ஆசிரியர். இன்றோ அல்லது நாளையோ ரிட்டையர் ஆகப் போகிறார்களே அந்த மூத்த ஆசிரியர்கள்தான் அந்தக் குழுவிலே இருக்க வேண்டுமாம். மற்ற ஆசிரியர்கள் யாரும் இருக்கக்கூடாதாம். இப்படிப்பட்ட நிலையில் ஆசிரியர்கள் நலனை அந்தக் குழுவால் எப்படிப் பாதுகாக்க முடியும்? இதற்கு அரசாங்கம் சொல்லக்கூடிய காரணம், அந்தக் குழுவிற்கு ஆசிரியர்கள் தேர்தல் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், பள்ளியில் அமைதி கெட்டுவிடும் என்பது. இதனால் தனியார் பள்ளியின் நிர்வாகத்தினரின் மனநிலைதான் கெடுமே தவிர, ஆசிரியர்களின் அமைதி கெடாது. தனியார் பள்ளி நிர்வாகத்தினர் கொள்ளையடிக்கிறார்களே அந்தக் கொள்ளைதான் கெடும், இதனால் ஆசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். அந்தச் சட்டத்திற்கு 'அமெண்ட்மென்ட்' கொண்டு வருவதாகக் கேள்விப் படுகிறோம். அப்படி சட்டத் திருத்தம் கொண்டுவரும் போது, மிக முக்கியமான அந்தக் குழுவிலே இடம் பெறக்கூடிய ஆசிரியர்கள் ஆசிரியப் பெருமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற முறையில் கொண்டுவர வேண்டும். கல்லூரிகளிலும் அதே நிலைமைதான். ஆகவே நான் கூறிய முறையில் இருந்தால்தான், ஆசிரியர்களுடைய பணியைப் பாதுகாக்க முடியும் என்று தெரிவித்து அந்த வகையிலே சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும் என்று நான் தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கென்று வீட்டு வசதி வாரியம் அமைத்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களுக்கு நன்மை செய்வதற்காக அந்த வாரியம் அமைக்கப்பட்டதா அல்லது ஆளும் கட்சியிலே இருக்கக்கூடிய ஒருவருக்கு எப்படியாவது ஒரு வாரியத் தலைவரின் பதவி கொடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திலே அமைக்கப்பட்டதா என்பது புரியவில்லை. ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், அந்த வீட்டு வசதி வாரியம் அமைத்து

[திரு. அ. மாயவன்] [1986 ஏப்ரல் 24

இரண்டு வருஷங்கள் ஆகின்றன என்றாலும், ஆசிரியர்களுக்கு வீடு கட்ட ஒம்மை செங்கல் வாங்க ஒரு சல்லிக் காசு கூட அரசாங்கத்தால் ஒதுக்கப்படவில்லை. இது வேதனையாக இருக்கிறது. இந்த நிலைமையில் இருக்கும்போது, அந்த வீட்டு வசதி வாரியத்திற்கு ஒரு தலைவரைப் போட்டிருக்கிறார்கள். அவருக்கு நல்ல மார்க்-4 கார் இருக்கிறது. பவனி வர எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதைப் பார்க்கும்போது, அவரை சாடிஸ்பை பண்ணுவதற்காக, அவருக்கு வாரியத் தலைவர் பதவி கொடுக்க வேண்டும் என்பதற்காக அந்த வாரியத்தை அமைத்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. அப்படி இல்லாமல், ஆசிரியர்கள் வீட்டு வசதி வாரியத்திற்கென்று 50 கோடி ரூபாய் அல்லது 100 கோடி ரூபாய் இந்த அரசாங்கம் ஒதுக்கியிருந்தால், நாங்கள் இந்த அவையிலே அதைப் பாராட்டியிருப்போம். ஆனால் சல்லிக் காசுகூட ஒதுக்கவில்லை என்று சொல்லும்போது, வேதனையாக இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைத்தபோதெல்லாம், மறுநாளே 50 கோடி ரூபாய், 10 கோடி ரூபாய் என்று கொடுக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்திற்கு 'பட்ஜெட் அலாட்மென்ட்' இடையாது என்றாலும், 100 கோடி ரூபாயை ஒதுக்கினார்கள் என்றால், அதற்கு அவருக்கு மனம் இருந்தது. ஆனால் ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அவர் மனப்பூர்வமாக விரும்பவில்லை என்று நினைக்கிறேன். ஆகவேதான் நிதி ஒதுக்கவில்லை என்று கருதுகிறேன். உண்மையிலேயே இந்த அரசாங்கத்திற்கு அந்தரங்க ஆசை இருக்குமானால், உடனடியாக எப்படியாவது இதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே தமிழக அரசை வலியுறுத்த விரும்புகிறேன். "நேஷனல் டீச்சர்ஸ் கமிஷன்" என்று

(பிற்பகல் 5-10)

அமைக்கப்பட்டது. மாண்புமிகு பிரதமர் மறைந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் அது அமைக்கப்பட்டது. அந்த நேஷனல் டீச்சர்ஸ் கமிஷன் நெ. 1 ரெகம்மன்டேஷன்ஸ் எல்லாம் பாராளுமன்றத்திலே சப்மிட் பண்ணியாகிவிட்டது. அப்படி பாராளுமன்றத்திலே 'சம்மிட்' பண்ணிய பிறகு, ஒவ்வொரு மாநில அரசாங்கத்திற்கும் அந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட்டை அனுப்பி வைத்திருக்கின்றார்கள். அந்த ரிப்போர்ட்டைப் பார்த்தால், மிகத் தெளிவாக அதிலே சொல்லப்பட்டிருக்கின்றது. ஆசிரியர்களுக்கு மாதந் தோறும் மருத்துவப்படியாக 7.5 பர்சென்ட் தரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட்டில் 'ரெகமென்ட்' பண்ணப்பட்டிருக்கின்றது. ஆசிரியர்கள் ஓய்வு வயது இப்போது 58 வயதாக இருக்கின்றது. அந்த ஆசிரியர்களுடைய ஓய்வு வயதை இட்டத்தட்ட 60 ஆக உயர்த்த வேண்டும் என்றுகூட அந்தக் கமிஷன் ரிப்



1986 ஏப்ரல் 24] [திரு. அ. மாயவன்]

போர்ட்டிலே சொல்லியிருக்கின்றார்கள். அதுபோலவே தனியார் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் உள்ள ஆசிரியர்கள் எல்லாம் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்க்கின்ற அளவுக்கு அவர்களுக்கு எல். டி. சி. கொடுக்க வேண்டும் என்று 'நேஷனல் டீச்சர்ஸ் கமிஷன்' 'ரெகமன்ட்' செய்திருக்கின்றார்கள் ஏன், உலகம் பூராவும் சுற்றி வர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றது. ஆனால் நம்முடைய அரசாங்கம் தமிழகத்திலேகூட சுற்றி வருவதற்கு எல். டி. சி. கொடுக்கவில்லை. அது வேதனையாக இருக்கின்றது. அந்த நேஷனல் டீச்சர்ஸ் கமிஷனுடைய ரெகமன்டேஷன்களை எல்லாம் செயல்படுத்த வேண்டும் என்று கேட்கிறோம். அவைகளை தமிழக அரசு 'இம்பிளிமென்ட்' பண்ணவில்லை. அதை யாருமே செய்யவில்லை. அவைகள் எல்லாம் அமலுக்கு வரவில்லை. அந்தக் கமிஷன் ரெகமன்டேஷனை இங்கே பப்ளிஷ் பண்ணாமலே இருக்கின்றார்கள். அதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன். அதை அலமாரியிலே போட்டு தூசி படிய வைத்திருக்கின்றார்கள். ஆக அந்த ரெகமன்டேஷனிலே ஆசிரியர்களுக்கு சாதகமாக இருக்கக்கூடிய ரெகமண்டேஷன்களை எடுத்துச் சொல்ல வேண்டும். அது சென்ட்ரல் கவர்ன்மென்ட் அமைத்த கமிஷன். அதற்கு முன்னாலே பல கமிஷன்கள் வந்திருக்கின்றன. அந்தக் கமிஷன்கள் செய்த ரெகமன்டேஷன்கள் எல்லாம் அலமாரியிலே வைக்கப்பட்டு அப்படியே வைக்கப்பட்டு தூசி படிந்திருக்கின்றன. அதை சபையிலே வைக்க வேண்டும். அதிலே என்னென்ன இருக்கிறது என்று பார்ப்போம். ஆசிரியர்களுக்கு என்னென்ன 'பெனிபிட்' இருக்கிறது என்று பார்ப்போம். அந்தக் கமிஷனின் ரெகமன்டேஷன்களை, அதிலே இருக்கக்கூடிய தீர்ப்புகளை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகள். ஒரு சில தனியார்கள் பள்ளிக்கூடம் நடத்திவருகின்றார்கள். அந்தப் பள்ளிகளை நடத்துகின்றபோது, 'பிராபிட்' வரவில்லை என்று சொன்னால், நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கின்றார்கள். அதிலே நல்ல வருமானம் வருகின்றது. செல்ப் பைனான்ஸிங் இன்ஸ்டிடியூஷன் என்று ஆரம்பித்தால், கொள்ளை லாபம் அடிக்கலாம் என்று நினைக்கின்றார்கள். அதுபோன்ற எண்ணத்திற்கு வருகின்றபோது, இப்போது 'ரெகக்னைஸ்ட் ஸ்கூல்ஸ்' ஆக ஆரம்பித்திருக்கின்றார்களே, நடத்திக் கொண்டிருக்கின்றார்களே, அந்தப் பள்ளிக்கூடத்தை மூடலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு வருகின்றது. அந்த எண்ணம் வரும்போது, என்ன சொல்கின்றார்கள்? அப்படி நினைக்கும்போது 1-வது வகுப்பை மூடலாம், 6-வது வகுப்பை மூடலாம் என்று சொல்கிறார்கள். நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு அனுமதி தரப்பட்டு, அந்தப் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டு அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகளால் நடத்த முடியாமல் இருக்கும்

போது, அதை மூட நினைக்கின்றார்கள். அந்தப் பள்ளிக்கூடங்கள் கடைசி வரைக்கும் திறந்தே இருக்க வேண்டும். அவர்களால் நடத்த முடியவில்லை என்றால், அந்தப் பள்ளியை அவர்கள் அரசிடத்திலே ஒப்படைக்க வேண்டும். அவர்கள் அடுத்த வருடம் 6-வது வகுப்பை மூடுகிறோம், பிறகு 7-வது வகுப்பை மூடுகிறோம். ஆசிரியர்களே வேறு எங்காவது வேலை தேடிக்கொள்ளுங்கள் என்று சொல்கின்றார்கள். நமது கல்வித் துறையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதிலே கறாராக இருக்க வேண்டும் . என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே அம்பத்தூர் பகுதியிலே மோனம்பட்டு என்ற ஊரிலே எம். எச். எஸ். உயர்நிலைப் பள்ளி என்று இருக்கின்றது. அந்தப் பள்ளியை மூடி விடுவதாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற ஏராளமான பள்ளிகள் இருக்கின்றன. இப்போது மாநகராட்சிப் பள்ளி, நகராட்சிப் பள்ளி ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கின்றது. ஆனால் தனியார் பள்ளி ஆசிரியர்களை மட்டும் ஏன் அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்று கேட்கின்றார்கள். பல பேர்களிடம் கேட்டோம். அதற்கு அவர்கள் சொல்கின்றார்கள். பல பேர்கள் சொல்லக்கூடிய விடையைத்தான் நான் சொல்கிறேன். ஆசிரியர்களிடையே உள்ள கருத்தைச் சொல்கிறேன். நான் என் கருத்தாகச் சொல்லவில்லை. அவர்கள் சொல்வதைக் கேட்டு நான் சொல்கிறேன். அதற்குக் காரணம் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய உயர் அதிகாரிகள் அந்த நிர்வாகிகளின் பாக்கெட்டிலே புகுந்துகொண்டிருக்கிறார்கள் என்பதாகச் சொல்கின்றார்கள். அதனாலேதான் அந்தத் தனியார் பள்ளிகளை அரசுடைமையாக்குவதற்குக் குறுக்கே நிற்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். இது தெளிந்த உண்மை. இப்படிப்பட்ட அவல நிலைமைகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே அதனால் அவர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த ஆசிரியர்களை மெட்ராசிலிருந்து கோயம்பத்தூருக்கு தூக்கியடிப்பதற்கு அல்லது கோயம்புத்தூரிலிருந்து மதுரைக்கோ, மெட்ராசுக்கோ 'டிரான்ஸ்பர்' செய்வதற்கு என்று இருக்கக்கூடாது. ஒவ்வொரு கார்ப்பரேஷனையும் ஒரு யூனிட்டாக வைத்துக் கொள்ள வேண்டும். அந்த யூனிட்டுக்குள்ளேயே அந்த ஆசிரியர்களை மாற்றலாம். ஒரு யூனிட்டிலேயிருந்து இன்னொரு யூனிட்டுக்கு மாற்றக்கூடாது. ஆசிரியர்கள் விரும்பி மாற்றிக்கொண்டால், அதைத் தடை செய்யச் சொல்லவில்லை. அதற்கு நாங்கள் ஆட்சேபணை சொல்லவில்லை.



(பிற்பகல் 5-15)

ஆகவே எல்லா உள்ளாட்சி மன்றப் பள்ளிகளின் ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக்குவதில் ஆட்சேபணை இல்லை. அதை வரவேற்கிறேன். ஆனால் மாறுதல் என்ற பெயரில் அவர்களைப் பழி வாங்கக்கூடாது என்பது எங்களுடைய நிலை.

அடுத்து, சிறுபான்மைப் பள்ளிகள். மெஜாரிட்டி ஸ்கூல் ஆக இருக்கிறது. மறுநாள் பார்த்தால், மைனாரிட்டி பள்ளியாகியிருக்கிறது. அப்படி மைனாரிட்டி பள்ளி என்று ஏன் வாங்குகிறார்கள் என்றால் "நாங்கள் சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்கள், சிறுபான்மை மதம் இருக்கிறதே அதை உயர்த்தப் போகிறோம். தூக்கிவிடப் போகிறோம். அதற்கு சேவை செய்யப் போகிறோம்" என்று அப்படி வாங்குகிறார்கள். ஆனால் உண்மை நிலவரம் அப்படியல்ல, பள்ளியை வைத்து மதத்தை தூக்கி வைக்க முடியாது. பள்ளிக்கூடத்தில், கல்வி துறை சொல்லும் பாடங்களைத்தான் சொல்லிக் கொடுக்கிறோம். அதனால் அவர்கள் சிறுபான்மை அந்தஸ்தை வாங்கக் காரணம், ஆசிரியர்களை நினைத்த போது வீட்டுக்கு அனுப்பலாம். அங்கே வேறு ஒரு ஆசிரியரை நியமிக்கலாம். அப்படி நியமனம் செய்யும்போது, ஏராளமான பணத்தை வாங்கிக் கொள்ளை அடிக்கலாம். லாப வேட்டை என்பதுதான் மெஜாரிட்டி பள்ளிகள் எல்லாம் மைனாரிட்டி பள்ளிகளாக அடிப்படைக் காரணமாகும். மெஜாரிட்டி பள்ளி எப்படி ஓவர்நைட்டில் மைனாரிட்டி பள்ளியாகிறது? அதற்குத் துணை புரிவது யார்? அதற்கும் கல்வி அதிகாரிகள்தான் காரணம். மெஜாரிட்டி பள்ளியை நடத்தக்கூடியவர்கள் கோர்ட்டிலே அபிடவிட் கொடுக்கிறார்கள். அப்படி 'அபிடவிட்' கொடுக்கும்போது, யாரைப் பார்ட்டியாகச் சேர்க்கிறார்கள் என்றால், டி. ஈ. ஓ. சி. ஈ. ஓ. அல்லது டைரக்டரைத்தான் பார்ட்டி ஆக்குகிறார்கள். ஆசிரியர்களை அதில் சேர்ப்பதில்லை. மேனேஜ்மெண்ட் கேஸ் போடுகிறது. பள்ளிக்கு மைனாரிட்டி அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று. யார் 'ரெஸ்பாண்டன்ட்ஸ்' என்றால், கல்வித் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள். ஆசிரியர்களுக்குத் தெரியாமல் கோர்ட்டுக்கு கேஸ் போயிருக்கிறது. கல்வித்துறை அதிகாரிகள், டி.ஈ.ஓ., சி.ஈ.ஓ. அல்லது டைரக்டர் கோர்ட்டுக்குப் போவதில்லை. கோர்ட்டிலே வாய்தா தள்ளித் தள்ளிப் போடுகிறார்கள். ஒரு ஸ்டேஜில் எக்ஸ் பார்ட்டி தீர்ப்பு கொடுக்கிறார்கள். இதை 'ரெப்ரெசன்ட்' பண்ண ஆளே இல்லை, மைனாரிட்டி அந்தஸ்து கேட்கிறார்கள், அதைக் கொடுத்து விடுகிறோம், பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். எனவே அவர்களுக்குத் துணை புரிவது கல்வி அதிகாரிகள். ஆகவே இந்த நிலை மீண்டும் தமிழகத்தில் தலை தூக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறுபான்மை மொழி ஆசிரியர்கள் பள்ளிகளில் இருக்கிறார்கள். செங்கை மாவட்டத்தில் திருத்தனி, பள்ளிப்பட்டு; தர்மபுரி மாவட்டத்தில் பல இடங்களில் தமிழ் மொழியில் தேர்ச்சி அடையாத ஆசிரியர்கள் இருக்கிறார்கள், அவர்கள் விஞ்ஞானம், கணக்கு, சரித்திரம், பூகோளம், தெலுங்கு பாடங்கள் எல்லாம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை வருடங்களாக என்றால், 10, 15 வருடங்களாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை, "நீ தமிழ் மொழியில் தேர்ச்சி பெறவில்லை. ஆகவே ரெகுலரைஸ் பண்ண மாட்டோம், உனக்கு இன்கிரிமெண்ட் கொடுக்க மாட்டோம், லீவ் கொடுக்க மாட்டோம்" என்று சொல்லி அலைக்கழிக்கிறார்கள். அவர்கள் எல்லாம் டி.என். பி. எஸ். சி. மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். அவர்கள் பணிக்கு வரும்போதே சொல்லியிருக்கலாம். 10, 15 ஆண்டுகள் அவர்களை வேலை செய்ய விட்டுவிட்டு, இப்போது இப்படிச் சொல்வது சரியல்ல. இதில், சிலர் எஸ். எஸ். எல். சி. வரை தமிழில் படித்திருப்பார்கள். தாய்மொழி தமிழ். பட்டப் படிப்பிலே ஸ்காலர்ஷிப் வாங்க, இந்தியை செகன்ட் லாங்குவேஜ் ஆகப் படித்திருப்பார்கள். இந்தியை செகன்ட் லாங்குவேஜ் ஆகப் படித்தால், ஸ்காலர்சிப் உண்டு. தாய்மொழி தமிழ். எஸ்.எஸ்.எல்.சி. வரை தமிழில் படித்தவர். இவரைக் கூட 'தமிழில் உனக்குத் தேர்ச்சியில்லை, உன்னை நாங்கள் ரெகுலரைஸ் பண்ணமாட்டோம், இன்க்ரிமென்ட் கொடுக்க மாட்டோம், என்று சொல்லும் வேடிக்கை தமிழ் நாட்டைத் தவிர வேறு எங்கும் இல்லை. இந்த நிலையைப் போக்க வேண்டும். 10 (ஏ) (1) விதியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களை எல்லாம் 'ரெகுலரைஸ்' பண்ணுங்கள். ஆசிரியர்கள் நிம்மதியாக வேலை செய்தால்தான், கல்வித் துறையும், மாணவர்களும் நிம்மதியாக இருக்க முடியும்.

அடுத்து, கல்விக் கொள்கைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நாங்கள் சொல்வது, இப்போதே கல்வித் துறையில் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருக்கிறது. மாடல் [illegible] என்று ஆரம்பித்து, அந்த வித்தியாசத்தை இமயமலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக மாற்றக்கூடாது என்பதுதான். இன்றைக்கு 2,000-க்கும் மேற்பட்ட பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இருக்கின்றன. 3, 4 வகுப்புகள் இருக்கும். ஒரே ஒரு ஆசிரியர். அஷ்டாவதானம்

(பிற்பகல் 5-20)

செய்வாரோ, வேறு என்ன செய்வாரோ, தெரியவில்லை. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட ஓராசிரியர் பள்ளிகள் இன்றைக்கு இருக்கின்றன. 20 பெர்சென்ட் பள்ளிக்கூடங்களுக்கு மேல் சாக்பீஸ் இல்லை, கரும்பலகை இல்லை. வகுப்பு அறைகள் கிடையாது, டீச்சர்ஸ் ஓய்வு எடுக்க அறையில்லை, கழிவறை



இல்லை. அதுபோல் மாநகராட்சிப் பள்ளிகளில் முறையாக மின்சார வசதி இல்லை. இதுதான் இன்றைய நம்முடைய நாட்டிலுள்ள கல்வியின் நிலை. இந்த நிலைமையில்தான் புதிய கல்விக் கொள்கை பற்றியும், கம்ப்யூட்டரைக் கொண்டு வருவது பற்றியும் பேசுகிறோம். இது தேவைதானா?

முறைசாராக் கல்வியைக் கொண்டு வருவதாகச் சொல்கிறார்கள். அதைப் பற்றி கல்விக் கொள்கைக் குறிப்பிலே தெளிவாக்கவில்லையே. ஏராளமாக இன்னும் டீச்சர்ஸ் நியமிக்க வேண்டிய நிலையில், ஏராளமான பள்ளிக் கூடங்கள் இன்னும் கட்டப்பட வேண்டிய அவசியம் இருக்கும் நிலையில், இது தேவையில்லாத ஒன்று. பள்ளிக்கூடத்தை வைத்து, அங்கே ஆசிரியர்கள் மாணவர்களை உட்கார வைத்து, கையில் கம்பை எடுத்துக்கொண்டு, கல்வியைக் கற்பிக்கும் நிலையிலேயே கல்வியின் தரம் இப்படி இருக்கும்போது, முறைசாராக் கல்வியை 40 லட்சம் பேர்களுக்கு போதிப்பதாகச் சொல்கிறார்களே, அப்போது எப்படி கல்வியின் தரம் உயரும்? 40 லட்சம் மாணவர்களுக்கு அடுத்த ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் முறை சாராக் கல்வியைப் பயிற்றுவிக்கப்போகிறோம் என்று புதிய கல்விக் கொள்கை கூறுகிறது. அப்படி என்றால் எல்லா மாணவர்களும் ஏகலைவன்களாக ரேடியோ, டி.வி., செய்தித்தாள் போன்றவற்றின் மூலம் கல்வியைப் போதிக்கப் போகிறார்களாம். இந்தக் கல்வி முறை இந்தியாவில் உருப்படுமா? அக்கு வேறாக ஆணி வேறாக புதிய கல்விக் கொள்கைபற்றி அரசு அலசிப் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு தான் அதுபற்றி முடிவுக்கு வர வேண்டும். அதற்கு இந்த மாமன்றமே இரண்டு நாள் ஒதுக்க வேண்டும். கல்வி அமைச்சர் அவர்கள் டெல்லிக்குப் போவதற்கு முன்பு, இந்த அவையில் நாங்கள் எல்லாம் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள 2 நாட்கள் ஒதுக்க வேண்டும். நாங்கள் சொல்லும் கருத்துக்களை அவர்கள் கேட்க அப்போது தான் வாய்ப்பு ஏற்படும். ஆகவே மற்ற எல்லா விவாதங்களையும் ஒதுக்கி வைத்து விட்டு, புதிய கல்விக் கொள்கைபற்றி விவாதிக்க வேண்டும். அதுபற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசி, விவாதித்து, அதிலுள்ள சாதக பாதகங்களை எல்லாம் தெரிந்துகொண்ட பிறகு, டெல்லிக்கு அவர்கள் சென்றால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அங்கே எங்களுடைய கருத்துக்களை அவர்கள் சொல்ல வேண்டும். அவர்களாகவே இதுகுறித்து அங்கே போய் கருத்துக்களைச் சொல்வது சரியாக இருக்காது. அந்த அடிப்படையில் இங்கே அவசியம் டீட்டெயில்ட் டிஸ்கஷன், எலாபரேட் ஆக டிஸ்கஷன் நடத்தியாக வேண்டும்.

[திரு. அ. மாயவன்] [1986 ஏப்ரல் 24

அடுத்து, இடைநிலை ஆசிரியர்களுக்கு ஒரு ஊக்க ஊதியம் கொடுத்தார்கள். அதுபோல் சிறப்பு ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஸ்ட்ரைக் அன்றைக்கு நடைபெற்றபோது, அந்த ஸ்ட்ரைக்கை உடைக்க அந்த வாக்குறுதியைப் பயன்படுத்தினார்கள். ஆனால் கொடுப்பதாகச் சொன்னார்களே தவிர, இதுவரை கொடுக்கவில்லை. அறிவித்த அறிவிப்பு இன்னும் அறிவிப்பளவில் தான் இருக்கிறது. எனவே உடனடியாக சிறப்பு ஆசிரியர்களுக்கும் அந்த ஊக்க ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் தனியார் பள்ளி ஆசிரியர்களுடைய பணிகளை எல்லாம் ஒழுங்கு பண்ணுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பு அப்படியே தான் இருக்கிறது. இங்கே அமைச்சர் அவர்களாலே கொடுக்கப் பட்ட வாக்குறுதியை நிறைவேற்றவில்லையென்று சொன்னால், நாங்கள் வேறு எங்கே போய்ச் சொல்ல முடியும்? இம் மாமன்றத்தை விட்டால் எங்களுக்கு வேறு சந்நிதி இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே கொடுத்த வாக்குறுதியை இன்னும் தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும்.

இன்றைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாள் என்றாலும் கூட, என்னைப் பொறுத்தவரையில், முழுமையாக நான் மகிழ்ச்சியாக இல்லை. காரணம் இந்த அவையில் நான் வருவதற்கு முன்பாக ஜாக்டி என்கிற ஆசிரியர் அமைப்பின் மூலமாக ஆசிரியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அப்போது எங்களுக்குப் பக்கபலமாகக் கைகொடுத்து தலைமைச் செயலக ஊழியர்கள் போராடினார்கள். அவர்கள் அரசு ஆணை ஒன்றையும் எரிக்கவில்லை. எங்களைப் போன்றவர்கள் எல்லாம், ஆசிரியர்கள் எல்லாம் 39 நாட்கள் சிறைச் சாலையில் இருந்தோமே, அதுபோல் அவர்கள் சிறைச்சாலைக்குச் செல்ல வில்லை. எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம், ஆசிரியர்களுக்கெல்லாம் 'பே கட்' இல்லை, 'சஸ்பென்ஷன்' இல்லை. ஆனால் ஒன்றுமே செய்யாமல் கோஷம் போட்டார்களே, அந்தத் தலைமைச் செயலக ஊழியர்களில் சிலரை கடந்த 4, 5 மாதங்களாக சஸ்பென்ஷனில் வைத்திருக்கிறார்கள். அப்படி என்றால் ' Might is right ' என்ற கொள்கையை இந்த அரசு 'அட்வகேட்' பண்ணுகிறது என்று தானே பொருள். எங்களுக்கு ஆதரவாக வெளியிலே நின்று கோஷம் போட்டவர்களை அரசு அப்படிச் செய்யக் கூடாது என்று சொன்னார்கள். இதுபற்றி நான் தலைமைச் செயலாளரை சந்தித்துப் பேசினேன். "எத்தகைய போராட்டமாக இருந்தாலும், இங்கே நான் அதை



1986 ஏப்ரல் 24] [திரு. அ. மாயவன்]

(பிற்பகல் 5-25)

அனுமதிக்க மாட்டேன்" என்று அவர் அப்போது சொன்னார். "ஐயா, சீஃப் செகரட்டரி திரு. சபாநாயகம் அவர்கள் காலத்தில் இதே தலைமைச் செயலக ஊழியர்கள் போராடினார்களே, அவர்கள் மீது 'சஸ்பென்ஷன்' நடவடிக்கை எடுக்கவில்லையே, நீங்கள் அந்த முன் உதாரணத்தைக் கடைப்பிடிக்கக் கூடாதா?" என்று இவரிடம் கேட்டபோது, அவர் சொல்கிறார், "நான் அந்தோணி, அவர் சபாநாயகம்" என்றார். "என்னுடைய கால கட்டத்தில் நான் அவ்வாறு நடக்க விடமாட்டேன்" என்று சொன்னார். அரசாங்கம் என்பது சீப் செகரட்டரியா, சீப் மினிஸ்டரா என்று கேட்க விரும்புகிறேன். அப்படி ஒரு ஆட்டோகிராட்டிக்காக அவர் செயல்படுவதைப் பார்த்து நாம் வேதனைப்படுகிறோம்.

(மணியடிக்கப்படுகிறது.)

நேரமில்லாத காரணத்தால், இந்தக் கல்விக் கொள்கை சரியானதாக இல்லை என்று மட்டும் தெரிவித்துக்கொண்டு, அமைகிறேன்.

* திரு. என். சி. இராகவாச்சாரி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கல்விக் கொள்கை பற்றி ஒன்றிரண்டு குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாமன்றத்திற்கு என்னை உறுப்பினராக நியமித்த மேதகு ஆளுநர் அவர்களுக்கும், என் பெயரைப் பரிந்துரை செய்த நமது முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றிலிருந்து மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கல்விபற்றிக் கூறி வருகிறார்கள். முக்கியமாக தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்கும் பின்தங்கிய குழந்தைகளுக்கும் இந்தக் கல்வி வசதி கொடுக்கப்பட்டிருக்கிறதென்றாலும், அவர்களுக்கு எப்படி வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

சாதாரணமாக கிராமப் புறங்களில் ஏழைக் குழந்தைகள், தாழ்த்தப்பட்ட குழந்தைகள், பின்தங்கியவர்கள் குழந்தைகள் என்று பார்த்தால், இரண்டு விதமாகச் சொல்லலாம். சிலர் குடிசையில் வாழ்கிறார்கள். குடியானவர்கள் குழந்தைகள், உத்தியோகஸ்தர்களின் குழந்தைகள் கல் கட்டிடத்தில் வாழ்கிறார்கள். ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு கூட்டத்தில் முன்னாள் கல்வி இயக்குநர் ஒருவர் சொன்னார். குடிசையில் இருந்து வருகிற குழந்தைகள் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புக்கு வருவதற்குள் 60 சதவீதம் பள்ளியை விட்டு விலகுகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் என்றால், குடிசையில் இருக்கும் குழந்தைகள் பள்ளியில் படிக்கும்

போது நன்றாகப் படித்தாலும், குடிசையில் காலை, மாலை நேரங்களில் போய்ப் படிக்க முடியவில்லை. ஆனால் உத்தியோகஸ்தர்களின் குழந்தைகளுக்கு மின்சார விளக்குகள், அதிகமான இடங்கள் எல்லாம் இருக்கின்றன. இதனால் குடிசையில் வாழும் குழந்தைகள் பரீட்சையில் ஃபெயில் ஆகிவிடுகிறார்கள். அதைப் பார்த்து பெற்றோர்கள் உனக்குப் படிப்பு ஏறவில்லையென்று தொழிலில் போட்டுவிடுகிறார்கள். ஆனால் வசதியுள்ள குழந்தைகள், தாழ்த்தப்பட்ட வகுப்பு குழந்தைகளோ, உத்தியோகஸ்தர்களின் குழந்தைகளோ, வசதி இருப்பதனால் நன்றாகப் படிக்கிறார்கள். அதனால் குடிசையில் உள்ள குழந்தைகள் கல்லூரி வரைக்கும் படிப்பது ரொம்ப குறைச்சல். இதற்கு ஒரு கருத்தைக் கூற விரும்புகிறேன். அதை அரசு தயவுகூர்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு தாலுக்காவிலும் போர்டிங் அண்டு லாட்ஜிங் ஸ்கூல், அதாவது மாணவர் விடுதிகள் வைத்து, பத்தாவது வகுப்பு வரைக்கும் கட்டாயமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். குடிசை வாழ் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி இருக்கிறது. இப்போது கொண்டுவந்திருக்கும் சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையிலும் நல்ல புஷ்டியாக வளர்கிறார்கள். அதே சமயத்தில் தரமான கல்வியும் வசதியும் கொடுக்கலாம். இந்த கட்டாயக் கல்வியை அமுல்படுத்த இலவசமாக 'போர்டிங் அண்டு லாட்ஜிங் ஸ்கூல்' வைத்து, எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க வைத்தால், விடுமுறையில் தாயார் தகப்பனாரிடம் அவர்களை அனுப்பலாம். மற்ற நாட்களில் நல்ல மார்க் வாங்குவார்கள். ஃபெயில் ஆக மாட்டார்கள். சாதாரணமாக எல்லோருக்கும் புத்தி இருக்கிறது. எல்லாக் குழந்தைகளுக்கும் வசதி இல்லாததால், அவர்களால் படிக்க முடியவில்லை இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு இருக்கிறது. அது எப்போது கிடைக்கிறது என்றால், கல்லூரியில், மெடிக்கல் கல்லூரியில், என்ஜினியரிங் கல்லூரியில் சேரும்போதுதான் கிடைக்கிறது. பள்ளியில் இலவசக் கல்வி கிடைக்கிறது. நான் சொல்லும் யோசனை அவர்களுக்கு நல்லதுதான். அப்படி இலவசமாக மாணவர்களை விடுதியில் தங்கவைத்து படிப்பும் கற்றுக்கொடுக்க வேண்டும். அவர்கள் உடுத்துவதற்கு உடைகள்

(பிற்பகல் 5-30)

எல்லாம் கொடுக்க வேண்டும். இந்த மாதிரி சென்னையிலே இராமகிருஷ்ணா மிஷன் நிறுவனத்தில் படித்து பல பேர் நீதிபதிகளாகவும், கலெக்டர்களாகவும் வந்திருக்கிறார்கள். அந்த மாதிரி குழந்தைகளைப் படிக்க வைத்தால், பின் அவர்களே முன்வந்து "எனக்கு ஒதுக்கீடு வேண்டாம், நானே முதல் வகுப்பில் தேர்ச்சி அடைவேன்" என்று சொல்வார்கள் என்பதுபற்றி எனக்கு ஒரு சந்தேகமும் இல்லை. இதனால் அதிகச் செலவு இருக்கக் கூடும். இருந்தாலும் இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



இப்போது சென்னையிலே டாக்டர் எம்.ஜி.ஆர். உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. குடிசைக் குழந்தைகள் மாலையில் படிப்பதற்கு அங்கே 'ஹால்' கட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் அங்கே நன்றாகப் படித்து வருகிறார்கள். சத்துணவுக் கூடங்களில் படிக்கிற குழந்தைகள் மாலையிலும் இரவிலும் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குடிசையிலே ஆடு, மாடு, கோழிகளைப் பாதுகாத்தல், தந்தை வேலையில் ஈடுபடுதல் போன்ற வேலைகளை மட்டும் கவனித்து, இவர்கள் 'பெயில்' ஆகிவிடுவார்கள். பிறகு நாம் அவர்களை படிப்பு ஏறவில்லை என்று தப்பாகச் சொல்லிவிடுவோம். படிப்பு அவர்களுக்குக் கட்டாயம் ஏறும். ஆனால் அதற்கான வாய்ப்புக்களைச் செய்து கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்து கொடுப்பதற்கு தமிழக அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 9,000 ரூபாய் உச்சவரம்பைப்பற்றி நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். பேரறிஞர் அண்ணா காலத்திலும், தந்தை பெரியார் காலத்திலும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று கோரி, அவ்வாறே கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் அப்போது தாழ்த்தப்பட்ட, பின்தங்கியவர்கள் பட்டியலில் இருந்தவர்கள் யார்? இப்போது இருப்பவர்கள் யார்? இப்போது பின்தங்கியவர்கள் பட்டியலிலே நிறையப் பேர் இருக்கிறார்கள். இருந்தாலும் அதில் மில் முதலாளிகள் வீட்டுக் குழந்தைகளும் வருகின்றன. பேருந்துகள் வைத்து நடத்தும் இலட்சாதிபதிகள் வீட்டுக் குழந்தைகள் எல்லாம் இந்தப் பட்டியலில் வந்துவிடுகின்றன. எனவேதான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் ரூ. 9,000 வருமான உச்ச வரம்பு இருக்க வேண்டியது அவசியம் என்று சொன்னார்கள். அவர்கள் கருத்தை நானும் ஆமோதிக்கிறேன். 9,000 ரூபாய் என்பதை வேண்டுமானால் பத்தாயிரம் ரூபாய் என்று மாற்றலாம்.

நான் முன்பே சொன்னபடி, பள்ளி மாணவர்கள் 'போர்டிங், லாட்ஜிங்' ஸ்கூலில் படித்தால், அக்குழந்தைகளின் பெற்றோர்கள் வருமானம் நன்றாகத் தெரியும். இதை வைத்து வருமானத்தை எளிதாகத் தெரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இதில் சிக்கல் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். இருக்கத்தான் செய்யும். இல்லையென்று சொல்லவில்லை. எந்தத் திட்டத்திலும் சிக்கல்கள் இருக்கும். அதற்காக நல்ல திட்டத்தை வேண்டாம் என்று சொல்லக் கூடாது. நான் முன்பே சொன்னது போல், ஏழைக் குழந்தைகள் எல்லாம் விடுதிகளில் படித்தால், அவர்களின்

பெற்றோர்களின் வருமானம் தெரியும். அவற்றைக் கொண்டு, அக் குழந்தைகளுக்குச் சலுகைகள் வேண்டுமா வேண்டாமா என்று எளிதாகத் தெரிந்து கொள்ள முடியும்.

அடுத்ததாக, சென்னையிலே சில பள்ளிகளில் 'வித்யா மந்திர்', 'கான்வென்ட்' பள்ளிகளில் தமிழ் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஐந்தாவது வகுப்பில்தான் ஆரம்பிக்கிறார்கள். முதல் ஐந்து வகுப்பு வரை இந்தியைத் தான் சொல்லிக் கொடுக்கிறார்கள். அக் குழந்தைகளுக்குப் பத்திரிக்கைகூட படிக்கத் தெரியவில்லை. எனவே அரசு அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து, எல்.கே.ஜி.-யிலிருந்து 'அ'-னா, 'ஆ'-வன்னா சொல்லிக்கொடுக்க கட்டளையிட வேண்டும். பல பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பில்தான் தமிழ் கற்றுக்கொடுக்க ஆரம்பிக்கிறார்கள்.

இவ்வாறாக என் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். முதன் முதலாகப் பேசியிருக்கிறேன். பிழைகள் இருந்தால் மன்னிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்வித் துறை, தமிழக அரசில் இருக்கின்ற துறைகளில் எல்லாம் மிகப் பெரிய துறை. இதன்கீழ் மூன்று இலட்சம் ஆசிரியர்கள், ஆயிரக்கணக்கான அலுவலர்கள், ஊழியர்கள், இலட்சக்கணக்கான மாணவர்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் வைத்து, இவர்களைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து, இந்தத் துறையை நடத்துவதென்பது மிகப் பெரிய கடுமையான பொறுப்பு என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே இந்தத் துறையை

(பிற்பகல் 5-35)

நடத்தும்போது, அந்தத் துறையினுடைய சாதனைகளுக்கும், அது ஆற்றி வரும் தொண்டுகளுக்கும், அது தமிழ் நாட்டில் செய்து வருகிற சேவைகளுக்கும், அதற்குக் காரணமாக அமைந்திருக்கிற அந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அவர்களுக்குப் பக்கபலமாக விளங்குகின்ற அலுவலர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் முதலில்



என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறை மிகப் பெரிய துறையாக இருக்கின்ற காரணத்தாலே, பிரச்சினைகளும் மிக அதிகம். இந்தத் துறையை மற்ற துறைகளோடு ஒப்பிடும்போது, நாளுக்கு நாள் ஒவ்வொரு நிமிடமும் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிற ஒரு துறையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக லட்சக்கணக்கான மாணவர்களைச் சமாளிக்கக்கூடிய அந்தத் துறையில் ஏராளமான பிரச்சினைகள் அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்படிப் பிரச்சினைகள் உருவாவது என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அந்தப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும், இப்படி கல்வித் துறையிலே தோன்றுகின்ற பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும் அவ்வப்போது இந்தத் துறை எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்தான் முக்கியமேயொழிய, பிரச்சினைகளே இல்லாமல் ஒரு துறை இருந்துவிட முடியாது. ஆகவே இந்த மாபெரும் துறையை நிர்வகித்து வருகிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் மற்ற அலுவலர்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக இதற்குப் பின்னணியாக இருக்கின்ற ஆசிரியர்களுக்கும் நான் முதலில் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துறை நல்ல முறையிலே மேலும் சிறப்பாக விளங்க வேண்டுமென்பதற்காக இந்த மாமன்றத்தில் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. அது புகார்களைப் போல, குற்றச்சாட்டுக்களைப் போல, ஆலோசனைகளைப் போல பல்வேறு வடிவங்களில் இருந்தாலும், இந்தத் துறை நன்றாக விளங்க வேண்டுமென்ற ஆதங்கத்தின் காரணமாக எடுத்துச் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் என்பதை இந்தத் துறையினர் நன்றாக உணர்ந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். அதற்கேற்றாற்போல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். பொதுவாக எல்லோரும் ஒவ்வொரு ஆண்டும் சுட்டிக் காட்டுகின்ற ஒரு முக்கியமான கருத்து இந்தக் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதாது என்பதுதான். ஆனால் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் எவ்வளவு தொகை ஒதுக்குகிறோம்? ஆனால் ஆண்டுக்காண்டு அது எப்படி ஏறுகிறது அல்லது குறைகிறது அல்லது அதில் வித்தியாசம் எவ்வளவு என்பதைக் காட்டித்தான் பதில்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே யொழிய, உண்மையான அளவுகளை இங்கே வைத்துப் பார்க்கும்போது, இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போதுமானதல்ல என்பதை கல்வி வல்லுனர்களும் நிச்சயமாக ஒப்புக்கொள்வார்கள். அரசு வேண்டுமென்றால் நிதி ஆதாரம் இல்லை என்று சொல்லலாமேயொழிய, ஒதுக்கப்படுகின்ற தொகை போதாது. காரணம் இந்தத் துறையின் தேவைகள் அதிகம். அதற்கு

ஏற்ப நிதி ஒதுக்கீடு இருப்பதில்லை. பலமுறை இதைப்பற்றி நாங்கள் பேசும்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கும் போது அவர்கள், "கல்வித் துறை தொடர்பான கோரிக்கைகளைப் பொறுத்த வரையில் கல்வி அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள்" என்று சொல்வார்கள். இல்லாவிட்டால் கல்வித் துறை தொடர்பான அந்தப் பிரச்சினைகளைப்பற்றி நாங்கள் எழுப்பும்போது, அந்தத் துறை நிதித் துறைக்கு உரிய முறையில் முன்மொழிவுகளை அனுப்பி வைக்காமல், அவற்றை நிதித் துறை சரியான முறையில் பரிசீலித்து முடிவு எடுக்குமென்று அவர்கள் சொல்வார்கள். இப்படிச் சொல்வது எங்களுக்கு ஒரு 'இம்பிரஷன்' ஏற்படுவதற்காக. அப்படி ஒரு கருத்து ஏற்படுகிறது என்றால், ஒருவேளை கல்வித் துறை சரியான முறையில் அந்தக் கோரிக்கைகளை அல்லது பிரச்சினைகளை நிதித் துறைக்கு அனுப்பி வைக்கவில்லையா அல்லது அவைகளை அனுப்பி வைத்து நிதித் துறை ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல என்று நிராகரித்து விட்டதா அல்லது நிதி ஆதாரம் இல்லை என்ற காரணத்தால், ஏற்றுக்கொள்ள வில்லையா? இதுபோன்ற விவரங்கள் எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே இப்படித் தொடர்ந்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்வதால், அதுவும் இப்போது கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால், நாங்கள் நிதி தொடர்பான சில பிரச்சினைகளை எழுப்பும் போது—நான் நினைக்கிறேன்—கல்வி அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அதற்குச் சரியான பதிலைச் சொல்ல முடியாது. ஆகவே ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இங்கே பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்காக அரசுத் தரப்பிலே கொடுக்கப்படுகின்ற புள்ளிவிவரம் நூறு கோடி ரூபாய் தேவை என்பது. ஆனால் அதற்கு ஒதுக்கீடு ஒரு கோடி ரூபாய். ஆனால் நமக்குத் தேவை 100 கோடி ரூபாய் என்று அரசு சொல்கிறது. ஆனால் அரசே ஒரு கோடி ரூபாய் தான் ஒதுக்கீடு செய்கிறது. அதில் வித்தியாசம், பற்றாக்குறை 99 கோடி ரூபாய். இதை நான் பழைய கணக்குப்படி சொல்கிறேன். புதிய கணக்குப்படி அது இன்னும் அதிகமாக இருக்கும். இந்தப் பற்றாக்குறையை யார் சரி செய்வது? நிதித் துறையைக் கேட்டால், கல்வித் துறையைக் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். கல்வித் துறையோடு நாங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நிதி ஆதாரம் இல்லை என்ற காரணத்தாலே, அரசு உறுதிமொழிக் குழுவின் 42-வது அறிக்கையில் கல்வித் துறை தொடர்பான உறுதிமொழிகள் எத்தனை நிராகரிக்கப்பட்டன. எத்தனை செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. எத்தனை சாக்குப் போக்குச் சொல்லி தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றன என்பது அந்த உறுதிமொழிக் குழுவின் அறிக்கையைப் படிக்கின்ற உறுப்பினர்களுக்குத்





தெரியும். இந்த மாமன்றத்திலே கல்வி அமைச்சர் அவர்கள் உறுதிமொழி கொடுக்கிறார்கள். மற்ற அமைச்சர்களும் உறுதிமொழி கொடுக்கிறார்கள். இருந்தாலும் ஒரு உறுதிமொழி கொடுத்தால், It is a commitment. அரசாங்கத்தினுடைய 'Commitment'. அது ஏதோ மேடையிலே பேசிவிட்டுப் போவதுபோல் அர்த்தம் அல்ல. வெளியிலே பேசுவது என்பது வேறு. பேரவையிலோ, மேலவையிலோ உறுதிமொழி கொடுத்தால் அது 'Commitment'. அதற்கு சம்பந்தப்பட்ட துறையும், நிதித் துறையும் இணைந்து அந்த உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு வழிவகைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமேயொழிய, அந்த உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் இருப்பதற்கு சாக்குப்போக்குகளைச் சொல்லும் நிலைமைகள் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால், அந்தத் துறையிலே இருக்கும் அதிகாரிகள் திறமைக் குறைவானவர்கள், லாயக்கற்றவர்கள் என்று கூற வேண்டியிருக்கும்.

(பிற்பகல் 5-40)

ஏனென்றால் இது அரசாங்கத்தின் உறுதிமொழி. தனி மனிதனுடைய உறுதிமொழி என்றால், அதைத் தள்ளி வைத்து விட்டுப் போய்விடலாம். அரசு உறுதிமொழியை நிறைவேற்ற முடியவில்லை என்றால், என்ன அர்த்தம்? அதற்கு என்று ஒரு உறுதிமொழிக் குழு, அதற்கு ஒரு தலைவர், அதற்கு என்று உறுப்பினர்கள், அவர்கள் பலமுறை கூடி விவாதிப்பது, அதற்குப் பிறகு உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டதா இல்லையா என்று முடிவு தெரிவதற்கே 2, 3 வருஷம் ஆகிறது என்றால், என்ன பொருள்? உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள் அதை அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். 3 மாத காலத்திற்குள் ஒரு உறுதிமொழியின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இது நடைமுறையில் பின்பற்றப்படுவதே இல்லை. நிதித் தேவையைப் பொறுத்து, பல உறுதிமொழிகள் கல்வித் துறையால் தள்ளப்பட்டிருக்கின்றன. நிதி போதிய அளவில் ஒதுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல. கல்வித் துறை தொடர்பான பல்வேறு உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதே இல்லை. எல்லாம் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன, அல்லது தள்ளி வைக்கப்பட்டிருக் கின்றன, அல்லது பின்னால் பார்க்கலாம் என்று ஒரு சாக்குப் போக்கான நிலை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிதித் துறையில் போதுமான பண மில்லை என்று சொல்லுகிறார்கள் என்கிற பதிலை கல்வித் துறையைச் சார்ந்தவர்கள் உறுதிமொழிக் குழுவுக்கு அனுப்பி வைக்கிறார்கள். எனவே தான் ஒன்றை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெளிவாகச் சொல்ல விரும்பு

ங்கிறேன். கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம் நடக்கும்போது, நிதித் துறையின் செயலாளர் அவர்கள் இங்கே அவையில் இருக்க வேண்டும். அவ்வாறு அவர் இங்கே இருந்து மன்றத்தின் உறுப்பினர்களுடைய கருத்துக் களையும் கோரிக்கைகளையும் பிரச்சினைகளையும் நேரடியாகக் கேட்டுத் தெரிந்தால்தான், அதற்கு ஏற்ப நிதித் துறைச் செயலாளர் நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். ஆனால் துரதிருஷ்டவசமாக நிதித் துறையின் செயலாளர் இப்படிப்பட்ட முக்கியமான துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புகள் மீது விவாதம் நடக்கும்போது, இங்கே வருவதில்லை. இந்தத் துறைக்காக மட்டும் சொல்லவில்லை. மற்ற அனைத்து முக்கியமான துறையைப்பற்றியும் இங்கே விவாதிக்கும்போது, அவர் பார்வையாளராக இங்கே வந்து அமர்ந்து பார்க்க வேண்டும். ஆனால் கல்வித் துறை அதிகாரிகள் மட்டும்தான் இங்கே இருக்கிறார்கள். நிதித் துறைச் செயலாளர் அவர்களே இங்கே இருந்தால், சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அது உதவுவதாக இருக்கும். அப்போதுதான் முக்கியமான பிரச் சினைகள் எவை என்று மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்து வைக்க ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட ஏற்பாட்டை இனியாவது செய்வதற்கு மாண்புமிகு தலைவர் அவர்கள் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தேசிய கல்விக் கொள்கைபற்றி அனைத்து உறுப்பினர்களும் இங்கே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைப்போல், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அதை இங்கே விவாதித்து விட முடியாது. மேலவையில் உண்மையிலேயே இரண்டு நாட்களுக்காவது விவாதித்து, விளக்கமாக, விரிவாக, தெளிவாக விவாதித்து—கருத்துக்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம்—தெரிவிக்க வேண்டும். மேலவையில் கல்வித் துறையைச் சார்ந்த பலரும் இடம் பெற் றிருக்கிறார்கள். எனவே இங்கே அவர்களெல்லாம் தேசியக் கல்விக் கொள்கை மீது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளிக்க வேண்டும். அப்படி தனியாக விவாதம் நடத்தி கருத்துக்களைக் கேட்டறிந்து தமிழக அரசு ஒட்டுமொத்த மாகத் தனது கருத்துக்களை மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தேசியக் கல்விக் கொள்கையை நாட்டில் அமுல்படுத்த வேண்டுமென்றால், 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மட்டும் 30,0000 கோடி ரூபாய் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் ஒரு கூட்டத்தில் அவ்வாறு பேசியிருக்கிறார். 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ. 30,000 கோடி ரூபாய் தேசிய கல்விக் கொள்கையை அமுலாக்க தேவைப்படுகிறது என்று அவர் சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதோ வெறும் ரூ. 6 ஆயிரம் கோடிதான். மீதியுள்ள 24,000 கோடி ரூபாயை எப்படி மத்திய அரசு கண்டு பிடிக்கப் போகிறது என்றோ எந்த விதமான வழிகளில் அதைப் பெறப் போகிறது என்றோ இதுவரை சொல்லவில்லை. அதைக் குறித்து எந்தவிதமான ஆக்கபூர்வ மான ஆலோசனையும் மத்திய அரசால் சொல்லப்படவில்லை. அதற்கான நிதியாதாரம் எங்கே இருந்து வரப் போகிறது என்று யாருக்கும் தெரிய வில்லை. அப்படி ரூ. 24,000 கோடி பெறப்படவில்லை என்றால், இந்த தேசிய கல்விக் கொள்கை என்பது அமுல்படுத்தப்பட முடியாத, ஏட்டளவில் மட்டும் இருக்கிற ஒன்றாகத்தான் இருக்கும். அல்லது கோத்தாரி கமிஷன் அறிக்கை போல் இதுவும் ஒரு அறிக்கையாகத்தான் இருக்க முடியுமே தவிர, வேறு அல்ல. எனவே இதற்குத் தேவையான நிதியாதாரத்தை மத்திய அரசு எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறது என்பது இன்னும் தெளிவாக்கப் படவில்லை. ஆக, தேசிய அளவில் ரூ. 30,000 கோடி தேவை என்றால், தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரு கணிசமான தொகை தேவைப்படும். ஆயிரக் கணக்கான கோடி ரூபாய் இதற்குத் தேவைப்படும். அதைப்பற்றி யும் கூட இங்கே தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. நமக்குத் தேவைப்படும் இந்த நிதியாதாரத்தையும் நம்மால் கண்டு பிடிக்க முடியாவிட் டால், புதிய கல்விக் கொள்கை என்பது வெறும் கருத்தரங்குகளும் விவாதங் களும் நடத்துவதற்குத் துணை புரியலாமே தவிர, உருப்படியான காரியம் எதையும் செய்ய வழி செய்யாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-45)

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

2. சந்திர கிரஹணம்—குறித்து.

திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தகவலுக்காக ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டிற்கு சம்பந்தமான பிரச் சினைதான். எனக்கு அந்தத் தகவலிலே மாறுபாடு உண்டு. இன்றைய தினம் சந்திர கிரஹணம் என்று சொல்லிவிட்டு, பலர் குளிப்பதற்காகச்

சென்றுவிட்டார்கள். குளிக்கவில்லை என்றால் பாவம் என்று சென்றுவிட்டார்கள். அந்தப் பாவம் எல்லோருக்கும் சேருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : காலையிலே குளிப்பவர்களுக்குப் பாவம் கிடையாது.

திரு. எஸ். ஆர். இராதா : நிலவைப் பிடிக்கலாம் என்று பாடம் படிக்கும் இந்தக் காலத்தில் குளிப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அந்த நிலவுக்கு மதிப்பு கிடையாது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : குடிப்பதற்கா, குளிப்பதற்கா ?

திரு. எஸ். ஆர். இராதா : குளிப்பதற்குத்தான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன் அவர்கள் பேசும்போதுதானா இந்தக் கிரஹணம் இங்கே வர வேண்டும்.

3. கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாடல் பள்ளிகளுக்கு மத்திய அரசு இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதை தமிழக அரசே வாங்கிக்கொண்டு, நாமே அப்படிப்பட்ட பள்ளிகளை நம்முடைய மொழிக் கொள்கைக்கேற்ப நடத்தலாம். மத்திய அரசோடு அந்த அளவிலே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் வாதிட வேண்டும். அவர்கள் செய்யும் ஒதுக்கீட்டை நம்மிடம் கொடுக்கட்டும். இந்தி மொழியைத் தவிர மற்ற வகையில் பிரச்சினைகள் கிடையாது. இந்தி மொழியை போதிப்பதில்லை என்ற பிரச்சினையைத் தவிர வேறு எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லாமல் இருக்கும்போது, மத்திய அரசிடம் நாமே வாதாடி அதைப் பெற வேண்டும். அண்மையிலே வெளியிடப்பட்ட மத்திய அரசின் அறிக்கையிலே இது குறிப்பிடப்பட்டிருக்கிறது. யூனிட்டி இன் டைவர்சிட்டி—வேற்றுமையில் ஒற்றுமை என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில், இந்தப் புதிய கல்விக் கொள்கை அமையும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு என்ன மொழிக்



கொள்கையைப் பின்பற்றுகிறதோ அந்த அடிப்படையிலே மாதிரிப் பள்ளிகளை நடத்த அதற்கான நிதி ஒதுக்கீட்டை மத்திய அரசிடம் பெற்று வாங்கி, அந்தத் திட்டத்தை இங்கே உருவாக்கும் வகையில் மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அண்மையிலே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், நிர்வாகச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் தொடக்கக் கல்விக்காக, அதனுடைய தரத்தை உயர்த்துவதற்காக, அந்த ஆசிரியர்களுடைய பணியை உயர்த்துவதற்காக தனி இயக்குநரகம் அமைக்கப்படும் என்று பேரவையிலே சொல்லியிருக்கிறார்கள். தொடக்கக் கல்விக்காக தனி இயக்குநரகம் அமைக்கப்படும் என்ற அளவிலே நின்றுவிடாமல், லெட்டர் அண்டு ஸ்பிரிட் என்ற அளவில் முழுமையாக தொடக்கக் கல்விக்கென்று ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி தனி இயக்குநர் பதவியைத் தோற்றுவிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், இயக்குநருக்கு உறுதுணையாக மேல் மட்டத்திலே அதிகாரிகளும், அவர்களுக்கு உறுதுணையாக மாவட்டக் கல்வி அலுவலர்களையும், அவர்களுக்கு உறுதுணையாக வட்டாரக் கல்வி அலுவலர்களையும் தனியாக அமைத்தால்தான் அரசின் நோக்கமும், ஆசிரியர்களின் நோக்கமும் நிறைவேறும். இல்லாவிட்டால் யாரோ ஒருவருக்குப் பதவி உயர்வு கொடுத்ததோடு நின்றுவிடும். ஒருவருடைய பதவி அப்கிரேட் செய்யப்பட்டு இயக்குநராக நியமிக்கும் நிலையோடு நின்றுவிடாமல், தனிப்பட்ட அதிகாரிக்கு மட்டும் நன்மை செய்த மாதிரி நின்றுவிடாமல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தைச் செய்ய முடியாது. ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தெரிவித்ததைப் போல, தொடக்கக் கல்விக்காக தனி இயக்குநரகம் அமைத்து முழுமையாகச் செயல்படுத்தும் நடவடிக்கையில் கல்வித் துறை ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உடற் பயிற்சிக் கல்வியைப் பொறுத்த வரையில், ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு 'ரீஜனல் இன்ஸ்டாக்டர் ஆஃப் பிசிக்கல் எஜுகேஷன்' என்ற பதவி இருக்கிறது. அது போதாது. விளையாட்டுக்கு முக்கியத்துவம் தர வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆகவே ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒன்று என்று இருப்பதை மாற்றி, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒன்று என்று இப்பதவிகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நாட்களாக, இரண்டு மூன்று ஆண்டுகளாக 'ஸ்டேட் எஜுகேஷன் கன்சல்டேட்டிவ் கமிட்டி' கூட்டப்படவில்லை. மறுபடியும் அதனுடைய கூட்டம் கூட்டப்படவிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தால், நன்றாக இருக்கும். புதிய கல்விக் கொள்கைபற்றி விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, இந்தக் கமிட்டியின் கூட்டத்தைக் கூட்டினால், நல்ல முறையிலே விவாதிக்க உதவியாக இருக்கும்.

திரி டையர் டீச்சர்ஸ் ஒரிவன்செஸ் கவுன்சில் என்பது அமைக்கப்பட்டு இரண்டு, மூன்று ஆண்டுகள் ஆகியும், அது எந்த நோக்கத்திற்காக அமைக்கப் பட்டதோ அந்த நோக்கத்திற்கேற்ப சரியான முறையில் செயல்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

கல்வித் துறை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதனுடைய நோக்கங்கள், அதனுடைய நடைமுறைகள், எதற்காக அது அமைக்கப்பட்டது என்பவற்றை மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள் சரியான முறையில் புரிந்து கொள்ளவில்லை என்றுதான் நினைக்கிறேன். அப்படிப் புரிந்துகொள்ளாத காரணத்தினாலேதான், பலமுறைகள் கூட்டப்பட வேண்டிய காலகட்டத்தில் அந்த திரி டையர் கவுன்சில் கூட்டப்படவில்லை. அதிலே அலட்சியப் போக்கு இருக்கின்றது. இதையும் இந்தத் துறையி னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன்.

இன்னொன்று இந்தத் துறையைப் பொறுத்தவரையில், நம்முடைய பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், இன்று பள்ளிக் கல்வி இயக்குநராகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற அதிகாரி அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்பட வேண்டும் என்று நினைக்கின்றார்கள். அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படுகின்றார்கள். யாராவது முறையீடுகள் கொடுத் தால், அவர்களுடைய அதிகார வரம்பிற்குள் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார்கள். அதற்கான நடவடிக்கையை எடுக்கின்றார்கள். அதற்கேற்றவாறு மாவட்டத்திலே இருக் கின்ற அதிகாரிகள் எல்லாம் சரியான முறையில் ஒத்துழைப்பு தருவதில்லை. அது வேதனையாக இருக்கின்றது. நம்முடைய மாவட்டக் கல்வி அதிகாரி களுக்கு அந்தக் கடிதங்களை அனுப்புகின்றார்கள். பள்ளிக் கல்வி இயக்கு நரிடமிருந்து அனுப்பப்படுகின்ற அந்தக் கடிதங்களிலே பார்த்தால், அதிலே முத்திரைகள் இருக்கும். சாதாரண கடிதம், அர்ஜண்ட் கடிதம், மோஸ்ட்



அர்ஜண்ட் கடிதம், டாப் பிரையாரிட்டி கொடுக்கவேண்டிய கடிதம் என்று அதில் பலவிதமாக இருக்கும். அப்படிப் பிரித்து அனுப்புகின்றார்கள். அப்படி 'டாப் பிரையாரிட்டி' என்று போடப்பட்ட கடிதத்தை நம்முடைய பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் மாவட்டங்களுக்கு அனுப்பும்போது, என்று அந்த கடிதம் அங்கு வந்ததோ அன்றைக்கே அந்த கடிதத்தைப் பிரித்துப்பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனாலேதான் 'டாப் பிரையாரிட்டி' என்று போடுகிறோம். ஆனால் அந்தக் கடிதத்தை அவர்கள் பிரித்துப் பார்க்கவே 10 நாட்கள் ஆகின்றன. மாவட்ட அதிகாரிகள் அலுவலகத்திலே 'டாப் பிரையாரிட்டி' என்று போட்டு, 'மோஸ்ட் இம்பார்ட் டெண்ட்' என்று போட்டு அனுப்புகின்ற கடிதங்களைப் பிரித்துப் பார்க்கவே 10, 15 நாட்கள் ஆகின்றன என்றால், எந்த அளவுக்கு அவர்கள் அலட்சியப் போக்குடன் நடந்துகொள்கின்றார்கள் என்பது தெரிகிறது. அதற்குத் தான் நான் சொல்கிறேன், இந்த மாவட்ட அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் சரியான முறையில், விரைவான முறையில் காரியங்களைச் செய்யும்படியான அளவுக்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் துறையினுடைய அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவர்கள் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய அளவுக்கு கடுமையான எச்சரிக்கைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் பொதுப் படையாகவே சொல்கிறேன். இது மாநிலம் முழுவதும் இருக்கக் கூடிய சூழ்நிலைதான். அதனால்தான் குறிப்பிட்டு உதாரணங்கள் சொல்ல வில்லை. ஆகவே தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலே இருக்கின்ற அலுவலக அதிகாரிகளிடம் இருக்கின்ற ஆர்வம் மாவட்ட அலுவலகங்களில் இருக்கின்ற அதிகாரிகளிடமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஆர்வம் அங்கும் பிரதிபலித்தால்தான் ஆசிரியர் களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அங்கே பிரச்சினைகள் தேங்காது இருக்கும். அப்படி இல்லாவிட்டால், அங்கே பிரச்சினைகள் தேங்கி அதனுடைய பிரதிபலிப்புகள் இங்கே வரும். இதுகுறித்து விரை வான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய கல்விக் கொள்கையிலே நம் ஆசிரியர்கள் கோரிக்கைகள் சம்பந்தமாக நான் எதுவும் சொல்லப்போவதில்லை. தாராளமான வகையில் நமது மாண்புமிகு தலைவர் அவர்கள் அனுமதித்ததன் பேரில், நம்முடைய பிரதிநிதிகள், நண்பர்கள் எல்லாம் மிகத் தெளிவாகவே எடுத்துச் சொல்லி விட்டிருக்கின்றார்கள். நான் அவர்கள் சொல்லிய அந்தக் கோரிக்கைகளை மீண்டும் வலியுறுத்திக் கொள்கிறேன். ஆனால் அரசினுடைய அனுரு

முறையில் ஆசிரியர்கள் சம்பந்தமான கல்வித் துறையில் உள்ள கொள்கையிலே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை அல்லது டிஸ்கிரிமினேசன்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முரண்பாடுகள் என்று சொல்லக்கூடியவைகளை நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இருக்கின்றது. இங்கே ஒரு சிலவற்றை, நம்முடைய கொள்கையிலே இருக்கின்ற குறைபாடுகளை, நண்பர் திரு. பாயவன் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, அரசுப் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே இருக்கக்கூடிய குறைகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசுப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகளை தனியார் பள்ளி, நகரவைப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதில்லை. கொள்கையிலே உள்ள கோளாறு அது. Discrimination.

இரண்டாவதாக, 1—6—1983 முதல் ஹையர் கிரேட் ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இவர்களுக்கு பயிற்சிக் காலத்திற்கு கூடுதலாக ஒரு ஊதிய உயர்வு என்று அறிவிப்பு செய்தோம். 1981 லேயே செய்தோம். ஆனால் அதைப் போன்று பயிற்சியைப் பெற்ற உயர்நிலைப் பள்ளியிலே உள்ள ஆசிரியர்களுக்கு அல்லது மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தக் கூடுதல் ஊதிய உயர்வு, பயிற்சி இருந்தும், கொடுக்கப்படவில்லை. இது ஒரு discrimination. அது நம்முடைய கொள்கையிலே உள்ள கோளாறு.

தனியார் பள்ளி ஆசிரியர்கள் வருங்கால வைப்புநிதிக்கு 4½ பர்செண்ட் வட்டி தரப்படுகின்றது. ஆனால் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு 10 சதவிகிதம் வட்டி கொடுக்கப்படுகின்றது. வித்தியாசம் 5½ சதவிகிதம் இருக்கின்றது. இது கொள்கையிலே உள்ள ஒரு கோளாறு. Discrimination.

அதைப் போலவே நாம் ஒரு காலத்தில் 5, 5 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை, முதல்நிலை தமிழ் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு, மேம்பாடு செய்தோம். அதைப்போல ஹையர் கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பதவி மேம்பாடு செய்தோம். அதைப்போலவே பி.டி. பட்டம் பெற்ற, புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களை, சிறப்பு நிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக, முதல் நிலை தமிழ் ஆசிரியர்களாகப் பதவி உயர்வு, மேம்பாடு செய்ய வேண்டும் என்ற விட்ட கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இங்கேயும் discrimination. இருக்கின்றது. நடுநிலைப் பள்ளிகளிலே இருக்கின்ற





(பிற்பகல் 5-55)

பி. டி. பட்டதாரி தலைமை ஆசிரியர்களுக்கு 'டியூட்டி அலவன்ஸ்' கிடையாது. ஆனால் அதே பள்ளிகளில் உள்ள இடைநிலை ஆசிரியர்களாக உள்ள கூடுதல் தலைமை ஆசிரியர்களுக்கு 'டியூட்டி அலவன்ஸ்' உண்டு. இங்கேயும் பாரபட்சம். 'இன்சென்டிவ்' என்பது மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல, தலைமை ஆசிரியர்களுக்கு, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. இந்தக் கொள்கையிலும் பாரபட்சம் இருக்கிறது.

அடுத்து, break condonation பணித் துண்டிப்பு காலத்திற்கு தவிர்ப்பு வழங்குவது என்பது 3—3—1973 க்கு முன்பு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு உண்டு; 3—3—1973 க்குப் பிறகு நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இங்கேயும் Discrimination. 10,000 இடைநிலை உதவியாளர்களை எல்லாம் சர்வீஸ் கமிஷன் வரம்பை மீறி ஒரே ஆணையில் பணி நிரந்தரம் செய்தோம். இன்றைக்கு 10,000 தற்காலிக ஆசிரியர்கள் பதவி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். காரணம், சர்வீஸ் கமிஷன் என்று சொல்லுகிறோம். எப்படி நாம் 10,000 ஜூனியர் அசிஸ்டன்டுகளுக்கு உரிமையும், சலுகையும் கொடுத்தோமோ அதைப்போன்று 10,000 ஆசிரியர்களுக்கும் அதைக் கொடுத்து, தேர்வாணைக் குழுவின் வரம்பிலிருந்து அவர்களை நீக்கி, அவர்களைப் பணி வரன்முறை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யவில்லை. இது Discrimination.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு ஒதுக்கிய நேரம் கடந்து 5 நிமிடங்களாகிவிட்டது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: தலைவரவர்களே, விரைவில் முடித்துக் கொள்கிறேன். இந்தப் பாரபட்சங்களை எல்லாம் நீக்குகின்ற வகையில் கல்விக் கொள்கை சீராக அமைய வேண்டும். கல்விப் பாடத் திட்டமாக இருந்தாலும், ஆசிரியர்களாக இருந்தாலும், மாணவர்களாக இருந்தாலும், பாரபட்சம் இருக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்ட மன்றப் பேரவையிலே ஒரு முக்கியமான அறிவிப்பு கொடுத்தார்கள். அதாவது 11 ஆம் வகுப்பு 'ஏ' பிரிவில் பயாலஜி பாடத்திற்கு மாற்றுப் பாடங்கள் அறிவித்திருக்கிறார்கள். அது விமர்சனமாகியிருக்கிறது. சென்ட்ரல் போர்ட் கீழுள்ள பள்ளிகளில் பயாலஜி 'ஏ' குரூப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு பயாலஜி இருக்கும்

போது, நம்முடைய பள்ளிகளில் பயாலஜி பாடம் இல்லாமல் போனால், மாணவர்கள் இன்ஜினியரிங், மெடிகல் கல்லூரிகளில் சேரும்போது, நம்முடைய மாணவர்கள் பின்னுக்குத் தள்ளப்படுவார்கள். சென்ட்ரல் போர்ட் கீழ் உள்ள பள்ளிகளில் படித்த மாணவர்கள் முன்னுக்குத் தள்ளப்பட்டு, நம்முடைய பள்ளிகளில் படித்த மாணவர்கள் பின்னுக்குத் தள்ளப்படும் நிலைமை இருக்கிறது. ஆதலால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் இந்தத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, தேர்வு முறை பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். தேர்வு முறையில் உடனடியாக சீர்திருத்தம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால், ஆசிரியர்கள் ஒட்டுமொத்தமாகத் தேர்வுப் பணிக்குப் போக மாட்டோம் என்று சொல்லும் அளவுக்குத் தள்ளப்படுவார்கள். தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யும் ஆசிரியர்கள் இன்று தாக்கப்படுகிறார்கள். அவர்கள் கடுமையாகத் தாக்கப்படுவது மட்டுமல்ல, பலவிதமான சோதனைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். தென் ஆற்காடு மாவட்டத்தில் தேர்வுப் பணியை சரியான முறையில் செய்யும் ஒரு ஆசிரியர். திண்டிவனத்தில் அவரை 50, 60 மாணவர்கள் தாக்கி, அவருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டு, காவல் துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னொரு ஆசிரியை—அவர் வழக்கு தொடுக்க விரும்பவில்லை. அவரை மானபங்கப்படுத்தும் அளவுக்கு நிகழ்ச்சி நடந்தது. செஞ்சியிலே அது நடந்தது. பெண்மைக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால், அவர் புகார் செய்யவில்லை. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளமாக நடைபெறத் துவங்கிவிட்டது. இதற்கெல்லாம் மூலகாரணமாக இருக்கும் தேர்வு முறையை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலே 10 வது வகுப்பிலே Practical Examinations வைத்திருக்கிறார்கள். மாநில அரசின் பாடத் திட்டத்தில் அது இல்லாததால், மதிப்பெண்கள் பெறும்போது நம்முடைய மாணவர்கள் குறைவாகப் பெறுகிறார்கள். எனவே 10 ஆம் வகுப்பில் அறிவியல் போன்ற பாடங்களில் செய் முறைத் தேர்வை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: (மணி அடித்து) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எல்லாம் முக்கியம். இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும் இப்போது நேரம் முக்கியம்.



திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, அரசுத் தேர்வுத் துறையைப் பொறுத்தவரையில், இப்போது தேர்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விடை திருத்தும் பணி எல்லாம் நடைபெறுகிறது. அதற்காகக் கொடுக்கப்படும் ஊதியமானது போதுமானதாக இல்லை. மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் அதை உயர்த்த வேண்டும். அதைப் போல தேர்வுப் பிரிவிலே செக்ஷன் ரைடர்ஸ் என்று இருப்பவர்கள் ஒரு நாளைக்கு 12 ரூபாய் பெறுகிறார்கள். கேஷுவல் லேபரர்ஸ்க்கு 18 ரூபாய் தரப்படுகிறது. அங்கேயுள்ள செக்ஷன் ரைடர்சுக்கு 12 ரூபாய்தான் தரப்படுகிறது. அதை 30 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை

(பிற்பகல் 6-00)

வைத்திருக்கிறார்கள். அதற்கும் ஆவன செய்ய வேண்டும். அதைப்போல தேர்வுத் துறை அலுவலகத்திலே பணியாற்றுகிறவர்களுக்குச் சிறப்பூதியம் வழங்க வேண்டுமென்று வைத்துள்ள கோரிக்கையையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வொக்கேஷன் பிரிவை எடுத்துக்கொண்டால், பார்ட் டைம் என்கிற முறையில் தொழிற் கல்வியை கற்றுத் தருகின்ற முறை நமக்கு வெற்றியைத் தேடித் தரவில்லை. என்ன தான் வாதங்களை எடுத்துச் சொன்னாலும், குறைந்தபட்சம் பகுதி நேர ஆசிரியர்கள் ஒரு வாரத்தில் பல பீரியட் வகுப்பு நடத்த வேண்டியிருக்கிறது. அப்படி எடுத்தும்கூட, பகுதி நேர ஆசிரியர்கள் எந்தவிதமான உரிமையும் சலுகையும் இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் பணியில் தொடரும் நிலையை மாற்றி, அவர்களுக்கு இன்னும் கூடுதலாகப் பணிச் சுமையை கொடுத்து, முழு நேர ஆசிரியர்களாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்நிலைக் கல்விக்குரிய தொழில் பிரிவிற்கு நான் சொல்லிய வாய்ப்பு வசதிகளை அளிக்க வழிவகை காண வேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, கல்விக் கொள்கை பற்றிய இந்த விவாதத்திலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில், கட்சிக் கண்ணோட்டத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகவேண்டிய அவசியமே இல்லை என்பதை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நாடு முழுவதும், நாடு தழுவிய ஒரு விவாதம், கருத்துப் பரிமாற்றம் தேவை என்பதை உணர்ந்து தான், கல்வியைப் பொறுத்தவரை, சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் மத்தியக் கல்வி அமைச்சகம் ஒரு அறிக்கையைத் தயாரித்தது. கட்சிக்கு அப்பாற்பட்டு நின்று, பல்வேறு தரப்பினரும் இதிலே அணுகி நல்லமுறையில் ஒரு புதிய கல்விக் கொள்கையை உருவாக்க வேண்டுமென்று உருவான திட்டத்தின் அடிப்படையில், நாம் அதனை உருவாக்கும் கால கட்டத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். அதை உணர்ந்ததால்தான், அரசியல் சாசனத்தை ஏற்படுத்தியபோதே, இதற்கான வழிவகையையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். படிப்பறிவு இல்லாதவர்கள் நிறைய இருக்கின்ற இந்த நாட்டிலே, ஜனநாயக நாட்டிலே அத்தகைய ஒரு நிலை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் 6 வயதிலிருந்து 14 வயது வரை, 8 ஆண்டுக் காலத்திற்கு, வயது வந்த அனைவருக்கும் கட்டாய இலவசக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற ஒரு நிலையை 1951 ஆம் ஆண்டிலேயே ஏற்படுத்தினார்கள். 1951 போய், 1961 போய், 1971 போய், 1981-ம் போய் இன்றைக்கு நாம் 1986 ஆம் ஆண்டில் இருக்கிறோம். அப்படியும் இத்தனை ஆண்டுகளாக அரசியல் சாசனத்தில் ஏற்படுத்திய அந்த லட்சியத்தை நாம் அடைய முடியவில்லை. அதை நாம் அனைவரும் ஒப்புக்கொண்டு தான் ஆக வேண்டும். ஆகவே தான் இன்றையதினம் இதிலே புரட்சிகரமான மாறுதலை செய்தால் ஒழிய, நாம் அந்தக் குறிக்கோளை அடைய முடியாது என்ற காரணத்தினால், மத்திய அரசே ஒரு அறிக்கையைத் தயார் செய்திருக்கிறது.

இந்த சமயத்தில் ஒன்றை நான் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என கருதுகிறேன். இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு சுதந்திரம் அடைந்த தான்சானியா நாட்டை எடுத்துக்கொண்டால், அந்த ஆப்பிரிக்கா நாடு பொருளாதாரத்தில் நம்மை விட பின்தங்கிய நாடு. அங்கே 80 சதவிகிதம் படித்தவர்களுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. படித்தவர்களுடைய எண்ணிக்கை அங்கே வளர்ந்திருக்கும் நிலையில், கல்வித் துறையில் நம்மை விட பின்தங்கிய ஒரு நாடு மேம்பாடு அடைந்திருக்கும் நிலையில், இதிலே நாம் அனைவரும் கட்சிக் கண்ணோட்டத்தோடு பாராமல் ஒரு நல்ல முடிவுக்கு





வந்தால், நல்லமுறையிலே சமுதாய மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பாக இருக்கும். இதற்குத் தடையாக எங்கே குறை இருக்கிறது என்பதைப்பற்றி நாம் அனைவரும் தீர்க்கமாகச் சிந்தித்தாக வேண்டும்.

இன்றையதினம் நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் 550 கோடி ரூபாயை தமிழக அரசு கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது. 24 விழுக்காடு என்று சொல்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியது போல், இன்னும் பல்வேறு துறைகளுக்கு, குறிப்பாக ஆதி திராவிடர் நலத் துறை, பின்தங்கிய சமுதாய நலத் துறை, மருத்துவக் கல்வித் துறை, பொறியியல் கல்வித் துறை, கால்நடை மருத்துவத் துறை, இன்னும் சத்துணவுத் திட்டத்திற்காக செலவிடும் தொகை இவை எல்லாவற்றையும் கணக்கிட்டால் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் தொகையின் விழுக்காடு இன்னும் அதிகமாகும்.

இவ்வளவு செலவு செய்தும் கல்வித் துறையிலே என்ன சாதனையை நிகழ்த்தியிருக்கிறார்கள் என்று பார்த்தோமானால், 1 ஆம் வகுப்பிலேயிருந்து 5 ஆம் வகுப்பு வரையில் படிப்பவர்களை எடுத்துக்கொண்டால், 'டிராப்ட் அவுட்' என்கிற வகையிலே இடையிலே படிப்பை விட்டு நின்று விடுகிறவர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால், 23 சதவிகிதம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இதிலேயே ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி சமுதாயத்தினரை மட்டும் கணக்கெடுத்துப் பார்த்தால், 50 சதவிகிதம் பேர் இடையிலேயே வெளியேறி விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதுபோல பெண்களில் மூன்றில் ஒரு பங்கினர் வெளியேறி விடுகிறார்கள். 8 ஆம் வகுப்பு வரை பார்த்தால், 8 ஆம் வகுப்பு வரை படிக்க வராமலேயே பலர் வெளியேறி விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை எல்லாம் சேர்த்துத்தான் 36 சதவிகிதத்தினர் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டுச் சொல்கிறார்கள் என்றால், நாம் அதுகுறித்தும் சிந்திக்க வேண்டும். கல்விக்காக எவ்வளவோ நாம் செலவு செய்கிறோம் என்பதில் சந்தேகமில்லை. புள்ளிவிவரத்தைப் பார்த்தால், உலகத்திலே பல்வேறு நாடுகளை எடுத்துக்கொண்டால், கல்விக்காகச் செலவிடுவதை, தேசிய உற்பத்தி அளவில் பார்த்தால், ஏறத்தாழ 8 சதவிகிதம் கல்விக்காகச் செலவு செய்வதாக அந்தப் புள்ளிவிவரம் கூறுகிறது.

(பிற்பகல் 6-05)

இந்த நாட்டினுடைய தேசிய உற்பத்தியில் கல்வியில் நாம் செலவு செய்வது 4 சதவிகிதத்திற்கும் குறைவாகத்தான் இருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. காரணம் போதுமான நிதியாதாரம் இல்லையென்றால், எவ்வளவு நாம் முயற்சித்தாலும், இந்த லட்சியத்தை அடைய முடியாது.

ஆனால் இன்றையதினம் கொடுக்கக்கூடிய கல்வியானது தரமாக இருக்கிறதா வென்றால், அதுவும் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். உதாரணமாக, The National Council of Educational Research and Training என்ற நிறுவனம் அகில இந்திய அளவில் ஒரு ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். அந்த அறிக்கையைப் பற்றி பலர் இங்கேயும் பேசினார்கள். ஏராளமான பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லை. இந்தியா முழுவதற்கும் உள்ள புள்ளி விவரம் இது. அந்தப் புள்ளி விவரப்படி, 2,937 பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லை. 89 சதவிதம் துவக்கப் பள்ளிகளில், 70 சதவிதம் நடுநிலைப் பள்ளிகளில், 37 சதவீதம் உயர்நிலைப் பள்ளிகளில், 16 சதவீதம் மேல்நிலைப் பள்ளிகளில் கக்கூஸ் வசதி கிடையாது. 1½ லட்சம் முதல் இரண்டு லட்சம் பள்ளிகளில் உட்கார பெஞ்ச் வசதி, பலகை, பாய் வசதி கூட கிடையாது என்று பலவிதமாக எழுதியிருக்கிறார்கள். கீற்றுக் கொட்டகை, திறந்தவெளி இடங்கள், டெண்ட் போன்ற இடங்களில் 40 சதவீதம். பள்ளிகள் இருக்கின்றன. 2,500 ஓராசிரியர் பள்ளிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன என்று பல்வேறு செய்திகளை அதில் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட பள்ளிகளில் படித்தால் என்ன உயர்வான எண்ணம் பிள்ளைகளுக்கு ஏற்படும்? பெரும்பாலான குழந்தைகள் மரத்தடிகளிலிருந்தும் குடிசைகளிலிருந்தும் பள்ளிக்கு வருகிறார்கள். அவர்களுக்கு அங்கேயும் உட்கார்ந்து படிக்க வசதி இல்லாவிட்டால், எப்படி அந்தக் குழந்தைகள் படிப்பார்கள்? நானே கல்லூரிக்குச் சேரும்போது, திருச்சியில் செயின்ட் ஜோசப் கல்லூரியின் கட்டிடத்தைப் பார்த்துவிட்டு, அங்கே தரமான கல்வி கிடைக்குமா என்றுகூட சிந்திக்காமல், கட்டிடத்தைப் பார்த்துவிட்டே அங்கேதான் சேரவேண்டுமென்று அப்போது நினைத்தேன். பிறகு எனக்கு தேசியக் கல்லூரியில் இடம் கிடைத்தது. அப்படிக் கருதக்கூடியதுதான் மாணவர்களின் மனம். இது எல்லா ஏழை, பணக்காரக் குழந்தைகளுக்கும் உள்ளதுதான். உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதிப் பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலாவது சமமாகக் கருதப்படவேண்டிய நிலை இருக்க வேண்டுமென்றுதான் கருதும். அப்படி இல்லையென்றால், இந்தக் கல்வித் திட்டத்தினால் பிரயோசனம் இல்லையென்றுதான் சொல்வேன். ஆனாலும் இன்றையதினம் இந்த நிலைமையைப் போக்குவதற்கு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா என்று பார்த்தால், 14 வயதுக்கு மேல் உள்ள பிள்ளைகளானாலும் சரி, சிறுவர்களாக இருந்தாலும் சரி, இல்லையென்பது தான் என்னுடைய கருத்து. நான் பார்மல் எஜுகேஷன் புள்ளிவிவரப்படி, நாம் நிகழ்த்திய சாதனை என்னவென்று பார்த்தால், மிகக் குறைவுதான். அரசாங்கத்தின் புள்ளிவிவரப்படி கணக்கிட்டால், 1990 ஆம் ஆண்டில் உலக





ஜனத்தொகையில் படிக்காதவர்களில் பாதிப்பேர் இந்தியாவில் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. உலகத்தில் படிக்கத் தெரியாத மக்கள் பாதிப் பேர் இந்தியாவில் இருப்பார்கள் என்றால், சமுதாய மாற்றம் நடக்கக்கூடியதா? இது ஒரு இமாலயப் பிரச்சினை, இதைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், பொதுமக்கள், அரசியல் வாதிகள், கல்வியாளர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து, அந்த அடிப்படையில் கல்வித் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று மத்திய அரசு முயற்சிக்க வேண்டுமே தவிர, திட்டமிட்ட ஒரு கொள்கையை அறிவித்து, மாநில அரசின் மீது திணிக்க வேண்டுமென்ற எண்ணம் தெளிவாக இல்லை என்பதைத்தான் நான் கூற விரும்புகிறேன். இந்த நிலைமையைப் போக்க வேண்டுமென்றால், நான் சொல்ல விரும்புவது, ஆசிரியர்களை முழுமையாக மதித்து, அவர்களிடம் சரியாக வேலை வாங்க வேண்டுமென்பதுதான். இல்லையென்றால் எந்தக் காலத்திலும் வெற்றி பெற முடியாது. இன்றையதினம் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். நான் பார்த்தேன். அதிலே ஆசிரியர்களைப் பற்றி சொல்கிறார்கள், "under estimated under valued" என்று எழுதியிருக்கிறார்கள். அவர்களைச் சரியாகப் பயன்படுத்தி, கல்வியில் மாற்றங்களை நிகழ்த்த வேண்டும், அவர்களைப் பயன்படுத்தாமல் மாற்றங்களை நிகழ்த்த முடியாது என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் தமிழ் நாட்டில் கடந்த சில மாதங்களாக நிலைமையைப் பார்த்தால், அரசாங்கத்திற்கும், ஆசிரியர்களுக்கும் ஏதோ ஒரு போர் நடப்பதைப்போல ஒரு மாயை உருவாகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்பு

(பிற்பகல் 6-10)

கிறேன். நீண்ட நாட்களாகப் போராடிய பிறகு, அவர்கள் சிறைக்குச் சென்ற பிறகு, அரசாங்கம் அவர்களைக் கூட்டிப் பேசி, அவர்களுக்கு ஏதோ நிவாரணம் அளிப்பதாகக் கூறி, ஒரு நபர்க் குழுவை அமைத்திருக்கிறது. ஆனால் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து, அவர்களுக்கு அனுசரணையாகக் குரல் கொடுத்த ஒரு சாராரை — தலைமைச் செயலக ஊழியர்களை — பழி வாங்கக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறதென்று சொன்னால், ஒன்றே ஒன்று ஞாபகம் வருகிறது. குற்றம் சாட்டப்பட்டவர் வழக்காடுவதற்காக நீதிமன்றம் போகிறபோது, நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவரை விடுதலை செய்துவிட்டு, வழக்கு நடத்திய வழக்கறிஞரை சிறைக்கனுப்பினால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது இந்த அரசின் செயல் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு) ஆசிரியர்கள் எண்ணிக்கையில் மிகுதியாக இருக்கிறார்கள். அவர்களுடைய விரோதம் கூடாது என்பதற்காக அரசாங்கம் அவர்களுக்குச் சலுகை காட்டிட முன்வந்திருக்கலாம். ஆனால் தலைமைச் செயலக

ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தினால், அவர்களைப் பழிவாங்கி விடலாம் என்கிற கண்ணோட்டத்தை அரசு கொண்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். தயவுசெய்து அரசு ஒன்றைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கும் அரசுக்கும் இடையே சரியான இணக்கம் இருந்தாலொழிய, அரசு நிர்வாகம் செம்மையாக நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு பெரிய அளவில் நல்ல திட்டங்களைத் தீட்டினாலும், திட்டங்கள் முழுமையாகப் பலன்தரத்தக்க வகையிலே அமல்படுத்த முடியாதென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், இப்போது உருவாகிக் கொண்டிருக்கின்ற புதிய தேசியக் கல்விக் கொள்கையைக் குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். இன்னும் இரண்டொரு நாட்களிலே டில்லிக்குச் செல்லவிருப்பதாகவும் இம்மாதம் 27, 28 ஆம் தேதிகளில் அங்கே கல்வி தொடர்பான மத்திய ஆலோசனைக் குழு (Central Advisory Board of Education) கூட்டத்திலே கலந்து கொள்ளவிருப்பதாகவும், பிறகு 29, 30 ஆம் தேதிகளில் நடைபெறவிருக்கும் தேசிய வளர்ச்சிக் குழு(National Development Council) கூட்டத்திலே அவரும், மாண்புமிகு முதல் அமைச்சரும் கலந்து கொண்டுவிட்டு வர விருப்பதாகவும், அச்சமயங்களில் புதிய தேசியக் கல்விக் கொள்கையைப் பற்றிப் பரிசீலிக்கப்படவிருப்பதாகவும், பின்னர் அது நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படவிருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் நான் பத்திரிக்கையிலே பார்த்தேன். இவர்கள் டில்லிக்குப் போவதற்கு முன்னாலேயே நாடாளுமன்றத்தில் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். நான் கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் குறிப்பிட விரும்புகிறேன். மாநில அரசாங்கத்தினுடைய கருத்துக்களைக் கேட்ட பின், தனியாருடைய கருத்துக்களைக் கேட்ட பின், மத்திய ஆலோசனைக் குழுவினுடைய கருத்துக்களைக் கேட்ட பின், தேசிய வளர்ச்சிக் குழுவின் கருத்துக்களைக் கேட்ட பின், அதற்குப் பிறகு உருவாக்கப்பட்ட கருத்துக்களை நாடாளுமன்றத்திலே வைத்தால், அது முறையாக இருந்திருக்கும். ஆனால், மத்திய அரசு இவைகளையெல்லாம் செய்யாமலே அறிக்கையைத் தாக்கல் செய்திருப்பதானது அவ்வளவு சரியல்ல என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இவைகளை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்,





அடுத்ததாக, மாதிரிப் பள்ளிக்கூடங்கள் பற்றிக் கூற விரும்புகிறேன். எல்லோரும் மாதிரிப் பள்ளிக்கூடங்கள் பற்றிச் சொன்னார்கள். மாதிரிப் பள்ளிக்கூடங்கள் அளவுக்கு மற்ற பள்ளிக்கூடங்கள் வளர வேண்டுமென்று சொன்னார்கள். உண்மைதான். சென்னையிலே பல மாதிரிப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. டான் பாஸ்கோ, சர்ச் பார்க் என்று இருக்கின்றன. கோட்டியில் லவ்டேல் பள்ளிக்கூடம் இருக்கிறது. ஆனால் இந்தப் பள்ளிக்கூடங்களைப் போல எத்தனை பள்ளிக்கூடங்களை உருவாக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு 'elitist approach' தானே தவிர, இதனால் மக்களுக்குப் பலனேதும் ஏற்படப் போவதில்லை; தானே தவிர, இதனால் மக்களுக்குப் பலனேதும் ஏற்படப் போவதில்லை. எனக்குத் தெரிந்த அனுபவத்திலிருந்து இதை நான் குறிப்பிடுகிறேன். வசதி படைத்தவர்களுக்கு மட்டும் பயன்படக்கூடிய இதுபோன்ற பள்ளிகளை மட்டும் ஆரம்பிப்பதனால், எத்தவிதமான பலனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இது எனது சொந்தக் கருத்தாகும்.

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு தலைவரவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இது உறுப்பினர் அவர்களுடைய சொந்தக் கருத்து என்றால், அவருடைய கட்சிக் கருத்தை யார் சொல்வது? (சிரிப்பு).

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** நான் துவக்கத்திலேயே சொன்னேன்; பாரதப் பிரதமர்கூட இதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டிய அவசியமில்லை. இது நாடு தழுவிய பிரச்சினையாக இருப்பதால், அனைவரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளலாம் — கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம் — என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு கருத்துப் பரிமாற்றம் செய்து அதனாலே உருவாகின்ற கொள்கை சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு பேசிய கருத்துக்கள் அவர் கட்சியினுடைய கருத்துக்களா என்று கேளுங்கள். (சிரிப்பு).

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** நான் அவர் கூறியதை வரவேற்கிறேன். அவர் சர்வ தேசிய அளவிலே பேசியது யோசித்துப் பார்க்க வேண்டிய பிரச்சினை தான். கட்சிக் கண்ணோட்டம் இதில் தேவையில்லை என்பதே என்னுடைய கருத்து. ஏற்கெனவே முன்கூட்டியே ஒரு கருத்தை உருவாக்குவ

காரணம், இப்போது பல்வேறு மாநிலங்களில் ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம், ஏற்கனவே தயாரித்து வைத்திருக்கின்ற ஒரு கல்விக் கொள்கையை மாநிலங்களின் மீது திணிப்பதற்கு முயற்சிக்கிறது என்கிற கருத்தினை எல்லோரும் பேசுகிறார்கள். காங்கிரஸ் அல்லாத பல மாநில அரசுகளிடம் இந்தக் கருத்து இருக்கிறது. அது மேற்கு வங்கமாக இருந்தாலும் சரி, தமிழ் நாடாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, இத்தகைய சந்தேகம் இருக்கிறது. எனவே இது போன்ற சந்தேகத்திற்கு இடமே இல்லாத வகையில், பிரச்சினையை அணுகியிருப்பார்களேயானால், இது வரவேற்கத்தக்கதாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே மாதிரிப் பள்ளிக்கூடங்கள் என்று சொல்லி அதன் மூலமாக இந்தியைத் திணித்தால், நாம் அதை அனுமதிக்க முடியாது. இந்தி எங்கும் எதிலும் திணிக்கப்படக் கூடாது என்பதுதான் நம் கருத்து. அதில் யாருக்கும்

(பிற்பகல் 6-15)

கருத்து வேறுபாடில்லை. திணிப்பது என்பது இதிலே கிடையாது. எதையும் திணிக்கக்கூடாது. நாமாக விரும்பி ஏற்றுக்கொள்வது வேறு. எதில் திணித்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்தி திணிப்புக்கு நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது, ஒரு ஜில்லாவுக்கு அரசு ஒரு மாதிரி பள்ளிக்கூடம் ஏற்படுத்தினால், சாதாரண கிராமப்புறத்திலே கூலி வேலை செய்யும் தொழிலாளியின் குழந்தைகளுக்கு அங்கு இடம் உண்டா? மற்ற பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய வாத்தியார் போடவில்லை; கக்கூஸ் இல்லை, கரும்பலகை இல்லை. எல்லா அடிப்படைத் தேவைகளையும் அரசு அளிக்க முடியாத நிலை இருக்கிறது. அவர்கள் கட்டுகின்ற பள்ளிக் கூடங்களை தமிழ் நாட்டிலே அரசு கிராமம் தோறும் ஏற்படுத்த முடியுமா என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது வீண் வேலை என்பதுதான் என்னுடைய கருத்து. இதை தயவுசெய்து மத்திய அரசுக்கு அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நாடாளுமன்றத்திலே அவர்கள் இதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அங்கு கல்வி அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையைத் தாக்கல் செய்து, " It will be a phased set up to provide equal opportunity, particularly in rural areas. It will introduce a number of schemes to increase literacy level among women scheduled castes and scheduled tribes. This includes a programme of incentive for indigent scheduled caste families to send their children."



என்று சொல்லியிருக்கிறார்கள்.

நான் நினைக்கிறேன், இவர்கள் சொல்லிய கருத்துக்கள் மிக அழகாக, உயர்ந்ததாக இருக்கின்றன. இதிலே ஒரு சதவீதம் கூட நிறைவேறுமா என்பது என்னுடைய அனுபவ ரீதியான உண்மை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இதுபற்றித் தெரிந்திருப்பார்களேயானால், அதை எனக்கு விளக்கினால், நானும் பயன் பெறலாம்; இல்லையென்று சொன்னால், அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அங்கே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நான் இங்கே கூற விரும்புவது 'நான்-பார்மல் எடுகேஷன்', பள்ளிசாராக் கல்வி குறித்து. ஒரு புரட்சிகரமான திட்டத்தை அரசாங்கம் வகுத்தாலொழிய, நாம் பெரிய அளவிலே இதைச் சாதிக்க முடியாது. ஆனால் பல இடங்களிலே, 1977-ல் ஜனதா அரசாங்கம் இருந்தபோது, ஒரு பெரிய முயற்சி செய்தார்கள். ஆனால் இன்றையதினம் அது எப்படி இருக்கிறது என்றால், ஆசிரியர்களுக்குச் சம்பளம் வருகிறது, ஆனால் ஆள் இருக்கிறார்களா என்றால், யாராவது அங்கே படிப்பதற்குப் போகிறார்களா என்றால், இல்லை, அங்கு குறைந்தபட்சம் 30 பேர்கள் இருக்க வேண்டுமென்று சொன்னால், 10, 15 பேர்கள் கூட இல்லை என்ற புகார் வந்திருக்கிறது. இதிலே அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் ஓய்வு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள அனுபவங்களை இறுதியாக நாம் பயன்படுத்தினால், அவர்களுக்கு ஒரு நல்ல ஊதியத்தை — பள்ளியில் வேலை செய்யும்போது கொடுத்த ஊதியத்தைக் கொடுக்க முடியவில்லை என்றாலும், ஒரு கவர்ச்சிகரமான ஊதியத்தைக் கொடுத்தால், இதனால் பெரிய அளவுக்கு இந்தக் காரியத்தை நாம் சாதிக்க முடியும் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஒரு காலத்திலே "each one, teach one" என்ற ஒரு motto வைத்திருந்தார்கள். அது என்ன ஆயிற்று என்றே தெரியவில்லை. கல்லூரியில் படிக்கின்ற ஏழை மாணவன் விடுமுறைக் காலங்களிலே 300 அல்லது 400 ரூபாய் கொடுத்தால், அவர்கள் பல கிராமங்களுக்குச் சென்று இந்தக் கல்வியை வயது வந்தவர்களுக்குப் போதிக்க முடியும். இதையும் அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பணியில் தங்களை அர்ப்பணிப்பதற்கு பல பேர் தயாராக இருக்கிறார்கள்.

அடுத்து, மும்மொழித் திட்டத்தைப்பற்றி இங்கே பேசினார்கள். அதை மத்திய அரசு வற்புறுத்தினாலும், அது உண்மையிலேயே இந்த மாநிலத்திலே செயல்படுத்தப்படவில்லை என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களிலே செயல்படுத்த முடியாத ஒரு திட்டத்தை நம்முடைய மாநிலத்தில் மட்டும் செயல்படுத்துவது என்பதை நாம் நிச்சயமாக எதிர்க்கலாம். அதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார் போன்ற மாநிலங்களிலே மும்மொழித் திட்டங்கள் அமல் படுத்தப்பட முடியவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் மட்டும் அமல்படுத்தப்பட வேண்டுமென்று சொல்வதில் நியாயம் இல்லை. ஆனால் தமிழ் நாட்டிலே 8-வது படிக்கின்ற மாணவருக்கு ஆங்கிலம் தேவையா, இந்தி தேவையா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏனென்றால் அவன் படித்துவிட்டு வெளியே வரும்போது, தனது ஊரைவிட்டு, தாலுகாவை விட்டு, மாவட்டத்தை விட்டு வெளியே செல்ல வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. அப்பேர்ப்பட்டவர்களுக்கு ஆங்கிலம் தேவையில்லை, இந்தியும் தேவையில்லை அல்லது வேறு எந்த மொழியும் தேவையில்லை, அது வீண் வேலை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே இதை அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். 8-வது வகுப்போடு நிறுத்திவிடும் மாணவர்களுக்கு தமிழைத் தவிர வேறு எந்தப் படிப்பும் தேவையில்லை. அதற்கு மேலே செல்ல விரும்புகிறவர்களுக்கு, மற்ற மொழிகளை கற்றுக்கொள்ள வசதி செய்து கொடுக்கலாம். "எல்லாம் தமிழ், எதிலும் தமிழ்" என்று சொல்கிற இந்த அரசாங்கம் தமிழிலே கற்று விட்டால், பிறகு எந்த மொழியை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளலாம். ரஷ்யாவிலே, ரஷ்ய மொழியைப் படிக்கின்ற ஒரு என்ஜினியர் ஆங்கில மொழியைத் தனியாகப் படித்துவிட்டால், ஆங்கிலத்தை வைத்து வெளியே பிழைத்துக்கொள்ளலாம். இங்கே ஆங்கிலம் படிப்பதற்கு இரண்டாவது வகுப்பிலேயே ஆரம்பித்து, எம்.ஏ. படிக்கும் வரையிலே படித்து, வெளியே வரும் ஒரு மாணவன் சரியாக டிராப்ட் கூட போட முடியாத நிலை இருக்கிறது. புதிய முறையிலே 4 ஆண்டுக்குள்ளே ஒரு மொழியைச் சுலபமாகக் கற்றுக்கொள்ள முடியும். அது இந்தியாக இருந்தாலும், ஆங்கிலமாக இருந்தாலும், பிரெஞ்சாக இருந்தாலும், ஜெர்மனாக இருந்

(பிற்பகல் 1-20)

தாலும் கற்றுக்கொள்ள முடியும். அகில இந்திய அளவில் வேலைக்குப் போகிறவர்கள் அல்லது அகில உலகத்தோடு தொடர்பு கொள்ள விரும்புகிறவர்கள் வேண்டுமானால் ஆங்கிலம் கற்றுக் கொள்ளட்டும். எனவே 8-வது வரை தமிழ் மொழி மூலமாகவே கல்வி கற்றுக் கொடுக்கலாம். 8வது வகுப்புக்குப்



பிறகு வேண்டுமானால் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள வழி வகை செய்யலாம். உலகத்தில் வளர்ந்து வந்திருக்கிற நாடுகளில் இந்த முறையைத்தான் நாம் பார்க்கிறோம் என்பதால், இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவது நல்லது என்று சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழி என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமையில் தமிழ் படிக்காதவர்களும் இங்கே இருக்கலாம் என்றால், அது எப்படி சரியாக இருக்க முடியும்? ஒரு பள்ளிக்கூடத்தில் படிக்கிற மாணவர்களில் 1-வது வகுப்பு முதல் 10-வது வகுப்பு வரை வட்டார மொழி தமிழ் அல்லது தெலுங்கு படிக்கலாம் அல்லது கன்னடம் படிக்கலாம் என்றால், நான் இதை ஆட்சேபிக்கிறேன். தமிழ் நாட்டில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும், தமிழ்தான் படிக்க வேண்டும் என்பது கட்டாயமாக இருக்க வேண்டும். அண்டையில் உள்ள கருநாடக மாநிலத்தில் இருப்பவர்கள் கன்னடம் படித்தாக வேண்டும் என்று சொல்லி வற்புறுத்துகிறார்கள். அதைச் சரி என்று நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த ஊரிலே இருந்துகொண்டு அங்கே நிரந்தரமாகக் குடிமகனாக ஆன பிறகு, அந்த மொழியைப் படிக்கவில்லை என்றால், அவர்களுக்கு அங்கே வேலை இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இங்கே கொள்கைக் குறிப்பில் ஆங்கிலம் கட்டாயம் என்றும், தமிழ் கட்டாயமில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கொள்கைக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பதைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன். "1 முதல் 11 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது (10 பிளஸ் 2 பிளஸ் 3 வகுப்புமுறை அமுலுக்கு வந்தபின் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு இறுதியில் எஸ்.எஸ்.எல்.சி. நடைபெறுவதால் 1—10 வகுப்புகளில் கற்றுத் தரப்படுவது என்று சொல்லி வட்டார மொழி (தாய்மொழியான வட்டார மொழியல்லாத வேறு மொழியாக இருக்கும் பட்சத்தில் அந்தத் தாய் மொழி" என்று சொல்லி விட்டு, அந்தத் தாய் மொழியைக் கற்றுக் கொண்டால், போதுமானது, தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 3 முதல் 11 வகுப்பு வரை ஆங்கிலம் அல்லது இந்திய மொழியல்லாத வேறு ஏதாவது மொழி என்று ஜாக்கிரதையாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது இந்தி வந்துவிடப் போகிறது என்ற பயம். ஆகவே இந்திய மொழியாக இருக்கக்கூடாது என்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு இவ்வளவு பெரிய சிக்கல் தேவையில்லை. தமிழை அனைவரும் கற்றுக் கொள்ள வேண்டும். ஏன் கற்றுக்கொள்ள முடியாது? தமிழ் தெரியாதவர்கள் ஏன் தமிழைக் கற்றுக்கொள்ள முடியாது? ஆங்கிலப் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்களே, அங்கே எல்.கே.ஜியில் ஆங்கிலம் கற்றுக் கொள்ளும்போது, தமிழ் கற்றுக்கொள்ள முடியாதா? ஆங்கிலம் கற்றுக்

கொள்கிற மாணவர்கள் தமிழ் கற்றுக்கொள்ள முடியாதா? எனவேதான் இதை அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது என்னுடைய கருத்து. ஆகவே இதைப் பரிசீலிக்க வேண்டும். கல்வியாளர்களையும் மற்றவர்களையும் கலந்து இதைக் குறித்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடுபற்றி பல்வேறு பிரச்சினைகள் இங்கே எழுந்ததைப் பார்த்தோம். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கடந்த சில ஆண்டுகளாகவே ஒரு கருத்தைச் சொல்லி வருகிறார்கள். உயர்ந்த எண்ணத்தின் காரணமாக அதாவது பிற்பட்டவர்களிலும் ஏழை மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் காரணமாக, பிற்பட்டவர்களிலேயே ஏழை மக்களுக்கு ஏன் உதவக்கூடாது என்று கேட்கிறார்கள். 'நியோ பிராமினிசம்' இங்கே வந்துவிட்டது என்றுகூட ஒரு வார்த்தையைப் பயன்படுத்திப் பேசினார்கள். அவருடைய உயர்ந்த நோக்கத்தை நான் சந்தேகிக்கவில்லை. உண்மையிலேயே ஏழைகளுக்கு இதனால் பலன் ஏற்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனால் அவரை நான் ஒன்று மட்டும் கேட்க விரும்புகிறேன். தற்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே பிற்பட்டவர்களுக்கு என்று 50 சதவீதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 68 சதவீதம் போக மீதி 32 சதவீதம் இருக்கிறதே முற்பட்டவர்களுக்கு என்று, அதில் நாம் ஏழை மக்களுக்காக என்று ஏதாவது ஒதுக்குகிறோமா என்றுதான் நான் அவரைக் கேட்க விரும்புகிறேன். அதில் உள்ள பணக்காரர்களை நாம் நீக்கிவிடுகிறோமா? ....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, வெறும் ஏழைகள் என்றால் அது பிற்பட்ட ஜாதிக்காரர்களுக்குப் போகாது. பிற்பட்ட ஜாதியில் ஏழைகள் என்றால்தான் பிற்பட்டவர்களில் ஏழைகளாக இருப்பவர்களுக்குப் போகுமே தவிர, பிற்பட்ட ஜாதியை எடுத்துவிட்டு வெறும் ஏழை என்றால், முற்பட்ட வகுப்பில் இருக்கிற ஏழைகளுக்கு மட்டும்தான் போகும். எனவே பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்வதை நாம் எதிர்க்கிறோம்.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: 'சோஷலி அண்டு எஜுகேஷனலி பேக்வர்டு' என்று நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் கூறியிருக்கிறேன். இதையெல்லாம் ஆலோசனை செய்த பிறகுதான், 1951 ஆம் ஆண்டில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். திராவிட இயக்கத்தின் கருத்தைக் கேட்டோ, அவர்களின் பலத்தைக் கண்டோ, பண்டித நேரு





அவர்கள் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அப்போது திராவிட இயக்கத்தின் சக்தி என்பது டெல்லி வரை எட்டவில்லை. ஆனால் பண்டித நேரு அவர்கள் அவருக்கு இருந்த பகுத்தறிவு காரணமாக, பின்தங்கிய மக்கள் மீது அவருக்கு இருந்த அக்கறை காரணமாக இதைச் செய்தார். இங்கே உயர்நீதி மன்றத்தில் கம்யூனல் ஜி. ஓ. சட்ட விரோதமானது என்று ரத்து செய்யப்பட்ட பிறகு, காங்கிரஸ்காரர்கள் பெரும்பான்மையாக இருந்த அன்றைய நாடாளுமன்றத்தில் பண்டித நேரு அவர்கள் இந்தத் திருத்தத்தை அரசியல் சாசனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்போதே பலர் இந்தச் சலுகை எகனாமிக் அடிப்படையில் இருக்க வேண்டுமென்றே சொன்னார்கள். பண்டித நேரு அவர்கள் அப்போதே அதை ஒப்புக் கொள்ளவில்லை. மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால், பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம் ஜாதியின் பேரால் "அப்ரஸ்டு அண்டு டிப்ரஸ்டு" என்று இருந்த சமுதாயத்தில் பொருளாதாரப் பிரச்சினையைக் கொண்டு வருவது சரியில்லை, அதைக் கொண்டு வந்து புகுத்துவது சரியில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதனால்தான் அரசியல் சாசனத்தில் பல்வேறு பகுதிகளிலும் எங்கெங்கெல்லாம் பிற்பட்ட சமுதாயம் என்று வருகிறதோ அங்கெல்லாம் 'சோஷலி அண்டு எஜுகேஷனலி பேக்வர்டு' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, 'எகனாமிகலி' என்ற வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. இவ்வாறுதான் 5, 6 ஆர்ட்டிகிள்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பிற்பட்ட சமுதாயத்

(பிற்கல் 6-25)

தில் உள்ள ஏழைகளுக்கு உதவலாம். அதிலே பணக்காரர்கள் எப்படி வரலாம் என்று கேட்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு 18 சதவீதம் என்றால், அதிலே அப்படிக் கொண்டுவர முடியுமா? அதிலேயும் பணக்காரர்கள், ஏழைகள் என்று இருக்கிறார்கள். ஏற்கெனவே கலெக்டராகவும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளைத் தடுத்துவிட்டு கிராமப்புறத்தில் உள்ள விவசாயிகளுடைய குழந்தைகளைக் கொண்டுவர முடியுமா? 32 சதவீத ஓப்பன் காம்படிஷனில் ஏற்கெனவே ஐ.ஏ.எஸ். ஆபீசரின் மகன் வருவதற்கு வழிவகை செய்துவிட்டு, பிற்பட்ட சமுதாயத்தில் மட்டும் பொருளாதார வருமான அடிப்படையை வைப்பது பொருத்தமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், ஏற்கெனவே நான் சொல்லியபடி பொருளாதார அடிப்படையை வைத்தால், பலர் இதனாலே நியாயம் இல்லாமல் அடிபடுவார்கள்.

[1986 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பலர் அடிபடுவார்கள் என்று சொல்லுகிறபோது, ஏதோ அந்த இடங்கள் பிற்பட்ட சாதியைச் சார்ந்தவர்களுக்குக் கிடைக்காமல் மற்றவர்களுக்குப் போகின்றன என்ற அர்த்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களை எடுத்து, அதிலே பணக் காரர்கள் என்ற தகுதி படைத்தவர்களை, அதாவது ஒன்பதாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களை விட்டுவிட்டு, மீதியுள்ளவர் களுக்கு அந்த இடத்தை தருகிறபோது, வசதி வாய்ப்புப் பெறாதவர்கள் மேலே போவார்கள். இப்படி தொடர்ந்து வசதி வாய்ப்பு இல்லாத குடும்பங் களுக்கு போகப் போக சமுதாயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். இல்லை யென்றால் முன்னேறிய பிரிவினர்களுக்குள்ளேயே இந்த சலுகைகளை பங்கு போட்டுக்கொள்ளும் நிலைமைதான் இருக்கும் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. இதற்காக வேண்டுமானால் ஒரு ஆய்வை ஏற்படுத்த லாம். ஆனால் இருக்கின்ற குறைபாட்டைச் சுட்டிக்காட்டி அதைத் தடுக்க ஒரு திட்டத்தைக் கொண்டுவருகிற போது அதை எதிர்க்கிறார்கள். எதிர்ப பதற்காக நாம் பயந்திருக்கலாமே தவிர, உண்மையை மறுக்க முடியாது, மறைக்க முடியாது.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: திரும்பத் திரும்ப கல்வியமைச்சர் அவர்கள் இரண்டு நாட்களாக ஒன்றையே சொல்லுவதைப் பார்க்கிறோம். இதிலே வருமான அடிப்படையை வைத்தால், எவ்வாறு அந்தச் சமூகத்தில் உள்ளவர் களுக்கு நன்மை போய்ச் சேரும் என்று புரியவில்லை. பிற்பட்ட சமுதாயத் திற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் பிற்பட்ட சமூகத்தில் உள்ளவர்களுக்கே கிடைக்கின்றன எபைதிலே எந்தவிதமான சந்தேகமுமில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படியென்றால் ஏழைகளுக்கு இடம் கொடுப்பதை எதிர்க்கிறார்கள் என்று பொருள். அதிலேயிருந்து தப்பிக்க முடியாது.

திரு. எம். பி. சுப்பிரமணியம்: 30 ஏக்கர் வைத்துள்ள தஞ்சை விவசாயி வருஷத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்று சான்றிதழ் வாங்கிவர முடியும்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: அது இதிலே உள்ள குறைபாடு. அதைத் தவிர்க்க யோசனை கூட சொல்லலாம். 80 ஏக்கர் உள்ளவன் 8 ஆயிரம் ரூபாய் வருமானத்திற்குச் சமம், ஆகவே அவனுக்கு இல்லை என்று சொல்லி, அவனுக்கு இடம் கொடுக்காமல் செய்தால் நல்லது என்று யோசனை சொல்லலாம். இந்தத் திட்டம் சரிதானா, இல்லையா என்றுதான் பேசிக்





கொண்டிருக்கிறோம். அதிலே உள்ள குறைபாடுகளைக் களைய யோசனை செய்யலாம். ஆனால் ஒரு பணக்காரனுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அத்தனையும் அள்ளிக் கொடுக்கும் இந்த யோசனையை நான் எதிர்க்கிறேன்.

திரு எம். பி. சுப்பிரமணியம்: ஒரு நோய்க்குப் பரிகாரம் தேடுகிற போது, அதைவிட மோசமான நிலைமை ஏற்படக்கூடாது என்பது என்னுடைய கருத்து. ஒரு நோய்க்கு மருந்து கொடுக்கிறோம் என்றால், அந்த மருந்தால் பலன் ஏற்படாமல் இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் அதைவிட கடுமையான நோய்க்கு ஆளாகிற அளவிற்கு பரிகாரம் தேடுவதை விட்டுவிடலாம்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தைக்கொண்டு வந்தோம். இதனால் என்ன சாதித்துவிட முடிந்தது? ஆகவே வருமான அடிப்படையை, எக்கானமிக் கன்சிடரேஷனைக்கொண்டு வந்தால், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, 'சோஷலி பேக்வார்ட்' என்ற நிலைமை போய் ஏழ்மை என்கிற நிலை மேலோங்கி நிற்கும். 'சோஷியலி பேக்வார்ட்' என்பதற்குள்ளே போய் எக்கனாமிக் கன்சிடரேஷனைக்கொண்டு வருவது சரியல்ல. எங்கேதான் ஏழ்மை இல்லை? ஏழ்மை என்பது அமெரிக்காவிலே இருக்கிறது, லண்டனிலே இருக்கிறது. ஆனால் நம்முடைய ஊரிலேதான் சாதிகள் இருக்கின்றன. வேறு எங்கேயும் சாதிகள் இல்லை. ஆகவே நாம் அப்படிச் செய்ய ஆரம்பித்தால், நாம் எதை அடிப்படையாக வைத்து பிற்பட்ட சமுதாயத்திற்கு சலுகையாகச் செய்ய வேண்டுமென்று கருது கிறோமோ அந்த அடிப்படையே தகர்த்தெறியப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். "The whole edifice would be completely demolished" உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். குஜராத் மாநிலத்தில் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு, பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இடம் ஒதுக்கினாலும், அதற்குப் போதிய ஆட்கள் வராத காரணத்தாலே, நான்கைந்து ஆண்டுகளாக ஆட்களைச் சேர்க்க முடியவில்லை. எம்.எஸ்ஸி., எம்.டி. போன்ற படிப்புகளுக்கு ஆள் இல்லை. ஆகவே அந்த இடங்களை ஃபார்வேர்ட் கம்யூனிட்டிகளுக்குக் கொடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். நீண்ட நெடுங்காலத்திற்கு இந்தச் சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ள இந்தச் சமுதாயத்தில் ஆட்கள் இல்லை. ஆகவே பிற்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்கள் சலுகைகளைப் பயன்படுத்துவதை, அறிவு வளர்ச்சி மற்ற வளர்ச்சி இல்லாத நிலையில், அதைத் தடுத்தால், அது அந்த மக்களுக்கு நல்லதல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-30)

ஏழைகளுக்கு உதவி செய்வதை நான் ஆட்சேபணை செய்யவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இறுதியாக நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பற்றிச் சொல்லும்போது, அது ஒருகாலத்திலே இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலேயே கூட புகழ்பெற்ற பல்கலைக் கழகமாக இருந்தது என்பது நமக்குத் தெரியும். அதனுடைய துணை வேந்தராக இருந்தவர் இந்த மாமன்றத்திலே பல ஆண்டுகளாக இடம் பெற்றிருந்தார்கள். அவருடைய கருத்துக்களுக்கு அகில உலக அளவிலே மரியாதை கொடுத்த காலம் இருந்தது. ஆனால் இப்போது எப்படி இருக்கிறது? இந்த அவையிலே பல நேரங்களிலே பேசுகின்ற பேச்சுக்களைப் பார்ப்போமானால், மிகவும் வேதனையாக இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதை மனதிலே வைக்க வேண்டும். இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அட்டானமி, கல்லூரிக்கு அட்டானமி என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இனி ஹைஸ்கூலுக்கும் அட்டானமி கொடுக்கலாம் என்று சொல்வார்கள். இப்படியே போனால் என்னவாகும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

திருச்சி சட்டக்கல்லூரியைப்பற்றி ஒரு செய்தியைப் பார்த்தோம். அதை ஆரம்பித்து ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. அது எங்கே செயல்படுகிறது? ஒரு சத்திரத்திலே. பாப்பம்மாள் சௌல்ட்ரி என்று ஒரு சௌல்ட்ரி இருக்கிறது. அந்தச் சத்திரத்திலேதான் இருக்கிறது. மாணவர்களுக்கு என்று ஹாஸ்டல் எதுவும் கிடையாது. 3 பேராசிரியர்கள் நியமிக்கலாம் என்று கல்லூரி தொடங்கிய காலத்திலேயே சொன்னார்கள். 6 ஆண்டு காலம் ஆகியும் கூட அங்கே இரண்டு பணியிடங்கள் 'ஃபில் அப்' ஆகவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 பேர்கள் ஜூனியர் புரோபசர்களாக அதிலே நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். அந்த 5 பேர்களும் 10 (ஏ) (1) ஆக இருக்கின்றார்கள். அவர்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. அது மட்டுமல்ல 5 ஆண்டுகள் படிப்பு என்ற காரணத்தினாலே, 'பிரி-லா கோர்ஸ்' என்று வந்தது. அதற்கு ஆசிரியர்களே நியமிக்கப்படவில்லை. மாலை நேர வகுப்புகள் நடத்துவதற்கு என்று வரும் ஆசிரியர்களுக்குத் தனியாக ரெமுனரேஷன் 'பிக்ஸ்' பண்ணவில்லை. அதையும் பண்ணவில்லை.

சென்னை சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையில், பல இடங்கள் காலியாக இருக்கின்றன. எம்.எல். வகுப்புகளுக்குச் சொல்லிக்கொடுக்க ஆள் இல்லாத காரணத்தினாலே, 2 ஆண்டுகளாக எம்.எல். வகுப்புகள் நடக்கின்ற நிலைமை அங்கே இல்லை, [illegible] இல்லை, ஆட்கள் இல்லை. இங்





பேர்களுக்காவது சொல்லிக்கொடுக்கலாம் என்றால், பேராசிரியர்கள் நியமிக்கப்படாத காரணத்தினாலேயே, அங்கே வகுப்புகள் நடத்தப்படவில்லை. அங்கே கோளாறுகள் இருக்கின்றன. இங்கே ஒரு கல்வித் துறை இருக்கிறது, பல்கலைக் கழகம் இருக்கின்றது. அமைச்சர்கள் இருக்கின்றார்கள். 5, 6 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இதையெல்லாம் அரசால் கவனிக்க முடியவில்லை என்று சொன்னால், எப்படி பிரச்சினைகளை கல்வி மூலமாகத் தீர்ப்பது. எப்படி கல்வி மூலமாக மாறுதல்களைச் செய்யப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. எவ்வளவுதான் அழகாகத் திட்டங்கள் போட்டாலும், அதிலே ஒரு 'டெடிகேஷன்' இல்லாமல், ஒரு ஈடுபாடு இல்லாமல் செய்வது என்பது முடியாது. நிச்சயமாக எதையும் செய்ய முடியாது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழக அரசாங்கம் பல்வேறு நல்ல காரியங்களைச் செயல்படுத்த வேண்டும் என்று சிந்தித்துவருகிறது. என்றாலும்கூட அது பயன் உள்ளதாக ஆக முடியாமல் போகிறது. காரணம் திறமையான ஈடுபாடுள்ள அதிகாரிகளும், அவர்களைக் கண்காணிக்கின்ற அமைச்சரவையும் இல்லாத வரையில் பயன் கிடைக்காது என்பதைச் சொல்லிக்கொண்டு, இத்தோடு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கும் இன்றைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல பேர்கள் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை கல்வித் துறையினுடைய கொள்கைக் குறிப்பின் மீது இங்கே தந்திருக்கின்றார்கள். அவர்கள் சொன்ன பல்வேறு கருத்துக்களையும் அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, நல்ல முறையில் பயன் படுத்திக்கொள்ளும் என்கின்ற பொதுவான உறுதியை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய பேச்சுகளில் இன்றைக்கு கல்வியினுடைய தரம் உயர வேண்டுமானால், அல்லது தரமான கல்வியை நம்முடைய குழந்தைகளுக்குத் தரவேண்டுமென்றால், கட்டிடங்கள், உபகரணங்கள் மற்ற வசதிகளை முறையாக நாம் தர வேண்டும் என்ற கருத்தை இங்கே பலரும் வலியுறுத்திக் கூறினார்கள். அதை நான் மறுக்கவில்லை என்றாலும், நம்முடைய நிலைமைகளைக் கருதி, நாம் சிலவற்றைச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். வறுமையிலே வாடுகின்ற மக்களுடைய தொகை 52 சதவிகிதம் என்று இருக்கின்ற ஒரு நாட்டில் நாம் இந்தக் கல்வியை மக்களுக்குத் தர விரும்புகிறோம். கல்விதான் மக்களுடைய முன்னேற்றத்திற்கும் அவர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெறுவதற்கும், அவர்கள் சமத்துவ சமுதாய வாழ்வைப் பெறுவதற்கும் நாம் அவர்களுக்குத் தருகின்ற ஆயுதமாக இருக்கும் என்று

(பிற்பகல் 6-35)

நாம் கருதுகிறோம். சமுதாய முன்னேற்றத்திற்கும், மாறுதலுக்கும் அடிப்படைக் காரணமான ஒரு சிறந்த ஆயுதமாக இந்தக் கல்வி கருதப் படுகிறது. ஆகவே அந்த முறையில் பார்க்கிறபோது, ஒரு ஏழை நாட்டில் எல்லா வசதிகளும் வந்ததற்குப் பிறகு, கல்வி தருவதா அல்லது இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு எவ்வளவு பேர்களுக்குக் கல்வி தருவது என்பதில் ஈடுபடுவதா என்று பார்க்கும்போது, சமூக நீதி என்ற அடிப்படையில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன், இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு, வாய்ப்புகளை வைத்துக்கொண்டு, நாம் எவ்வளவு பேர்களுக்குக் கல்வி தர முடியுமோ அவ்வளவு பேர்களுக்குக் கல்வி தருவது நம்முடைய கடமை. அதுதான் நாம் இந்தச் சமுதாயத்திற்கு வழங்கும் நீதியாகும். எல்லாப் பிரிவினருக்கும் இந்த நீதி செல்ல வேண்டுமென்ற எண்ணம் இன்றைக்கு வலுத்திருக்கிற நேரத்தில், இதுவரைக்கும் பின் தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைச் சாதி மக்களின் பிள்ளைகள் அல்லது கிராமங்களிலே வாழ்கிற ஏழை எளிய மக்கள் என்ற அடிப்படையில் அந்த வாய்ப்புகளை முழுவதும் பெறாமல் இருந்துவிட்டு, அதனால் இன்றைக்கு பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கும் பிரிவினரை அதிகமாக வைத்துக்கொண்டிருக்கும் இந்தச் சமுதாயத்தில், அவர்களுக்குக் கல்வி தர வேண்டுமென்று நினைக்கும்போது, நாம் இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தி, அதிகமானவர்களுக்குக் கல்வி தரும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறோம். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் கிராமங்களில் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். அதற்குப் பிறகுதான், இன்றைக்கு பள்ளிக் கட்டிடம் கட்ட முடிந்திருக்கிறது. சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகளுக்குப் பின்பு, ஒவ்வொரு தலைவரும் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பரிசீலிக்கும்போது, அவைகள் எல்லாம் பெரும்பாலான மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாக வைத்து, இருக்கிற வசதிகளைப் பயன்படுத்தி, நாம் விரைவாக முன்னேற வேண்டுமென்பது ஒன்று. அந்த முன்னேற்றம் குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு மட்டும் போகாமல் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்ற சமூக நீதியை அடிப்படையாக வைத்து, அந்த முயற்சியிலே மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருக் கிறார்கள். அதன்காரணமாக, பல்வேறு குறைபாடுகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டது போன்று, 21 ஆம் நூற்றாண்டிலே நாம் காலடி எடுத்து வைக்கும்போது, உலகத்திலே இருக்கப் போகிற எழுத்தறிவில்லாத 100 கோடி மக்களில் 50 கோடி மக்கள் இந்தியாவிலேதான் இருக்கப் போகிறார்கள். 50 கோடி எழுத்தறிவில்லாதவர்கள் என்னும்போது, அத்தனை பேரும் சாப்பிடுவார்கள்



என்ற காரணத்தாலே அல்ல; அவர்கள் படிக்காத காரணத்தாலே, எழுத்தறிவு இல்லாத காரணத்தாலே எல்லா மக்களும் முன்னேறும் அந்த முன்னேற்றத் திற்குத் தடைக் கற்களாக இருக்கிறார்கள். மற்ற மக்களின் தோள்களிலே சுமையாக, பாரமாக அவர்கள் இருப்பார்கள். அவர்களாலே சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன் கிடைக்காது. எத்தனை பேர்களுக்கு எழுத்தறிவு தருவது, எத்தனை பேர்களுக்கு நல்ல அறிவு தருவது, எத்தனை பேர்களுக்கு அறிவு ஆற்றல் வளர்ப்பது என்பது வேகமான முன்னேற்றத்தின் அடிப்படையாக அடங்கிக் கிடக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இவைகளைப் பார்க்கிறபோது, நாம் எவ்வளவு சீக்கிரத்தில் எவ்வளவு பேர்களுக்குக் கல்வி வசதி செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

முறை சாராக் கல்வி என்பதை வேண்டுமென்றே கொண்டு வந்த கல்வித் திட்டமல்ல. எல்லோரும் ஒழுங்காகப் படிக்க வேண்டுமென்று நாம் முயற்சியை மேற்கொள்ளும்போது, தெரிந்தோ தெரியாமலோ, அல்லது விரும்பியோ விரும்பாமலோ நின்று விடுகிறார்கள். அப்படி நின்று விடுபவர்களை அப்படியே விட்டுவிடுவதா அல்லது அவர்களுக்கு ஏதாவது ஒரு வழி காட்டுவதா என்னும்போதுதான் இது வருகிறது. பள்ளிகளிலே படிக்கும் அத்தனை பேர்களையும் விடுவித்து, அவர்களை வெளியே கொண்டு வந்து, முறை சாராக் கல்வி தருவதில்லை. முறை சாராக் கல்வி எப்போது வருகிறது என்றால் பள்ளிகளிலே சேர்ந்து படிக்கும் வாய்ப்பை இழந்துவிட்டு, அதே நேரத்தில் படிக்கும் வயதிலுள்ள மாணவர்களுக்கு நாம் எதையாவது செய்ய வேண்டுமென்ற முறையிலே குறைந்தபட்ச ஒரு உதவியாகத்தான் முறை சாராக் கல்வி வருகிறது. அதையும் ஒரு சிறந்த திட்டமாக ஏற்றுக்கொள்ள முடியாது. எப்படிப் பார்த்தாலும், சமூக நீதி என்ற அடிப்படையிலே, படிக்காத காரணத்தாலே, அந்த மக்கள் பிறருடைய சுரண்டலுக்கு ஆளாகக் கூடாது என்ற அடிப்படையில், பிறருக்கு அடிமைகளாக, பிறருக்குப் பயன் படக்கூடியவர்களாக, பிறரால் ஏமாற்றப்படக் கூடியவர்களாக அவர்கள் ஆகிவிடக்கூடாது என்பதால்தான், எந்தெந்த நிலையில் கல்வி தர முடியுமோ அந்தந்த நிலையில் கல்வி தருகிறோம். அதைப் போலத்தான் வயது வந்தவர்களுக்கும் கல்வி தருகிறோம். வயது வந்ததற்குப் பிறகு, என்ன கல்வி என்று கலபமாகக் கேட்கலாம். அவர்களுக்குக் கல்வி இல்லாததால், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் கல்வியை இழக்கும் நிலை ஏற்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, வயது வந்தோர்க்குக் கல்வி என்றால், அவர்களுக்கு அறிவைத் தருகிறோம், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு உதவி செய்கிறோம் என்பதோடு கூட, அவர்களுக்குப் பிறகு வருகிற அவர்களுடைய சந்ததியினருக்குக் கல்வியைத் தருகிறோம்

(பிற்பகல் 6-40)

என்கிற அடிப்படையில் தருகிறோம். ஜனநாயக அமைப்பில் வாக்குரிமை தந்த பிறகு, எழுத்தறிவு இல்லாமல் அவர்களை விட்டுவிட்டால், ஜனநாயகத்தின் பெயரால் அவர்களை நாம் ஏமாற்றுகிறோம் என்று பொருள். அதற்காகத் தான் அத்தனை பேருக்கும் கல்வியைத் தரும் முயற்சியை நாம் மேற்கொள்கிறபோது, அறிவுபூர்வமாக இருந்து அவர்கள் தங்களுடைய வாக்குரிமையைப் பயன்படுத்தினால் தான், ஜனநாயகத்திற்கும் வலிமை ஏற்படும். அந்த அடிப்படையில்தான் வயது வந்தோர் அனைவருக்கும் கல்வி தேவை என்று கூறுகிறோம். இருக்கிற வசதிகளை வைத்துக்கொண்டு அதிலே எவ்வளவு பேர்களுக்கு கல்வியைச் சொல்லித்தர முடியுமோ அவ்வளவு பேர்களுக்குத் தான் சொல்லித் தர முடியும் என்கிற நிலை வந்தால், சமுதாயத்திலே ஒரு பிரிவினருக்குச் சலுகைகள் தருவது மாதிரி நிலையையும் மற்றவர்கள் காலாகாலத்திற்கும் படிப்பறிவு பெற முடியாத நிலையில் பாதிக்கப்படக்கூடிய நிலையும் ஏற்பட்டு விடும். ஆகவேதான் இருக்கிற வசதியில் எவ்வளவு பேர்களுக்குத் தர முடியுமோ அவ்வளவு பேர்களுக்குத் தருவது என்பது கல்வி அறிவைப் பெறாமல் இருக்கிற அந்த மக்களுக்காக நாம் எடுத்து வைக்கிற கருத்து ஆகும். அந்த அடிப்படையில் தான் இந்த அரசு பல்வேறு காரியங்களை, முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தொடர்ந்து ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன்

இன்றைக்கு நாம் இலவசச் சீருடை தருகிறோம், இலவசமாகச் சாப்பாடு தருகிறோம் என்று சொன்னால், அவற்றை வழங்குவது பெற்றோரின் கடமை. அரசின் கடமை அல்ல. ஆனாலும் சீருடை இல்லாத காரணத்தினால், பெண் குழந்தைகள் பள்ளிக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிற நிலையில் அதற்காக பெற்றோர்களை நாம் குற்றம் சொல்லிக் கொண்டிருப்பதை விட்டு விட்டு, அரசே நேரடியாக உதவி செய்வது தான் தார்மீகமாக, பொறுப்பாக, அரசைப் பொறுத்தவரையில், இருக்க முடியும். சாப்பாடு போட வேண்டியதும் பெற்றோரின் கடமை தான். ஆனாலும் பெற்றோர்களால் சாப்பாடு போட்டு பள்ளிக்கு அனுப்ப வேண்டிய சூழ்நிலை இல்லாத நிலையில் அந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்வதுதான் ஒரு அரசுக்கு இருக்க வேண்டிய மிகச் சிறந்த கடமையாகும். அந்த அடிப்படையில்தான் இந்த அரசும் நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் நாம் செய்வது எப்படியும் அனைவரும் கல்வி அறிவைப் பெற வேண்டுமென்பதற்காகத் தானே ஒழிய தாமாகவோ அல்லது தயவு தாட்சண்யத்திற்காகவோ அல்ல. எதிர்கால சந்ததியினர் நல்ல முறையில் கல்வியறிவு உள்ளவர்களாகத் திகழ வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு முயற்சிகளையும் மேற்கொள்கிறோம்.



அதுபோல் பள்ளிக் கல்வியில் தரம் உயர வேண்டுமென்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் கூடுதலாக ஆசிரியர்களை நியமிக்க அனுமதிக்கிறோம். அண்மை ஆண்டுகளில் கல்விக்காக தனி கவனம் செலுத்தப்பட்டு இயன்ற அளவு அதிகமாக பணம் ஒதுக்கப்படுகிறது. 3.17 கோடி ரூபாய் மேல்நிலைப் பள்ளிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை சீர் செய்ய கூடுதலாகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து மாணவ மாணவிகளுக்குச் சீருடை சத்துணவு போன்றவை வழங்கப்படுவதோடு இலவசமாக பாடப்புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டது. 1985-86-ல் முதன் முதலாக இத்திட்டத்தை அமுல்படுத்தியதால், பாடப் புத்தகங்களை அச்சிடுவதில் காலதாமதம் ஏற்பட்டு அந்த நிலை உருவாயிற்று. இனி வரும் ஆண்டுகளில் தொடக்கத்திலேயே பாடப்புத்தகங்கள் அச்சிடப்பட்டு, தாமதமில்லாமல் வழங்கப்படும். இலவசமாக வழங்கப்படும் பாடப்புத்தகங்களைப் படித்து விட்டு, அவர்கள் திரும்பக் கொடுக்க வேண்டாமென்று அரசு அண்மையில் உத்தரவிட்டுள்ளது. கரும்பலகை பற்றியும் பேசப்பட்டது. கரும்பலகை கதர் கிராமத் தொழில் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. இனிமேல் தாமதமில்லாமல் அவை அனுப்பப்பட்டால், திருப்பி அனுப்பப்படும் என்று அண்மையில் கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 16 வயது வரையுள்ள அனைவருக்கும் தொடக்கக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டும் என்பது இந்திய அரசியல் சாசனத்தில் வகுக்கப்பட்ட ஒன்று. அந்தவகையில் தமிழ் நாட்டில் தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், அதன் சாதனை குறிப்பிடத்தக்கது. 6 வயது முதல் 10 வயது வரையுள்ளவர்கள் 90 விழுக்காடும், 11 வயது முதல் 14 வயது வரையுள்ளவர்கள் 75 விழுக்காடும் கல்வி பெற்றிருக்கிறார்கள். பெண்களின் விழுக்காடும் சிறப்பாக இருக்கிறது. அதுபோல் இன்றைக்கு இருக்கிற 2.88 லட்சம் ஆசிரியர்களில் தொடக்கப் பள்ளிகளில் மட்டும் 1.84 இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். தொடக்கப் பள்ளிக் கல்வியை மேம்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், அதற்காகத் தனி கவனம் செலுத்துவதற்காக, தனியாக தொடக்கப் பள்ளி இயக்ககம் ஒன்றை ஏற்படுத்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மேலும் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரையில், தரத்தை உயர்த்த சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும். வயது வந்தோர் அனைவரும் கல்வி பெற நல்ல முறையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(பிற்பகல் 6–45)

1985-86ல், சுமார் 22 ஆயிரம் மையங்கள் துவக்கப்பட்டு, அதில் 7 லட்சம் பேர்கள் பலன் அடைந்து வந்தார்கள். வயது வந்தோர் கல்வி மையங்களில் குறிப்பிட்ட சில மையங்களை பெண்களுக்காகவே நடத்துகிறோம். அதில் பெரும்பாலான மையங்களில் தாழ்த்தப்பட்ட பெண்கள் படிக்கிறார்கள். அந்தப் பெண்கள் ஆர்வத்துடன் படிப்பதைப் பார்க்கிறபோது, சமுதாயத்தில் அடிப்படையாக மாறுதல் ஏற்பட்டு வருகிறது என்ற உணர்வைப் பெறுகிறோம். காரணம் உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற அடிப்படையில், ஜாதிக்குக் கீழ் ஜாதி, ஜாதிக்குக் கீழ்ஜாதி என்ற அடிப்படையில் என்று சொல்லி, கடைசியாக இருக்கும் ஜாதியினருக்குக் கீழே இருக்கும் ஜாதியாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள்தான் இருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் ஆர்வத்தோடு படிக்கிறார்கள். அவர்கள் கலந்து கொள்கிற மையங்கள் வெற்றிகரமாக நடக்கின்றன என்று சொல்கிறபோது, சமுதாயத்தில் அடிப்படை மாறுதல் ஏற்பட்டு வருகிறது என்பதை நாம் பெருமையோடு ஒப்புக்கொள்ளவேண்டும். அவர்கள் படித்தால் மற்றவர்கள் படிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதன் மூலம் இப்படி பல்வேறு முயற்சிகளைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறோம். ஆகவே குறிப்பாக மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அவர்கள் அவையில் இல்லையென்றாலும் அவர்கள் சொன்ன ஒரு விபரத்திற்கு பதில் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அவையில் ஒரு மாணவருடைய மார்க்குகள்பற்றிச் சொன்னார்கள். அவர்கள் சொல்கிற போது, சில கருத்துக்களையும் சொன்னார்கள். "சென்ற தடவை இந்நிலையத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசி மாணவர் பெற்ற மதிப்பெண் 137 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதிலே பி. சீனிவாசன் என்பவர் ஆங்கிலத்தில் 62 மதிப்பெண்களும், விஞ்ஞானத்தில் 58 மதிப்பெண்களும், ஆக மொத்தம் 120 மதிப்பெண்கள்தான் எடுத்திருக்கிறார். அவருக்கு இண்டர்வியூவில் 6 மதிப்பெண்கள் தரப்பட்டு, 126 மதிப்பெண்கள்தான் பெற்றிருக்கிறார். ஆனால் ஒருவருக்கு அங்கே இடம் கிடைக்கவேண்டுமென்றால், குறைந்த அளவு 137 மார்க்குகள் பெற்றிருக்க வேண்டும். ஆனால் 126 மதிப்பெண் பெற்ற சீனிவாசனுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் அவருடைய மதிப்பெண் 140 வாங்கியதாகப் பதிவு செய்யப்பட்டு, அவருக்கு இடம் தரப்பட்டது. ஆனால் இண்டர்வியூவில் வாங்கிய மார்க்கையும் சேர்த்து 120 பிளஸ் 6 ஆக மொத்தம் 126 தான். ஆனால் 140 மார்க் அவர் வாங்கியதாக அவருக்கு இடம் தரப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.



அதைப்போலவே, சிவகுமார், எஸ்.எஸ்.எல்.சி. யில் பெற்ற அடிப்படை மார்க் 123. நேர்முகத் தேர்வில் பெற்ற மதிப்பெண் இரண்டே இரண்டு மார்க். ஆக மொத்தம் 123-ம் சேர்த்து 125 தான். அவருக்கு 143 மார்க் என்று போட்டு இடம் தரப்பட்டது. ஆறுமுகம் செல்வம் என்பவர் எஸ்.எஸ்.எல்.சி.யில் பெற்ற அடிப்படை மார்க் 110. நேர்முகத் தேர்வில் பெற்றது எட்டரை மார்க். அப்படிப் பார்த்தால் 118½ மார்க்தான் பெற்றிருக்கிறார். ஆனால் அவருக்கு 137 மார்க் கடைசி மார்க் போட்டு இடம் கொடுக்கப்படுகிறது. நேர்முகத் தேர்வில் பதிவு செய்த மார்க்குகளின் பட்டியல் என்னிடம் இருக்கிறது. நீதி மன்றத்தில் அதைத் தன்னுடைய கையெழுத்துதான் என்று தொடர்புடைய பிரின்சிபாலே ஒத்துக்கொண்டிருக்கிறார். அந்த 'ரஃப் ஷீட்' எல்லாம் கூட சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்ற வழக்கில் கொடுக்கப்பட்டது. 'ரஃப் ஷீட்' என்றால் 'அன்பாலிஷ்டு' என்று அர்த்தம். ஒரு படம் ரஃப்பாகப் போடு கிறோம். அனுமார் படம் போட ஆரம்பித்து, பிறகு பைனல் ஆகப் படம் போடும்போது ராமர் படமாகப் போட முடியாது. அனுமார் படம் போடு வதற்காக ரஃப் ஆக்ப் படம் போட்டால், அது அனுமாராகத்தான் இருக்க முடியும். அந்தத் தாளை உச்சநீதிமன்றத்தில் காட்டும்போது, அதை 'ரஃப் ஷீட்' என்கிறார்கள். ஆனால் உச்சநீதிமன்றம் அதை ஒத்துக்கொள்ளவில்லை. ஒத்துக்கொள்ளாத நிலையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றபோது, மார்க் குறைவாக பெற்ற மாணவன் என்று அந்தக் கல்லூரி முதல்வரால் கூறப் பட்ட வேல்முருகன் என்ற மாணவனுக்கு இடம் தர வேண்டுமென்று சுப்ரீம் கோர்ட் கூறியிருக்கிறது என்று சில கருத்துக்களை கலைஞர் அவர்கள் கூறி யிருக்கிறார்கள். அதிலே அந்த மாணவர்களைச் சேர்க்கிறபோது இண்டர்வியூ வைத்திருக்கிறார்கள். இண்டர்வியூ தீர்ப்பை ஒரு குழுதான் நடத்தியிருக் கிறது. அந்தக் குழுவில் இரண்டு பேர் இருந்திருக்கிறார்கள். இப்போது இதிலே இடம் கிடைக்காத ஒரு மாணவன் வழக்கு மன்றத்திற்குப் போய், ஹைக்கோர்ட்டுக்குப் போய், பிறகு சுப்ரீம் கோர்ட் போயிருக்கிறான். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடந்தபோது. இண்டர்வியூவில் பயன்படுத்தப்பட்ட சில தாள்களைக் கொண்டு போய்த் தந்திருக்கிறார்கள். அது யாருடையது என்று பார்க்கிறபோது, குழு உறுப்பினருடையது, பேராசிரியர் கையெழுத்து என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது சுப்ரீம் கோர்ட்டில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இந்த மாதிரி 'ரஃப் ஷீட்' வைத்து அதிக மான பேப்பர் வைத்துக் கொள்வது சரியில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். 'மாணவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மாணவனும் ஒழுங்காகப் பயிலுவதாக 'பாண்ட்' எழுதிக் கொடுத்த தற்குப் பிறகு, சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 24

(பிற்பகல் 6-50)

கிறார்கள். இதுதான் நடந்துள்ள நிகழ்ச்சி. இதில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் சொல்வது இரண்டு மூன்று மார்க்குகளைச் சொல்லி, அவற்றைக் கூட்டி அது 137-க்கும் குறைவாக இருக்கிறது என்கிற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். நான் அது சரியல்ல என்பதற்கான காரணங்களைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் அவர் சொல்வதற்கு என்ன காரணம் என்றால், உச்ச நீதிமன்றத்தில் தரப்பட்ட அந்தத் தாளில் அடிப்படை மார்க்குடன் குழுவில் இருந்த ஒருவர் போட்ட மார்க்கை மட்டும்தான் கூட்டியிருக்கிறார்கள். குழுவிலே மற்றொருவரும் இருந்திருக்கிறார். அவரும் இன்னொரு தாள் வைத்திருக்கிறார்; அவர் அந்தத் தாளில் மார்க் போட்டிருக்கிறார். அந்த மார்க்கையும் கூட்டினால், இரண்டு பேரும் போட்ட மார்க்குகளையும் அடிப்படை மார்க்கோடு சேர்க்கும்போது, குறைந்தபட்ச மார்க் வருகிறது. இந்த உண்மையை அவரிடத்திலே சொல்லவில்லை போலிருக்கிறது. ஆகவே அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் போலிருக்கிறது. ஆகவே நான் இங்கே குறிப்பிட்டு அதை ஒரு செய்தியாக மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த வழக்கிலே எங்கள் தலைவர் குறிப்பிட்டதிலே நம்முடைய Director அவர்கள் ஒரு மடல் எழுதியிருக்கின்றார்கள். அதிலே அவர்கள் ஒத்துக்கொண்டு,

"Marks were awarded by the two Committee members separately and the combined mark lists only, one each for OC, BC and SC and ST are enclosed."

என்று எழுதியிருக்கின்றார்கள். இதிலே உள்ள அந்த சொற்களுக்கு விளக்கம், இரண்டு பேரும் சேர்ந்து தயாரித்த 'லிஸ்ட்' தானே தவிர, அதில் ஒருவர் மட்டும் தயாரித்தது அல்ல என்பது தெரிய வருகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது சரியல்ல என்பது எங்கள் தலைவர் கருத்து.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரே லிஸ்ட் என்று சொல்வது "ஃபைனல் லிஸ்ட்" இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். . .

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாணவர் 140 மார்க்குகள் வாங்க வேண்டுமென்றால், 6 மார்க்குகள் போட்டதற்குப் பின்னால், அடுத்தவர் 14 மார்க்குகள் போட்டிருக்க வேண்டும்; அவ்வாறு போட்டால்தான் 140 மார்க்குகள் வர முடியும். நீங்கள் சொல்வதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டால் கூட, 14 மார்க்குகள் பெற வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட நிகழ்ச்சி இல்லை என்பதுதான் உண்மை.



1986 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாணவர் அவ்வாறு 14 மார்க்குகள் பெற்றிருக்கிறார் என்பதுதான் இங்கே இருக்கிற விவரம்.

திரு. எம். பி. சுப்பிரமணியம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழுவிலே இருந்த இன்னொருவர் போட்ட மார்க்குகளைப்பற்றிக் கூறுகிறார். இந்த விவரம் உயர்நீதிமன்றத்திலே, உச்ச நீதிமன்றத்திலே எடுத்துத் தரப்பட்டிருக்கிறதா? நீதிபதி அவர்கள் அதைத் தெரிந்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இரண்டு பேர் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் நேர்முகத் தேர்வை நடத்துகிறார்கள். நடத்துகிறபோது "ஃபைனல் லிஸ்ட்" போடுவதற்கு முன்னால், 'வொர்க்கிங் பேப்பர்' வைத்துக்கொண்டுதான் செய்ய முடியுமே தவிர, வைக்காமல் செய்ய முடியாது. அதுபோல் ஒவ்வொருவரும் வைத்திருந்திருக்கிறார்கள். இரண்டையும் எடுத்து "ஃபைனல் லிஸ்ட்"— டிலே 'என்டர்' பண்ண வேண்டும். ஆனால் அதில் ஒருவர் போட்ட மார்க்கை மட்டும் அவர் எங்கேயோ வைத்திருக்கிறார். அது அங்கேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. எடுத்தவர்தான் உச்சநீதிமன்றத்திலே கொடுத்திருக்கிறார். நான் சொல்வது, அடிப்படை மார்க்குடன் ஒருவர் போட்ட மார்க்கை மட்டும் கூட்டி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்னொருவர் போட்ட மார்க்கையும் கூட்டினால் சரியாக வரும் என்பதுதான் அர்த்தம். அவ்வாறு போட்டது சரியா இல்லையா என்பது வேறு. நான் சொல்வது செய்தி, fact அவர் சொன்னதற்கு நான் விளக்கம் கூறுகிறேனே தவிர, வேறல்ல. அவர் போட்ட மார்க் விதம் சரியில்லாமல் இருக்கலாம். அது வேறு விவகாரம். நான் சொல்ல விரும்புவது, ஒருவர் போட்ட மார்க்கை மட்டும் கூட்டி, அதை இங்கே சொல்லி, அது அனுமாரா, ராமரா, பிள்ளையாரா என்று அவர்கள் பேசிச் சென்றிருக்கிறார்கள். ஆனால் அடிப்படை மார்க் 120 உடன் ஒருவர் 6 மார்க்கும் இன்னொருவர் 14 மார்க்கும் போட்டு 140 மார்க் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு போட்டது சரியா என்கிற பிரச்சினைக்குள் நான் போகவில்லை. ஒருவர் போட்ட மார்க்கை மட்டும் கூட்டிப் பார்த்துவிட்டு, பேசியிருக்கிறார். இரண்டாவது ஒருவர் இருந்தார் என்பதை அவருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே தவிர, அவர்மீது குற்றம் சொல்லவில்லை. இந்தச் செய்தி அவருக்காக மட்டுமல்ல, மற்றவர்களும் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவும் சொல்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அப்படியென்றால் படித்துக் காட்டினேனே அதற்கு என்ன பொருள். அந்த லிஸ்ட்டுதான் கோர்ட்டிலே தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைத்தான் சொல்கிறேன் அடிப்படை மார்க் 120, இருவரும் போட்ட மார்க் 20, ஆக மொத்தம் 140 இரண்டு பேரும் சேர்ந்து போட்ட மார்க்கையும் சேர்த்தால் 140 வருகிறது ஆனால் உச்சநீதிமன்றத்திற்கு வந்தது ஒருவர் போட்ட 'வொர்க்கிங் ஷீட் மட்டுமே. அந்த 'வொர்க்கிங் ஷீட்'டில் உள்ள மார்க்கையும், அடிப்படை மார்க்கையும் கூட்டி, தேவையான மொத்த மார்க் வரவில்லை என்றால் இன்னொருவர் போட்ட மார்க்கை விட்டு விடுகிறோம். இன்னொருவ போட்ட மார்க்குக்குத் தாள் இல்லையே தவிர, அவரும் மார்க் போட்டிரு கிறார் என்பதை மறுக்க முடியாது. ஏனென்றால் அவரும் ஓர் உறுப்பினர்

(பிற்பகல் 6-55)

திரு. எம். பி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நான் கேட்க விரும்புவ உயர் நீதிமன்றத்திலோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ அரசு சார்பாக ஒ வழக்கறிஞர் ஆஜராகி இருப்பார். அவர் இந்தக் கருத்தை எடுத்துக் கூ யிருக்கிறாரா? ஒருவருடைய மார்க்குதான் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறதே தவிர, இரண்டு பேருடைய மார்க்கும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறத என்பதைத் தான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, உச்ச நீ மன்றத்தில் அவர்களே 'பைனல் லிஸ்ட்' ஐக் கொடுத்திருக்கிறார்கள். அ ஏற்றுக் கொண்டுதான் வழக்கு தள்ளுபடி ஆகியிருக்கிறது. உச்ச நீதிமன் தில் வழக்கு எடுத்துக்கொள்ளும் போதே அவர்கள் ஒரு சமரசத்திற்கு பேசி, பைலை எடுத்துக்கொள்ளுங்கள் என்றார்கள். இந்தமாதிரி ஒர்க்கி ஷீட் பேப்பரை வைத்துக் கொண்டிருந்தது தப்பு என்று சொல்லியிரு கிறார்கள். ஆனால் நான் இங்கே சொல்லும் கருத்து என்னவென்றா உச்ச நீதிமன்றத்தின் கருத்தை நாம் மறுக்கவில்லை. ஆனால் 'ஒர்க்கி ஷீட்' வைத்துக்கொள்ளாமல் அந்த இன்டர்வியூவை நடத்த முடியா இரண்டு பேரும் ஆளுக்கு ஒரு பேப்பர் வைத்துக்கொண்டு, மார்க்கை போட்டு, பிறகு இரண்டையும் கூட்டி 'பைனல் லிஸ்ட்' போட்டுத்தான் வேண்டுமே தவிர, வேறு ஒரு விதத்திலே இன்டர்வியூவை நடத்த முடியா



அது சிரமமாகும். அந்த அடிப்படையிலே நான் சொல்கிறேன். ஆக இந்த 120 பிளஸ் 20, 140, சிவகுமார் 123 பிளஸ் 20, 143, இன்னொரு மாணவர் ஆறுமுகம் என்பவர் 110 பிளஸ் 27, 137 என்று அவர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். மார்க் போட்டது சரியா, இல்லையா என்று இப்போது நான் வாதாட வரவில்லை. இங்கே மாண்புமிகு கலைஞர் அவர் களுடைய கவனத்திற்கு வராத செய்திகளை நான் இப்போது சொல்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி சில பிரச்சினை களைச் சொன்னார்கள். அதிலே ஒன்று பள்ளத்தூர் கல்லூரி சம்பந்தமாக. அங்கே சீத்தாலட்சுமி ஆட்சி மகளிர் கல்லூரி முதல்வர் டாக்டர் சாரதா பாலகிருஷ்ணன் என்பவரைப் பணி நீக்கம் செய்வதற்கான திட்டத்தை கல்லூரிக் கல்வி இயக்குநர் ஒப்புதலுக்காக நிர்வாகம் அனுப்பி வைத்தது. கல்லூரி முதல்வர் மீதான குற்றச்சாட்டுக்கள் சரிவர நிரூபணம் ஆகவில்லை என்ற கருத்தின் அடிப்படையில் இந்தப் பணி நீக்கத் திட்டத்திற்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் அனுமதி மறுத்தார். இதை எதிர்த்து நிர்வாகம் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் கல்லூரிக் கல்வி இயக்குநர் இந்த வழக்கில் ஆழமான குற்றங்களை ஆராய வேண்டியதில்லை. பணி நீக்கத்திற்கான நடைமுறை விதிகள் சரிவரப் பின்பற்றப்பட்டுள்ளனவா என்று பார்த்தால், போதுமென்ற கருத்தைத் தெரிவித்து, இரு தரப்பார்களுக்கும் மறுபடி வாய்ப்புகள் தந்து பணி நீக்கத் திட்டத்தை மறு ஆய்வு செய்யுமாறு ஆணையிட்டது. அதன்பிறகு கல்லூரி முதல்வர், நிர்வாகம் ஆகிய இரு தரப்பாரும் அதன் வழக்கறிஞரை நேரில் அழைத்து, இரு தரப்பாரின் விவரங்கள் கல்லூரிக் கல்வி இயக்குநரால் கேட்கப்பட்டன. அதன் பின்னர் கல்லூரி நிர்வாகத்தால், பணி நீக்கத் திட்டத்தில் நடைமுறை சரிவரப் பின்பற்றப்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, கல்லூரி முதல்வர் பணி நீக்கத்திற்கு கல்லூரிக் கல்வி இயக்குநரால் அனுமதி தரப்பட்டது. கல்லூரி முதல்வரும், 17—3—1986-ல் நிர்வாகத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். எனினும் அவருடைய பணி நீக்கத்திற்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் இசைவு அளித்ததை எதிர்த்து, முன்னால் கல்லூரி முதல்வர் உயர்நீதிமன்றத்தில் இப்போது வழக்கு ஒன்று தொடர்ந்து உள்ளார்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : தலைவரவர்களே, உச்ச நீதிமன்றத்தில் இந்த நிர்வாகம் நடந்துகொண்ட முறை, அப்போது இந்த அரசு எடுத்த நடவடிக்கை இரண்டுமே விவாதத்திற்கு வந்தது. அந்த நிர்வாகம் அங்கே நடத்துவது ஒரு பெண்கள் கல்லூரி என்பதால் நியாயத்தையும் பார்க்க

வேண்டும்; சட்டத்தை மட்டும் பார்க்கக்கூடாது. அங்கே கல்லூரி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் விரோதமாக நடந்து கொண்டிருந்தது அந்த நிர்வாகம், இதை எதிர்த்த முதல்வர் மீது நடவடிக்கை எடுத்தது ஒரு வேளை டெக்னிகலாக சரியாக இருந்திருக்கலாம். ஆனால் விலக்குவதற்கு 'நோட்டீஸ்' கொடுத்திருக்கலாம், அல்லது விளக்கமளிக்க சான்ஸ் கொடுத்திருக்கலாம். இதை டைரக்டரே ஒத்துக்கொண்டிருக்கிறார். பிறகு டைரக்டரேட்டுக்கே சுப்ரிம் கோர்ட்டிலிருந்து வந்திருக்கிறது. சுப்ரிம் கோர்ட் முடிவு சொல்லவில்லை. அதற்குப் பிறகு இந்த பிரின்சிபாலுக்கு எதிராக எப்படி முடிவு எடுக்கப்பட்டது? அதற்கு விளக்கம் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, டைரக்டருடைய அதிகாரத்தைப்பற்றி உயர்நீதிமன்றம் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறது. "நீங்கள் அதற்குள்ளே போகக்கூடாது; நடைமுறை சரியாகப் பின்பற்றப் பட்டிருக்கிறதா என்பதை மட்டும் பார்க்க வேண்டும்" என்று சொன்ன காரணத்தாலே, கல்லூரிக் கல்வி இயக்குநர் நடைமுறை சரியாக இருக்கிறதா என்று பார்த்து அதை ஒத்துக்கொள்ள வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. ஆனால் இன்னொன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் காரணமாக அந்த நிர்வாகம் ஒரு வழக்கைப் போட்டிருக்கிறது. அந்த வழக்கில் என்னையும் கட்சியாக சேர்த்திருக்கிறார்கள் என்பதை மதிப்பிற்குரிய திரு. சங்காலிங்கம் அவர்களுக்கும் தெரியும். ஆகவே அவர்கள் எங்களுக்கு ஒன்றும் வேண்டியவர்களல்ல. ஆகவே என்னையும் சேர்த்து ஒரு வழக்கைப் போட்டது அந்தப் பள்ளத்தூர் சீத்தாலட்சுமி ஆச்சி நிர்வாகம்.

இராமநாதபுரம் அரசு கலைக் கல்லூரியைப்பற்றிச் சொல்லப்பட்டது. சாதி அடிப்படையில், அங்கே கலவரங்கள் நடைபெற்றுக்கொண்டு வந்தன. அது சாதி அடிப்படையிலே கலவரங்கள் நடைபெறும் ஒரு இடமாக மட்டும் தான் இருந்ததே தவிர, கல்லூரியாகவோ, கல்லூரிக் கல்வி தரப்படும் இடமாகவோ இல்லை. ஆக இப்படி ஒரு கல்லூரி இருந்து சாதி வெறியையும், சாதிக் கலவரங்களையும் உற்பத்தி செய்கின்ற ஓர் இடமாக, அல்லது கல்விக்கு எதிரான ஓர் இடமாக இருப்பதைவிட, அந்தக் கல்லூரி இல்லாமல் இருப்பது நல்லது. இல்லாவிட்டால் வேறு ஒரு முறையைப் பயன்படுத்தியாவது நல்ல முறையில் இந்த சாதி உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு பெண்களுக்காக மட்டும் அதை நடத்தலாம் என்கிற ஒரு முடிவை அங்கிருக்கிற மாவட்ட ஆட்சித்



தலைவர் அவர்கள் தன்னுடைய பரிந்துரையாகச் சொன்னார்கள். அதே எனக்கு சரியாகப் பட்டது; அரசுக்கும் சரியாகப் பட்டது. ஆகவே ஒரு கல்லூரி இப்படி ஒரு சமுதாய விரோத அல்லது சமுதாயத்திற்குப் பாதகமான உணர்வுகளை வளர்த்துக் கொண்டிருப்பதைவிட வேறு ஒரு விதத்திலே நல்லபடியாகப் பயன்பட முடியுமென்றால், அந்த முடிவை எடுப்பது ஒரு புத்திசாலித்தனமான காரியமாகும் என்ற அடிப்படையிலே மன்றத்திற்கு வந்தது.

(பிற்பகல் 7.00)

அதற்குப் பிறகு இன்றைக்கு இராமநாதபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் தோன்றிய பிறகு அங்கேயே ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் வந்திருக்கிற காரணத்தாலும் மாவட்ட அளவில் போலீஸ் கண்காணிப்பாளர் அவர்களும் அதே ஊரில் இருப்பதாலும் அவர்கள் இருவரும் தந்த வாக்குறுதியின் பேரில் மீண்டும் பழையபடியே அந்தக் கல்லூரியை நடத்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். அதில் குறிப்பாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். புதிய கல்விக் கொள்கையைப்பற்றிப் பேசுகிறபோது, அதில் சொல்லப்பட்டிருப்பதையெல்லாம் புதிதாக யாரும் நினைக்க வேண்டாம். 1968 ஆம் ஆண்டில் தேசியக் கல்விக் கொள்கை என்று ஒன்று உருவாகி, அதில் பெரும்பான்மையான பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுத்தியிருக்கிற ஒரு மாநிலம் தமிழகம்தான். அதாவது 10 பிளஸ் 2 பிளஸ் 3 என்று ஒரே மாதிரியான கல்வித் திட்டம் இருக்க வேண்டும் என்ற கருத்தை முழுமையான அளவில் செயல்படுத்துகிற மாநிலம் தமிழ் மாநிலம்தான். இதைக்கூட செயல்படுத்தாமல் பல மாநிலங்கள் இன்றைக்கும் இருக்கின்றன. 1968 ஆம் ஆண்டில் உருவாகிய அந்தத் தேசிய கல்விக் கொள்கையை நிறைவேற்றாத மாநிலங்கள் நிறைய இருக்கும்போது, அந்தக் கல்விக் கொள்கையைத்தான் இன்னும் சில மாறுதல்களோடு புதிய கல்விக் கொள்கையாக இன்றைக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அதிலே புதிய பள்ளிகள் வரும், புதிய கல்லூரிகள் வரும், புதிய பல்கலைக் கழகங்கள் வரும், அது சம்பந்தமான எல்லாம் இருக்கும் என்று பார்க்கிறபோது, அப்படியே அதை எதிர்ப்பது என்பது பள்ளிக்கூடமே இங்கே இல்லாததைப்போல் அல்லது கல்லூரிகளே இங்கே வேண்டாம் என்பதைப்போல் ஒரு உணர்வை ஏற்படுத்தும்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 ஏப்ரல் 24

புதிய கல்விக் கொள்கையில் நமக்குத் தவறு என்று தெரிவதை நாம் எதிர்ப்பது நம்முடைய கடமையாகும். முழுமையாகப் படித்து உணர்ந்து எல்லாவற்றையும் செய்வது கொஞ்சம் சிரமம் என்றாலும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து நல்லபடியாக அதில் இருப்பதால் அதற்குப் பொதுவான ஆதரவை நாம் தந்து எதை எதிர்க்க வேண்டுமென்று கருதுகிறோமோ அதை மட்டும் எதிர்த்து வருகிறோம். அதில்தான் மொழிப் பிரச்சினையும் வருகிறது. மும்மொழித் திட்டத்தை அவர்கள் ஆதரிக்கிறார்கள். 1968-ம் ஆண்டில் தேசிய கல்விக் கொள்கையில் சொல்லப்பட்ட மொழிக் கொள்கையைத்தான் இந்தப் புதிய கல்விக் கொள்கையில் நாங்கள் ஊர்ஜிதப்படுத்தியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். 1968 ஆம் ஆண்டில் மும்மொழிக் கொள்கையைச் சொன்னார்கள். தனித் தனியாக இதைப் பார்த்தால், நாம் ஏமாந்து விடுவோம் என்றுதான் கருதுகிறேன். தனியாகப் பார்த்தால், இதிலிருக்கிற அடிப்படைகள் நமது கண்ணுக்குப் புலப்படாது. பொதுவாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஒரே மாதிரியான கல்விக் கொள்கை இருக்க வேண்டும் என்று சொல்லுகிறபோது ஆதரிப்பவர்களும் இருக்கிறார்கள், எதிர்க்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆதரிக்கிறவர்கள் என்ன காரணம் சொல்லுகிறார்கள்? நான்கூட சில இடங்களில் காரணத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தியா முழுவதற்கும் ஒரே கல்வித் திட்டம் தேவை. அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குப் போகிறபோது, கல்வி கற்றுக்கொள்வதில் தடை இருக்கக் கூடாது. ஒரே மாதிரியான கல்வியைத் தொடர அவர்களுக்கு வழிவகை இருக்க வேண்டும். இல்லை என்றால், அது மாணவர்களைப் பாதிக்கக்கூடும். எனவே ஒரே மாதிரியான கல்விக் கொள்கை இருக்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இன்னொன்றும் சொல்லுகிறார்கள். உதாரணமாக பல்கலைக்கழக அளவில் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம் போன்ற 2 அல்லது 3 பல்கலைக் கழகங்களில் நம்முடைய பல்கலைக் கழகத்தின் கல்வித் தரத்தை விட கொஞ்சம் உயர்வாக இருக்கிறது. அங்கே படிக்கிற மாணவர்கள் அகில இந்திய சர்வீஸ்களான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளில் நிறைய தேறுகிறார்கள் என்கிற நிலைமையைப் பார்க்கும்போது, கல்வித் தரத்தில் மாநிலத்திற்கு மாநிலம் அதிக வித்தியாசம் இருக்கிற நிலைமையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமையில் நானே கூட வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலாவது நம்மைவிட உயர்வான கல்வித் தரம் இருக்குமானால், அந்த அளவுக்கு உயர்தரமான கல்வியை நாமும் தமிழ் நாட்டில் தந்தாக வேண்டும். இல்லை என்றால், அதிலே



1986 ஏப்ரல் 24] [திரு. செ. அரங்கநாயகம்]

இருக்கிற வித்தியாசம் காரணமாக எல்லாத் துறைகளிலும் இந்த இரு சாரார்களுக்கும் இடையே வித்தியாசம் தொடர்ந்து இருக்கத்தான் செய்யும். சர்வ தேச ரீதியில் முன்னேறிய நாடுகளில் இன்றைக்கு எந்தக் கல்வித்தரம் இருக்கிறதோ அந்த அளவுக்குக் கல்வித் தரத்தை நாம் இந்தியாவிலும் கொண்டு வருவதற்கு முயற்சிக்க வேண்டும். அப்படியில்லை என்றால், நமது நாட்டிற்கும் அந்த நாடுகளுக்குமிடையே எல்லாத் துறைகளிலும் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். ஆகவே ஒரே மாதிரியான கல்வித் தரம் தேவை என்று சொல்லுகிறோம். இப்படி இந்த இரண்டு மூன்று அடிப்படைகளை வைத்துத்தான் சொல்லுகிறோம். ஆனால் எதிர்க்கிறபோது ஒரு காரணத்தை வைத்து எதிர்க்கிறார்கள்.

(பிற்பகல் 7-05)

இன்றைக்கு இந்தியாவிலே பிரிவினை சக்திகள் தோன்றிவிட்டன; இன்றைக்கு இந்தியாவில் ஒற்றுமைக்கு விரோதமாகக் கிளம்பிவிட்டார்கள்; எதிர் காலத்திலே இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்றால், மாநிலங்களில் இத்தகைய உணர்வுகளுக்கு மாறாக உணர்வை வளர்க்க வேண்டும். இந்த உணர்வுகளை வளர்க்க வேண்டுமானால், கல்வியின் மூலமாகத்தான் வளர்க்க வேண்டும். இந்தக் கல்வியை எப்படியெப்படி வளர்க்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அதற்கேற்ற யோசனைகள் எல்லாம் புதிய கல்விக் கொள்கையில் இருக்கலாம். ஆனால் இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக மாநிலங்களில் இருக்கின்ற கலை, பண்பாடு, மொழி, இவை சம்பந்தப்பட்ட பெருமைகளை அழிக்கின்ற முயற்சியாக அது இருக்குமானால் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம், எதிர்க்கிறோம். இந்தியாவில் நான் ஓர் இந்தியன் என்று சொல்லும்போது, தமிழன் என்ற முறையில்தான் நான் இந்தியன் ஆகிறேன். தமிழன் என்ற முறையில் எனக்கு உரிமையுண்டு. ஆகவே, அவரவர் மாநிலத்தில் அவர்களுடைய கலாச்சாரம், பண்பாடு, மொழி என்ற அடிப்படையில் தன்னை வளர்த்துக்கொள்ளும் உணர்வுகளை வளர்த்துக்கொள்ள உரிமைகள் நிச்சயமாகத் தரப்பட வேண்டும். அதை நசுக்கவோ, அழிக்கவோ முயற்சிகள் எடுத்தால், அதனாலே பாதகமான பின் விளைவுகள்தான் ஏற்படும்; நாம் எதிர்பார்க்கும் ஒருமைப்பாடு நிச்சயமாகக் கிடைக்காது. வேற்றுமையில் ஒற்றுமை என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட ஒன்று. வேற்றுமை இருக்கத்தான் செய்யும். அதிலே ஒற்றுமையைப் பார்க்க வேண்டும். வேற்றுமையை அழித்துவிட்டு ஒற்றுமையைக் காண முயற்சி செய்யக்கூடாது.

பாடல் பள்ளிகளைப் பார்க்கிறபோது, அப்படிப்பட்ட ஆபத்து இருப்பதாக நாங்கள் நினைக்கிறோம். அதிலே பணக்காரர்களுக்கு இடம் தருவார்களா என்று நாங்கள் பயப்படவில்லை. அதை அவ்வளவு பெரிய ஆபத்தாக நாங்கள் கருதவில்லை. அதைவிட பெரிய ஆபத்து இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். அதற்கு அவர்கள் என்ன விளக்கத்தைச் சொல்கிறார்கள் என்றால், நல்ல அறிவாளி மாணவர்களை (டேலன்ட்) பரிட்சை வைத்து தேர்ந்தெடுப்பது மட்டுமல்லாமல், அதைப் போலவே கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களையும் தேர்ந்தெடுத்து, இந்தப் பள்ளி எந்த மாநிலத்தில் இருக்கிறதோ அந்த மாநிலத்தில் உள்ள 50 சதவீத மாணவர்களையும் வேறு மாநிலங்களில் உள்ள 50 சதவீத மாணவர்களையும் வைத்து பாடம் போதிக்கப் படும் என்றும், அதிலே ஆங்கிலமும், இந்தியும் பயிற்சி மொழியாக இருக்கும் என்கிற ஒரு கருத்தையும் அவர்கள் அதிலே சொல்லியிருக்கிறார்கள். அதை நன்கு ஆராய்ந்து பார்க்கும்போது, இந்தியர்கள் என்பவர்கள் இந்த நாட்டிலே இப்போது இல்லை. இதனை இந்தப் பள்ளிகளின் மூலமாக உருவாக்க முயற்சி செய்கிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. நம்மு டைய கலாச்சாரத்தை அழித்துவிட்டு, நம்முடைய மொழிப் பற்றை அழித்து விட்டு, வேரற்ற மரம் போல இருக்க நாம் விரும்பவில்லை என்பதால்தான், நாம் இதை எதிர்க்கிறோம். ஆகவேதான் இந்திய பயிற்சி மொழி என்றால் மிகப் பெரிய தவறு என்று சொல்லுகிறோம். 1968 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையில் எல்லா மட்டத்திலும் தாய்மொழியின் மூலம் கல்வி தர வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, "இந்தியன் என்ற உணர்வு இல்லவே இல்லை, மாதிரிப் பள்ளிகளின் மூலமாக இந்த உணர்வை உருவாக்க முயற்சிக்கிறார்கள், ஆகவே நாங்கள் எதிர்க்கிறோம்" என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, இந்தியன் என்ற உணர்வு வேண்டாம் என்று சொல்லுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தமிழன் என்ற முறையில்தான் நான் இந்தியன். தமிழனாக இல்லாமல் இந்தியன் என்று இல்லை. அந்த முறையிலேதான் எதிர்க்கப்படுகிறது.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இங்கே ஆயிரம் சாதிகள் இருக்கின்றன. என் சாதிக்குப் பிறகுதான் தமிழன் என்று சொல்லலாம். ஆகவே இந்தியன் என்ற உணர்வு தேவையா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** இந்தியர் என்ற உணர்வு தேவை. அது தமிழன் என்ற உணர்வின் அடிப்படையிலே இருக்க வேண்டும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** வேற்றுமையில் ஒற்றுமை என்று சொல்லுகிறபோது, பல்வேறு மொழிகள், பல்வேறு கலாச்சாரம் இருக்கும் போது, எல்லா வகைகளிலும் ஒப்புக்கொண்ட பிறகுதான் இந்தியன் என்ற ணர்வு வந்திருக்கிறது என்று சொல்லுகிறோம். அதை ஒத்துக் கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஒப்புக் கொண்டதால்தான் இவ்வளவு தூரம் பேசுகிறோம். இல்லாவிட்டால் ஒரேயடியாகப் பிரிந்துவிடுவோம் என்று சொல்லுவோம். ஆனால் அது தேவை இல்லை. பஞ்சாபில் நடைபெற்றதைப் போல மற்ற இடங்களில் நடைபெறாது என்பதல்ல. அந்த உணர்வு எங்களுக்கு இல்லை. இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். வேண்டுமானால் எங்களுக்கு தைரியம் இல்லாமல் இருக்கலாம். அந்த உணர்வு இல்லாமல் இருக்காது. அது தேவையில்லாமல் இருக்கிறது.

1968 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையில், எல்லா மட்டத்திலும் தாய்மொழியில் கல்வி இருக்க வேண்டும் என்று சொல்லி, ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு கோடி ரூபாய் அனுமதித்துவிட்ட பிறகு, இந்த தேசியக் கல்விக் கொள்கையில் தாய்மொழியில் கல்வி தர வேண்டும் என்ற கொள்கை மறைக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? அதைச் சொல்லாததற்கு காரணம் என்ன? உலகம் பூராவும் உள்ள கல்வி வல்லுநர்கள் யாரைக் கேட்டாலும், தாய்மொழியின் பேரில் பெறுவதுதான் கல்வியே தவிர வேறு அல்ல என்று சொல்லுவார்கள். தாய்மொழியின் மூலம் கல்வி பெற வேண்டும் என்ற 1968 ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையை இந்தப் புதிய கல்விக் கொள்கையில் வேண்டுமென்றே சொல்லப்படாததற்கு என்ன காரணம் என்பதற்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

(பிற்பகல் 7-10)

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியின் மூலமாக கல்வி கற்றுக் கொடுக்கக்கூடாது என்று எந்தப் பக்கத்திலே இருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன். இரண்டாவது நான் ஏற்கெனவே சொல்லியதுபோல், இது அரசாங்கத்தின்

'கல்விக் கொள்கை அறிவிப்பு அல்ல. இது கொள்கைப் பற்றிய டிராப்ட்டும் அல்ல. பல்வேறு கருத்துக்களை உங்கள் முன்னிலையிலே வைப்பதற்காகத் தான் வந்திருக்கிறது. இதை எப்படி அரசாங்கத்தினுடைய கருத்தாகச் சொல்கின்றார்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களுக்குச் சொல்கிறேன். அவர்கள் சொல்வதை இங்கே தாங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். தமிழ் மொழியை தகுதியாகக் கொண்டு கல்வி போதிக்க வேண்டுமென்று திட்டவட்டமாக இந்த அறிக்கையிலே இல்லாததனாலேதான், இந்த பயம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, போன கல்விக் கொள்கையிலே சொல்லப்பட்டிருப்பதைப் போல இல்லை. போன கல்விக் கொள்கையிலே சொல்லப்பட்டு, அதற்குப் பிறகு தமிழிலே புத்தகம் எழுத ஒரு கோடி ரூபாய் தருகிறோம் என்று தந்திருக்கின்றார்கள். அதையும் செய்ய முயற்சிக்க விடவில்லை. அதற்கு மாறாக இந்தியைப் பயிற்சி மொழியாகக் கொள்ள வேண்டும் என்று ஒரு புதிய யோசனையை வேண்டுமென்று சொல்கின்ற நோக்கிலே தமிழைப் பற்றி ...ன்றும் இல்லாமல் இருப்பது என்பதுதான் சந்தேகத்திற்கு இடமாக இருக் கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். நான் சொல்வது இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்ற காரணத்திற்காகத்தானே அன்றி வேறல்ல. இந்தி என்பது இந்திய ஒற்றுமைக்காக என்று சொல்லிக்கொண்டு, இந்தியாவையே பிளப்பதற்காக ஒரு கருவியாக அது பயன்படக்கூடிய நிலைமைதான் இருக் கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்த முறையிலேதான் இந்த மாதிரி பள்ளிகள், நவோதயா வித்யாலயா என்ற புதிய பாடத் திட்டத்தோடு நுழைக்கப்பட இருக்கின்ற அந்தப் பள்ளிக்கூடங் களைப் பற்றி அவர்கள் மறுபரிசிலனை செய்ய வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இங்கே சொல்லப்பட்ட மற்ற கருத்துக்களை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்காக இரண்டு கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்னும்போது, இங்கே கரும்பலகை இல்லாத பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்று சொல்லிக்கொண்டிருக்கிற போது, அந்தப் பணத்தை ஏன் அதற்காகத் தரக்கூடாது என்று கேட்கிற நிலையும் வருகிறது. அதிலே டேலண்ட்டட் பாய்ல் அண்டு கேர்ல் என்கின்ற கருத்தை நாம் மறுப்பதற்கில்லை. அதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதைப்பற்றி நான் தனியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னொன்று. இந்தப் புதிய கல்விக் கொள்கையைப்பற்றிச் சொல்கின்றபோது, அதிலே இன்ன கொள்கையை நாங்கள் சொல்கிறோம் என்று இல்லாமல் இருக்கின்றது. பேரவையில் நாங்கள் டிமாண்ட் தந்து இருக்கிறோம். டிமாண்ட் மீது நாம் இங்கே மேலவையிலே விவாதிக்க முடியாது என்ற காரணத்தினால் பாலிசி நோட் ஆக வைத்து இருக்கிறோம். அதிலே ஒன்றும் ஒளிவு மறைவு இல்லை. ஆனால் புதிய கல்விக் கொள்கையைப் பற்றிப் பார்த்தோமானால், இந்தப் பாலிசி நோட்டில், தற்போது இருக்கின்ற நிலைமைகளையும், என்ன முன்னேற்றம் நாமே செய்தோம் என்ற அடிப்படையிலேதான் அது வந்திருக்கிறது. புதிய கல்வித் திட்டம் பற்றி நம்முடைய கொள்கை என்ன என்பதை தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதை நான் இங்கே சொல்லவில்லையே தவிர, கல்வி அமைச்சர்கள் மகாநாட்டிலேயே அதைச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். இதிலேயும் நாம் நிச்சயமாகக் கவனிக்க வேண்டியது—நான் கல்வி அமைச்சர்கள் மகாநாட்டிலே முதன்முதலாகப் பேசுகிறபோது சொல்லியது—கல்விக்கு நாம் ஒரு இலக்கணம் சொல்ல வேண்டும். "இதற்கு எவ்வளவோ விளக்கங்கள் இருந்தாலும், இதற்குத் தகுந்த விளக்கங்கள் சொல்ல வேண்டுமென்றால், இந்தக் கல்விக்கு இங்கொன்றும் அங்கொன்றுமாக சொல்லியிருக்கின்ற பொருள், மனித சக்தியைப் பயன்படுத்தல், அல்லது வளப்படுத்தல் என்கின்ற பொருளை, கல்விக்குத் தரவேண்டும்" என்று சொன்னேன். நான் அதை வலியுறுத்திச் சொன்னேன். அதுதான் கல்விக்கு இலக்கணம் என்று இருக்க வேண்டும் என்று சொன்னேன். அதைச் சொல்வதற்குக் காரணம் நான் குறிப்பாக சைனாவிற்குப் போயிருந்தபோது, அங்கே என்னிடத்திலே ஒரு பாம்ப்லெட், ஒரு புத்தகத்தை அவர்கள் கல்வித் துறை சார்பாக என்னிடத்திலே தந்தார்கள். அதிலே அவர்கள் கல்விக்குத் தந்திருக்கின்ற இலக்கணமே அதுதான். ஆகவே கல்வி என்பது மனித சக்தியைப் பயன்படுத்துவதுதான் என்று அவர்கள் மிகத் துல்லியமாகவே சொல்லியிருக்கின்றார்கள். சோஷலிச நாடுகளிலே அந்த அடிப்படையில்தான் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நாமும் ஒரு சோஷலிச நாடுதான். ஆகவே அந்த இலக்கணத்தை ஏற்றுக்கொள்வதில் நாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அதைப்பற்றிப் பரவலாகவோ அல்லது ஆழமாகவோ யாரும் சிந்திக்காது பேசாமலிருப்பதுதான் வருத்தமாக இருக்கிறது. ஆக இந்தப் புதிய இலக்கணத்தை வகுத்துக்கொண்டு வருகின்றபோதுதான், 36 ஆண்டு காலமாக, 7 ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு வருகின்ற நாம் ஏன் முன்னேறவில்லை என்று சொன்னால், இந்த மனித சக்தியைச் சரியாக பயன்படுத்தாது, வளப்படுத்தாது, தேசிய முன்னேற்றக் காரியங்களில் பயன்படுத்தாது தவறியிருக்கிறோம் என்ற ரகசியம்தான்

அப்போது தெரிகிறது. நம்முடைய புதிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே கல்விக்கு முக்கியத்துவம் தருவதற்கும் அதுதான் காரணம்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கல்வி என்பது 1976 வரையிலே மாநிலங்களின் ஏகபோக லிஸ்ட்டிலே தான் இருந்தது. அதிலே நான் குறை சொல்லவில்லை. அதுவரை இங்கே தான் இருந்தது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நான் மத்திய அரசைக் குறை சொல்லவில்லை. அதற்காக வாதாடவும் வேண்டாம். நான் அப்படிச் சொல்லவில்லை. நாங்கள் பாராட்டிக்கொண்டுதான் இருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்துகொண்டு ஏகபோகமாக எடுத்துக் கொண்டிருக்கின்றார். அதனாலேதான் அப்படிப் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** நாங்கள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களைப் பாராட்டுகிறோம். இந்தப் புதிய இலக்கணத்தைச் சொல்லி, கல்வியினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கின்ற காரணத்தினாலே, நாங்கள் அவரைப் பாராட்டுகிறோம். அப்படிப் பாராட்டுகின்ற அடிப்படையிலேதான் நாம் சிலவற்றைப் பார்க்க வேண்டும் என்றும் நான் சொல்கிறேன். நாம் இரண்டு அடிப்படைகளிலே அந்தப் புதிய கல்விக் கொள்கையைப் பார்க்க வேண்டும் என்று நான் இப்போதும் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அப்பால் போய் சிந்திக்கின்ற போதும் அதை மனதிலே கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 7-15)

அதிலே ஒன்று, கல்வி என்கின்ற அந்த ஆயுதம் சமுதாய சமத்துவத்திற்குப் பயன்படும் ஆயுதமாக இருக்க வேண்டும். இங்கே இரண்டு நாட்களாகப் பேசும் கருத்துக்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, கல்வி என்பது, இத்தனை ஆண்டுக்காலமாக எல்லோருக்கும் அந்தக் கல்வியினுடைய பயன் கிடைக்காத காரணத்தாலே, கல்வி கிடைத்தவர்களுக்கும், கிடைக்காதவர்களுக்கும் இடையே ஒரு வேறுபாடு ஏற்பட்டு, ஒரு சமத்துவமின்மையை வளர்த்து வரும் கருவியாக இருக்கிறதென்பதை உணர்ந்தாக வேண்டும். இந்த நிலைமையை மாற்றுவதற்கு எல்லோருக்கும் கல்வி கிடைப்பதற்கான வாய்ப்பு





களை ஏற்படுத்த வேகமாக, தீவிரமாக ஈடுபட்டாக வேண்டும். இருக்கிற வசதி, வாய்ப்புகளைப் பயன்படுத்தியாக வேண்டும். அனைவருக்கும் கல்வி என்பது சாதாரண நோக்கமல்ல. சமுதாயத்தில் சமத்துவத்தை ஏற்படுத்த இதைச் செய்தேயாக வேண்டும். செய்தே தீர வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவதாக, கல்வியைப் பெறுகின்றபோது பள்ளிக்கூடம், கல்லூரி அளவில் படித்து போதும் என்றால், அதற்குப் பிறகு படித்தவர்கள் தங்கள் படிப்பின் மூலமாகப் பயன்பட மாட்டார்கள். தொடர்ந்து படித்துக் கொண்டே இருக்க வேண்டும். படிப்பு என்பது 'லைவ் லாங் பிராசஸ்'. குறிப்பிட்ட கால அளவோடு நின்றுவிடுவதல்ல. சமுதாயத்தில் தொடர்ந்து படிக்க வாய்ப்புகள் தரவேண்டும். ஓப்பன் யூனிவர்சிட்டி, ஓப்பன் ஸ்கூல்-ஆக அது இருக்கலாம். டி.வி. ஆக இருக்கலாம், ரேடியோவாக இருக்கலாம். ஆங்காங்கே வைத்திருக்கும் பொது நூலகங்களாகக் கூட இருக்கலாம். அறிஞர் பெருமக்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்குகளாகக்கூட இருக்கலாம். படித்தவர்கள் தொடர்ந்து அறிவைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பை சமுதாயம் பெற்றாக வேண்டும். அந்த வாய்ப்பைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதைக் கொள்கையாக, நோக்கமாகச் சொல்லியாக வேண்டும். மூன்றாவது, 'டேலன்டட் பாய்ஸ் அண்டு கேர்ல்ஸ்'. ஒரு சமுதாயத்தினுடைய முன்னேற்றம் என்பது 4 சதவிகிதம், 5 சதவிகிதம் இருக்கிற உயர்ந்தபட்ச அறிவு படைத்தவர்கள் கையில் இருக்கிறது. உயர்ந்தபட்ச அறிவு படைத்தவர்கள் அவர்கள்தான் என்பதல்ல. எல்லோருக்கும் அந்த வாய்ப்பைத் தரும்போது, அதிலே மிகவும் அதிகமான அறிவு வளர்ச்சி பெற்றவர்கள் வருவார்கள். அவர்கள் மூலமாகத்தான் சமுதாய முன்னேற்றம் ஏற்பட முடியுமே தவிர, சராசரி மனிதனாலே அல்ல. இன்றைக்கு அமெரிக்காவிலே ஏற்பட்டுள்ள மிகப் பெரிய பிரச்சினை, அமெரிக்காவின் எதிர்காலத்தில் இருக்கிற ஆபத்து இன்றைய அமெரிக்கக் கல்வி முறை என்று சொல்லுகிறார்கள். ஆக உயர்ந்த அளவுக்கு 'மென் ஆப் எக்சலன்ஸ்' உருவாக்க இப்போதைய கல்வி முறையை மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உயர்ந்தபட்ச அறிவு படைத்தவர்களாக வளர்வதற்கு, உருவாவதற்கு வாய்ப்பு சமுதாயத்தில் இருக்க வேண்டும். இல்லை என்றால், இந்தச் சமுதாயம் மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு அந்தஸ்தோடு மரியாதையோடு வளர முடியாது. போட்டி போட்டுக்கொண்டு வளர முடியாது. அந்த அடிப்படையை உணர வேண்டும். இவற்றுக்கு மேலாக அப்படி வளருகின்ற மனித சக்தி இந்த நாட்டு மக்களுக்கு, இந்த நாட்டுக்குப் பயன்பட வேண்டுமென்றால், அவர்களுக்கு நல்ல பண்பாட்டைத் தந்தாக வேண்டும். பள்ளிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் பண்பாட்டுக்கான கூறுகள் இருக்கின்றனவே தவிர, அதற்கான முக்கியத்துவம் தருவதில்லை. நாம் நன்றாக வாழ வேண்டுமென்று நினைத்து, தாங்கள் மட்டும் வாழ வேண்டுமென்று

நினைத்து, கூடுதல் சக்தியைப் பயன்படுத்தி படித்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்தால் வெளிநாடுகளுக்குச் செல்லவும் தயாராக இருக்கிறார்கள். நாம் படிக்க வைத்து, அதனால் வளரும் ஆற்றல், அறிவு எல்லாம் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்பட வேண்டுமென்பதற்காகத்தான் அந்த அடிப்படையிலே பண்பாட்டைத் தர விரும்புகிறோம், உயர்ந்தபட்சமாக பண்பாட்டைச் சொல்லித் தர வேண்டுமென்றால், நான் குறிப்பிட விரும்புவது தேச பக்தியைத்தான். படிக்கின்ற ஒருவன் தனக்காக மாத்திரமல்லாமல் தான் பிறந்த நாட்டுக்கும், சமுதாயத்திற்கும் வாழ வேண்டுமென்பதோடு, தன்னுடைய நாட்டுக்காக உயிரையும், தன்னுடைய வாழ்வையும் தியாகம் செய்யவும் தயாராக இருப்பான் என்ற தேச பக்தி உணர்வை நாட்டு மக்களுக்கு உணர்த்தியாக வேண்டும்.

தேசியக் கல்விக் கொள்கை என்ற பெயரால், சுதந்திர காலப் போராட்ட வரலாற்றுக்கு, முக்கியத்துவம் கொடுத்து, அதைச் சொல்லிக் கொடுக்க விரும்புகிறார்கள். அந்த நல்ல எண்ணத்தோடு இருந்தால், அதை நான் வரவேற்கிறேன். அதற்கு மாறாக, காங்கிரஸ் கட்சி வரலாற்றை, காங்கிரஸ் கட்சிக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த உபயோகித்தால், அது தவறான எண்ணமாக, தவறான நோக்கமாகத்தான் இருக்கும்.

(பிற்பகல் 7-20)

அதற்குப் பதிலாக நான் ஒன்றைச் சொல்கிறேன். தேச பக்தி உணர்வை அவர்களுக்குச் சொல்லித் தரவேண்டும். அதற்கு ஆதாரமாக விடுதலைப் போராட்டக் காலத்தில் நடந்த சம்பவங்களைச் சொல்லித் தர வேண்டும். அந்த உணர்வு இன்றைக்கு சொல்லித் தரப்படுகிறதா என்று பார்க்க வேண்டும். தேச பக்தி என்பது கூட அல்ல, இன்றைக்கு தன்னுடைய வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேரும் தேர்ச்சி பெற வேண்டுமென்பதற்காக நல்ல முறையில் உழைக்கின்ற ஆசிரியருடைய உள்ளத்திலிருந்து வரும் ஆற்றலுக்கும் தேச பக்தி என்றுதான் பெயர். குமரன் எவ்வளவு தியாகம் செய்திருக்கின்றாரோ அதுபோல் ஒருவகையில் இந்த சமுதாயத்திலே இருக்கிற ஒவ்வொருவரும் சமுதாயத்தை உயர்த்த பாடுபட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். அந்த வகையில் நல்ல முறையில் மாணவர்களுக்குப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதோடு, இந்த தேசத்தைக் காப்பாற்ற வேண்டுமென்பதையும் உணர்த்துவதோடு கூட, எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்த பண்போடு வாழவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஜனநாயகத்தைப் பற்றியும் சொல்லித் தரவேண்டும். அதுபோல் சோஷலிச நாடு என்று பிரகடனப்படுத்திவிட்டு, அதைப்பற்றிச் சொல்லித் தரவில்லையென்றால், அது தவறு. ஆகவே அதைப்பற்றியும்





அவர்கள் தெரிந்தாக வேண்டும். அதுபோல நம்முடைய கான்ஸ்ட்டிட்யூஷனில் மதசார்பின்மைப்பற்றித் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை விட்டுவிட்டு, இன்றைக்கு மதக் கருத்துக்களைச் சொல்வதற்குத்தான் அதனைப் பயன்படுத்துவதற்கான வழிவகையில் ஈடுபடுகிறார்கள். அதைப் பற்றியும் நாம் வலியுறுத்தியாக வேண்டும். எல்லா சமயங்களும் சமம் என்கிற அடிப்படையில், வேறுபாட்டு உணர்வை வெளிப்படுத்தத் தேவையில்லை என்கிற கருத்தை நாம் சொல்லியாக வேண்டும். கல்வி என்பதை அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டால், அல்லது வீணாக்கி விட்டால், அல்லது அதிகமான அளவுக்கு அது வளர்ந்து விட்டால், இன்றைக்கு நாம் பார்ப்பதுபோன்று எதிராகவும் ஆகலாம்." இன்றைக்கு பஞ்சாப் பிரச்சினைக்கு காரணம் என்ன என்று காணும்போது, அதுபற்றி ஒரு கட்டுரையில் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று பார்த்தால், பெரும்பாலான கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களும், வேலையில்லாதவர்களும் அதிலே ஈடுபட்டு, நாட்டுக்கு விரோதமான நிலைக்கு அவர்களுடைய செயல்கள் கொண்டு போய் விட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து கல்லூரிகளிலே நாம் ஒரு பாதுகாப்பான நிலைமையை உருவாக்க வேண்டும். பண்பாடு என்ற பெயரால், கலாச்சாரம் என்ற பெயரால், நாம் நமக்குத் தெரிந்த உயர்ந்த பண்பாடுகளை எல்லாம் சொல்லித் தந்தாக வேண்டும். வேறு பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக, தனியார் நிறுவனங்களைப்பற்றி இங்கே சொன்னார்கள். சுய நிதி கல்லூரி நிறுவுவதற்கான அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். இன்றைக்கு ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தை விட அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில், இரண்டு மடங்கு போடப்படுகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 90 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது என்றால், 7வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 1 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி செலவு செய்கிறோம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்தே இப்படித்தான் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டதோ அதேபோல இரண்டு மடங்கு தொகை அதற்கு அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்படுகிறது. பணச் செலவு செய்வது மட்டுமல்ல, மென் அன்ட் மெட்டிரியல்சைப் பொறுத்தவரையிலும் கூட, இதுதான் நிலைமை. அதுபோல் முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தேவைப்பட்ட பொறியாளர்கள், டாக்டர்கள், பிற பயிற்சி பெற்ற நண்பர்கள், தோழர்கள் இப்படிப்பட்டவர்களைப் போல இரண்டு மடங்கு நண்பர்கள் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின்போது நமக்குத் தேவை என்று

சொன்னால், அதை இங்கேயுள்ள யாரும் மறுக்க முடியாது. அதிலே வேண்டு மானால் ஒரு சதவிகித அளவு குறையலாம் அல்லது அதிகப்படலாம். எப்படி இருந்தாலும், போன ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவைப்பட்ட ஆட்களை விட அதே ரகமான ஆட்கள் சுமாராக நமக்கு இரண்டு மடங்கு தேவை என்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும். தமிழ் நாட்டிலே 15 ஆண்டுக் காலமாக ஒரு பொறியியல் கல்லூரியைக்கூட நாம் துவக்கவில்லை. அது போல் தான் பாலிடெக்னிக்குகளின் நிலையும். ஒரிசா போன்ற மாநிலங் களில் பணம் இருக்கலாம். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை என்றால், அதற்குக் காரணம் நல்ல முறையில் பயிற்சி பெற்றவர்கள் அங்கே இல்லை என்பதுதான். ஆகவே பொருளாதார உயர்வுக்கு ஒருவகையில் எது அடிப்படை என்று பார்த்தால், ஓரளவுக்கு தொழிற் கல்வியில் பயிற்சி பெற்றவர்களுடைய எண்ணிக்கையும் இருக்கிறது. இதனை நாம் மூன்று வகையாகச்சொல்லலாம். ஐ.டி.ஐ. படித்தவர்களோடு நாம் பாலிடெக்னிக்குகளில் படிக்கிறவர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், 4 பேருக்கு ஒருவர் சமம் என்கிற நிலையும், அதேபோல் என்ஜினி யரிங் படிக்கிறவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 4 பாலிடெக்னிக்கில் படிக்கிற வர்கள் ஒருவருக்கு சமம், அதாவது 16 ஐ.டி.ஐ. படித்தவர்கள் என்கிற நிலை யும் இருக்கிறது. அந்த அளவுக்கு நபர்களை நாம் கொண்டு வந்தாக வேண்டும்.

(பிற்பகல் 7-25)

இந்த விகிதாச்சாரத்தில் நாம் தொழில் ஆற்றல் பெற்றவர்களை உருவாக்கி னால்தான் தொழில் முன்னேற்றம் ஏற்படும், பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். நான் அடிக்கடி சொல்கிற ஒரு உண்மை என்னவென்றால், இரண்டாவது உலகப் பெரும்போரில் ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகள் எல்லாவற்றையும் இழந்த பின்னும், அவர்களிடம் இருந்த சொத்தே இந்தத் தொழில் ஆற்றல்தான். அண்ணா அவர்கள் "ஹோம்லாண்ட்" பத்திரிகை யில் இதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். தொழில் ஆற்றலை வளர்ப்பதுதான் முக்கியம். பணம் எங்கு வேண்டுமானாலும் கிடைக்கும். கையேந்தினால் கிடைக்கும். உலக வங்கி இருக்கிறது. பணம் கிடைக்கும். ஆனால் தொழில் ஆற்றல் இங்கே வளர்க்கப்பட வேண்டும். அது அரசால் முடியவில்லை என்றால், வேறு என்னதான் செய்வது? வேறு வழியைச் சொன் னோம். அந்த அடிப்படையில் இந்தத் தொழில் கல்லூரிகள் வந்திருக்கின் றன. இவைகளை அரசே ஆரம்பிக்க வேண்டுமென்ற கருத்தில் எனக்குக் கருத்து வேறுபாடு கிடையாது. எல்லா நிறுவனங்களும் அரசைச் சேர்ந்த தாக இருந்தால், நல்லதுதான். அப்படி இல்லாத சூழ்நிலையில் இப்போது இருக்கிறோம்.



இன்னொன்று, மற்ற இடங்களைவிட, ஹையர் செகண்டரி பள்ளிகள் நம்மிடம்தான் அதிகம். 1,500-க்கு மேல் இருக்கின்றன. 70 ஆயிரம், 80 ஆயிரம் பி.யு.சி. மாணவர்களுக்குப் பதிலாக இரண்டரை லட்சம், 3 லட்சம் மாணவர் கள் 12-வது வகுப்பு பரீட்சை எழுதுகிறார்கள். 70 ஆயிரம் பேருக்குப் பதிலாக இரண்டரை லட்சம் பேருக்குப் போதுமான கல்லூரிக் கல்வி தரக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதா இல்லையா? அப்படித் தரவில்லையென் றால், எப்படி இருக்கும் என்றால், 80, 85 மார்க் வாங்கியும், பிற்படுத்தப்பட்ட மாணவனுக்கு இன்ஜினியரிங்கில் இடம் கிடைக்காது. பி.காம். வகுப்புக்கு இடம் கிடைக்காது என்று சொன்னால், நிலைமை மாறிவிடும். ஆனால் ஒருவன் ஒன்றாவது வகுப்பு முதல் 12-வது வகுப்பு வரை ஒரு லட்சியத்தோடு படித்து, 80 மார்க் வாங்குவது என்பது சுலபமல்ல. 80 மார்க் வாங்கியும் தான் பிறந்த சமுதாயத்தின் காரணமாக பி.காம்., பி.ஈ.யில் இடம் கிடைக்க வில்லையென்றால், நான் சொல்கிறேன், வேலையில்லாத பட்டதாரி, சமு தாயத்துக்கு விரோதமாக மாறுவான். அந்த அச்சத்தின் காரணமாக இப் போது உதவித்தொகையாக 50, 100, 150 ரூபாய் என்று தருகிறோமே, அதை விட பயங்கரமான நிலைக்கு அதிகம் மார்க் வாங்கியவர்கள் சமுதாயத்தில் வந்துவிடக்கூடும். அந்த ஆபத்தை சமுதாயத்திலிருந்து தவிர்க்க வேண்டும்.

'மாஸ் எஜுகேஷன்' என்று 1-வது வகுப்பு முதல் ஆரம்பித்து, 5-ல் போய், 8-ல் போய், 10-ல் போய், 12-ல் போய், அதற்கு மேல் போக முடியாமல் போக விடாமல், அவன் கழுத்தைப் பிடித்து நெறிப்பதைப் போல, கல்லூரி யில் அவனுக்கு இடம் இல்லையென்று சொல்வது சரியானதா? இன்னொரு கருத்து, 12-வது படித்த மாணவர்களில் ஒவ்வொரு பகுதிக்கும், கலைக் கல்லூரியில் 5 பங்கு பேர் சேர்கிறார்கள் என்றால், தொழில் கல்லூரியில் 1 பங்காவது சேர வேண்டும். அப்படிச் சேர்ந்தால்தான் சமுதாயத்திற்குத் தேவையான தொழில் ஆற்றல் மிக்கவர்கள் கிடைப்பார்கள் என்ற முறையில் புதிய தொழில் கல்லூரிகள் வருவதை வரவேற்கும் நிலையில்தான் தனியார் தொழில் கல்லூரிகள் ஆரம்பிக்க அனுமதி கொடுத்திருக்கிறோம்.

தனியார் பள்ளிகள் பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் சொன்னார்கள். அதற்கான திருத்தச் சட்ட மசோதா கூடிய விரைவில் வர இருக்கிறது என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

தனித்தேர்வுக் கழகம், 10(ஏ) (1) பிரச்சினைகள் பற்றிச் சொல்லப் பட்டது. அது குறித்து அரசு பரிசீலித்து விரைவில் முடிவெடுக்கும். கன்சல் டேடிவ் கமிட்டி விரைவில் அமைக்கப்படும். இந்தப் புதிய தேர்விற்குப் பிறகு அது அமைக்கப்படவில்லை. அதை அமைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயாலஜி பாடத்தைப்பற்றிச் சொன்னார்கள். மறு பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதை மறு பரிசீலனை செய்வோம் என்று கூறிக்கொண்டு, இந்தக் கொள்கைக் குறிப்பின் மீது விவாதம் நடத்திய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலிருந்து ஒரே ஒரு செய்தி அறிய விரும்புகிறேன். குறுக்கிடக்கூடாது என்று இருந்தேன். அமைச்சர் அவர்கள் பேசும்போது, எங்கள் தலைவர் சொன்ன கருத்தில், 6 மார்க் போட்டு, 14 மார்க் . . .

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** தகவல் கேட்கலாம், விவாதம் எழுப்ப வேண்டாம், விவாதத்திற்குள் போக வேண்டாம். தகவல் கேட்கலாம். . . . . விவாதம் இல்லையென்று சொன்னால் எப்படி? அதை நான்தான் சொல்ல முடியும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தகவல்தான் கேட்கிறேன். இதுகுறித்து வழக்கு மன்றத்தில் 'அபிடவிட்' கொடுத்தபோது, அதிலே அவர்கள் 6 மார்க், 14 மார்க் பிரச்சினைகளைச் சொல்லி வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். அதிலே என்ன சொல்கிறார்கள் என்றால், "It is true that I expressed my regrets since it was pointed out by Their Lordships of the Supreme Court that it is an irregularity and the Supreme Court that it is an irregularity and the Supreme Court was pleased to accept my apology." என்று சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-30)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** 'வொர்க்கிங் ஷீட்' வைத்திருப்பதாகச் சொன்னார்கள். அதை ஒப்புக்கொண்டார்கள். நான் வாதம் செய்யவில்லை. சில செய்திகளைச் சொல்கிறேன். ஏற்றுக் கொள்வதாக இருந்தால், ஏற்றுக் கொள்ளுங்கள், ஏற்றுக் கொள்ளாவிட்டால் எனக்குக் கவலையில்லை. நான் சொல்வது ஒருவருடைய 'வொர்க்கிங் பேப்பர்'-ஐ மட்டும் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இரண்டு பேர் குழுவிலே இருந்திருக்கிறார்கள். இரண்டு பேர் மார்க்கையும் சேர்த்துத்தான் "ஃபைனல் லிஸ்ட்" போட்டிருக்கிறார்கள். இரண்டு பேர் குழுவிலே இருக்கும்போது "வொர்க்கிங் ஷீட்" இல்லாமல் முடியாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒப்புக்கொள்வார் என்று கருதுகிறேன். ஆகவே இந்த அடிப்படை மார்க்கையும், ஒருவருடைய வொர்க்கிங் ஷீட் மார்க்கையும் கூட்டிச் சொல்லியிருக்கிறார்கள். அதை இங்கே வந்து சொல்லியிருக்கின்றார்கள். எனக்குத் தரப்பட்டிருக்கின்ற விவரம், இரண்டு பேர் போட்ட மார்க்கையும் கூட்டினால் மொத்தம் வருகிறது என்று சொல்கிறார்கள். இது செய்தி. விவாதத்திற்காகச் சொல்லவில்லை. செய்தியை மட்டும் சொல்கிறேன்.



**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தபடி, தியாகராயர் கல்லூரி ஆசிரியர் பிரச்சினை மீது ஓர் அறிவிப்பை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர வேண்டும். அதுபோல் சென்னை, பல்கலைக் கழக மார்க் ஷீட் குற்றச்சாட்டு ஒன்று கூறினேன். அதன்மீதும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** சென்னை பல்கலைக் கழகம் சம்பந்தமாக பல்கலைக் கழகம் தக்க நடவடிக்கை எடுக்க அரசு கேட்டுக் கொள்ளும். தியாகராயர் கல்லூரி பிரச்சினைமீது அரசு நடவடிக்கை எடுத்து விட்டது. அவர்கள் கோர்ட்டிற்குச் சென்று அதைத் தடுத்து நிறுத்தி இருந்தார்கள். இப்போது தடை நீங்கிவிட்டது. இனி அரசின் நடவடிக்கை தொடரும். ஒன்றும் புதிதாகச் செய்ய வேண்டியதில்லை. செய்ய வேண்டியதை முறையாக அரசு செய்யும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் அவை நாளை, வெள்ளிக்கிழமை, காலை 10 மணிக்குக் கூடும்.

பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-32)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

136. கூட்டுறவுத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

137. 'தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்' என்கிற புத்தகம் 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

138. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி பற்றிய சிறு குறிப்பு 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ல் உள்ளபடி. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

139. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வங்கியின் பணிகள் பற்றிய குறிப்பு (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

140. தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் பற்றிய குறிப்பு 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

141. உழவர்களின் உற்ற நண்பன் 'டான்பெட்—தமிழக உழவர்க்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்' என்கிற புத்தகம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

142. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை 1985-86 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

143. பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

144. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை 1985-86 (தமிழ்).

143553